# தமிழகக் கடல்சார் வரலாறு

## அண்மைக் கால ஆய்வுகள்

பதிப்பாசிரியர்கள்

ந. அதியமான்

பா. ஜெயக்குமார்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தமிழகக்

# கடல்சார் வரலாறு

## அண்மைக்கால ஆய்வுகள்

*பதிப்பாசிரியர்கள்*

ந. அதியமான்

பா. ஜெயக்குமார்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613005

ISBN:81-7090-374-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 313

திருவள்ளுவராண்டு 2037 ஐப்பசி-நவம்பர் 2006

நூல் : தமிழகக் கடல்சார் வரலாறு
அண்மைக்கால ஆய்வுகள்
Maritime History of Tamil Nadu
Recent Researches

பதிப்பாசிரியர்கள்: ந.அதியமான்
பா.ஜெயக்குமார்

மொழி : தமிழ்

பொருள் : வரலாறு

பதிப்பு : முதற்பதிப்பு

பக்கம் : xv + 200

தாள் : டி.என்.பி.எல் மேப்லித்தோ 16 கிலோ

அளவு : டெம்மி 1/8

நூற்கட்டுமானம் : சாதாக்கட்டு

விலை : உரு. 90/-

படிகள் : 1000

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்
தஞ்சாவூர்

கட்டுரைகளில் காணப்பெறும் கருத்துக்களுக்கு அக்கட்டுரையாளர்களே பொறுப்பாவர் - பதிப்பாசிரியர்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613005

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

# அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தொடங்கப்பட்ட காலம் முதல் தமிழியல் சார்ந்த தலைசிறந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. அவ்வகையிலேயே வேறு எந்தப் பல்கலைக் கழகங்களிலும் இல்லாத பல புதிய, அறிய துறைகள் இங்கு தொடங்கப்பட்டு பல்துறைசார் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆய்வுகள் அறிவுலகிற்கும், பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் பல நூற்றுக்கணக்கான நூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. அவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்படும் இந்நூல் மேலும் ஒன்று என அறிவது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழர்தம் வரலாறு மேன்மேலும் பல நுண்ணிய ஆய்வுகள் மூலம் செப்பப்படுத்தப்படவேண்டும். இவ்வகையில் ஒரு நாட்டின் பொருளாதார, பண்பாட்டு வரலாற்றில் முக்கிய காரணிகளில் ஒன்றாக விளங்குவது கடல்சார் வரலாறு ஆகும். இத்துறையில் தமிழில் வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் மிகச் சிலவே. எனவே, தமிழகக் கடல்சார் வரலாறு குறித்த அண்மைக்கால ஆய்வுகளை ஒருங்கிணைத்து நூலாக வெளியிட்டால் தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பயன்படும் என்ற நோக்கில் தேவையான முயற்சிகளை நான் பதவியேற்றபின் மேற்கொண்டேன். இத்துறையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்

கடல்சார் வரலாறு தொடர்பாக நடந்த கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளை அளித்த பல்லாற்றானும் திறமைவாய்ந்த வல்லுநர்கள் ஆகியோரிடம் ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுப் பதிப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது. இம்முயற்சிக்குச் செவிமடுத்து இந்நூலின் பதிப்பாசிரியர்கள் திரு. ந.அதியமான், முனைவர் பா.ஜெயக்குமார் ஆகியோர் கட்டுரைகளைத் திறம்படத் தொகுத்து, பதிப்பித்து நூலாக்கம் செய்துள்ளனர். அவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

இந்நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் தமிழுலகிற்குப் புதியன. கடல்சார் வரலாற்றில் தமிழரின் அறிவு பாறை ஓவியங்களில் வெளிப்படுவது குறித்த கட்டுரை, இந்நாட்களிலும் சிந்திக்க இயலாத தெளிவாக எழுதப்பட்ட சங்ககாலத்தைச் சார்ந்த முசிறி-அலெக்சாண்டிரியா வணிக உடன்படிக்கை ஆவணம் குறித்த கட்டுரை ஆகியன பண்டையக் காலத்தில் தமிழர்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்கினர் என்பதை நன்கு வெளிப்படுத்துகின்றன. சங்ககாலத் துறைமுகங்கள் பற்றிய பல புதிய ஆய்வுகள், இடைக்காலத் துறைமுகங்கள், வணிகர்கள், பெருவழிகள், உப்பளங்கள் குறித்த பிற சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் நமது வரலாற்றாய்விற்கு முக்கியச் சான்றுகளைத் தருவனவாக அமைகின்றன. கடல்சார் வரலாற்றாய்வில் தலைசிறந்த கட்டுரைத் தொகுப்பாக விளங்கும் இந்நூலைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்களுக்கும், செவ்வனே அச்சிட்ட பதிப்புத்துறையினருக்கும் எனது பாராட்டுதல்கள்.

இந்நூலைத் தமிழ்கூறும் நல்லுலகம் படித்துப் பயன்பெற்றால் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது குறிக்கோளை நோக்கி நகர்கிறது என்பதைத் தெளிவாக உணரலாம்.

வாழ்க தமிழ் ! வளர்க நற்றமிழ் நாடு!!

சி.சுப்பிரமணியம்

(சி.சுப்பிரமணியம்)

# அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கடல்சார் வணிகம் முக்கியப் பங்காற்றுகிறது. கடல்கடந்த நாடுகளுடனான வணிகப் பரிமாற்றங்கள் அந்நாடுகளில் விளங்கும் சமயம், பண்பாடு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்தியா பண்டையக் காலத்திலிருந்தே கடல்சார் வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. குறிப்பாக, பழந்தமிழகம் (தற்போதைய தமிழ்நாடு, கேரளா மாநிலங்கள்) கிறித்துவ காலத்திற்கு முன்பிருந்தே கடல்கடந்த நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்தது. இக்கடல்சார் வணிக நடவடிக்கைகள் நமது வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே, ஒரு நாட்டின் வரலாற்றை உற்றுநோக்கும்போது கடல்சார் வரலாற்றையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை கடல்சார் வரலாற்றைக் குறித்த ஆய்வுகள் மிகக்குறைவுதான். நீலகண்ட சாஸ்திரியின் *அயல்நாட்டவரின் பார்வையில் தென்னிந்தியா* என்னும் நூலை இதற்கு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். பிற அறிஞர்களின் சிற்சில முயற்சிகளும் இதனுள் அடங்கும். கடல்சார் நடவடிக்கைகள், வணிகம், வணிகக் குழுக்கள் போன்றன குறித்த சான்றுகள் தேவையான இடங்களில் தமிழக வரலாற்றைக் குறித்து ஆய்வு செய்யும் போது பிற சான்றுகளுடன் ஒப்புநோக்கப்பட்டன.

இவ்வகையில் தமிழகக் கடல்சார் வரலாற்றை முக்கியப் பொருளாகக் கொண்ட ஜெயக்குமாரின் *தமிழகத் துறைமுகங்கள்* (2001) என்னும் நூல் தமிழகத்தில் முதன்முதலில் விரிவாக ஆய்வு செய்து வெளியிடப்பட்ட நூல் எனலாம். இதைத் தொடர்ந்து நரசய்யாவின் *கடல்வழி வணிகம்* (2005) என்னும் நூல் முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழகக் கடல்சார் வரலாறு குறித்த பல சான்றுகள் இலக்கியங்களிலும் வெளிநாட்டவர் குறிப்புக்களிலும் கல்வெட்டுக்-களிலும் ஓலை மற்றும் காகித ஆவணங்களிலும் பெருமளவில் கிடைக்கின்றன. இவற்றை ஆய்வு செய்து ஒருங்கிணைக்கும் நோக்கில் தொடர்புடைய அறிஞர்களிடம் அவர்கள் மேற்கொண்ட கடல்சார் வரலாறு குறித்த ஆய்வுக் கட்டுரைகளை வேண்டிப்பெற்று இங்கு நூலாகத் தரப்படுகிறது.

இந்நூலில் 22 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன இவைகள் காலவாரியாகவும் பொருள்வாரியாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் ஆரம்பக்கட்டங்களில் கடல்சார் நடவடிக்கைகளின் சான்றுகளாகத் திகழும் பாறை ஓவியங்கள் குறித்து முனைவர் ஜெயக்குமார் அவர்களின் கட்டுரை (1) ஆய்வு செய்கிறது. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய பாறை ஓவியங்களின் அமைப்புடன் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் தற்போதும் படகுகள் உள்ளன என்பதை கள ஆய்வின் மூலம் இக்கட்டுரை உறுதி படுத்துகிறது.

வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் சிறந்த துறைமுக நகராக விளங்கிய அழகன்குளம் என்னும் ஊர் பற்றிய கடல்சார் நடவடிக்கைகளை அகழாய்வுச் சான்றுகள், இலக்கியச் சான்றுகளுடன் திரு. அப்துல்மஜீத் அவர்களின் கட்டுரை (2) ஆய்வு செய்கிறது.

இதுகாறும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெறும் மருங்கூர்ப் பட்டினம், அழகன்குளம்தான் எனக்கருதி வந்ததை மறுத்து அப்பகுதியிலேயே அமைந்த தளிமருங்கூர்தான் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் மருங்கூர்ப்பட்டினம் எனவும், அழகன்குளம் மருங்கூர்புபட்டினம் ஆகாது எனவும் தகுந்த சான்றுகளுடன் நிறுவுகிறது முனைவர் சாந்தலிங்கம் அவர்களது கட்டுரை (3).

சங்ககாலத்தில் தமிழகம், இலங்கையுடன் கொண்டிருந்த உறவை பல்வேறு சான்றுகளுடன் விரிவாக முனைவர் புஷ்பரட்ணம் கட்டுரை (4) ஆய்வு செய்வதோடு கிரேக்க, ரோமானிய வணிகம் எவ்வாறு தமிழகம் இலங்கையுடனான உறவை வலுப்படுத்தின என்பதையும் ஆய்வு செய்கிறது.

பூம்புகாரில் அகழ்வு செய்யப்பட்ட படகுத்துறை மற்றும் அதைச் சுற்றியுள்ள பண்டைய ஊர்கள் குறித்து முனைவர் சுப்பிரமணியன் அவர்களின் கட்டுரை (5) ஆய்வு செய்கிறது.

முசிறி, வஞ்சி, கரூர் குறித்த புதிய சிந்தனைகளுடன், வியன்னா அருங்காட்சியகத்தில் பேப்பிரஸில் உள்ள முசிறி, அலெக்ஸாண்டிரியா வணிக உடன்படிக்கைக் குறித்த ஆய்வை முனைவர் ராஜன் கட்டுரையில் (6) காணமுடிகிறது.

பல்லவர் காலத்திலிருந்து கலங்கள் உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் புழக்கத்திலிருந்ததை உரிய சான்றுகளுடன் திரு. ஆறுமுக சீதாராமன் தமது கட்டுரையில் (7) நிறுவுகிறார்.

பாண்டிய நாட்டுக் கடற்கரைகளில் இருந்த 'பட்டினங்கள்' அவற்றின் அமைவிடம், வளர்ச்சி குறித்து கல்வெட்டுச் சான்றுகளுடன் முனைவர் வேதாசலம் அவர்களின் கட்டுரை (8) ஆய்வு செய்கிறது. கட்டுரையில் காணப்படும் சில பட்டினங்கள் ஒரே கழிமுகப்பகுதியில் அமைந்துள்ளதால் இவை வெவ்வேறு பெயரில் வழங்கப்பட்ட ஒரே துறைமுகமாகலாம்.

மார்க்ஸின் பொருளாதார அடிப்படைக் கோட்பாடுகளின் பின்புலத்தில் சங்க காலம் தொட்டு பாண்டியர்கள் வரை கடல்சார் வணிகர்களின் நடவடிக்கைகள் குறித்து முனைவர் சந்திரசேகர் அவர்களின் கட்டுரை (9) ஆய்வு செய்கிறது.

ஆசியாவிலிருந்து வந்த யூதர், அரபுக்கள், கிறித்துவர் மற்றும் பாரசீகர் போன்ற பல வணிக மக்கள் கூட்டாக அஞ்சுவண்ணம்' என்னும் வணிகக் குழுவாக அழைக்கப்பட்டனர் என்பதை தகுந்த கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் மூலமாக முனைவர் சுப்பராயலு அவர்கள் தனது கட்டுரையில் (10) நிறுவுகிறார்.

புதுக்கோட்டைப் பகுதியில் வணிகக் குழுக்களின் வணிக, மற்றும் சமுதாய நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகள் திரு.இராசேந்திரன் அவர்கள் கட்டுரையிலும்(11) முனைவர் சந்திரபோஸ் அவர்கள் கட்டுரையிலும்(12) விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மன்னார்வளைகுடாவில் எடுக்கப்பட்ட முத்துக்களை வணிகம் செய்தோர் பற்றிய செய்திகளை திரு.அதியமான் அவர்கள் கட்டுரையில் (13) காணலாம். சேதுபதி மன்னர்களின் கடல்சார் வணிக நடவடிக்கைகளைப் பற்றிய ஆய்வை முனைவர் சிவப்பிரகாசம் அவர்கள் தமது கட்டுரையில் (14) அளித்துள்ளார். நகரத்தார்களின் கீழைநாடுகளுடனான வணிக நடவடிக்கைகள் குறித்த செய்திகளை முனைவர் வள்ளி அவர்கள் தனது கட்டுரையில் (15) விரிவாக அளித்துள்ளார்.

வணிகத்திற்கு முக்கியப் பங்கு வகிப்பன பெருவழிகள். இப்பெருவழிகள் சோழர்காலத்தில் எங்கெங்கு அமைந்திருந்தன என்பதைப் பற்றி முனைவர் தியாகராஜன் அவர்கள் கட்டுரையும் (16), பெருவழிகளின் அளவுகளைக் குறித்த செய்திகளை முனைவர் நீலாவதி (17) அவர்கள் கட்டுரையும் ஆய்வு செய்கின்றன.

கடலோர வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்த பொருட்களில் உப்பும் ஒன்றாகும். உப்பு உற்பத்தி, உப்பு வணிகம், வணிகர்கள் குறித்த செய்திகளை முனைவர் இராசகோபால் அவர்கள் கட்டுரை (18) ஆய்வு செய்கிறது.

தமிழகத்தின் வடக்குப் பகுதியில் அமைந்த இடைக்காலத் துறைமுகங்களான பழவேற்காடு, மோட்டுப்பள்ளி ஆகிய துறைமுகங்களில் நிகழ்ந்த வணிக நடவடிக்கைகள் குறித்து முனைவர் ராசவேலு தமது கட்டுரையில் (19) விரிவாக ஆய்வு செய்கிறார். தொண்டை நாட்டுப் பகுதியில் இருந்த மரக்காணம், மைலாப்பூர், சதுரங்கப்பட்டிணம் போன்ற பிற்காலத் துறைமுகங்களைக் குறித்த தமது ஆய்வை முனைவர் சண்முகம் அவர்களின் கட்டுரையில் (20) காணலாம்.

18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு ஆட்சியில் கவர்னருக்கு மொழி பெயர்ப்பாளராகவும் முகவராகவும் இருந்த ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்புக்களில் காணப்படும் வணிகச் செய்திகள் குறித்த ஆய்வை முனைவர் விஜயவேணுகோபால் அவர்கள் கட்டுரையில் (21) காண முடிகிறது. 18,19-ஆம் நூற்றாண்டில் நாகபட்டினம், நாகூர் ஆகிய ஊர்களில் நிகழ்ந்த முஸ்லிம் வணிகர்களின் நடவடிக்கைகள் குறித்து முனைவர் ராஜாமுகமது அவர்கள் தனது கட்டுரையில் (22) பல சான்றுகளினூடாக ஆய்வு செய்துள்ளார்.

இந்நூல் தமிழக கடல்சார் வரலாற்றைக் குறித்த பல முக்கிய ஆய்வுகளை அளித்துள்ளது. தமிழகக் கடல்சார் வரலாற்றில் விடுபட்ட இடங்களை நிரப்புவதற்கு மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ள இந்நூல் தூண்டுகோலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் கட்டுரையாளர்களின் ஆய்வு நடையை இயன்றவரை மாற்றாமல் கட்டுரைகள் பதிப்பிக்கபட்டன. எடுத்துக்காட்டாக, புஸ்பரட்ணம் அவர்கள் இலங்கையைச் சேர்ந்த ஆய்வாளர் என்பதால் வடமொழியின் தாக்கம் அவரது கட்டுரையில் நிறைந்துள்ளதை காணலாம். ஆயினும் அவை மாற்றம் செய்யப்பெறவில்லை. ஒருபொருள் கொண்ட பல சொற்கள் தற்போது வழங்கப்பெறும் சொற்களாக இயன்ற அளவு மாற்றப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக வாணிகம், வாணிபம், வணிகம் போன்ற சொற்களுக்கு தற்போது வழங்கப்படும் வணிகம் என்னும் சொல் இந்நூலில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இருப்பினும் நாகபட்டினம் என்ற சொல் நாகப்பட்டணம் என்று கட்டுரையாசிரியரால் வழங்கப்பட்ட சொல்லே பயன்படுத்தப் பட்டுள்ளமை சொல்வழக்கில் இடைக்காலத்திற்கும் கடந்த நூற்றாண்டுக்கும் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கவே ஆகும். அடிக்குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பின் தன்மைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளன. இந்நூல் வரலாற்றாய்வாளர்களின் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கும் மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் சி.சுப்பிரமணியம் அவர்களுக்கும் எமது நன்றிகள். சொல்லடைவுப் பணியின்போது உதவிய முனைவர் ஆ.துளசேந்திரன், ஆய்வு உதவியாளர், ஃபோர்டு அறக்கட்டளைத் திட்டம், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை அவர்களுக்கு எமது நன்றி.

இந்நூலைச் செம்மையாகப் பதிப்பித்த முனைவர் ஆ.இராமநாதன், இயக்குநர் (பொ), பதிப்புத்துறை அவர்களுக்கும், உடனிருந்து உழைத்த பதிப்புத்துறை நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

ந.அதியமான்
பா.ஜெயக்குமார்

# பொருளடக்கம்


*அணிந்துரை* - i-ii

*அறிமுகம்* - iii-ix

*கட்டுரையாளர்கள்* - xiii-xiv

*சொற்குறுக்கங்கள்* - xv

1. தமிழகப் பாறை ஓவியங்களில் கடல்சார் கருத்துப் படிவம் - 1-6
**பா.ஜெயக்குமார்**

2. அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும் - 7-13
**அ.அப்துல்மஜீத்**

3. மருங்கூர்-சங்ககாலக் கடற்கரைப் பட்டினம் - 15-18
**சொ.சாந்தலிங்கம்**

4. இலங்கையில் சங்ககால வர்த்தகம் -சில தொல்லியற் சான்றுகள் - 19-26
**ப.புஷ்பரட்ணம்**

5. பூம்புகார் அகழாய்வு - 27-32
**தி.சுப்பிரமணியன்**

6. முசிறி- அலெக்ஸாண்டிரியா வணிக உடன்படிக்கை; ஒரு தொல்லியல் பார்வை - 33-45
**கா.ராஜன்**

7. தமிழகக் காசுகளில் கலங்கள் - 47-52
**ஆறுமுக சீதாராமன்**

8. பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள், வணிகத் தொடர்புகள் (கி.பி.600-1400) - 53-66
**வெ.வேதாசலம்**

9. தமிழகக் கடல்சார் வணிகர்கள் -பிற்காலப் பாண்டியர் காலம் வரை - 67-71
**பு.சந்திரசேகரன்**

10. அஞ்சுவண்ணம், ஓர் இடைக்கால வணிகக் குழு - 73-80
**எ.சுப்பராயலு**

11. புதுக்கோட்டையில் வணிகக் குழுக்கள்- ஓர் ஆய்வு - 81-90
**கரு.இராசேந்திரன்**

12. வணிகக் குழுக்களும் சமூகமும் - 91-94
**அ.சந்திர ாஸ்**

13. முத்து வணிகர்கள் - 95-100
**ந.அதியமான்**

14. சேதுபதிகளின் கடல்சார் வணிகம் - 101-106
**சி.கே.சிவப்பிரகாசம்**

15. நகரத்தாரும் கடல் வணிகமும் - 107-114
**நா.வள்ளி**

16. பெருவழிகள் - 115-126
**இல.தியாகராஜன்**

17. சோழர் காலக் கல்வெட்டுக்கள் கூறும் பெருவழிகள் - 127-132
**சீ.நீலாவதி**

18. மரக்காணமும் உப்பளங்களும் - 133-142
**சு.இராசகோபால்**

19. கிழக்குக் கடற்கரையின் இரு இடைக்காலத் துறைமுகங்கள் - 143-150
**சு.இராசவேலு**

20. தொண்டைநாட்டுப் பகுதியில் பிற்காலத் துறைமுகங்கள் - 151-160
**ப.சண்முகம்**

21. புதுவை ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்புக்கள் காட்டும் கப்பல் போக்குவரத்து மற்றும் கடல் வணிகச் செய்திகள் - 161-170
**கோ.விசயவேணுகோபால்**

22 நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்கள்: கடல்சார் வணிகமும் முஸ்லிம் வணிகர்களும் (18,19-ஆம் நூற்றாண்டு) - 171-182
**ஜெ. ராஜாமுகமது**

சொல்லடைவு - 183-200

# கட்டுரையாளர்கள்

**முனைவர் பா.ஜெயக்குமார்**
விரிவுரையாளர்
பண்டைய வரலாறு மற்றும்
தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 009

**திரு. அ.அப்துல் மஜீத்**
இயக்குநர்(ஓய்வு)
தமிழ்நாடு அரசு தொல்லியல்
ஆய்வுத்துறை
பிளாட் 162, க.எண் 17
6-ஆம் தெரு, மல்லேஸ்வரி நகர்,
சாலையூர்
சென்னை - 600 073

**முனைவர் சொ.சாந்தலிங்கம்**
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்லியல்
ஆய்வுத்துறை
திருமலை நாயக்கர் அரண்மனை
மதுரை - 625 001

**முனைவர் ப.புஷ்பரட்ணம்**
பேராசிரியர்
வரலாற்றுத்துறை
யாழ்ப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை

**முனைவர் தி.சுப்பிரமணியன்**
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்லியல்
ஆய்வுத்துறை
சார்சா மாடி
தஞ்சாவூர்-613 001

**முனைவர் கா.ராஜன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
வரலாற்றுத்துறை
பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 605 014

**திரு. ஆறுமுக சீதாராமன்**
12, ராஜராஜன் நகர்
மானோஜிப்பட்டி(தெற்கு)
தஞ்சாவூர் - 613 004

**முனைவர் வெ.வேதாசலம்**
கல்வெட்டாய்வாளர்
தமிழ்நாடு அரசு தொல்லியல்
ஆய்வுத்துறை
திருமலை நாயக்கர் அரண்மனை
மதுரை - 625 001

**முனைவர் பு.சந்திரசேகரன்**
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத் துறை
இராஜுக்கள் கல்லூரி
இராசபாளையம் - 626 012

**முனைவர் எ.சுப்பராயலு**
பிரஞ்சு இந்திய ஆய்வு நிறுவனம்
புனித லூயி தெரு
புதுச்சேரி- 605 001

**திரு. கரு.இராசேந்திரன்**
மேலப்பனையூர் (அஞ்சல்)
விராச்சிலை (வழி)
புதுக்கோட்டை - 622 420

**முனைவர் அ.சந்திரபோஸ்**
வரலாற்று விரிவுரையாளர்
சட்டக்கல்லூரி
செங்கல்பட்டு - 603 001

**திரு. ந.அதியமான்**
இணைப்பேராசிரியர்
நீரகழாய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

**முனைவர் சி.கே.சிவப்பிரகாசம்**
தலைவர்
வரலாற்றுத்துறை
அ.வீ.வா.நி. திருபுட்பம் கல்லூரி
பூண்டி- 613 503

**முனைவர் நா.வள்ளி**
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத் துறை
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி - 630 003

**முனைவர் இல.தியாகராஜன்**
தலைவர், வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
அரியலூர் - 621 704

**முனைவர் சி.நீலாவதி**
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை 622 001

**முனைவர் சு.இராசகோபால்**
கல்வெட்டாய்வாளர்
தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை
அருங்காட்சிய வளாகம்
எழும்பூர்
சென்னை 600 008

**முனைவர் சு.இராசவேலு**
கல்வெட்டாய்வாளர்
இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை - 600 009

**முனைவர் ப.சண்முகம்**
இயக்குநர்
தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 009

**முனைவர் கோ.விசயவேணுகோபால்**
பிரஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம்
19, டூமாஸ் சாலை
புதுச்சேரி- 605 001

**முனைவர் ஜெ.ராஜாமுகமது**
1/107 டி, ஜீவா நகர்
1 ஆம் வீதி
புதுக்கோட்டை 622 001

# சொற்குறுக்கங்கள்

எ.இ. - எபிகிராபியா இண்டிகா
(*Epigraphia Indica*)

க.ஆ.அ.- கல்வெட்டு ஆண்டறிக்கை
(*Annual Report of Epigraphy*)

தெ.இ.க.- தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்
(*South Indian Inscriptions*)

பு.ச.க. - புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள்
(*Inscriptions of Pudukkottai State* )

# 1. தமிழகப் பாறை ஓவியங்களில் கடல்சார் கருத்துப் படிவம்

பா.ஜெயக்குமார்
சென்னை

தொல்லியல் எச்சங்களில், வரலாற்றுக் காலத்திற்கு (Historical Period) முந்திய காலத்தைச் சேர்ந்த பாறை ஓவியங்கள் (Prehistoric Rock Paintings) குறிப்பிடத்தக்கவையாகும். அக்காலப் பண்பாட்டின் கூறுகளைக் காட்டும் பாறை ஓவியங்கள் தமிழகத்தில் இதுவரை சுமார் நாற்பது இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றில் மக்களின் கடல்சார் அறிவைக் காட்டுவனவாகக் கிடைத்துள்ள ஒரு சில பாறை ஓவியங்களை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

உலகளவில், கடல்சார் கருத்துப் படிவம், குறிப்பாக நீரில் செல்லத்தக்க சாதனமாகப் படகு அல்லது கப்பல் போன்றவை முதன்முதலில் வெளிப்படுவது வரலாற்றுக்கு முந்திய காலக் கட்டத்தைச் சேர்ந்த பாறை ஓவியங்களில்தான். பிற நாடுகளில் கிடைக்கக்கூடிய பாறை ஓவியங்களில் குறிப்பாக 18,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள கென்னிஃப் குகைப் (Kenniff Cave) பாறைகளில் காணப்படும் கப்பல் (Canoes) ஓவியம் கற்காலத்தின் இறுதிக் கட்டத்தைச் சார்ந்ததாகவேக் கருதப்படுகிறது[1]. தமிழகத்தில் தேனி மாவட்டம் காமயகவுண்டன்பட்டி (9°42'வ 79° 21'கி), விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலை (12°02' வ 77°21'கி) ஆகிய இடங்களில் கிடைக்கின்ற, நீரில் செல்லத்தக்க சாதனமாகக் காட்டப்பட்டுள்ள பாறை ஓவியங்களின் காலத்தை கடைக் கற்காலத்திற்கும் (Late Stone Age), பெருங்கற்காலத்தின் ஆரம்ப காலத்திற்கும் (Early Megalithic Period) இடைப்பட்ட காலமாகக் (கி.மு.1000-500) கொள்கின்றோம். இதன் காலம் நாட்டுக்கு நாடு வேறுபடினும் சமுதாய வளர்ச்சிப் படிநிலைகள் ஒரே தன்மையினதாகவே உள்ளன. தொடக்கத்தில் ஓவியம் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வண்ணம் பொதுவாக செந்நிறமாகவும் (Red Ochre) பின்னர் இதனுடன் வெண்மை நிறம் பயன்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.



படம் 1



படம் 2



படம் 3



படம் 4

தமிழகத்தில் மேற்சுட்டிய இடங்களில் கிடைத்துள்ள ஓவியங்களில் காணப்படும் பாணியின் (Style) அடிப்படையில் காமயகவுண்டன்பட்டியில் காணப்படும் கலம் (படம்.1) அதன் மேல் நிற்கும் மனிதன் உருவம் கீழ்வாலை ஓவியத்தை காட்டிலும் (படம்.2) காலத்தால் முற்பட்டதாகவோ அல்லது கலங்களின் வளர்ச்சி நிலையின் முதல் கட்டமாகவோ கொள்ள வேண்டும். காரணம், இதில் அக்கலத்தை இயக்கக்கூடிய துணைக்கருவிகள் (Accessories) எதுவும் காணப் படவில்லை. ஆதலால், இக்கலத்தைக் கட்டுமரம் வகையைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். ஒரு மரக்கட்டை (Log) அல்லது இரண்டு, மூன்று மரக்கட்டைகள் சேர்ந்த கட்டுமரத்தில் மட்டுமே ஓவியத்தில் காட்டியுள்ளது போன்று துணைக் கருவிகளின்றி மிதந்து செல்ல முடியும்.

அண்மையில், நடன காசிநாதன் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள இரண்டு கட்டுரைகளில் இப்பாறை ஓவியம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கட்டுரைகளில் இப்பாறை ஓவியம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் காமயகவுண்டன்பட்டி (Kamaya kavundanpatti) என ஐந்து இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது[2].

கீழ்வாலை பாறை ஓவியங்களில் படகில் நால்வர் செல்வது போன்று காட்டப்பட்டுள்ளது (படம்.2). இதில் படகின் வெளித்தோற்றம் (Hull) மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் காணப்படும் மற்றொரு முக்கிய அம்சம் துணைக் கருவியான தண்டு (Pole) காட்டப்பட்டுள்ளதாகும். தண்டு படகை உந்தி செலுத்துவதற்குப் பயன்படும் கருவியாகும். இது முந்தைய ஓவியத்தினின்று தொழில் நுணுக்கத்தில் வளர்ச்சி பெற்றதாகக் கொள்ளலாம். குறிப்பாக, தற்பொழுதும் கடற்கரை, ஆறுகளின் அருகே அமைந்துள்ள கிராமங்களில் மக்கள் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கும் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்வதற்கும், ஆழ்கடல் செல்லாமல் கடலோரங்களில் மீன்பிடிப்பதற்கும் இதுபோன்ற படகுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்சுட்டிய இரண்டு படகு ஓவியங்களுமே ஆழ்கடலில் கடற்செலவை மேற்கொள்ளத் தகுதியானவையன்று. அப்படியெனில், அக்கால மக்கள் கடலில் நெடுந்தூரப் பயணம் மேற்கொள்ளவில்லையா?

என்ற கேள்வி எழும். அவர்கள் கடலில் நெடுந்தூரப் பயணமும் மேற்கொண்டனர் என்பதற்கு கீழ்வாலையில் காணப்படும் மற்றொரு ஓவியம் (படம்.3) சான்றாக விளங்குகிறது. ஆய்வாளர்கள் இவ்வோவியம் தொடர்பாக இதுவரை அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. இதை ஒரு குறியீடு என்றும்[3], சிந்துவெளி எழுத்துக்களின் வரிவடிவமென்றும்[4] தெளிவில்லாமல் குறிப்பிட்டு உள்ளனர். மதிவாணன் இவ்வோவியத்திற்கு 'திண்ணன்' (tinnan) எனப் பொருள் கொள்வதும், வெவ்வேறு குறியீடுகளுக்கும் இதே பொருளைக் கூறுவதும் தவறான முறையே. ஐராவதம் மகாதேவன் வெளியிட்டுள்ள நூலையும், தமிழகத்தில் இதுவரை நடைபெற்றுள்ள அகழாய்வுகளில் பானை ஓடுகளில் கிடைத்துள்ள குறியீடுகளையும் இவரது கருத்துக்குத் துணையாகக் கொள்கிறார். ஆனால், ஐராவதம் மகாதேவன் அவர்தம் நூலில் காட்டியுள்ள 417 சிந்துவெளி குறியீடுகளிலும், இதுவரை அகழாய்வுகள் மூலம் நமக்குக் கிடைத்துள்ள பானை ஓடுகளில் உள்ள குறியீடுகளிலும் இதுபோன்ற குறியீடுகள் காணப் படவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்[5]. மேலும் கீழ்வாலையில் காணப்படும் மேற்சுட்டிய ஓவியம் போன்று வேறு எங்கும் இதுவரை கிடைக்கவில்லை. ஆதலால், இவ்வோவியம் படகின் ஒரு வகையைச் சார்ந்தது என்பதை அழுத்தமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இப்படகு ஓவியத்தில் படகு கவிழாமல் இருக்க அதன் பக்கவாட்டில் தாங்குக்கட்டை (Outrigger) பொருத்தப்பட்டுள்ளதைக் காட்டியுள்ளனர். இது அக்கால மக்களின் கப்பல் கட்டும், கப்பல் செலுத்தும் தொழில்நுட்ப அறிவின் வெளிப்பாடாகும். இப்படகில் நெடுந்தூரப் பயணம் மேற்கொள்வதோடு நாம் சென்றடைய வேண்டிய இலக்கை வெகு எளிதில் சென்றடையவும் முடியும்.

தொன்மைக் காலத்தில் வாழ்ந்த மக்களின் (Aboriginal) இவ்வோவியங்கள் தமிழகப் பாறைகளில் காணப்படினும் இந்த அமைப்பைக் கொண்ட படகுகள் தமிழகக் கடற்கரைகளிலோ அல்லது தென்னிந்தியாவில் வேறு எங்குமோ காணப்படவில்லை. ஆனால், அந்தமான், நிகோபார் தீவுகளில் தொடக்க காலந்தொட்டு வாழ்ந்து வரும் அம்மண்ணிற்கே சொந்தமான மக்கள் கீழ்வாலையில் காட்டப்பட்டுள்ள ஓவியத்தின் தன்மையை கொண்டிருக்கும் படகுகளைப் (படம்.4)

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் பயன்படுத்துவதைக் காணலாம். இப்படகிற்கு அம்மக்கள் அவர்களது மொழியில் ஓடி (Odi) என்று பெயர் சுட்டுகின்றனர்.

கருமைநிற (Negrito) இனத்தைச் சேர்ந்த அந்தமானியர்கள் (Andamanese), மங்கோலிய (Mongoloid) இனத்தைச் சேர்ந்த கார் நிகோபாரிகள் (Car Nicobar), சிறிய நிகோபார் (Little Nicobar), பெரிய நிகோபார் (Great Nicobar) தீவுகளில் வாழும் நிகோபாரிகள் (Nicobaries), மிகக் குறைந்த எண்ணிக்கையில் (சுமார் 20 பேர்) காணப்படும் சொம்பன்கள் (Shompens) போன்றோர் ஓடி வகைப் படகைப் பயன்படுத்தி வருகின்றனர்[6]. கீழ்வாலை ஓவியத்தில் படகு கவிழாதவாறு இருக்க இதன் பக்கவாட்டில் காட்டப்பட்டுள்ள தாங்குக்கட்டையை (Outrigger) படகோடு இணைப்பதற்கு இணைப்புக் கம்பாக (Joint pole) ஒரு கம்பு காட்டப்பட்டுள்ளது. ஆனால், தற்போது அந்தமான் நிகோபார் தொல்குடியினர் தாங்குக்கட்டையை படகோடு இணைப்பதற்கு இரண்டு கம்புகள் பயன்படுத்துகின்றனர் (படம்.4). தாங்குக்கட்டையின் இணைப்பை பெரிய அலைகள் குலைத்து விடாதவாறு உறுதியாக இருப்பதற்காகவே கூடுதலாக ஒரு கம்பு பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வொரு சிறு மாறுதலைத் தவிர வேறு எவ்வித மாற்றத்தையும் நாம் காணமுடியவில்லை.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இத்தொல்குடியினர் வெளி உலகையோ, வெளியாட்களையோ கண்டதில்லை. ஆங்கிலேயர்களின் காலனி ஆதிக்கப் போட்டியின் பொழுது இந்தியாவின் அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த காரன்வாலிஸ் பிரபு முதன் முதலில் இரு அளவீட்டாளர்களை இத்தீவிற்கு அனுப்பி நிலஅளவை செய்ய முடிவெடுத்தார். இதன் பின்னரே இத்தீவு ஆங்கிலேயர்கள், ஜப்பானியர்கள் வசம் மாறிமாறி இருந்து பின்னர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியாகியது. இதன் பின்னர், இந்தியாவிலுள்ள அனைத்து மாநில மக்களும் இங்குக் குடியேறி பல ஆண்டுகளாகியும் இத்தீவுகளில் வாழும் தொடக்க காலத்து மக்கள் பிற மாநிலங்களிலிருந்து குடியேறியவர்களின் தொழில்நுட்பங்களையோ, பழக்கவழக்கங்களையோ தனதாக்கிக் கொள்ளாது தங்களது முன்னோர் விட்டுச் சென்ற மரபின் வழியே வாழ்ந்து வருகின்றனர்.

மேற்சுட்டியவற்றிலிருந்து, கடற்செலவிலும் கப்பற் கட்டுமானத்திலும் இன்றைய சந்ததியினருக்கு முன்னோடியாகத் திகழ்ந்ததோடு கடலில் செல்லத் தேவையான அடிப்படை தொழில்நுட்பத் திறனையும் நமக்கு அக்கால மக்கள் பாறை ஓவியங்கள் வாயிலாக விட்டுச் சென்றுள்ளனர் என்பது மிகையானதன்று.

**அடிக்குறிப்புகள்**

---

1 Clark, G., 1977, *World Prehistory*, 3rd Edition, Cambridge Universiy Press, p.477.

2 Kaisnathan, Natana., 1997, "Antiquity of Sea Voyage in Tamil Nadu", *கல்வெட்டு* (காலாண்டிதழ் 50-51), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, பக்,1-5. &

__________, 1997, "Marine Archaeology Museum in Tamil Nadu", *கல்வெட்டு*, (காலாண்டிதழ் 70-80)., தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,

3 இராசு. பவுன்துரை 1986, *தமிழகப் பாறை ஓவியங்கள்*, சேகர் பதிப்பகம், சென்னை,பக்.14,34.

4 Mathivanan, R., 1995, *Indus Script Among Dravidian Speakers*, International Society for the Investigation of Ancient Civilizations, Madras, p.77.

5 Mahadevan, I., 1977, *The Indus Script (Text. Concordance and Tables)*, Archaeological Survey of India, New Delhi, pp32-35.

6 Thivakaran G.A. and Jayakumar, P., 1991, *Maritime History of South India, Vol.V. Andaman and Nicobar Islands*, Department of Industries, Tamil University, Thanjavur.Table-3 & Plate-3.

# 2. அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும்

**அ.அப்துல்மஜீத்**
சென்னை

**அ**ழகன்குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் வட்டத்தில் வைகையாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஓர் ஊர். வைகை ஆறு வங்கக் கடலுடன் கலக்கும் ஆற்றங்கரை என்னும் ஊரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ளது.

இவ்வூரின் வரலாற்றைப் பற்றிய நேரடி இலக்கியச் சான்றுகளோ கல்வெட்டுச் சான்றுகளோ கிடைக்கவில்லை. ஆயினும், ஆய்வாளர்கள் இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் களஆய்வில் கண்டறியப்பட்ட தொல்பொருட்களையும் அயல் நாட்டினரின் குறிப்புகளையும் கொண்டு ஆய்வு செய்து சாலூர் (Salour), மருங்கூர்ப்பட்டினம், ஊணூர், அர்கெரு (Argeiru) ஆகிய ஊர்களோடு ஒப்புமைப்படுத்தி அழகன்குளத்தை அடையாளம் காண முயற்சித்துள்ளனர்.

துளசிராமன் அவர்கள் அகழாய்வின் மூலமாக தொல்பொருட்களை வெளிப்படுத்தியுள்ள அழகன்குளத்தை தாலமி குறிப்பிடும் சாலூரெனக் கருதுகிறார்[1]. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் வெளியிட்டுள்ள அழகன்குளம் அகழாய்வு முன்னறிக்கையில் சங்க இலக்கியமாகிய *அகநானூறு* குறிப்பிடும் ஊணூரும் மருங்கூரும் சேர்ந்த ஊரே தற்போதைய அழகன்குளம் எனக் குறிப்பிடப்படுகிறது[2].

மார்க்சிய காந்தி தன்னுடைய கட்டுரையில் அர்கெரு (Argeiru) என்னும் ஊர் கோடியக்கரைக்கு அடுத்துள்ளதாகத் தாலமி குறிப்பிடுவதால், அப்பெயர் ஆற்றங்கரையைக் குறிக்கலாமெனக் கருதுகிறார். அழகன்குளம் என்ற பெயர் அண்மைக் காலத்தில் தோன்றியதாகையால் அப்பகுதியின் பழம்பெயர் ஆற்றங்கரையே என்பதும், தாலமி சுட்டும் அர்கெரு (Argeiru) இதனையே குறிக்கிறதென்பதும் அவர்தம் கருத்து[3] இக்கருத்து மேலும் ஆய்வுக்குரியது.



படம் 1



படம் 2



படம் 3

அழகன்குளத்திற்கு வடமேற்கே 15 கி.மீ. தொலைவில் தேவிப்பட்டினம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் உள்ளது. இவ்வூரை கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டும்[4] கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விக்கிரமபாண்டியன் கல்வெட்டும்[5] முறையே இளங்கோ மங்கலமாகிய உலகமா தேவிப்பட்டினமென்றும் புறக்குடி ஆகிய ஸ்ரீவல்லபப் பட்டினமென்றும் குறிப்பிடுகின்றன. கி.பி.1533-ஆம் ஆண்டைச்சேர்ந்த கல்வெட்டொன்று தேவிப்பட்டினத்தை தேவிப்பட்டினமென்றே குறிப்பிடுகிறது[6], இம்மூன்று கல்வெட்டுக்களும் தேவிப்பட்டினம் செவ்விருக்கை நாட்டில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றன அழகன்குளம் தேவிப்பட்டினத்திற்கு அருகே அமைந்துள்ளமையால் இவ்வூரும் கி.பி.13-ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டிய நாட்டில் செவ்விருக்கைநாடு என்ற நாட்டுப் பிரிவின் கீழிருந்துவந்ததாகக் கருதலாம்.

இவ்வூரின் வரலாற்றை அறிய இங்கு அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல்பொருட்கள் மிகவும் துணைபுரிகின்றன. பல்வேறு மண்ணடுக்குகளில் கிடைத்துள்ள தொலபொருட்களைக்கொண்டும், கிடைத்தக் கரித்துண்டுகளைக் கார்பன்-14 ($c^{14}$) என்னும் அறிவியல் முறையில் ஆய்வு செய்து அறியப்பட்ட கால அளவைக் கொண்டும் இவ்வூரின் தொடர்ச்சியான வரலாற்றை கி.மு.4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரை அறியமுடிகிறது.

அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல் பொருட்களான ரௌலட்டட் பானை ஓடுகள், ரோமானிய மதுக்குடுவையின் பகுதிகள், ரோமனிய காசுகள், கப்பல் உருவம் பொறித்த பானை ஓடு, பெண் உருவங்களுடன் கூடிய பானை ஓடு, இடுப்பில் குழந்தையைத் தாங்கி நிற்கும் சுடுமண் பொம்மை, அரபி எழுத்துக்கள் பொறித்த சங்கின் பகுதி, சிங்கள பிராமி வகை எழுத்துக்கள் பொறித்த பானை ஓடு, அச்சுக் குத்தப்பட்ட வெள்ளிக்காசு, மௌரியப் பானை ஓடுகள் ஆகியவை அழகன்குளம் அயல்நாடுகளுடனும், உள்நாட்டுடனும் கொண்டிருந்த வணிகத் தொடர்பையும், பண்பாட்டுத் தொடர்பையும் வெளிப்படுத்துவதுடன் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியதை மெய்ப்பிக்கின்றது.

தமிழ் நாட்டிற்கும் ரோம் நாட்டிற்கும் இருந்த உறவையும் தொடர்பையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். பாண்டியர்களுடைய படைகளில் ரோமானியப் போர் வீரர்கள் பணியாற்றியமைக்கான குறிப்புகள் காணபபடுகின்றன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் கோட்டை வாயிலில் ரோமானியப் போர் வீரர்கள் காவல் காத்து வந்துள்ளனர்[7]. ரோம் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இனிமையான மதுவை பாண்டிய மன்னர்கள் அருந்தினரென *புறநானூறு* கூறும்[8]. இவ்விலக்கியச் சான்றுகளை மெய்ப்பிக்கும் வகையில் அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள ரௌலட்ட் மட்பாண்ட ஓடுகளும், ரோமானிய மதுக்குடுவையின் பகுதிகளும் ரோமானிய மன்னர்களான இரண்டாம் வேலன்டைன் (கி.பி.383-92), முதலாம் அர்கேடியஸ் (கி.பி.395-408), முதலாம் தியோடிசியஸ் (கி.பி.383-95), குனோரியா ரோமாநர்வம் (கி.பி.402-408), கன்கார்டியா (கி.பி.309-405) ஆகியோர் காசுகளும் அமைந்துள்ளன.

கி.பி.1-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடொன்று அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இப்பானையோட்டில் பொறிக்கப்பட்டுள்ள கப்பல் பற்றி அறிய பானையோட்டின் நிழற்படத்தை நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் முனைவர் லியோனெல் கேஸ்ஸன் (Lionel Cassion) என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் இக்கப்பலின் நிழற்படத்தை ரோமானிய பல் வண்ணப்பட்டையில் (Roman Mosaic) இருக்கும் கப்பல்களோடு ஒப்பிட்டு இக்கப்பல் ரோமானிய கப்பலை ஒத்துள்ளதெனத் தெரிவித்தார். இதன்மூலம் ரோம் நாட்டோடு அழகன்குளம் கொண்டிருந்த வணிகத் தொடர்பை அறிய முடிகிறது (படம்.1).

கி.மு.2-1-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழகிய பெண் உருவங்களுடன் கூடிய பானை ஓடொன்று அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டது. அவ்வோட்டில் இரு பெண்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராக வலப்பக்கம் திரும்பிய நிலையில் உள்ளனர். அதில் ஒரு பெண் இடக்கையில் நீண்ட கழுத்துடைய சாடி ஒன்றினை ஏந்தியும், மற்றொரு பெண் தன் இடக்கையில் விசிறி அல்லது கண்ணாடியை ஏந்தியும்,

காண்பிக்கப்பட்டுள்ளனர். இவர்களையடுத்து விசிறி ஒன்றுமட்டும் பானை ஓட்டின் உடைந்த பகுதியில் காணப்படுவதால் மற்றொரு பெண்ணும் இப்பெண் உருவங்களுடன் இருந்திருக்க வேண்டும். இப்பெண் உருவங்கள் அனைத்தையும் சுற்றி சிறுசிறு குமிழ் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் மெல்லியதாகவும் முன்கைகளில் தடித்த வளையல்களுடனும், பளுவான ஆடைகளுடனும் காணப்படுகின்றன. இடுப்பிற்குக் கீழே மட்டும் ஆடை அணிந்துள்ளனர். அவ்வாடைகளில் மடிப்புகள் காணப்படுகின்றன. நீள் வட்ட முகமும், திறந்த உதடுகளும் கொண்டுள்ளனர். இப்பெண் உருவங்கள் எகிப்திய பிரமிடுகளிலுள்ள ஓவிய உருவங்களை ஒப்புமைப்படுத்தத் தூண்டுகின்றன. இதன் வாயிலாக அழகன்குளம் எகிப்து நாட்டுடன் கொண்டிருந்த உறவையும் வணிகத் தொடர்பையும் அறியலாம் (படம்.2).

ஒரு பெண் குழந்தையை இடுப்பில் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள சுடுமண் உருவமொன்று இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தின் கலையழகைக் காணும்பொழுது கிரேக்கக் கலைபாணியைச் சார்ந்ததாக இருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது (படம்.3).

அழகன்குளத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்பொழுது சில சங்குகளின் உடைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றில் 'தீக்' என்று அரபு மொழியில் அரபு எழுத்தால் எழுதப்பட்டுள்ளது. 'தீக்' என்ற அரபு சொல்லுக்கு சேவல் என்று பொருள் இதன் மூலமாக அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்போ வணிகத் தொடர்போ கொண்டிருந்த மக்கள் இவ்விடத்தில் வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. வணிகத்தின் மூலம் இத்தொடர்பு ஏற்படுவதில் வியப்பில்லை. எனவே அழகன்குளம் அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்ததெனக் கருதலாம்.

அழகன்குளத்தில் மேற்பரப்பாய்வின் பொழுது கண்டு எடுக்கப்பட்ட சாம்பல் நிறப்பானையோட்டில் இரண்டு சிங்கள பிராமி வகை எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்கள் 'ஸமு' என்னும் இரண்டு எழுத்துக்களாகும். இவ்வெழுத்துக்களைக் கொண்டு ஐராவதம் மகாதேவன் அவர்கள் 'ஸமுத' என்ற சொல் ஆள் பெயரைக் குறிக்கும் சொல்லாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார். 'ஸமுதாஹ'

(ஆண்பால்), 'ஸமுதவா' (பெண்பால்) என்னும் சொற்கள் இலங்கைக் குகை பிராமி கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. எனவே அழகன்குளத்திற்கும் இலங்கைக்கும் உள்ள உறவையும் தொடர்பையும் அறிய முடிகிறது.

அச்சுக் குத்தப்பட்ட வெள்ளிக் காசொன்று மௌரியப் பானை ஓடுகள் கிடைக்கும் மண் அடுக்குகளின் கீழுள்ள மண் அடுக்கில் அழகன்குளம் அகழாய்வுக்குறி எண்.10-இல் கிடைத்துள்ளது. இக்காசினை ஆய்வு செய்த ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இக்காசு நந்த அரசர்களால் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டு புழக்கத்திலிருந்தக் காசாக இருக்கலாமெனக் கருதுகிறார்.

மேற்கூறிய தொல்பொருட்கள் தவிர மௌரியர் பானை ஓடுகள் (Northern Black Polished Ware) அழகன்குளத்தில் கிடைத்து உள்ளமையால் தமிழ்நாட்டு மக்கள் கங்கைச் சமவெளி மக்களுடன் கொண்ட பண்பாட்டுத் தொடர்பையும், வணிகத் தொடர்பையும் அறிய முடிகிறது. இதுபோன்றே மௌரியர் காலப் பானையோடுகள் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிய கொற்கையில் அகழாய்வின் வாயிலாக கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் அழகன்குளத்தைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடவில்லையாயினும், அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்ட மேற்கூறிய தொல்பொருட்கள் அழகன்குளத்தின் வரலாற்றையும், அவ்வூர் ரோம், எகிப்து, அரேபியா, இலங்கை போன்ற அயல்நாடுகளுடனும், உள்நாட்டுடனும் கொண்டிருந்த உறவையும், வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்பையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 Thulasiraman, D., 1992, " Saliyur An Ancient Pandya Port Identified" in (ed.) Natana. Kasinathan, *Seminar on Marine Archaeology,* State Department of Archaeology, Madras,pp.66-70.

[2] Abdulmajeed, A, Thulasiraman, D., and Vasanthi, S., 1992, *Alagankulam:A Preliminary Report,* State Department of Archaeology, Madras.

[3] Marxia Gandhi, N. 1997, "Marungur and Alagankulam: Ancient Ports of Tamil Nadu", *Paper presented in the first International Conference on Marine Archaeology,* Chennai, 22, 23.02.1997.

[4] *தெ. க.தொ.* 8/404

[5] *தெ.க.தொ.* 8/405

[6] *தெ.க.தொ.* 8/405-408

[7] *கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்*
(*சிலப்பதிகாரம்.* 14.66-67)

[8] *ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய*
*தன்கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து*
*ஆங்கினி தொழுகுமதி பொரும* (*புறநானூறு.* 24.31-33)

# 3. மருங்கூர்-சங்ககாலக் கடற்கரைப்பட்டினம்

சொ.சாந்தலிங்கம்
மதுரை

சங்க இலக்கியங்களில் ஒன்றான *அகநானூற்றில்* (227.19-21)

*'விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்*
*இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து*
*எல்லுமிழ் ஆவணம்*

என்றும், *நற்றிணையில்* (258.7-10)

*'அகலங்காடி யசைநிழற் குவித்த*
*பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் தாக்கை*
*தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேர்க்கும்*
*மருங்கூர்ப் பட்டினத்து/*

என்றும் மருங்கூர்ப்பட்டினம் என்னும் ஓர் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விலக்கியச் செய்திகள் மூலம் இது ஒரு கடற்கரைப் பட்டினம் என்பதும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதும் பெறப்படுகிறது.

இப்பட்டினம் பசும்பூண் பாண்டியனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பதிலிருந்து இது பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பகுதியில் இருந்த ஒரு பட்டினம் என்பது உறுதிப்படும். இப்பட்டினம் எங்கு இருந்தது, இருக்கிறது என்பது நீண்ட நாளைய கேள்வியாக இருந்தது. அண்மைக்கால களஆய்வின் மூலம் இப்பட்டினத்தை அடையாளங் காணத்தக்க சில சான்றுகள் பெறப்பட்டுள்ளன[1].

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் தளிமருங்கூர், திருவாடானையிலிருந்து தொண்டி செல்லும் சாலையில் வடக்கில் சற்று விலகி இருக்கும் ஊர் இது. கடலுக்கு அருகாமையில் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இவ்வூரே மேலே குறிப்பிடப்பட்ட இலக்கியங்கள் கூறும் மருங்கூர் என்பதை நிறுவுவதே இக்கட்டுரை.

அண்மையில் இவ்வூர் தமிழக அரசு தொல்லியல் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்பரப்பு ஆய்வுகளின் மூலம் சங்க காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படும் கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் அதிக அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் பிற்காலப் பாண்டியர் காலத்தில்

வணிகச் செழிப்பும், சமயச் சிறப்பும் பெற்ற இடமாக இருந்துள்ளமைக்கும் சான்றுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வூர் இன்று திசைகளை வைத்து இரண்டாகப் பிரிக்கப்பட்டு தெக்கூர், வடக்கூர் என்று அழைக்கப் படுகிறது. தெக்கூரிலும், வடக்கூரிலும் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிவன் கோயில்கள் (கி.பி.13-ஆம் நூற்றாண்டு) அமைந்துள்ளன. இக்கோயில்கள் தெக்கீசர் கோயில் என்றும், வடக்கீசர் கோயில் என்றும் இன்றும் அழைக்கப்படுகின்றன, தெக்கீசர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் இவ்வூர் தளிமருங்கூர் என்று பெயர் கூறப்பட்டுள்ளன. வடக்கீசர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அப்பகுதியை குலமாணிக்கபுரம் என்று குறிப்பிடுகின்றன. இன்று தளிமருங்கூர் என்ற ஒரே பெயரில் அழைக்கப்படும் இவ்வூர் பிற்கால பாண்டியர் காலத்தில் மருங்கூர் என்ற வேளாண் ஊராகவும், குலமாணிக்கபுரம் எனும் வணிக நகரமாகவும் இருபிரிவாக இருந்துள்ளது. இவ்வூர் முத்தூற்றுக்கூற்றத்தில் அமைந்திருந்தது. முத்தூற்றுக்கூற்றம் சங்க காலத்திலேயே இருந்த ஒரு நாட்டுப்பிரிவு என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். முத்தூற்றுக்கூற்றத்தில் ஒழிந்திருந்த பகைவனை பாண்டிய நெடுஞ்செழியன் வெற்றிகண்டான். கி.பி.5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலும் முத்தூற்றுக்கூற்றம் குறிப்பிடப்படுகிறது.

குலமாணிக்கபுரம் என்னும் இவ்வூர் கல்வெட்டுக்களில் நகரம் என்று குறிப்பிடப்படுகிறது. சில காலங்களுக்குப் பிறகு இதுவே நானாதேசிப்பட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது. மருங்கூர் என்பதும் குலமாணிக்கபுரம், நானாதேசிப் பட்டினம் என்னும் ஊரும் ஒரே ஊராகவே ஒருகாலத்தில் இருந்துள்ளது. மருங்கூர்ப்பட்டினம் என்று இலக்கியங்களில் கூறும் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினம் கடல் ஒட்டிய பகுதிகளில் வேறு எங்கும் இல்லாத நிலையில் இவ்வூரையே சங்ககால ஊராகக்கொள்வதில் தவறில்லை. சங்ககாலத் தடயங்களான கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் பெருமளவில் இவ்வூரில் கிடைப்பது இவ்வெண்ணத்திற்கு வழுவூட்டுவதாக உள்ளது.

மருங்கூர்ப்பட்டினம் இருந்த இடத்தில்தான் இன்றைய அழகன்குளம் ஊர் அமைந்துள்ளது என்று அண்மைக்கால ஆய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது[2]. ஆனால் அக்கருத்து மறுபரிசீலனைக்குட்பட்டதாகும். அழகன்குளம் என்பதும் மருங்கூர்ப் பட்டினம் என்பது ஒரே சமயத்தில் சிறந்து விளங்கிய வெவ்வேறு கடற்கரை பட்டினங்கள் என்றே கொள்ளவேண்டும்.

**பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள்**

இவ்வூரின் தென்பகுதியில் தெக்கீசர் கோயில் என்றும், வடக்குப் பகுதியில் வடக்கீசர் கோயில் என்றும் இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. இவ்விரண்டிலும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களும் இடம் பெற்றுள்ளன.

**தெக்கீசர் கோயில்**

இக்கோயில் மிகவும் இடிந்த நிலையில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய அங்கங்களைக் கொண்ட சிறிய கோயில் இது. விநாயகர், முருகன், பைரவர் ஆகிய தெய்வங்களுக்குச் சிற்றாலயங்கள் திருச்சுற்றில் அமைந்துள்ளன. கோயில் மிகவும் இடிந்த நிலையில் உள்ளதால் இங்குள்ள கல்வெட்டுக்களை முழுமையாகப் படிக்க முடியவில்லை. கருவறைத் தென்புறச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு மட்டும் படிக்கும் நிலையில் உள்ளது.

இக்கல்வெட்டின் மூலம் இக்கோயிலின் பெயர் பிரம்மீஸ்வரம் உடையார்கோயில் எனத் தெரிந்துகொள்ள முடிகிறது. மன்னர் பெயர் கல்வெட்டில் குறிப்பிடப்படவில்லை. பாண்டிய மன்னனுடைய ஆணையாக இக்கல்வெட்டு விளங்குகிறது. இக்கோயிலின் திருப்படி மாற்றுச் செலவினங்களுக்காக தளிமருங்கூருக்கு அருகில் இருந்த மாவூர் என்னும் பல்லவராயநல்லூரை விலைக்கு விற்று வழங்கிய செய்தி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. வீரகேரளபுரமான நானாதேசிப் பட்டினத்து திருவிக்கிரமன் சக்கரவர்த்தியான வீரபாண்டிய ஜகவீர ராம சக்கரவர்த்திக்கு அஞ்சுகோட்டைப்பற்றினைச் சேர்ந்த செழியதேவனும் குலசேகர அஞ்சுகோட்டை நாடாழ்வானும் சேர்ந்து இவ்வூரை விலைக்கு விற்றுள்ளனர். விலைக் கிரயத்தொகை கோயில் பணிகளுக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

இக்கல்வெட்டில் இடம் பெறும் மாவூர் தளிமருங்கூருக்கு அருகிலேயே தற்போதும் உள்ளது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் இவ்வூருக்கு பல்லவராசநல்லூர் என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது.

**வடக்கீசர் கோயில்**

ஊரின் வடபகுதியில் அமைந்துள்ளதால் இது வடக்கீசர் கோயில் என மக்களால் அழைக்கப்படுகிறது. ஆனால், இங்குள்ள கல்வெட்டுக்களில் கோயிலின் பெயர் உலகநாத ஈசுவரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்கு நான்கு கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் யாவும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையே.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தவை இரண்டும் மற்றவை அவன் சமகாலத்ததாகவுமே உள்ளன. இக்கல்வெட்டுக்கள் இரண்டில் 'குடிதாங்கி மதிதொங்கனான கங்கை நாராயண சக்கரவர்த்தி' என்னும் அதிகாரி ஒருவன் இடம் பெறுகிறான். இவன் முன்னர் குறிப்பிடப்பட்ட தெக்கீசர் கோயில் கல்வெட்டிலும் இடம் பெறுகிறான்.

இக்கல்வெட்டுக்கள் ஒரே அரச ஆணையை அதிகாரிகள் பெற்றுத் திரும்ப கோயில் நிர்வாகிகளுக்குப் பிறப்பித்த செய்தியைத் தருகின்றன. சடையனேம்பல் என்ற ஊர் உலகநாத ஈசுவரம் கோயிலுக்காக விற்றுக் கொடுக்கப்பட்டது என்பதே செய்தியாகும். இது கங்கை நாராயணச் சக்கரவர்த்தி ஓலை என்று அரச அதிகாரியின் ஆணையாகவும் வெட்டப்பட்டுள்ளது.

**வடக்கம்மன் கோயில்**

வடக்கீசர் கோயிலுக்கு வடக்கில் சிறு கிராம தெய்வக் கோயில் ஒன்று உள்ளது. வடக்கம்மன் கோயில் என்று இன்று அழைக்கப்படும் இக்கோயில் ஒரு கல்வெட்டில் 'அமரர் தொழு நங்கை' கோயில் எனப்படுகிறது. இக்கல்வெட்டின் மூலம் இக்கோயிலுக்கு இவ்வூரில் வாழ்ந்த கைக்கோளர்களில் நிரயன் சீவலஞ்சுப் பெருமான் என்பவர் செய்த ஒரு தருமம் பெறப்படுகிறது. கைக்கோளர் என்போர் நெசவுத் தொழில், துணி வணிகத்தில் ஈடுபட்ட பிரிவினராவர். இதன் மூலம் இவ்வூரின் வணிகத்தொடர்பு உறுதிப்படும்.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 தளிமருங்கூர் களஆய்வு இக்கட்டுரை ஆசிரியராலும், கல்வெட்டு ஆய்வாளர் முனைவர் வெ.வேதாசலம் அவர்களாலும் மேற்கொள்ளப்பட்டது.

2 Abdulmajeed, A, Thulasiraman, D., and Vasanthi, S., 1992, *Alagankulam: A Preliminary Report*, State Department of Archaeology, Madras, p.2.

# 4. இலங்கையில் சங்ககால வர்த்தகம் சில தொல்லியற் சான்றுகள்

ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே வர்த்தகத் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. வர்த்தக உறவே தமிழ்நாட்டில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்தப் பண்பாடு சமகாலத்தில் இலங்கையில் செல்வாக்கு செலுத்தக் காரணமாக அமைந்தது. பௌத்தத்திற்கு முந்திய இலங்கையில் இடைக்காலப் பண்பாடும், பெருங்கற்படைச் சின்னக் காலப் பண்பாடும் தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் ஒரு பகுதியெனக் கருதும் அளவிற்கு நெருங்கிய ஒற்றுமையுடையன. ஆனால் கி.மு.3-ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாகியதைத் தொடர்ந்து இலங்கையில் வர்த்தகமும், பண்பாடும் வடஇந்தியத் தொடர்புகொண்டு வளர்ந்ததென்ற பொருளில் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. அதே வேளை தமிழகத்துடன் தொடர்பையிட்டு இந்நூல்கள் பெரிதும் பெருமை சாதிக்கின்றன. இந்நிலையில் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் தமிழகத்துடனான பாரம்பரிய வர்த்தகத் தொடர்பு பௌத்த மதத்தின் வருகையின் பின்னரும் தொடர்ந்ததைக் கோடுகாட்டுகின்றன. இதில் சங்ககால வர்த்தகம் தொடர்பாகக் கிடைத்த சான்றுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

சங்ககாலம் எக்காலப் பகுதியை உள்ளடக்கியதென்பதைக் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. அறிஞர்களில் ஒரு சாரார் கி.மு.3-ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி.3-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 600 ஆண்டு காலத்தை சங்க காலம் எனக் குறிப்பிட்டுள்ளனர். இதையுறுதிப்படுத்த மேலும் ஆதாரங்கள் தேவை-யிருப்பினும் இக்காலத்தை மேலோட்டமாக எடுத்துக் கொள்ளலாம். இக்காலத்தில் இலங்கை தமிழக வர்த்தகம் வளர்ச்சியடையப் பல

காரணிகள் சாதகமாக இருந்தன. இவற்றுள் மூன்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

1) இலங்கையின் அமைவிடம் இந்து சமுத்திரத்தின் மத்தியில் தென்னிந்தியாவின் தென் பகுதியில் குறிப்பாக தமிழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. இரு நாடுகளையும் ஆழம் குறைந்த ஒடுங்கிய பாக்கு நீரினை பிரித்து நின்றாலும் இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட வர்த்தக, பண்பாட்டுத் தொடர்பை அது பிரித்து நிற்கவில்லை, 2) பாண்டிய நாட்டிற்கும் வடமேற்கிலங்கைக்கும் இடைப்பட்ட கடற் பிராந்தியத்தில் நடைபெற்ற முத்து, சங்கு குளித்தலும், இலங்கையில் இயற்கையாகக் கிடைத்த வர்த்தகப் பொருட்களும், 3) கி.பி.1-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கிரேக்க, உரோம நாடுகளுடன் இலங்கை வர்த்தகம், தமிழகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்தமை. இவ்வர்த்தகத்தில் உரோமர் இலங்கைக்கு வராமலேயே தென்னிந்தியத் துறைமுகங்களில் இலங்கைப் பொருட்களைப் பெற்றனர்[1]. அதேபோல் இலங்கைக்குத் தேவையான பொருட்கள் தென்னிந்தியத் துறை முகங்களில் இறக்குமதி செய்யப்பட்டு அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. இதில் தமிழ்நாட்டு வணிகர்கள் பெருமளவுக்கு இடைத்தரகராகச் செயல்பட்டதால் தமிழ்நாட்டு வணிகர்களின் நடவடிக்கை இலங்கையில் அதிகரிக்கக் காரணமாகியது. மேற்கூறப்பட்ட முதலிரு காரணங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமாக இருப்பினும் மூன்றாவது காரணமே சங்ககால வர்த்தகம் வளர்ச்சியடைய முக்கிய காரணமாகும். இலங்கை தமிழக வர்த்தகத்தில் தொடக்ககாலச் சான்றாக பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டச் சிலவகை மட்பாண்டங்கள், கல் மணிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இலங்கைப் பெருங்கற்கால மட்பாண்டங்கள் பற்றி ஆராய்ந்த விமலாபேக்லே தமிழக மட்பாண்டங்கள் சிலவற்றுடன் உள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டினார்[2]. இந்த ஒற்றுமை இலங்கைக்குரிய மட்பாண்டங்கள் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது மட்பாண்டங்களை வனைவர் தமிழகத்துடன் கொண்டிருந்த நெருக்கமானத் தொடர்பைக் காட்டலாம். அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் மேலும் சில இடங்களிலும் பிருத்தானிய ஜேர்மன் ஆய்வுக் குழுவினர் மேற்கொண்டு வரும் அகழ்வாய்வில் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் பலவகையான கல் மணிகள் பெறப்பட்டுள்ளன[3].

இவ்வகையான கல் மணிகளும், தொழில் கூடங்களும் ஆந்திராவிலும், தமிழ் நாட்டிலும் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அமராவதி, கொடுமணல்[4], காரைக்காடு, அரிக்கமேடு[5] போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இங்கு குஜராத், ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களில் இருந்து கார்னிலேயன் (cornelian), ரேபிஸ்லதுவி (lapis-lazuli) போன்ற கற்களை இறக்குமதி செய்து கல் மணிகளை ஆக்கியதாக நம்பப்படுகிறது. இலங்கையில் கிடைத்து வரும் மேற்கூறிய கல்வகை சார்ந்த மணிகள் தமிழகத்தில் கிடைத்துள்ள மணிகளை ஒத்திருப்பதால் இவை தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அநுராதபுர அகழ்வின் போது பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் கப்பல் உருவம் பொறித்த மட்பாண்டம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது[6]. இதன் காலம் கி.மு.3-ஆம் நூற்றாண்டெனக் கணிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ இதே காலத்திற்குரிய கப்பல் உருவம் பொறித்த மட்பாண்டம் ஒன்று பாண்டிய நாட்டில் அழகன்குளம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்துள்ளது[7]. இச்சான்று பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயிருந்த கடல் வழித் தொடர்பைக் காட்டுகிறது. பெருங்கற்காலப் பண்பாட்டின் பிற்கால அம்சங்களை சங்க இலக்கியம் பிரதிபலிக்கின்றன. இலங்கையில் பெருங்கற்காலப்பண்பாடு கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை பரவியதற்கு சான்றுண்டு. இதனால் மேற்கூறப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றாதாரங்களை சங்ககால வர்த்தகத்தின் ஒரு அம்சமாகவும் எடுத்துக்கொள்ள இடமுண்டு.

சங்ககால வர்த்தகம் தொடர்பாக இலங்கையில் கிடைத்துள்ள முக்கிய சான்றுகளுள் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்கன[8]. கி.மு.3-ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி.3-ஆம் நூற்றாண்டிற்கும், இடைப்பட்ட இக்கல்வெட்டுக்கள் சில தமிழ்நாட்டு வணிகர் பற்றியும், வணிக சமூகம் பற்றியும் கூறுகின்றன. அநுராதபுரம், பெரிய புளியங்குளம், குடுவில் போன்ற இடங்களில் கிடைத்த நான்கு கல்வெட்டுக்கள் 'தமிட வணிகர்' பற்றிக் கூறுகின்றன[9]. 'தமிட வணிகர்' என்பது தமிழ்நாட்டு வணிகரைக் குறிப்பதாகும். அநுராதபுரத்தில் கிடைத்தக் கல்வெட்டு தமிழ் வணிகர் ஒரு குழுவாக வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறுகிறது. இதில் 'ஈளபரத', 'தமிழக மண்' ஆகிய இருவரும் சேர்ந்து வணிகர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தும்

மண்டபத்தை அமைத்தவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்[10]. இதில் வணிகர்களின் அந்தஸ்துக்கு ஏற்ப அவர்களின் இருக்கைகள் அமைக்கப்பட்டு அதில் அமர வேண்டிய வணிகரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கப்பல் தலைவனாக 'நாவிக' என்பவனது பெயர் உயரமான இருக்கையில் எழுதப்பட்டுள்ளதால் அவனே இவ்வணிகக் குழுவிற்குத் தலைவனாக இருந்திருக்க வேண்டும். பெரிய புளியங்குளத்தில் கிடைத்த இரு கல்வெட்டுக்கள் 'விஸாகே' என்ற தமிழ் வணிகன் பற்றிக் கூறுகிறது[11]. அண்மையில் கொடுமணலில் 'விஸாகி' என்ற பெயர் பெற்ற மட்பாண்டம் ஒன்று கிடைத்துள்ளது[12]. இப்பெயருக்கும் பெரியபுளியங்குளக் கல்வெட்டில் வரும் பெயருக்கும் இடையே பெயரடிப்படையில் நெருங்கிய ஒற்றுமைக் காணப்படுகிறது.

சங்ககாலத்தில் கடலும், கடல் சார்ந்த பகுதியிலும் வாழ்ந்த நெய்தல் நில மக்களாக பரவர், பரதவர் சமூகம் குறிக்கப்படுகின்றன. தொலமி சோழ நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் இடைப்பட்ட கடல் சார்ந்த பகுதியில் வாழந்த மக்களைப் 'பதை' எனக் கூறுகிறது. இது பரதவரைக் குறிக்கலாம். இவர்களின் முக்கியத் தொழிலாக முத்துக்குளித்தல், மீன் பிடித்தல், வர்த்தகம் என்பன விளங்கின. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் 21-இல் 'பரத' என்ற பெயர் காணப்படுகிறது. இப்பெயரும் சங்க இலக்கியத்தில் வரும் 'பரவர்', 'பரதவர்' ஆகிய பெயர்களும் ஒன்றெனக் கூறும் மலோனி தற்காலத்தில் தென்தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் வாழும் பரதவ சமூகத்தின் முன்னோடிகளாக இவர்களைக் கருதுகிறார். கல்வெட்டுக்களில் இப்பெயருக்குரியவர்கள் வணிகராக, கப்பல் தலைவனாக, அரசத் தூதுவனாக கூறப்படுகின்றனர். இவற்றில் இருந்து இவர்களை அயல் நாட்டவராகக் கருதமுடிகிறது. பொலநறுவை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் 'பரத' என்ற பெயருக்கு முன்னால் கப்பல் உருவம் வரையப்பட்டுள்ளது[13]. மேலும் மூன்று கல்வெட்டுக்களில் இப்பெயரோடு சங்ககாலப் பாண்டிய நாணயங்களில் இடம் பெற்றுள்ள கொடிக்கம்பம், நந்திபாதம், கலங்கரை விளக்கம் போன்ற சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. 'பரத' என்ற பெயரோடு ஒரே குறியீடு இடம் பெற்றிருப்பது வர்த்தக நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது. சங்ககாலத்தில் பரதவரின் வெளிநாட்டு வர்த்தகத்தில் குதிரை முக்கிய வர்த்தகப் பொருளாகத் திகழ்ந்தது. *பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும்*

மேலைநாட்டுக் குதிரைகளும், வட இந்தியக் குதிரைகளும் தென்னிந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்றன. *மதுரைக் காஞ்சி* பாண்டிய நாடு நெடுகிலும் குதிரை வர்த்தகம் நடந்ததாகக் கூறுகிறது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டொன்று 'பரத' என்பவனை குதிரை மேற்பார்வையாளனாகக் கூறுகிறது. பாளி இலக்கியங்கள் தமிழ் நாட்டில் இருந்து குதிரைகளைக் கொண்டு வந்து வர்த்தகம் செய்த கப்பல் தலைவனின் பிள்ளைகளான சேனல்குத்திகன் இலங்கையில் ஆட்சிபுரிந்த முதல் தமிழ் மன்னர் எனக் கூறுகிறது. சுதர்சன் செனிவரட்ன இவர்களைப் பரதவ குலத்தவராக இனங்கண்டுள்ளார்.

பாண்டிய நாட்டில் அழகன்குள அகழ்வாய்வில் கிடைத்த இரு மட்பாண்டங்களில் 'சமு', 'சமுதஹ' என்ற சொற்கள் பெறப்பட்டுள்ளன. இச்சொற்கள் இலங்கைப் பிராமி கல்வெட்டுக்களில் வரும் 'சமுட' என்ற பெயரைக் குறிக்கிறதென்பது ஐராவதம் மகாதேவனின் கருத்தாகும். இலங்கையில் கிடைத்த ஏழு பிராமி கல்வெட்டுக்களில் 'சமுட', 'மகாசமுட' என்ற பெயர்க்ள் காணப்படுகின்றன. 'சமுட' என்பது சமுத்திரத்தைக் குறிக்கிறது. இச்சொல் கல்வெட்டுக்களில் தனிப்பட்ட ஒருவரது பெயரைக் குறித்து நின்றாலும் சமுத்திரத்தோடு இவருக்கிருந்த தொடர்பைக் காட்டுகிறது. இது சங்க இலக்கியத்தில் பாண்டியநாட்டு குறுநில மன்னர்கள் 'கடலன்', 'கடலன் வழுதி' என அழைக்கப்பட்டதற்கு ஒப்பாகும். மாங்குளம் கல்வெட்டில் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் சார்பாக குகை அமைத்துக் கொடுத்தவன் 'கடலன் வழுதி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[14]. இங்கே 'கடலன்' என்ற பெயர் கடல் தொழிலோடு இவனுக்கிருந்த தொடர்பைக் காட்டுகிறது. எனவே, இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் கடலோடு தொடர்புப் படுத்தப்படும். 'சமுட' என்ற பெயர் தமிழ் நாட்டில் வர்த்தக மையங்களில் ஒன்றான அழகன் குளத்தில் மட்பாண்டம் ஒன்றில் பெறப்பட்டிருப்பது சங்க காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையே இருந்த கடல் வழி வர்த்தகத் தொடர்புக்குச் சான்றாகும்.

சங்ககால வர்த்தகம் தொடர்பாக இலங்கையில் கிடைத்த மற்றொரு சான்று நாணயங்களாகும். 1917-இல் முதன் முறையாக கந்தரோடையில் சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் சில கிடைக்கப்பெற்றன[15]. பண்டமாற்று முறை நிலவிய சங்ககாலத்தில் நாணயங்கள் வெளியிடப்படவில்லை என்ற கருத்து அறிஞர்க்ள்

பலரிடையே அன்று நிலவியதினால் கந்தரோடையில் கிடைத்த நாணயங்கள் புத்தமதம் சார்ந்தவையாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மைக் காலங்களில் மன்னரின் உருவம், பெயர், குலக்குறியீடு பொறித்த நாணயங்களில் பல கரூர், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, கொற்கை, அழகன்குளம் போன்ற இடங்கில் கிடைத்துள்ளன. இதன் மூலம் சங்ககாலத்தில் முத்திரை, வார்ப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டமை உறுதியாகிறது. இன்று சங்ககாலம் பற்றிய ஆய்வில் நாணயங்கள் கணிசமான பங்கு வகிக்கின்றன. பெரும்பாலான நாணயங்கள் தமிழ் நாட்டில் கிடைக்கப் பெறுவதினால் இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்படவில்லை எனக் கருதுவோரும் உளர். அண்மையில் தாய்லாந்தில் புலியுருவம் பொறித்த சோழ நாணயம் கிடைத்துள்ளது[16]. ஆனால் தமிழ் நாட்டைத் தவிர தமிழ்நாட்டிற்கு வெளியே அதிக நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக இலங்கை திகழ்கிறது. கந்தரோடையின் பின் பல நாணயங்கள் அநுராதபுரத்தில் கிடைத்துள்ளது. அண்மையில் அங்கு பிருத்தானிய ஜேர்மன் ஆய்வுக்குழுவினர் மேற்கொண்ட அகழ்வாய்வில் 'பெருவழுதி' நாணயங்கள் சில கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த நாணயங்களின் காலம் கி.மு.3-ஆம் நூற்றாண்டு எனக் கணிப்பிடப்பட்டதாகும்[17]. நாணயங்களும் சமகாலத்தவையாக கூறப்படுகின்றன. மிகச் சமீபத்தில் வட இலங்கையில் பூநகரிப் பிராந்தியத்தில் இருந்து சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட ஐந்து வகையான நாணயங்களும், புலியுருவம் பொறித்த சோழ நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது. இவ்வளவு பெருந்தொகையான பாண்டிய நாணயங்கள் இலங்கையின் ஏனைய இடங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. ஒரு நாட்டில் வெளியிடப்பட்ட நாணயம் சமகாலத்தில் அல்லது சற்றுக் காலம் தாழ்த்தி இன்னொரு நாட்டில் புழக்கத்தில் இருப்பதற்கு அரசியல் பண்பாட்டுத் தொடர்பு ஒரு காரணமாக இருப்பினும் அதில் வர்த்தகம் முக்கிய காரணம் என்பது மறுப்பதற்கில்லை.

மேற்கூறப்பட்ட சான்றாதாரங்களில் இருந்து சங்க காலத்தில் தமிழ் நாட்டு வணிகர்களின் நடவடிக்கைகள் இலங்கையில் ஏற்பட்டிருந்தமை தெளிவாகிறது. சங்க இலங்கியங்களில் ஒன்றான *பட்டினப்பாலை* இலங்கையில் இருந்து காவேரிப்பூம்பட்டினத்திற்கு வந்திறங்கிய உணவு பற்றிக் கூறுகிறது. திருப்பரங்குன்றம் பிராமிக்

கல்வெட்டு இலங்கையைச் சேர்ந்த வணிகன் ஒருவன் தமிழ்நாட்டில் உள்ள சமணத் துறவிக்கு அளித்த தானம் பற்றிக் கூறுகிறது. இச்சான்றுகள் சங்ககால வர்த்தகம் இலங்கையுடன் ஒரு பக்க உறவாக இல்லாது இருபக்க உறவாக இருந்ததைக் காட்டுகிறது. இருப்பினும் ஒப்பிட்டளவில் தமிழ்நாட்டு வணிகர்களின் நடவடிக்கைகள் இலங்கையில் ஏற்பட்டிருந்ததற்கே அதிக சான்றுகள் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் வர்த்தக நடவடிக்கைகளை மட்டுமின்றி கூடவே தமிழ் நாட்டில் இருந்து ஏற்பட்ட அரசியல் பண்பாட்டுச் செல்வாக்கையும் காட்டுகிறது. இதன் மூலம் இலங்கை வரலாறு தொடர்பாக பாளி இலக்கியங்களில் வரும் ஒரு பக்கச் சார்பான வரலாற்றுப் போக்கை இனங்காண முடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 Schoff.W.H., 1974, *Travel and Trade in the Indian Ocean by a Merchant in 1st century,* Oriental Book Reprint Corporation, pp 209-211.

2 Begley, V., 1973, "Proto-historic Material from Sri Lanka [Ceylon] and Indian Contacts" in *Ecological Background of South Asian Prehistory,* (ed.) Kennedy, A.R. and Possehl, L., Southasian Occasional Papers and Thesis, Southasian Programme, Cornell University, pp.190-196.

3 Conningham, R.A.E., 1999, Passage to India ? Anuradhapura and the Early Use of Brahmi Script" in *Cambridge Archaeological Journal,* Vol. 6.1,pp.73-97.

4 Subbarayalu, Y., 1991, *Kodumanal Excavations 1985-1990,* (unpublished interim report), Tamil University, Thanjavur.

5 Begley,V., 1993, " New Investigations at Port Arikamedu", *Journal of Roman Archaeology,* vol. 6, pp.93-108.

6 Paranavitana, S., 1970, *Inscriptions of Ceylon:Early Brahmi Inscriptions,* The Department of Archaeology Ceylon, Colombo.

---

[7] Sridhar, T.S. (ed.), 2005, *Alagankulam: An Ancient Roman Port City of Tamil Nadu,* Dept of Archaeology, Government of Tamil Nadu, Chennai, p.45-47.

[8] Mahadevan, I., 1994, "Recent Epigraphical Evidence for Ancient Tamil Contacts Abroad", in *Rev.Fr. Thaninayagam Memorial Lecture,* Thaninayagam Foundation Trust, Colombo, pp.1-26.

[9] Paranavitana S., 1970, *op.cit.* No.94.

[10] ப.புஷ்பரட்ணம், 2000, *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு,* குமரன் பதிப்பகம், சென்னை., பக்.70-71 & Paranavitana S., 1970, *op.cit.* No.94

[11] Paranavitana, 1970, *op.cit.,* No:356-357.

[12] Subbarayalu Y., 1991, Brahmi and Graffiti on Potsherds from Kodumanal Excavation, (unpublished interim report), Tamil University, Thanjavur.

[13] Paranavitana S., 1970, *op.cit.,* No.270

[14] Mahadeven. I., 1966, *Corpus of Tamil-Brahmi Inscriptions,* Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology, Govt. of Tamil Nadu, Madras, pp.1-12.

[15] ப.புஷ்பரட்ணம், 1998, "பூநகரில் கிடைத்த அரிய சங்க கால நாணயங்கள்", *ஆவணம்*,9, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்.114-119.

[16] Krishnamurthy. R., 1997, *Sangam Age Tamil Coins,* Garnet Publications, Madras, pp.20-23.

[17] Shanmugam.P., 1994., "Two Coins of Tamil Origin from Thailand", *Studies in South Indian Coins,* vol.4, p.95.

# 5. பூம்புகார் அகழாய்வு

**தி. சுப்பிரமணியன்**
தஞ்சாவூர்

பூம்புகாரில் மத்திய தொல்லியல் துறையினர் 1963-இலிருந்து 1973-வரை பல இடங்களில் அகழாய்வுப் பணியை மேற்கொண்டனர். தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையும் 1993-இலிருந்து சில இடங்களில் அகழாய்வு செய்தது. இந்த அகழாய்வில் பல குறிப்பிடத்தக்க வரலாற்று எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை புகாரில் கிழார்வெளி என்ற இடத்தில் செய்த அகழாய்வில் படகுத்துறை ஒன்று கிடைத்துள்ளது. அந்தப் படகுத்துறை இரண்டு மேடை போன்ற தளங்களைக் கொண்டது. இந்த இரண்டு மேடைகளுக்கு இடையில் சுமார் 1 மீட்டர் அகலத்தில் நீண்ட வாய்க்கால் போன்ற பகுதி ஒன்றுள்ளது. தளங்களின் மேல்பகுதிகளும், வாய்க்காலின் தரைப் பகுதியும் செங்கற்களால் பாவப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட தெற்குவடக்காகக் கட்டப்பட்டுள்ள இந்த வாய்க்காலின் தரை வடக்கில் உயர்ந்தும் தெற்கில் வரவரத் தாழ்ந்தும் கட்டப்பட்டுள்ளது. பெரிய, பெரிய செங்கற்களைக்கொண்டு இது கட்டப்பட்டுள்ளது. முன்பகுதியில் முழுமையான செங்கற்களும் உட்பகுதியில் உடைந்த செங்கற்களும் கலந்து கட்டப்பட்டுள்ளது. இச் செங்கற்கள் 35x25x8 செ.மீ. அளவுடையன. களிமண் கலந்த சாந்து செங்கற்களின் இடையில் காணப்படுகின்றது. மரத் தூண்களை ஒத்த மரங்கள் பக்கத்திற்கு இரண்டு வீதம் தெற்கிலும் வடக்கிலும் நடப்பட்டுள்ளன. இவை படகுகளைக் கட்டிவைக்க பயன்பட்டிருக்கலாம். படகுகள் வந்து நிற்பதற்கு ஏதுவாக இது கட்டப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு 'பழங்காவேரி' என்ற பெயரும் இருந்துள்ளது. இதனால் காவேரி முதலில் இப்பகுதியில் ஓடியிருக்க வேண்டும் என்று கூறலாம். பிற்காலத்தில் காவேரி திசைமாறி தெற்கில் ஓடுகின்றது. இதை கருத்தில் கொண்டு பார்த்தால் பழங்காவேரியின் கரையில் இப்படகுத்துறை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். கீழையூரில் மத்திய தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டப் படகுத்துறையும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள படகுத்துறையும் ஒரே ஆற்றின்

கரையில் அமைந்திருக்க வாய்ப்பு உள்ளது. இவை இரண்டும் ஒன்றை அடுத்து ஒன்று நேராகக் காணப்படுகின்றன. இப்படகுத்துறைகளுக்கு இடையே இரண்டு கிலோ மீட்டர் தூரம் உள்ளது.

இங்கிருந்து பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் பிறநாடுகளிலிருந்து வரும் பொருட்களை இறக்குமதி செய்யவும் அமைந்திருந்தப் பகுதிகளைப் பற்றி,

*வான்முகந்த நீர் மலைப் பொழியவும்*
*மலைப்பொழிந்த நீர் கடல் பரப்பவும்*
*மாரிப்பெய்யும் பருவம் போல*
*நீரினின்றும் நிலத்து ஏற்றவும்*
*நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்*
*அளந்து அறியாப் பலபண்டம்*
*வரம்பு அறியாமை வந்து ஈண்டி*

என்ற *பட்டினப்பாலையின்* (126-132) கூற்றை மெய்ப்பிப்பதாக இவை அமைந்துள்ளன.

இப்படகுத்துறைகளுக்கு தெற்கிலும் வடக்கிலும் மக்கள் வாழ்ந்ததற்கான மண்மேடுகள் இன்றும் காணப்படுகின்றன. வடபகுதியில் வீரமேட்டிருப்பு, மாந்தங்காடு, மண்டபக்காடு பழைய ஊரிருக்கைகளின் மண்மேடுகள் உள்ளன. தெற்கில் பல்லவனீஸ்வரம், புத்தவிகாரம் போன்றவைப் காணப்படுகின்றன. எனவே, வணிகப் பொருட்கள் இப்படகுத்துறைகளின் வழியாக கப்பலுக்கு கொண்டு செல்லவும் அங்கிருந்து கொண்டு வரவும் பயன்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு படகுத்துறைகளும் பழங்காவேரியின் கரைகளில் கட்டப்பட்டிருந்தன என்று கூறலாம்.

சங்க காலத்திற்கு முன்பு இருந்து சிறப்புற்று விளங்கிய பூம்புகாரில் பெருங்கற் காலத்தைச் சார்ந்த பானை ஓடுகளும் பிற்காலத்தைச் சார்ந்த பானை ஓடுகள், வெளிநாட்டு மட்கலங்கள் போன்றன கிடைக்கின்றன. ஆனால் எழுத்துக்களுடன் கூடிய பானை ஓடுகள் கிடைக்கவில்லை. முதன்முறையாக வானகிரிப் பகுதியில் செய்த அகழாய்வில் எழுத்துக்களுடன் கூடிய பானை ஓடு ஒன்று கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஓட்டில் உள்ள வாசகம் அசோகன் பிராமி எழுத்துக்களிலும் பிராகிருத மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. இதன் வாசகம் "அஹாபகே₃ தாரோ" என்று

வாசிக்கப்பட்டுள்ளது. இச்சொல்லின் பொருள் விளங்கவில்லை என்றாலும் இது வட இந்தியாவின் தொடர்பை வெளிபடுத்துகின்றது. பல்லவனீஸ்வரத்தில் செய்த அகழாய்வில் குஷானர் கால சிவப்பு பானை ஓடுகள் (Kushan Red Polished Ware) கிடைத்துள்ளன. இவற்றால் வடஇந்திய வணிகர்களும் பூம்புகாருக்கு வந்து வணிகம் செய்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

வானகிரி பகுதியில் செய்த அகழாய்வில் எலும்பினால் ஆன அம்புமுனை, ஆம்பொரா மதுசாடியின் பகுதிகள், மணிகள் போன்றன கிடைத்துள்ளன. கல், கண்ணாடி, சுடுமண் மணிகள் அகழாய்விலும் மேற்பரப்பிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிறிய மணிகள் முதல் பெரிய மணிகள் வரை பல வகைகளில் இம்மணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மத்திய தொல்லியல் துறையினர் செய்த அகழாய்வில் வெள்ளையன் இருப்பு, வானகிரி போன்ற இடங்களில் அதிக அளவில் மணிகள் கிடைத்துள்ளன. தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் அகழாய்விலும் தோசைக்குளம் சார்ந்த பகுதிகளில் மணிகள் அதிக அளவில் கிடைத்துள்ளன. மற்ற பகுதிகளில் கிடைத்த மணிகளைவிட இங்கு அதிக அளவில் அகழாய்விலும் மேற்பரப்பிலும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கொண்டு இப்பகுதியில் மணிகள் செய்யும் தொழிற்சாலை அல்லது மணிகள் விற்பனை செய்யும் அங்காடிகள் இருந்திருக்க வேண்டும் என்று உய்த்துணர முடிகின்றது.

கொங்கு நாட்டில் விலையுயர்ந்த கல்மணிகள் காணப்படுகின்றன என்பதும் கல்மணிகளை செய்யும் தொழிற்பட்டறை இப்பகுதியில் இருந்தன என்பதும் கொடுமணல் அகழாய்விலிருந்து தெரியவருகின்றது. இத்தகைய கல்மணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. இவை பூம்புகார் துறைமுகத்தின் வழியாகச் சென்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாந்தங்காடு பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் உறை கிணற்றை ஒத்த இரண்டு மட்கல அடுக்குகள் இருப்பது தெரியவந்துள்ளது. இந்த மட்கல அடுக்குகளில் ஒவ்வொன்றிலும் ஐந்துக்கும் மேற்பட்ட பானைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பானைகளின் வாய்ப்பகுதி (Rim Portion)




தளப்படம்




குறுக்கு வெட்டு அஆ

படம் 1 பூம்புகாரில் அகழ்வு செய்யப்பட்ட படகுத்துறை

தடித்தும் உருண்டும் காணப்படுகின்றன. அடிப்பகுதியின்றி உள்ள இந்த பானைகள் தாழிகளைப் போன்று காணப்படுகின்றன. வாய்ப்பகுதி 0.30 மீட்டர் விட்டம் உள்ளது. இரண்டு அடுக்குகள் 0.90 மீட்டர் தூரத்திற்கு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அமைப்பையும், தடித்த ஓட்டையும், அடிப்பகுதியையும் வைத்து இது உறை கிணறு என்று கூறலாம். உறைகிணறாகக் கொண்டால் 0.90 மீட்டர் தூரத்திற்கு இரண்டு உறைகிணறுகள் இருக்க வாய்ப்பு இல்லை. மேலும் இதன் வாய்ப்பகுதி குறுகளாக இருப்பதால் இதன் வழியாக தண்ணீர் எடுக்க இயலாது என்பது தெரிகின்றது. எனவே இதை உறை கிணறு என்று எடுத்துக் கொள்வதைவிட கழிவுநீர் தொட்டிகள் என்று கொள்வது சாலச்சிறந்தது. கழிவு நீர் தொட்டியின் வாய்பாகம் குறுகலாகவும், அருகிலும் கிடைக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இங்கு கருப்பு சிவப்பு ஓடுகளும், ரௌலட்டட் வகை ஓடுகளும் கிடைக்கின்ற போதிலும் சொர சொரப்பான சிவப்பு பானை ஓடுகள் (Coarse Red Ware) அதிக அளவில் கிடைக்கின்றன. இவற்றுடன் சுடுமண் மணிகள், காதணிகள், வளையல் துண்டுகள் போன்றனவும் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு கி.பி.9-10-ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதி மக்களின் வாழ்விடங்களாக இருந்தன என்று கொள்ளலாம்.

மாந்தங்காட்டிற்கு அருகில் மண்டபக்காடு என்ற பகுதி உள்ளது. இங்கு செய்யப்பட்ட அகழாய்வில் செங்கல் சுவர்ப்பகுதிகள் கிடைத்துள்ளன. செங்கல் சுவற்றின் அருகில் சரளைக்கற்களையும், செம்மண்ணையும் கொண்டு அமைக்கப்பட்ட தளம் காணப்படுகின்றது. இது மேல் தளத்தின் அடிப்பகுதியாக இருக்கலாம். செங்கல் சுவர் இடிபாடுகளுடன் 6 மீட்டர் நீளத்திற்கு கிடைத்துள்ளது. இச்சுவற்றின் மற்ற பகுதிகள் கிடைக்கவில்லை. நிலச் சீர்திருத்தத்தின் போது இக்கட்டடத்தின் செங்கற்கள் முழுவதும் அகற்றப்பட்டுவிட்டன. இதனால் இக்கட்டடத்தின் அமைப்பு விவரங்கள் எதுவும் தெரியவில்லை. இதில் காணப்படும் செங்கற்கள் சிறிய அளவுடையன. செங்கற்களின் இணைப்பிற்கு சிவப்பு நிற மண் சாந்து பயன்படுத்தியுள்ளனர். சுவர் வடக்கு தெற்காகக் கட்டப்பட்டுள்ளது. சரளைக்கற்களையும் செம்மண்ணையும் பரப்பி அதன்மேல் செங்கல் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதைப்போன்றே வீட்டின் தரைப் பகுதியும் செம்மண் பரப்பி கெட்டி செய்யப்பட்டுள்ளது.

செங்கற்களின் இணைப்பிலும் செம்மண் சாந்து பயன்படுத்தப் பட்டுள்ளது. கடல் மணலாக இருந்த காரணத்தால் இத்தகைய முறை பின்பற்றப்பட்டுள்ளது. மாந்தங்காடு, மண்டபக்காடு ஆகிய இரண்டு ஊர் இருக்கைகளும் பழங்காவேரியின் வடகரையில் அமைந்தவை.

**ஆய்வு மேற்கோள்கள்**

---

1. K.V.Soundara Rajan, 1994, *Kaveripattinam Excavation: 1963,-1973*, Archaeological Survey of India, New Delhi.

2. *மறைந்த மாநகர் பூம்புகார்*, 1977., தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

3. கா.இராஜன், 1995, *கொடுமணல் அகழாய்வு*, மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.

# 6. முசிறி-அலெக்ஸாண்டிரியா வணிக உடன்படிக்கை ஒரு தொல்லியல் பார்வை

**கா.ராஜன்**
புதுச்சேரி

**ச**ங்க காலத்திற்கு முன்பிருந்தே பழந்தமிழகக் கடற்பகுதி பிறநாடுகளுடனான வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்தது. குறிப்பாக சங்க காலத்தில் ஆற்றின் முகத்துவாரங்களில் அமைந்த துறைமுகங்கள் பன்னாட்டுடனான வணிகத்தில் முக்கியப் பங்காற்றின. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அரிக்கமேடு, பூம்புகார், அழகன்குளம், கொற்கை ஆகிய துறைமுகங்களிலும், மேற்குக் கடற்கரைப்பகுதியில் பட்டணம் (முசிறி?) என்னும் ஊரிலும் நிகழ்த்தப் பெற்ற அகழாய்வுகள் தொல்லியல் சான்றுகளாய் அமைகின்றன. வெளிநாட்டவரின் பயணக்குறிப்புகளில் குறிக்கப்படும் மேற்கு கடற்கரைப்பகுதியில் இருந்த தொண்டி துறைமுகம் எங்குள்ளது என இன்னும் கண்டுபிடிக்க இயலவில்லை. முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்கள் மத்தியத்தரைக்கடல் நாடுகளுடனான வணிகப் பரிமாற்றத்தின் பாலங்களாக அமைந்தன (படம்.1). முசிறியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் ரோமநாட்டை சென்றடைந்ததற்கான சான்றாக கி.பி.2-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பேப்பிரஸ் தாளில் எழுதப்பட்ட ஓர் ஒப்பந்தம் தற்பொழுது வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ளது. இது இரு வணிகர்களுக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கை. இக்கட்டுரை இவ்வுடன்படிக்கையைத் தொல்லியல் சான்றுகளோடு இலக்கியங்கள், வெளிநாட்டவர் பயணக்குறிப்புகள் போன்றவற்றுடன் ஒப்பிட்டு நோக்குகிறது.

## முசிறி, வஞ்சி, கரூர்

சங்க இலக்கியமான *பதிற்றுப்பத்து* சேர மன்னர்கள் குறித்த விரிவான செய்திகளை அளிக்கிறது. அசோகர் கல்வெட்டில் சேரர்கள் 'கே(ர)ளபுத்ர' என குறிக்கப்பட்டுள்ளனர். பிளினி 'கேளபோத்ராஸ்' முசிறியிலிருந்து ஆண்டனர் எனவும், *பெரிப்ளுசு* நூலாசிரியர் முசிறி ஓர்

ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து 20 காததூரம் (Stadia) உள்ளே அமைந்திருந்தது[1] எனவும் குறித்துள்ளனர். ஆனால் தாலமி கரூர் சேரரது தலைநகரம் எனவும் முசிறி அவர்களது துறைமுகம் எனவும் குறித்துள்ளார். சேரர்களைப்பற்றி மிகுந்து குறிக்கும் *பதிற்றுப்பத்து* கரூரைப்பற்றிய குறிப்புகளைத் தரவில்லை. ஆனால், சேரர் தலைநகரை வஞ்சி எனக் குறிக்கின்றது. ஆனால், *பதிற்றுப்பத்தில்* குறிப்பிடப்பெறும் மன்னர்கள் பெயர்களோடு புகளூரில் கண்டுபிடிக்கப்பட்ட பழந்தமிழ்க் கல்வெட்டுக்களில் கரூர் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது[2].

இலக்கியங்களை நோக்கும்போது தொடக்கத்தில் சேரர்கள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் நறவு என்னும் ஊரை மையமாகக் கொண்டு ஆட்சி செய்தனர் எனலாம். இவ்வூரை நெளரா (Naura) எனப் *பெரிப்ளூசு* நூல் குறித்துள்ளது. இது நேத்ராவதி நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள மங்களூர் பகுதியாகலாம். வடக்குப் பகுதியிலிருந்த கடம்பர்களுடன் குறிப்பாக நார்முடிச்சேரல் காலத்தில் அடிக்கடி நிகழ்ந்த போரினால் தமது நடவடிக்கைகளை தெற்கேயுள்ள முசிறிக்கு மாற்றியிருக்கக்கூடும். இதன் பின்னர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் காலத்தில் கொங்குப் பகுதியில் தங்களது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி இருத்தல் வேண்டும். இப்பகுதியில் கிடைக்கும் கனிமவளத்தை, குறிப்பாக, இரும்புத் தாதுக்களையும், அரிய கல்மணிகளையும் தமது கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவது இதன் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். இக்காலத்திலேயே ஆன்பொருநை (அமராவதி) ஆறு காவிரியுடன் கலக்குமிடத்தில் உள்ள கரூரைத் தலைமையிடமாக மாற்றியிருக்கவேண்டும். சேரன் செங்குட்டுவன் காலத்தில் கொங்குப்பகுதி முழுவதும் அவனது ஆட்சிப்பரப்பில் வந்தமையால் கரூர் என்னும் வஞ்சி மேற்குக் கரையிலிருந்த வஞ்சியைவிட முக்கியத்துவம் பெற்றது. சேரர் குறித்த இலக்கியங்களில் தொடக்கக் காலங்களில் மேற்குக் கடற்பகுதியில் பாயும் பெரியாறு குறிக்கப்படுவதும், பின்னர் வரும் காலங்களில் ஆன்பொருநை (அமராவதி) ஆறு குறிக்கப்படுவதும் இங்கு சுட்டத்தகுந்தது.

*பதிற்றுப்பத்தில்* (64:1.74.15) குறிக்கப்படும் செல்வக் கடுங்கோ வாழியாதன் மற்றும் பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் 'கொடுமணம்' என்னும் சங்ககால ஊர் கல் மணித்தொழிலில் சிறந்து விளங்கியது. திருப்பூர், காங்கேயம், சென்னிமலை ஆகிய ஊர் பகுதிகளில் மணிகள் செய்யப் பயன்படும் அரிய கல்வகைகள் கிடைக்கின்றன. இம்மூன்று ஊர்களுக்கும் மையத்தில் கொடுமணல் அமைந்துள்ளது. இங்கு நிகழ்த்தப் பெற்ற அகழாய்வில் சங்ககால வாழ்க்கை முறையை அறிய பல முக்கிய சான்றுகள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது[3]. மேலும் கொடுமணலுக்கு அருகிலுள்ள படியூரில் கிடைக்கும் மணிகற்கள் குறித்து தாலமி தமது குறிப்பில் சுட்டியுள்ளார்.

தொடக்கக்கால இலக்கியங்களில் காணப்படும் 'சேரல்', 'ஆதன்' என்னும் பின்னொட்டுப் பெயர்கள், பின்னர்வரும் இலக்கியங்களில் முன்னொட்டாகவும் 'கோதை', 'பொறை' ஆகியன பின்னொட்டுக் களாகவும் மாறுவதை அறியலாம். இது சேரருடைய அரசு குலமரபு உரிமையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பதாகலாம். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 'கொல்லிப்பொறை', 'மாகோதை', 'மாகோகோதை', 'குட்டுவன்கோதை' என்னும் பெயர் பொறித்த காசுகள் இங்கு சுட்டத்தகுந்தன[4]. இதை உறுதிபடுத்தும் வகையில் புகளூர் கல்வெட்டுக்களில் காணப்படும் செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ என்னும் சேரர் பெயர்கள் அமைந்துள்ளன[5]. கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் என்னும் பெயர் சேரர் நடவடிக்கைகள் கரூர் பகுதிக்கு மாற்றம் செய்ததை உறுதிசெய்வதாகக் கொள்ளலாம். சேரன் செங்குட்டுவனுக்கு முந்தைய இலக்கியங்களில் நறவு, தொண்டி, வஞ்சி, மாந்தை என்னும் கடற்கரையூர்கள் மிகுந்து குறிக்கப்படுகின்றன. ஆனால் பின்னர் வரும் இலக்கியங்களில் கருவூர்-வஞ்சி பற்றியக் குறிப்புகள் அதிகம் காணப்படுகின்றன. இச்சான்றுகள் சேரரின் நடவடிக்கைகள் மேற்கு கடற்கரைப் பகுதியிலிருந்து கொங்குப் பகுதிக்கு மாறியதை வலுப்படுத்துகின்றன. கருவூக்கு தமது தலைமையிடத்தை மாற்றம் செய்வதால் கொங்குப்- பகுதியின் பொருளாதாரத்தை தமது ஆட்சியின் கீழ் கொண்டுவருவது மட்டுமல்லாது சோழர், பாண்டியரின் ஆளுமையைக் குறைக்கவும் இயலும் என்பதே இதற்கு காரணமாக இருந்திருக்கக்கூடும். இவ்வரலாற்றமைவில் முசிறி-

அலெக்ஸாண்டிரியா இடையே நிலவிய வணிகவரலாற்றை தொல்லியல் சான்றுகளுடன் மீளாய்வு செய்தல் அவசியமாகிறது.

**வணிகமும் பொருளாதாரமும்**

மேற்குக் கடற்கரைப் பகுதிக்கும் மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்குமிடையேயான வணிக உறவுகள் அகஸ்டஸ் (கி.மு.29-கி.பி.14) காலத்திற்கு முன்பிருந்தே நிகழ்ந்திருக்கக் கூடும் என்பதை சான்றுகள் வாயிலாக அறிய முடிகிறது. மத்தியத்தரைக்கடல் நாடுகளுடனான சேரர்களின் வணிகம் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. *பெரிப்ளூசு* இந்தியத் துறைமுகங்களைப் பற்றியும் ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள் பற்றியும் விரிவாகக் குறிப்பிடுகிறது. கொடுமணலில் கிடைத்த ரோமானிய உருவம் கொண்ட சுடுமண் பொம்மையும்[6], அரிக்கமேடு மற்றும் காரைக்காடு என்னுமிடங்களில் கிடைத்த ரௌலட்டட், ஆரிடைன் பானை ஓடுகளும்[7], அழகன்குளத்தில் நிகழ்ந்த அகழாய்வில் கிடைத்த கப்பல் உருவம் பொறித்த பானை ஓடும்[8] மேற்காணும் வணிகத்தை உறுதிப்படுத்தும் தொல்லியல் சான்றுகளாய் அமைகின்றன. மேலும் செங்கடல் துறைமுகங்களான பெரநிகே, குவாசிர்-அல்-காதிம் ஆகிய இடங்களில் கிடைத்த கோற்பூமான், கணன், சாதன் எனப்பெயர் கீறப்பட்ட பானை ஓடுகளும் இருபகுதிகளுக்கிடையே நிகழ்ந்த மேம்பட்ட வணிக உறவை உறுதி செய்கின்றன (படம்.2)[9]. பருவக்காற்று குறித்த பண்டைய மக்களின் அறிவு ஓசெலிஸ் (Ocelis) துறைமுகத்திலிருந்து எவ்விதத் தடையுமின்றி 40 நாட்களில் முசிறி துறைமுகத்தை பாய்மரக்கப்பல்களில் அடைய உதவியது. மிக நீண்ட இந்தியக் கடற்கரை ரோமானியர்களின் வணிக உறவிற்குப் பேருதவியாய் அமைந்தது. மேற்குக் கடற்கரையில் அமைந்த பாரிகாஜா (Barygaza), சுபாரகா (Suparaka), முசிறி (Muziri), நெல்கிந்தா (Nelcynda) மற்றும் கிழக்குக் கடற்கரையில் அமைந்த கொற்கை, அழகன்குளம், பூம்புகார், அரிக்கமேடு ஆகிய துறைமுகங்கள் இவ்வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்தன.

இந்தியப் பொருட்களான மிளகு, ஏலம், வாசனைத் திரவியங்கள், தந்தம், சந்தனம், துணி, பட்டு, முத்து, மணிகள், இரும்பு போன்றவை ஏற்றுமதி செய்யப்பட, ரோம நாட்டிலிருந்து மது,

மதுக்குடுவைகள், அழகுப்பொருட்கள், கண்ணாடி, விளக்குகள், வெள்ளீயம், ஈயம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதிப் பொருட்களின் அளவின் மதிப்பு ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பைவிட குறைவாக இருந்ததினால் ஏற்பட்ட நிதிபற்றாக்குறையை பிளினி குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்கள் ரோம நாட்டில் நூறுமடங்கு விலையில் விற்கப்பட்டதாகவும் பிளினி குறிப்பிடுகிறார். ரோமானியப் பேரரசர் டைபீரியஸ் (கி.பி.14-37) ரோம நாட்டிற்கு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவு கூடியதையும் அதனால் ஏற்பட்ட வணிக ஏற்றத்தாழ்வையும் கடுமையாகக் குறை கூறியுள்ளார்[10]. ரோம நாட்டிலிருந்து அதிக அளவில் வெள்ளி, மற்றும் தங்கம் போன்றன பாரிகாஜா, முசிறி, நெல்கிந்தா துறைமுகங்களுக்கு வந்தமையை *பெரிப்ளுசு* குறிக்கிறது[11].

இக்குறிப்புகளை உறுதிப்படுத்தும் வகையில் ரோமானிய தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் தென்னிந்தியாவில் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழகம், மற்றும் ஆந்திரக் கடற்கரைப் பகுதியில் மிகுதியாகவும், கேரளம், கர்நாடகப் பகுதியில் ஓரளவிற்கும் இந்நாணயங்கள் கிடைத்துள்ளன. குடியரசு நாணயங்கள் (**Republican Coins**) லட்சத்தீவுகளிலும்[12], தமிழகத்தில் கள்ளக்கிணறு[13], திருப்பூர்[14] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. திருப்பூர் பகுதியில் கிடைத்த கல்மணிகளுக்கு ரோமானிய நாட்டில் மிகுந்த வரவேற்பு இருந்தது. எனவே இவ்வணிகம் அகஸ்டஸ் (கி.பி.29-14கி.பி.) காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கியிருத்தல் கண்கூடாகும். இவ்வகையில் கி.பி.2-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தைச் சார்ந்த பேப்பிரஸ் தாளில் எழுதப்பட்ட வணிக ஒப்பந்தம் வரலாற்றாய்வில் முக்கியத்துவம் பெறுகிறது.

## வியன்னா பேப்பிரஸ் வணிக உடன்படிக்கை

கி.பி.2-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சேரர் துறைமுகமான முசிறிக்கும், ரோமானியர் துறைமுகமான அலெக்ஸாண்டிரியாவிற்கும் நிகழ்ந்த வணிகப் பரிமாற்றம் குறித்து பேப்பிரஸ் தாளில் எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ளது (படம்.3)[15]. கிரேக்க மொழியில்

எழுதப்பட்ட இவ்வுடன்படிக்கை இரு வணிகர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவ்விருவரில் ஒருவர் முசிறியிலிருந்து பொருட்களை அலெக்ஸாண்டிரியாவிற்கு கொண்டு செல்லும் முகவராக அறியப்படுகிறார். இவ்வுடன்படிக்கையில் இருவரின் பெயர்களும் அறியப்படாமல் போனது ஒரு குறைபாடே. எனினும், செங்கடல் துறைமுகங்களில் நிகழ்ந்த அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட பழந்தமிழ் எழுத்துக்கள் 'கோறபூமான்', 'கணன்', 'சாதன்' என்ற பெயர்களிலிருந்து தமிழ் வணிகர்கள் குறித்து ஓரளவிற்கு அறியமுடிகிறது.




படம் 1



(அ)



(ஆ)



(இ)

படம் 2




படம் 6

இவ்வுடன்படிக்கையில் காணப்படும் வணிகப்பொருட்கள் வியக்கும் வண்ணம் உள்ளன. இவ்வுடன்படிக்கையை ஆய்வு செய்த காஸன் என்பார் 'இப்பொருட்களின் தற்போதைய மதிப்பைக் கணக்கிட்டால், நைல்நதி சமவெளியில் 2400 ஏக்கர் பரப்பளவுள்ள பண்ணை நிலங்களை விலைக்குப் பெற முடியும்' எனக் கூறியுள்ளார்[16]. இது இரு வணிகர்களுக்கு இடையே ஒரேயொரு முறை நிகழ்ந்த வணிகப் பரிமாற்றத்தின் அளவு ஆகும். ஆகையால் இதுபோல் பல மடங்குப் பொருட்கள் இந்தியாவிலிருந்து மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் என்பதில் வியப்பேதும் இல்லை. இச்சான்றின் முக்கியத்துவம் கருதி தமிழில் மொழி பெயர்த்து தரப்படுகிறது. கிரேக்க மொழியில் காணப்படும் இவ்வுடன்படிக்கை பல்வேறு அறிஞர்களின் உதவியுடன் முடிந்த அளவு மூலத்திலிருந்து விலகாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதை ஊன்றி நோக்கினால் மொழிநடை, ஏற்றுமதிப் பொருட்கள், நிலவியல் அமைப்பு வணிக மையங்கள், துறைமுகங்கள், உடன்படிக்கைக் கருத்துகள் ஆகியவற்றை அறியமுடியும்.

**முன்பக்கம்**

".....தங்களது துணைத்தலைவர்கள்/பிரதிநிதிகள் அல்லது மேலாளர்கள் ..... மற்றும் நாம் ஏற்கனவே ஒத்துக்கொண்டபடி தங்களது ஒட்டக ஓட்டுனருக்கு 170 டேலன்ட் (talents), 50 திரமம் (drachmae) அதிகப்படியாக கோபடஸ் (Copotos) செல்லும் சாலையைப் பயன்படுத்தத் தருவேன் எனவும் நான் சுமைகளை (carriage) எனது கண்காணிப்பில் பாலைவனம் வழியாக ஓட்டிச் செல்வேன் எனவும், பொருட்களை சேதம் விளையாமல் கோபடஸிலுள்ள சுங்கச்சாவடிக் கிடங்கிற்கு கொண்டுவருவேன் எனவும், தாங்கள் அல்லது துணைத்தலைவர்கள் அல்லது அவர்களுடைய தற்போதைய முகவர் முடிவின்படி பொருட்களை ஆற்றில் (கரையில்?) இறக்கி பத்திரமம்க வைப்பேன் எனவும், சரியான காலத்தில் பத்திரமாகப் படகில் கொண்டு செல்வேன் எனவும் அங்கிருந்து டெட்ரோலோஜியா (Tetrologia) சுங்கச்சாவடி கிடங்கிற்கு அப்பொருட்களை எடுத்துச் செல்வேன் எனவும், தங்களது முடிவின் உரிமை மற்றும் முத்திரையின்படி அல்லது எவ்வாறாயினும் தங்களது பதிவாளரின் முடிவின்படி அதே முறையில் எடுத்துச் செல்வேன். (எனவும் உறுதி கூறுகிறேன்?)

இப்போதிலிருந்து டெட்ரோலோஜியா வரை செல்ல படகுக்கு (கப்பலுக்கு) ஆகும் அனைத்து செலவுகளும், பாலைவனத்தைக் கடக்க ஆகும் பயணச்செலவுகளும், படகிற்கு (ஆற்றைக்கடக்க?) அல்லது படகோட்டிக்கு ஆகும் செலவுகள் மற்றும் பங்கிற்காக (அல்லது கலந்துகொள்வதற்காக) ஆகும் பிற செலவுகளுக்காக... அதன்படி, முசிறியில் முடிவு செய்யப்பட்ட கடன் ரசீதின் கடனை திருப்பிச் செலுத்தும் காலம் வரும்பொழுதும் நான் எனது கடனை சட்டபூர்வமாக திருப்பிச் செலுத்தாத நிலையில்: தாங்கள் மற்றும் தங்களது பதில் ஆட்கள் தாம் நினைத்தபடி முடிவெடுக்கவும், எல்லையற்ற விருப்புரிமை ஆற்றலுடன் தங்களுடைய முடிவெடுக்கும் இசைவுடன் நிறைவேற்றும் நடவடிக்கையில் முடிவு செய்யவும் சட்டபூர்வமான முடிவல்லாதும், தாங்கள் மேற்கூறிய கடனின் தலைவர் (master of above mentioned loan) எனவும் செல்வத்தில் கால் பங்கைப் பறிமுதல் செய்யவும், தாங்கள் விருப்பப்படி முக்கால் பங்கை எங்கு சேர்க்க வேண்டுமோ அங்கு சேர்க்கவும் விற்கவும் கடனை தாங்கள் விரும்பும் வண்ணம் ஒழுங்கு படுத்தவும் முதலீடுகளை தங்கள் விருப்புரிமைப்படி மேலாண்மை செய்யவும், சந்தை நிலவர விலையில் தங்களுக்கே விற்றுக்கொள்ளவும், பொருட்களை வைத்துக்கொள்ளவும் பெற்ற கடனை மேற்கண்ட கடனிலிருந்து எடுத்துக்கொள்ளவும் (உறுதியளிக்கிறேன்?) தாங்கள் மற்றும் தங்களது துணைத்தலைவர்கள் அல்லது பதிலாட்கள் பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பாவார்கள் மற்றும் நாங்கள் ஒருவரை ஒருவர் எவ்வகையிலும் பொய்பேசி குறை கூறிக்கொள்ளமாட்டோம். சமூகத்திற்காக அளிக்கப்படும் செலவின் லாப நட்டங்கள் என்னையும், கடன் பெற்றவரையும் மற்றும் அடகு வைத்தவரையும் சாரும்...

**பின்பக்கம்**

வடகங்கையிலிருந்து வந்த 60 பெட்டிகள் விலை கீழ்வருமாறு கணக்கிடப்படுகிறது. ஒரு சுமைக்கு 45 வெள்ளி டேலண்ட் வீதம் ஒரு பெட்டிக்கு 4500 திரமம் (drachmae).

டேலண்ட் 78, 541/2 மினா (mina) எடையுள்ள தரமுள்ள தந்தத்திற்கு கீழ்காணும் வகையில் விலை கணக்கிடப்படுகிறது: டெடார்ட் (tetarte) இன் எடையில் 78 எடை (டேலண்ட்), 43 மினா, இதில் 1 டேலண்ட் 98 லிட்ரா (litra) எனக் கணக்கிட்டால் 7478 லிட்ரா; இதில் கழிக்கவேண்டும். ஏனெனில் ஒரு டேலண்ட் எடையை 70 லிட்ரா என்று ஒட்டுமொத்த விற்பனையாளர் கணக்கிடுவர்: (நம்மிடம் இருப்பது) 76 எடை டேலண்ட், 45 மினா 100 திரமம் எனில் 76 டேலண்ட், 4500 திரமம்.

மேலே எஞ்சிய 11 1/2 மினா தந்தங்களுக்கு, உண்மை வரிக்கு பதில் அதிக விலையில் தந்தங்களின் எண்ணிக்கையில் 25% சுங்கவரியாக அராபஸால் (Arabaches) நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதாவது தந்தங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கணக்கில் கொண்டு 25% சுங்கவரி செலுத்தினோம். மினா 100 திரமம் எனில் (வருவது) 1125 வெள்ளி திரமம் (அது) மொத்தமாக 76 டேலன்ட் 5675 திரமம் ஆகிறது.

தோராயமாக 13 டேலன்ட், 9 3/4 மினாவுள்ள 54 எண்ணிக்-கையிலான (பொருள்) கட்டுக்கள் இதன் விலை மேற்கூறியவாறு கணக்கிடப்பட்டு 12 எடை டேலன்ட் மினா, மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டது. ஒருவகையில் டெடார்ட் எடையில் (ஆவது) 1214 லிட்ரா, மறுவகையில் ஒட்டுமொத்த விற்பனையாளர் கணக்கில் 12 டேலன்ட், 27 மினா, ஒரு மினா 70 திரமம், வெள்ளியில் 8 டேலன்ட், 4290 திரமம்.

சுங்கவரி அதிகம் விதிக்கப்பட்டதால் விடுபட்ட 22 3/4 மினாவிற்கு மேற்குறித்தவாறு ஒரு மினா 70 திரமம், கணக்கிட்டால் 1592 திரமம் 3 ஓபோல் (Oboles).

அப்படியென்றால் துணிக்கட்டுகளுக்கு 8 டேலன்ட் 5882 திரமம் 3 ஓபோல், அவ்வாறெனில் தந்த விலை 76 டேலன்ட் 5675 திரமம் ஹெர்மபோலன் (Hermapollon) படகில் ஏற்றுமதிப் பண்டங்களில் அனைத்து ஆறு கூறுகளின் கூட்டாக வெள்ளியில் 1154 டேலன்ட், 2852 திரமம்..'

மேற்கண்ட வணிக ஒப்பந்தம் முழுமையாக கிடைக்காமல் போனாலும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு மிகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட வணிகப் பரிமாற்றம் இருந்ததை நம்மால் அறியமுடிகிறது. இவ்வணிக ஒப்பந்தம் இரு வணிகர்களுக்கு இடையே நடைபெற்ற பொருட்களின் அளவை மட்டுமே குறிக்கிறது. ஒரு வணிகக் கப்பலில் பல வணிகர்களின் பொருட்கள் ஏற்றப்படும். ஆதலால் பல வணிகர்களின் பரிமாற்ற பொருட்களின் ஒட்டு மொத்த அளவை நாம் உய்த்துணரலாம். மேலும் பல வணிகக் கப்பல்கள் முசிறியை விட்டு ஒரு பருவகாலத்தில் ரோம் நாட்டை நோக்கிச் சென்றிருக்க வேண்டும். ஒப்பந்தத்தில் காணும் பொருட்கள், அவைகளின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டால் தமிழகத்திற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே மிகச்சிறந்த வணிகம் சங்ககாலத்தில் நிகழ்ந்திருக்கும் என்பதில் எவ்வித வியப்பும் இல்லை. இவ்வொப்பந்தம் சங்ககாலத்தில் அரசு உருவாக்கம் (State Formation) ஏற்பட்டிருக்கவில்லை என்று கூறும் அறிஞர்களின் கருத்தை வலுவிழக்கச்செய்வதாய் அமைகிறது.

அடிக்குறிப்புகள்

---

[1] Schoff, W.H.(tr.), 1912, *The Periplus of the Erythraean Sea*, Oriental Reprint(1974), New Delhi, p.44

[2] Mahadevan, I., 1966, "Corpus of Tamil-Brahmi Inscriptions", R.Nagasamy (ed.), *Seminar on Inscriptions*, State Archaeology Department, Madras, p.10.

[3] Rajan, K., 1991, "Iron and Gemstone Industries as revealed from Kodumanal Excavations", *Puratattva*, Vol. 20, pp.111-112

[4] Krishnamurthy, R., 1997, *Sangam Age Coins*, Garnet Publications, Madras, pp.97-106.

[5] Mahadevan, I., 1966, "Corpus of Tamil-Brahmi Inscriptions", R.Nagasamy (ed.), *Seminar on Inscriptions*, State Archaeology Department, Madras, p.10.

[6] Suresh, S., 1992, *Roman Antiquities in Tamil Nadu*, The C.P. Ramaswami Aiyar Institute of Indological Research, Madras.

[7] Wheeler, R.E.M., Ghosh, A., and Krishna Deva, 1946, "Arikamedu, An Indo-Roman Trading Station on the East Coast of India", *Ancient India*,2, Archaeological Survey of India.

[8] Casson, L., "Ancient Naval Technology and the Route to India", Vimala Begley and R.De. Puma (ed.) *Rome and India- the Ancient Sea Trade*, Oxford University Press, Delhi. &

Kasinathan Natana, 1995, "Antiquity of Sea Voyage in Tamil Nadu", *Paper Presented in the VIIIth International Conference* - Seminar on Tamil Studies, Thanjavur, Jan-1-4.

---

[9] Mahadevan, I., 1998,"Ekiptu nattil tamilil elutiya taali", (An Amphora with Tamil Characters found in Egypt", *Avanam*, Vol.9, pp.17-19.

[10] Majumdar, R.C., 1960, *Classical Accounts of India*, Calcutta, p.274.

[11] *Ibid.*, pp.304-5.

[12] Sastri, A.M., 1992, "Imperial Roman Coins in Early Decanese Inscriptions", *Studies in South Indian Coins*, vol.2.,pp.77-88.

[13] Raman, K.V., 1992, "Roman Coins from Tamil Nadu", *Studies in South Indian Coins*, vol.2.,pp.19-34.

[14] Arumuga Seetharaman, 1990, *Dinamani*, Daily, 22 April.

[15] Harraurer, H., and Sijipesteiju, P., 1985, "Ein Neues Dokument Zu Roms Indianhandel P.Vindob G. 40822", *Anzhien*, 122, pp.124-155. &

Sidebotham, E.S., 1989, "Ports of the Red Sea and the Arabia-India Trade", T.Fahd,(ed.), *L'Arabia Preislamique et son environnement Historique et cultural*, Universite de Sciences Humaine de Strasbourg Travaux du Centre e Recherche, Srasbourg, pp.195-223.

[16] Casson, L., 1991, "Ancient Naval Technology and the Route to India", Vimala Begley and R.De. Puma (ed.) *Rome and India the Ancient Sea Trade*, Oxford University Press, Delhi.

# 7. தமிழகக் காசுகளில் கலங்கள்

**ஆறுமுக சீதாராமன்**
தஞ்சாவூர்

தமிழகத்தில் கிடைத்த கப்பல் உருவம் பொறித்த காசுகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தென்னிந்தியாவில் முதன்முதலில் கப்பல் உருவம் பொறித்தக் காசுகளை வெளியிட்டவர்கள் சாதவாகன மன்னர்கள். இவர்கள் கப்பல் உருவம் பொறித்த ஈயக்காசுகளை மட்டுமே வெளியிட்டனர். சாதவாகனர்கள் வெளியிட்ட கப்பல் வடிவக் காசின் முன்பக்கத்தில் உஜ்ஜயினி சின்னம் காணப்படுகிறது[1]. பின்பக்கத்தில் கப்பல் காணப்படுகிறது. சில காசுகளில் விளிம்பைச் சுற்றிலும் மன்னனின் பெயர் காணப்படுகிறது.

சாதவாகனர்களுக்குப் பின்வந்த பல்லவர்கள் சாதவாகனர்களைப் பின்பற்றியே முதலில் கப்பல் உருவ ஈயக் காசுகளை தமிழகத்தில் வெளியிட்டனர். பிறகு கலப்பு உலோகம் மற்றும் செம்புக் காசுகளில் பல்வேறு கப்பல் உருவக் காட்சிகளைப் பொறித்து வெளியிட்டனர். இதில் ஐந்து வகை காசுகள் மட்டும் தமிழகத்தில் கிடைத்துள்ளன.

கிடைத்த காசுகள் மூலம் கி.பி.7-9-ஆம் மற்றும் 17-19-ஆம் நூற்றாண்டில் உள்ள கப்பல் வடிவங்கள் பற்றியும், கடல் வணிகச் சிறப்பைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. கடல் வணிகத்தில் ஆர்வம் கொண்ட பல்லவ மன்னர்கள், தமிழக நாயக்கர் மன்னர்கள் கப்பல் உருவக் காசுகளை சிறப்பு வெளியீடாக வெளியிட்டுள்ளனர் என்பதை அறியலாம். பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட கப்பல் உருவம் பொறித்தக் காசுகள் தாய்லாந்து[2], இலங்கை[3] போன்ற நாடுகளிலும் கிடைத்துள்ளன.

**பல்லவர் காசுகள்**

**காசு-1**

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் ஸ்ரீவத்ஸம் உள்ளது. பின்பக்கத்தில் இரு பாய்மரம் உடைய கப்பல் உள்ளது. கிடைத்த இடம்:கரூர்; உலோகம்: கலப்பு உலோகம்; எடை:2.3 கிராம்.



காசு-2

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் கப்பல் பாய்மரங்களுடன் உள்ளது. கிடைத்த இடம்:காஞ்சிபுரம்; உலோகம்:கலப்பு உலோகம்; எடை:1.15 கிராம்.



காசு-3

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் கப்பல் ஒரு பாய் மரத்துடன் உள்ளது. இதே வகையான காசு ஒன்று ஈயத்திலும் கிடைத்துள்ளது. கிடைத்த இடம்:கரூர்; உலோகம்:செம்பு.



**காசு-4**

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் நீரில் கப்பல் போவது போல் கடல் அலை பொறிக்கப்பட்டுள்ளது. பாய்மரக் கப்பலில் இரண்டு கொடிமரங்கள் உள்ளன. கிடைத்த இடம்:சென்னைக்கும் கடலூருக்கும் இடையே உள்ள கடற்கரைப்பகுதி.



**காசு-5**

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் பிறை, ஸ்ரீவத்ஸம் உள்ளன. பின்பக்கத்தில் இரண்டு பாய்மரங்களுடன் கப்பல் ஒன்று நீரலைகளின் மேல் உள்ளது. கம்பங்களின் நுனியில் கொடிகள் உள்ளன. கிடைத்த இடம்:சென்னைக்கும் கடலூருக்கும் இடையே உள்ள கடற்கரைப்பகுதி.



**தஞ்சை நாயக்கர் காசுகள்**

**காசு-1**

காசின் முன்பக்கத்தில் புள்ளிகளாலான வட்டத்தினுள்ளே கப்பல் ஒன்று காணப்படுகிறது. பின்பக்கத்தில் பூர்ணகும்பம் உள்ளது. கிடைத்த இடம்:கும்பகோணம்; உலோகம்:செம்பு; எடை:2.8 கிராம்.



காசு-2

காசின் முன்பக்கத்தில் கப்பல் ஒன்று காணப்படுகிறது. பின்பக்கத்தில் செங்குத்தாக சங்கு ஒன்று உள்ளது. கிடைத்த இடம் தஞ்சாவூர்; உலோகம்:செம்பு; எடை : 1.2 கிராம்.



காசு-3

காசின் முன்பக்கத்தில் கப்பல்; கப்பலுக்குள் மனிதன் அமர்ந்த உருவம் காணப்படுகிறது. பின்பக்கத்தில் மேற்பகுதியில் காம்பில் இலைகள் காணப்படுகின்றன. கீழே 'ராம' என்று நாகரி எழுத்து உள்ளது. ராமராய என்ற பெயரின் சுருக்கமாக 'ராம' என்று பொறித்துள்ளனர். கிடைத்த இடம்:கும்பகோணம்; உலோகம்:செம்பு; காசின் எடை:2 கிராம்.



காசு-4

காசின் முன்பக்கத்தில் கப்பல் உருவம் உள்ளது. பின்பக்கத்தில் 'ரா' என்ற நாகரி எழுத்து உள்ளது. 'ராகவா' என்ற பெயரின் முதல் எழுத்து 'ரா' இந்தக் காசில் பொறித்திருக்கலாம். விஜயராகவ நாயக்கர் இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். கிடைத்த இடம்: கும்பகோணம்; உலோகம்: செம்பு; எடை : 1.4 கிராம்.



காசு-5

காசின் முன்பக்கத்தில் கப்பல் உருவம் காணப்படுகிறது. பின்பக்கத்தில் செங்குத்தாகக் குத்துவாள் ஒன்றும் இதன் இரண்டு பக்கங்களிலும் சூரியன் சந்திரன் காணப்படுகின்றன. இந்தக் காசும் தஞ்சை நாயக்கர்களாலேயே வணிகத்திற்கு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். கிடைத்த இடம்:தரங்கம்பாடி; உலோகம்:செம்பு; எடை:900மி.கி.



இரகுநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில்தான் சோழமண்டலக் கரையில் ஐரோப்பிய வணிகர்கள் பெரிய எண்ணிக்கையில் வந்து இறங்கி, வணிகத் தலங்களை அமைத்துக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபடத் தொடங்கி இருந்தனர். ரகுநாதன் கடல் வணிகத்தில் ஆர்வம் கொண்டு, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் தம் வணிகக் கூடத்தை

நிறுவ அனுமதி வழங்கினான். கடல் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து இந்தக் காசுகளை ரகுநாதன் சோழ மண்டலத்தில் வெளியிட்டிருக்கலாம்[4]. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்திய கப்பல் வடிவத்தை அறிய இக்காசுகள் பயன்படுகின்றன.

**மதுரை நாயக்கர் காசு**

காசின் முன்பக்கத்தில் கப்பல் உள்ளது, கப்பலுக்குள் இரண்டு மனிதர்கள் அமர்ந்த நிலையில் உள்ளனர். பின்பக்கத்தில் 'ஸ்ரீவீர' என்று தெலுங்கு எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்:மதுரை; உலோகம்:செம்பு; எடை:1 கிராம். 'ஸ்ரீவீர' என்று பெயர் பொறித்தக் காசுகள் அனைத்தும் மதுரை நாயக்கர்களால் வெளியிடப் பட்டவையாகும். அதனால் இந்தக் காசு மதுரை நாயக்கரால் வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.



**அடிக்குறிப்புக்கள்**

---

1 Walter Elliot, 1958, "Numismatic Gleanings", *Madras Journal of Literature and Science*, p.244.

2 Shanmugam, P.,1994, "Two Coins of Tamil Origin from Thailand", *Studies in South Indian Coins*, Vol-IV, p.98.

3 James Prinsep, 1958, "Ceylon Coins", *Essays on Indian Antiquities*, p.421.

4 ஆறுமுக சீதாராமன், 1996, 'தஞ்சை நாயக்கர் காசுகள்', *ஆவணம்*, 7, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், ப.84.

# 8. பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள், வணிகத் தொடர்புகள் (கி.பி.600-1400)

**வெ.வேதாசலம்**
மதுரை

சங்ககாலத்திற்குப் பின்னர், முற்காலப் பாண்டியர்காலம் தொடங்கி பிற்காலப் பாண்டியர் காலம் முடிய பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களும் பொருளாதார வளர்ச்சியும் அந்நாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் வளர்வதற்கு வழிகோலியது. இதன் விளைவாகவே வடக்கே மணமேல்குடி தொடங்கி தெற்கே கன்னியாகுமரிவரை அமைந்த பாண்டிய நாட்டின் நீண்ட வங்கக் கடற்கரையில் இக்காலத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட துறைமுகங்கள் உருவாகின. இவை 'பட்டினம்' என்ற பின்னொட்டோடு அழைக்கப்பட்டன. கடல்வழியாக வணிகம் செய்யும் கடல் வாயில்களாக விளங்கின. வெளிநாட்டு நாகரிகமும் பண்பாடும் இவ்வாயில்களின் வழியாக நுழைந்து பல புதிய பண்பாட்டுப் பரிணாமங்களைப் பாண்டிய நாட்டில் தோற்றுவித்தன. இப்பட்டினங்கள் தமக்குள்ளும் வங்க, அரபுக் கடற்கரைகளில் அமைந்த பிற துறைமுகங்களோடும், இலங்கை, கிழக்காசிய நாடுகள், மேலைநாடுகள் ஆகியவற்றில் உள்ள துறைமுகங்களோடும் பல்வேறு தொடர்புகள் கொண்டிருந்தன. இவற்றின் சிறப்பை அறிந்து கொள்வதற்கு தொண்டி, பெரியபட்டினம், பழையகாயல் போன்ற பல இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளும் மேற்பரப்பு ஆய்வுகளும் துணைபுரிகின்றன[1]. மேலும் அல்பருனி, மார்கோபோலோ, இபின்பதுதா போன்ற பல்வேறு வெளிநாட்டவர் குறிப்புகள்[2], கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், மேற்பரப்பாய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள் போன்ற தொல்பொருள்கள் துணைநிற்கின்றன.

**அமைவிடம் - பெயர்**

இந்திய நாட்டில் பல இடங்களில் காணப்படுவது போலவே பாண்டிய நாட்டிலும் கடற்கரைப்பட்டினங்கள், பேராறுகள், சிற்றாறுகள், ஓடைகள் ஆகியன கடலோடு கலக்கும் இடங்களிலும் (கழிமுகம்), நிலப்பகுதியில் கடல்புகுந்து உண்டாகிய உப்பங்கழிப் பகுதிகளிலும்

வளைகுடாப் பகுதிகளிலும் உருவாயின. இவை உள்நாட்டுப் பெருவழிகளோடு இணையும் முறையில் அமைந்திருந்தன. பாண்டிய நாட்டில் வடக்கிலிருந்து தெற்காகக் கடற்கரையை ஒட்டிச்சென்ற பெருவழியும், பல்வேறு உள்நாட்டு நகரங்களிலில் மேற்கிலிருந்து கிழக்காக கடலை நோக்கிச் சென்ற பல பெருவழிகளும் இவற்றோடு இணைந்திருந்தன.

'பட்டினம்' என்ற சொல் கடற்கரையை ஒட்டியமைந்த குடியிருப்பு என்பதை மட்டும் குறிக்காமல் வணிகர் சமூகத்தோடு தொடர்புடைய சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் துறைமுக வணிக நகரம் என்ற பொருளிலேயே அக்காலத்தில் வழங்கப்பட்டது. இதற்கு மாறாக சிலசமயங்களில் உள்நாட்டு நகரங்களைக் குறிக்கவும் இச்சொல் வழங்கப்பட்டுள்ளது[3]. பண்டைய பன்னாட்டு வணிகர் குழுவினர் கடற்கரையிலுள்ள ஊர்களில் அமைந்த வணிக நகரங்களை 'வேளாபுரம்' என்று குறிப்பிடுகின்றனர்[4]. ஆனால், தமிழகத்தில் இவ்வழக்கு பின்பற்றப்படவில்லை.

பாண்டிய நாட்டில் ஆட்சிசெய்த பாண்டியர்களும் சோழர்களும் தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் கடற்கரைப்பட்டினங்களைப் போற்றி வளர்த்துப் பாதுகாத்துள்ளனர். இவற்றைத் தங்களது ஆளுகையின் கீழ் வைத்துக் கொள்ள முனைந்து நின்றனர். வெளிநாட்டவரும் உள்நாட்டவரும் சந்திக்கும் இப்பட்டினங்களுக்கு அரசர் தங்களது இயற்பெயர்கள், பட்டப்பெயர்களை மட்டுமின்றி அரசி முதலானோர் பெயர்களையும் பெரும்பாலும் வைத்திருப்பது இதனை உறுதிப்படுத்துகிறது (அட்டவணை-1,2).

**பட்டினங்களின் வளர்ச்சி**

பாண்டிய நாட்டில் முற்காலப் பாண்டியரின் இறுதிக் காலத்திலிருந்து மேற்குறிப்பிட்ட மரபுப்படிப் பட்டினங்கள் உருவாக்கப்பட்டன. இக்காலத்திலேயே பன்னாட்டு வணிகர்கள், வணிகக் குழுவினர் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது. பாண்டிய நாட்டுத் தொண்டிபற்றி, நின்றசீர் நெடுமாறனைப் பற்றிய *பாண்டிக்கோவை* என்ற அகப்பொருள் இலக்கியம் சிறப்பித்துக் கூறுகிறது. சிலப்பதிகாரத்திலேயே கீழைநாட்டோடு வணிகத்

தொடர்புகொண்ட பாண்டியரின் தொண்டி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது[5]. கொற்கை, அழகன்குளம், மருங்கூர்ப்பட்டினம் போன்ற சங்ககாலப் பாண்டிய நாட்டுத் துறைமுகப்பட்டினங்களின் சிறப்புக் குன்றியதன் பின்னர்த் தொண்டியே முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை புகழ்பெற்ற கடற்கரைப் பட்டினமாக விளங்கியுள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் 'பட்டினம்' என்ற பின்னொட்டுடன் விளங்கும் பழமையான பட்டினங்களில் ஒன்றாக மானவீரபட்டினம் இருந்திருக்கிறது[6].

முற்காலப் பாண்டியர் காலத்தினை அடுத்து ஒரு நூற்றாண்டிற்கு மேலாகப் (கி.பி.11-12-ஆம் நூற்றாண்டுகளில்) பாண்டியநாடு சோழர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இக்காலத்தில் தென்னிந்தியா முழுமையும் சோழர் ஆளுகையின் கீழே இருந்தமையால் வணிகத்திற்குப் புதிய பெருவழிகள் திறந்துவிடப்பட்டு தங்கு தடையின்றி வணிகர்களும் வணிகக் குழுவினரும் பயணம் செய்து வணிகம் செய்தனர். இவர்கள் இலங்கைக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள் வழியாகவும் சென்றிருக்கின்றனர். இலங்கையிலும்[7] சுமத்திராவிலும்[8] கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இக்காலத்தில் தொண்டி சோழமன்னரது பெயரால் பவித்திரமாணிக்கப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது[9]. சோழர்காலத்தில் திருப்புல்லாணிக்கு அருகில் பவித்திரமாணிக்கப்பட்டினம் என்ற பெயரில் மற்றொரு பட்டினமும் இதற்கருகில் 'மேன்தோன்றி பட்டினம்' என்ற பட்டினமும் உருவாகியிருக்கின்றன[10].

இன்று 'தேவிப்பட்டினம்' என்று வழங்கும் துறைமுகம் முன்பு 'உலகமா தேவிப்பட்டினம்' என்று பெயர் பெற்று விளங்கியதை அங்குள்ள 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது[11]. இப்பட்டினம் 'உலகமாதேவி' என்ற பாண்டிய மன்னனின் மனைவியின் பெயரால் அழைக்கப்பட்டது என்று கருதுவதைவிட[12] முதல் இராசராசசோழனின் பட்டத்தரசி உலகமாதேவியின் பெயரால் பெயர் பெற்றது என்று கொள்ள இடமுள்ளது. மேற்கூறியவற்றால் சோழர்காலத்தே பாண்டிய நாட்டில் புதிய கடற்கரைப்பட்டினங்களும்

உருவாக்கப்பெற்று அவற்றிற்குச் சோழ அரசர், அரசியர் பெயர்கள் சூட்டப்பட்டன என்பது தெளிவாகிறது.

உலகமாதேவிப்பட்டினம் முற்காலப் பாண்டியர் காலத்தில் 'இளங்கோமங்கலம்' என்ற பிரமதேய ஊராக விளங்கியுள்ளது. இப்பகுதியில் தோன்றிய வணிக வளர்ச்சியினாலும் மற்றும் வணிகசமூகத்தின் செல்வாக்கினாலும் பிரமதேயமாக இருந்த இவ்வூர் சோழர்காலத்தில் துறைமுகப்பட்டினமாக மாற்றப்பட்டிருக்கிறது. சோழர்காலத்தில் தலைமைச் சிறப்பு பெற்றிருந்த பிரமதேயம் கடல்வணிகத்தினை ஊக்குவிக்கின்ற முறையில் துறைமுகப்பட்டினமாக மாற்றப்பட்டிருக்கிறது என்று கருதலாம். அதன்பின்னர் இதனை வணிக நகரத்தார் நிர்வகிக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில் வெள்ளாறு கடலோடு சேருமிடத்தில் இருந்த மணமேல்குடி குலோத்துங்கசோழபட்டினம் என்ற பெயருடன் துறைமுகப்பட்டினமாக உருவெடுத்ததைக் கொற்கைக்கு அருகிலுள்ள மாறமங்கலம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது[13]. இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள பெரியபட்டினம் இடைக்காலப் பாண்டியர் காலத்தில் அப்பகுதியில் முக்கிய துறைமுகமாக இருந்துள்ளது. சிலர், *மகாவம்சம்* குறிப்பிடும் கோட்டைகள் சூழ்ந்த 'பராக்கிரமபாண்டியபட்டினம்' இதுவாகவே இருக்கவேண்டும் என்று கருதுவர்[14]. வேறுசிலர் திருப்புல்லாணியிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் 'பவித்திர மாணிக்கப்பட்டினம்' இதுவாகவே இருக்க வேண்டும் என்றும் எண்ணுகின்றனர்[15]. இப்பட்டினத்தின்வழி அரபு நாடுகளோடும் சீனாவோடும் வணிகத்தொடர்புகள் இருந்துள்ளன. மார்கோபோலோ, இபின்பதுதா போன்றவர்கள் இதனை 'பத்தன்' என்று குறிப்பிட்டுள்ளனர். ஏமன் நாட்டிற்குச் செல்வதற்காக இப்பட்டினத்தில் எட்டுக் கப்பல்கள் நின்றதாக இபின்பதுதா தெரிவிப்பது அரேபிய நாட்டுடன் பாண்டிய நாட்டுக் கடற்கரைப்பட்டினங்கள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுகிறது. இப்பட்டினம் சீனநாட்டோடு கொண்டிருந்த உறவை எடுத்துக்காட்டும் முறையில் இப்பட்டினத்தில் தமிழ்ப்பல்கலைக்கழகம் செய்த அகழாய்வில் சீனக்காசுடன் கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்கும் 14-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட சீனநாட்டு மட்கலன்கள் (Celadon Ware) கிடைத்துள்ளன[16]. இது போன்ற

சீனநாட்டுப் பானையோடுகள் தேவிப்பட்டினம், பழையகாயல், காயல்பட்டினம் போன்ற பல கடற்கரைப் பட்டினங்களிலும் மேற்பரப்பாய்வில் அதிக அளவில் கண்டறியப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில் சோழர் காலத்தில் கடற்கரைப் பட்டினங்கள் வளர்ச்சி பெற்றிருந்தாலும் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் குமரி முதல் நெல்லூர் வரை பரவியிருந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்திலேயே கடற்கரைப் பட்டினங்கள் உச்சக்கட்ட வளர்ச்சியை அடைந்துள்ளன. இக்காலத்தில் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட பட்டினங்களைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன (அட்டவணை-1,2). இக்காலத்தில் பாம்பாறு, தாமிரபரணி, கருமணியாறு ஆகிய ஆறுகள் கடலோடு கலக்கும் கழிமுகங்களில் சுந்தரபாண்டியபட்டினம், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம் ஆகியன வணிகச்சிறப்பு வாய்ந்த துறைமுக நகரங்களாக விளங்கியுள்ளன. காயல்பட்டினத்துக் குதிரைவணிகம் மார்கோபோலோவால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. செவ்விருக்கை நாட்டில் அமைந்திருந்த உலகமாதேவிப் பட்டினத்திற்கு (தேவிப்பட்டினம்) அருகிலேயே மற்றொரு பட்டினம் அந்நாட்டில் உருவாகியுள்ளது. சிலர் இவ்விரு பட்டினங்களை ஒன்றெனக் கருதுகின்றனர். ஆனால் முதலாம் சடையவர்மன் விக்கிரமபாண்டியனின் (கி.பி.1244-45) தேவிப்பட்டினம் கல்வெட்டு இதனைச் 'செவ்விருக்கை நாட்டுச் சிவல்லபப் பட்டினம்' என்று குறிப்பிடுவதால்[17] உலகமாதேவிப் பட்டினம் வேறு புறக்குடியான சிவல்லபப் பட்டினம் வேறு என்றே கருதவேண்டும். இதற்கு முந்தைய தேவிப்பட்டினத்திலுள்ள இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு (கி.பி.1242) இதனைப் புறக்குடி என்றே குறிப்பிடுகிறது. அதன்பின்னர் இவ்வூர் (கி.பி.1242க்குப்பிறகு) முதலாம் சடையவர்மன் விக்கிரமபாண்டியன் காலத்தில் சிவல்லபப் பட்டினமாக மாறி புறக்குடியான 'சிவல்லபப் பட்டினம்' என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

## நிர்வாகம்

காயல்பட்டினம் போன்ற பன்னாட்டு வணிகம் நடைபெற்ற பட்டினங்களில் அரச சுற்றத்தினர் தங்கி வரி வசூலித்தல், ஏற்றுமதி இறக்குமதிகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளைச் செய்து

வந்துள்ளனர். பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களின் நிர்வாகம் பெரும்பாலும் அரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட வணிகர் சமூகத்தினரான 'நகரத்தார்' கையில் இருந்தது. நிலங்களும், நிர்வாகமும் இவர்களுக்கு உரிமையுடையனவாக இருந்ததைப் பட்டினங்களில் உள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன[18]. பட்டினங்களில் இருந்த நகரத்தார் அரசனின் மேலாண்மையை மதித்து தாங்கள் செய்த தொழிலுக்கும், தங்கள் பட்டினங்களில் இருந்த நிலத்திற்கும் வரி செலுத்தி வந்தனர்[19].

திருச்செந்தூருக்குத் தெற்கே அமைந்த குலசேகரப்பட்டினம் போன்ற பெரிய பட்டினங்களில் பண்டகசாலையும் தரகுக் கடைகளும் இருந்தன. இவற்றின் மூலமாக விற்பனை செய்கிற (வாள்நெல், பெருவாயில் போன்ற) நெல்லில் பொதி ஒன்றுக்கு நெல்நாழியாக இப்பட்டினத்துக் குலசேகரவிண்ணகரம் என்ற பெருமாள்கோவிலுக்கு அளித்ததைப் பிற்காலக் கல்வெட்டு ஒன்று (கி.பி.1569) தெரிவிக்கின்றது[20]. தென்பாண்டி நாட்டில் விளைந்த உயர்வகை நெல் இப்பட்டினத்தின் வாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது.

**வணிகப் பொருள்கள்**

இடைக்காலப் பாண்டிய நாட்டில் உள்நாட்டு வணிகம் நகரத்தாரிடமும் அவர்களுடன் இணைந்து நின்ற திசையாயிரத்து ஐநூற்றுவர் போன்ற பன்னாட்டு வணிகக் குழுவினர் கையிலும் இருந்தது. பாண்டிய நாட்டில் பல்வேறு இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் இவர்கள் வணிகம் செய்த நெல், அரிசி, உப்பு, அவிழாகட்டு, பயித்தம் பருப்பு, அவரை, துவரை, ஆமணக்குக்கொட்டை, எள், கடுகு, சீரகம், வெங்காயம், புளி, கருப்புகட்டி, மஞ்சள், பாக்கு, மிளகு, சுக்கு, தேன், சந்தனம், அகில், பன்னீர், கற்பூரம், சாந்து, புனுகு, கஸ்தூரி, சவ்வாது, புடவை, பருத்திப்புடவை, நூல்புடவை, நொய்புடவை, பரும்புடவை, பட்டு, கொள்கைப்பட்டு, பருத்தி, நூல், கொடி, கணபம், இரும்பு, செம்பு, வெண்கலம், குதிரை, யானை, ஒட்டகம், சவரிமயிர், முத்து, சிப்பி, மணிகள் முதலிய சரக்குகள் பற்றித் தெரிவிக்கின்றன[21].

இப்பொருள்கள் கடற்கரைப் பட்டினங்களில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட வணிகச் சரக்குகளாக இருக்க வேண்டும்.

இவற்றில் சில உள்நாட்டிற்கும் சில வெளிநாட்டிற்கும் கடல்வழியாக அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இவை உரு, சிற்றுரு, தோணி என்றழைக்கப்பட்ட கலங்களில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

**வணிக நகரங்களும் பட்டினங்களும்**

பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களின் வணிகத்திற்குத் துணையாக உள்நாட்டு வணிக நகரங்களும் கடற்கரைப் பட்டினங்களை ஒட்டிய நாடுகளில் இருந்த வணிக நகரங்களும் துணையாக அமைந்திருந்தன. கடற்கரைப் பட்டினங்களுக்குச் சென்ற பண்டைய பெருவழிகளில் அமைந்த ஊர்களிலும் வணிக நகரங்கள் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக மதுரையிலிருந்து தொண்டி செல்லும் பெருவழியிலேயே பூவேந்தியபுரம் (இடையாற்றுநாடு), முடிகொண்ட பாண்டியபுரம் (தென்களவழிநாடு), கங்கைகொண்ட பெருந்தெரு (கீரனூர் நாடு), கானப்பேர்......பெருந் தெரு (கானப்பேர்கூற்றம்), குலமாணிக்கபுரம் (முத்தூற்றுக் கூற்றம்) போன்ற வணிக நகரங்கள் இருந்துள்ளன.

**வணிகர்கள்-வணிகக் குழுக்கள்**

பாண்டியநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களிலும் உள்நாட்டு வணிக நகரங்களிலும் உள்ள கல்வெட்டுக்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த வணிகர்கள், வணிகக் குழுக்களின் நடமாட்டத்தினைக் காட்டுகின்றன. காயல்பட்டினத்தில் குதிரை வணிகம் சிறப்பாக நடந்துள்ளது என்பதை மார்கோபோலோ தமது பயணக்குறிப்பில் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப்படுத்தும் வகையில் மலைமண்டலத்துக் குதிரைச்செட்டிகள் பற்றிய குறிப்பைக் காயல்பட்டினத்திற்கு அருகிலுள்ள மாறமங்கலத்துக் கோயிலிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டில் காணமுடிகிறது[22]. இக்கோயில் கல்வெட்டிலேயே இவ்வணிகத்தில் ஈடுபட்ட சோனகர் (அரேபியர்) பற்றிய குறிப்பும் வருகிறது[23]. திருப்புல்லாணிக்கு அருகிலுள்ள பவித்திரமாணிக்கப் பட்டினத்தில் அரபு வணிகர்கள் நிறைந்திருந்தனர். இவர்கள் வழிபாட்டிற்கு வழி செய்யும் வகையில் அப்பட்டினத்தின் பகுதியில் 'சோனகச்சாமந்தப்பள்ளி' என்ற பெயரில் பள்ளிவாசல் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது[24]. சுந்தரபாண்டிய பட்டினத்திற்கு அருகிலுள்ள தீத்தாண்டதானபுரத்தில் 'அஞ்சுவண்ணம்' என்றழைக்கப்பட்ட அரபு

வணிகக்குழு பிற வணிகக் குழுவினரோடு கூடி இருந்திருக்கின்றனர்[25]. இவர்களோடு மேலைக்கடற்கரைக்குச் சென்று வணிகம் செய்த மணிக்கிராமத்தார் என்ற புகழ்பெற்ற வணிகக் குழுவினர் சாமந்த பண்டகசாலிகளோடும் சேர்ந்து தீத்தாண்டதானபுரத்திலுள்ள சர்வதீர்த்தம் உடையநாயனார் கோயில் மண்டபம் ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்துள்ளனர். இதற்காக அவர்கள் இக்கடற்கரைப் பட்டினங்களில் சரக்குகள் விற்கும் போதும் வாங்கும்போதும் ஒரு பகுதியை வரியாக வாங்கித் தானமாக அளித்துள்ளனர். இதுபோன்ற கடல்வழியாக வந்த வணிகத்தொடர்பின் மூலமாகவும் இசுலாமியர் குடியிருப்புகள், பாண்டிய நாட்டுக் கடற்கரைப்பட்டினங்களில் ஏற்பட்டுள்ளன.

தென்னிலங்கையிலிருந்து பாண்டிய நாட்டுப் பட்டினங்களின் வழியாக வந்து வணிகம் செய்த தென்னிலங்கை வளஞ்சியர் குடியிருப்புகள் பெருவழிகளில் இருந்த அருப்புக்கோட்டை, சோழபுரம் முதலிய ஊர்களில் இருந்திருக்கின்றன[26].

தென்னிந்தியாவில் நானாதேசி, திசையாயிரத்து ஐநூற்றுவர், பதினெண்விசயத்தார் என்ற தலைமைச் சிறப்புடன் விளங்கிய பன்னாட்டு வணிகக் குழுவினர் பற்றிய செய்திகளைப் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் உள்ள கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. சாயல்குடிப்பகுதியில் இவர்களால் ஏற்படுத்தப்பட்ட 'எறிவீரப்பட்டினம்' ஒன்று கிழக்குக் கடற்கரைப் பெருவழியில் இருந்திருக்கிறது[27]. கடற்கரையில் இருந்த வணிகப் பட்டினங்கள் இவர்களோடு உறவுடைய பட்டினங்களாக அமைந்து கடல்வணிகத்தில் ஈடுபட்டுள்ளன. இவர்கள் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை இப்பட்டினங்களில் இருந்த நகரத்தார் செய்துள்ளனர். திசையாயிரத்து ஐநூற்றுவர் அப்பட்டினங்களில் தங்கியிருந்தபோது பல அறக்கொடைகளைச் செய்துள்ளதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. திருவாடானை வட்டத்தில் இருந்த பட்டினம் ஒன்று 'வீரகேரளபுரமான நானாதேசிபட்டினம்' என்று அழைக்கப்பட்டுள்ளது. உலகமாதேவிப்பட்டினத்தில் இருந்த 'திருஞான சம்பந்தன் தளம்' என்ற வணிகத் தளத்தில் அமைந்திருந்த போகீசுவரமுடையார்கோயில் நானாதேசி திருவாசலில் நானாதேசிகள், திசையாயிரத்து ஐநூற்றுவர் ஆகியோர் கூடினர். இக்கோயிலுக்கு வேண்டும் செலவினங்களுக்காக இப்பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதி

செய்யப்பட்ட பலமண்டல சரக்குகளுக்கு வரி வாங்கித் தானமாக அளித்துள்ளனர். பாக்கு, மிளகு போன்றவற்றிற்கு ஆட்சுமைக்கு ஒருமாப்பணமும் உருக்களில் ஏற்றும் (சிறு கலங்கள்) கட்டொன்றுக்கு அரைக்கால் பணமும் வாங்கியுள்ளனர். இப்பட்டினத்திற்கு வரும் சிற்றுரு, தோணி போன்ற கலங்களுக்கு முறையே அரைக்கால், கால்பணம் வாங்கியுள்ளனர். இது வணிகக்குழுக்கள் கடல்வணிகத்தினைத் தங்களது பிடிக்குள் வைத்து கட்டுப்பாட்டுடன் நடத்தி வந்ததைக் காட்டுகிறது.

கடற்கரைக்குச் செல்லும் பெருவழிகளில் இவர்கள் பயணம் செய்தபோது அவ்வழியில் இருந்த வணிக நகரங்களில் தங்கி தங்களது சரக்குகளிலிருந்து வாங்கிய வரிகளை அவ்விடங்களில் இருந்த கோயில்களுக்கு அளித்து மக்கள் மனத்தில் இடம் பிடித்துள்ளனர். காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம் கடற்கரைப் பட்டினங்களுக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்த அங்கமங்கலமான வீரபாண்டியன் மடிகை மாநகரத்தில் இவர்கள் தங்கியிருந்தபோது தங்களது வணிகச் சரக்குகளிலிருந்து வந்த வருவாயின் ஒரு பகுதியை வரியாக வாங்கி அங்குள்ள கோயிலுக்கு அளித்துள்ளனர்[28]. கீழைக்கரையான நினைத்ததை முடித்தான்பட்டினத்தில் 11-ஆம் நூற்றாண்டு வரை பதினெண்விசையத்து திசையாயிரத்து ஐநூற்றுவர் முத்துவணிகத்தில் ஈடுபட்டு அவற்றின் வருமானத்தில் ஒரு பகுதியை அங்குள்ள கோயிலுக்கு அளித்துள்ளனர்[29].

**முடிவுகள்**

பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள் ஆறுகள் ஓடைகள் போன்றவை கடலோடு கலக்கும் இடங்களில் அவற்றின் வழியாக மரக்கலன்கள் உள்காட்டிற்குள் வந்துபோகும் முறையில் இயற்கை அமைப்புடைய இடங்களிலேயே அமைந்திருந்தன. பட்டினம் என்ற சொல் துறைமுக வணிகசமூக நகரம் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு அரச மரபினரின் பெயர்களே பெரும்பாலும் இடப்பட்டுள்ளமை அரசுக்கு இப்பட்டினங்களின் மீது இருந்த நாட்டத்தையும் ஆளுமையையும் வெளிப்படுத்துகிறது. பட்டினங்களின் வளர்ச்சி பாண்டிய நாட்டில் முற்காலப் பாண்டியர் காலத்தில் தொடங்கி சோழர் காலத்தில் வளர்ச்சிப் பெற்று பிற்காலப் பண்டியப் பேரரசு

காலத்தில் உச்சக்கட்டத்தினை எட்டியுள்ளது. இவை கீழைநாடுகள், மேலைநாடுகள் ஆகியவற்றுடன் வணிகத்தின்வழி நாகரிகம், பண்பாடு முதலிய பன்முகத் தொடர்புகள் கொண்டவையாக விளங்கியுள்ளன. இக்கடற்கரை வாயில்கள் வழியாக இசுலாமிய சமயத் தொடர்புகள் ஏற்பட்டுக் கடற்கரை பட்டினங்களில் இசுலாமியர் குடியிருப்பும் வழிபாட்டுத் தலங்களும் தோன்றியுள்ளன. இவற்றின் நிர்வாகம் அரசின் மேற்பார்வையில் வணிக சமூகத்தினரிடம் இருந்தது. உள்நாட்டு வணிக நகரங்களைப் போன்றே பட்டினங்களின் நிலவுடைமை இந்நகரத்தாரிடமே இருந்துள்ளது. இப்பட்டினங்களின் வாயிலாகப் பல்வகைச் சரக்குகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளன. இதேபோன்று வெளிநாடுகளில் இருந்தும் சரக்குகள் இப்பட்டினங்களில் வந்து இறங்கியுள்ளன. இவற்றைச் சேமித்து வைப்பதற்கு ஏதுவாகப் பண்டகசாலைகள் பட்டினங்களில் இருந்துள்ளன. இவற்றோடு சரக்குகளை விற்பனை செய்வதற்குத் தரகுக்கடைகளும் இருந்துள்ளன. பாண்டிய நாட்டுப் பெருவழிகள் இப்பட்டினங்களோடு இணைந்திருந்துள்ளன. அப்பெருவழிகளில் அமைக்கப்பட்ட வணிக நகரங்கள் கடற்கரைப் பட்டினங்களின் வணிக வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் அமைந்திருந்துள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்களின் நடமாட்டம் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் இருந்துள்ளன.

இதே போன்று மணிக்கிராமம், அஞ்சுவண்ணம், பதினெண்விசையத்து திசையாயிரத்து ஐநூற்றுவர் போன்ற வணிகர் குழுக்கள் இக்கடற்கரைப் பட்டினங்களில் தங்கித் தீவிர வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்குழுக்களில் வணிகர் சமூகத்தோடும் வணிகநகரத்தோடும் தொடர்புடைய திசையாயிரத்து ஐநூற்றுவர் செல்வாக்குடன் திகழ்ந்தனர். இவர்கள் பட்டினங்களில் இருந்த நகரத்தாரோடு உறவு கொண்டு கடல்வணிகத்தினைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருந்துள்ளனர்.

மொத்தத்தில் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள் பற்றிய ஆய்வு தமிழக அரசியல், பொருளியல், சமூக, பண்பாட்டு நிலைகளை உணர்த்தும் வாயில்களாக விளங்குகின்றது எனலாம்.

## அட்டவணை-1 பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள்

| காலக்கட்டம் | காலவரையறை |
|---|---|
| I | கி.பி. 875 க்கு முன் |
| II | கி.பி. 875-1090 |
| III | கி.பி. 1090-1271 |
| IV | கி.பி. 1271-1368 |

## அட்டவணை-2 பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள்

| வ.எண் | பட்டினங்கள் | ஆற்றுக்கழிமுகம் | காலம் |
|---|---|---|---|
| மிழலைக்கூற்றம் :கீழ்கூறு - ஆவுடையார் கோவில் வட்டம் | | | |
| 1 | மணமேல்குடியான குலோத்துங்க சோழபட்டினம் | வெள்ளாறு | III |
| 2 | ஆவுடையார்பட்டினம் | வெள்ளாறு | IV |
| 3 | அம்மாபட்டினம் | அம்புலியாறு | ... |
| முத்தூற்றுக்கூற்றம் - திருவாடனை வட்டம் | | | |
| 4 | சுந்தரபாண்டியபட்டினம் | பாம்பாறு | IV |
| 5 | பாசிப்பட்டினம் | பாசியாறு | II |
| 6 | முத்துராமலிங்கப்பட்டினம் | பாசியாறு | |
| 7 | வீரசேரளபுராமான நானாதேசிபட்டினம் | - | II- IV |
| 8 | கண்ணாங்குடியான நீடபட்டினம் | - | IV |
| 9 | தொண்டியான பவித்திர மாணிக்கப்பட்டினம் | பாலாறு | I-IV |
| செவ்விருக்கை நாடு -திருவாடனை வட்டம் | | | |
| 10 | புதுப்பட்டினம் | - | IV |
| 11 | இளங்கோமங்கலமான உலகமாதேவிப்பட்டினம் | - | II-IV |
| 12 | புறக்குடியான சிவல்லபப்பட்டினம் | - | IV |

| | | | |
|---|---|---|---|
| கீழ் செம்பில்நாடு -இராமநாதபுரம் வட்டம் | | | |
| 13 | பெரியபட்டினம் | கப்பலாறு | III-IV |
| 14 | பவித்திரமாணிக்கப்பட்டினம் | கப்பலாறு | II-IV |
| 15 | அனுத்தொகைமங்கலம் கீழக்கரையான நினைத்ததை முடித்தான்பட்டினம் | குண்டாறு | IV |
| 16 | இருவரைவென்றான் பட்டினம் | - | IV |
| 17 | எறிகிட்டூரான சிவல்லவபப்பட்டினம் | - | IV |
| கீழ் செம்பில்நாடு - இராமநாதபுரம் வட்டம் | | | |
| 18 | தத்தையார்பட்டினம் | - | IV |
| 19 | முடிவீரன்பட்டினம் | - | IV |
| 20 | கோதண்டராமன்பட்டினம் | - | IV |
| 21 | மேன்தோன்றிபட்டினம் | - | II |
| அளற்றுநாடு-முதுகுளத்தூர் வட்டம் | | | |
| 22 | இடைவழியான எறிவீரப்பட்டினம் | - | IV |
| குரங்குடிநாடு-விளாத்திகுளம் வட்டம் | | | |
| 23 | பட்டினமருதூரான கேரளாந்தகபுரம் | மலட்டாறு | II |
| பராந்தக வளநாடு-ஸ்ரீவைகுண்டம் வட்டம் | | | |
| 24 | வென்றுமுடிசூடிய சுந்தரபாண்டியபட்டினம் | - | IV |
| குடநாடு-திருச்செந்தூர் வட்டம் | | | |
| 25 | காயல்பட்டினம் | தாமிரபரணி | IV |
| 26 | சோணாடு கொண்டான்பட்டினம் | பாம்பாறு | IV |
| 27 | வீரபாண்டியன்பட்டினம் | பாம்பாறு | IV |
| மானவீரவளநாடு -சாத்தான்குளம் வட்டம் | | | |
| 28 | குலசேகரப்பட்டினம் | கருமானியாறு | III-IV |
| 29 | மருதூரான மானவீரபட்டினம் | | I |

**அடிக்குறிப்புக்கள்**

---

1 தொண்டியிலுள்ள தொண்டியம்மன்கோயில் மேட்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் அகழாய்வு செய்துள்ளது. பெரியபட்டினததில் தமிழ்ப் பல்கலைக்கழக அகழாய்வு மூலம் பல அரிய செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது. பழைய காயல் பகுதியில்

காலடுவெல் அகழாய்வு செய்து சீனநாட்டு மட்கலன்கள் அதிக அளவில் அங்கு கிடைப்பதைக் கண்டறிந்துள்ளார்.

2 கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி (தொ,ஆ), 1976, *தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, அல்பருனி, பக்.215-217, மார்கோபோலோ, பக்.265, 294 இபின்பதுதா, பக்.265-282, 294-296.

3 பிரான்மலைக்கு அருகிலிருந்து வணிக நகரம் அருவியூரான தேசிஉய்யவந்த பட்டணம் (தெ.*இ.க.* 14/288) என்று அழைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலிப் பகுதியில் இருந்த வணிகநகரம் மானவீர பட்டணமான உத்தமசோழப்பட்டணம் என்று வழங்கியுள்ளது. (*க.ஆ.அ.* 427/1906). உள்நாட்டில் நானாதேசி, திசையாயிரத்து ஐநூற்றுவர் வணிகக் குழுக்களோடு தொடர்புடைய வணிக நகரங்கள் எறிவீரப்பட்டினம், தேசிப்பட்டினம் என்று அழைக்கப்பட்டுள்ளன.

4 Subbarayalu, Y., 1996, *Presidential Address*, Epigraphical Society of India, Mysore, May 25-27.

5 *சிலப்பதிகாரம்*, ஊர்காண்காதை:106-112

6 தெ.*இ.க.* 14/16அ

7 Pathmanathan, S., 1984, "The Nagaram of the Nanadesis in Srilanka c. .AD 1000-1300", *The Srilanka Journal of the Humanities, University of Peradeniya,* Vol.10.1&2.

8 எ.சுப்பராயலு, 1984, "சுமத்திராவில் தமிழ்க் கல்வெட்டுக்கள்" *ஆவணம்.* 4, தமிழகத் தொல்லியல் கழகம், பக்.116-124.

9 செ.இராசு. 1985, "மூவேந்தரிடை ஒற்றுமை", *தொல்லியல் ஆய்வுத்தொகுதி*, மதுரை, பக்.2112-213

10 *தெ.இ.க.* 13/402, *க.ஆ.அ.* 164/1956-57

11 *தெ.இ.க.* 8/404

12 பா.ஜெயக்குமார், 1992, "கல்வெட்டுக்கள் வாயிலாக அறியப்படும் சில பாண்டிய நாட்டுத் துறைமுகப் பட்டினங்கள்", *ஆவணம்*, 2, தமிழகத் தொல்லியல் கழகம், பக்.80-83.

13 *தெ.இ.க.* 8/448

14 செ.இராசு, 1997, "பெரியபட்டினம்", *கல்வெட்டு காலாண்டு*, இதழ் 38, சென்னை,பக்,22-29.

15 எஸ்.எம்.கமால், 1979, "பெரியபட்டினம்" *மாநில வரலாற்றுக் கருத்தரங்கு*, SAHER சென்னை,

16 செ.இராசு, 1997, "பெரியபட்டினம்" *கல்வெட்டு காலாண்டு*, இதழ் 38, சென்னை,பக்,22-29.

17 *தெ.இ.க.* 8/403 & என்.சேதுராமன், 1989, *பாண்டியர் வரலாறு*, கும்பகோணம், பக்.109-111.

18 செ.இராசு, "மணமேல்குடி கல்வெட்டு", *ஆய்வுக்கட்டுரை (தட்டச்சுப்படி)*, & *தெ.இ.க.* 8/403

19 *தெ.இ.க.* 8/403

20 *க.ஆ.அ.* 308/1963 - 64

21 *தெ.இ.க.* 8/442, *க.ஆ.அ.* 55/1915-16C *க.ஆ.அ.* 507/1959; *க.ஆ.அ.* 598/1926-27; *தெ.இ.க.* 8/428; 430; *க.ஆ.அ.* 370/1949-50

22 *தெ.இ.க.* 8/454

23 *தெ.இ.க.* 8/455

24 *தெ.இ.க.* 8/402

25 *க.ஆ.அ.* 598/1926-27

26 *க.ஆ.அ.* 491/1909

27 *க.ஆ.அ* 38/1931-32

28 *க.ஆ.அ.* 370/1949-50

29 *தெ.இ.க.* 13/396

# 9. தமிழகக் கடல்சார் வணிகர்கள் (பிற்காலப் பாண்டியர் காலம் வரை)

**பு.சந்திரசேகரன்**
இராஜபாளையம்

நொபரு கரோஷிமா, தமிழகக் கடல்சார் வணிகம் பற்றிக் குறிப்பிடும் பொழுது, தமிழகக் கடல்சார் வணிகம், உள்நாட்டு சமூக, பொருளாதார அமைப்புகளில் ஏற்படுத்தும் மாற்றம் குறித்து ஆராய்தல் அவசியம் என்றக் கருத்துருவினைக் குறிப்பிட்டார்[1]. இக்கட்டுரையானது அக்கருத்துருவின் அடிப்படையில், தமிழகக் கடல் வணிகர்கள், எப்படிப்பட்ட உள்நாட்டு சமூக, பொருளாதார அடிப்படையில் தோன்றினார்களென்றும், தங்களின் வணிகத்தினால் சமூக,பொருளாதார அமைப்பினை எங்ஙனம் மாற்றமடையச் செய்துள்ளார்கள் என்ற கோணத்திலும் ஆய்வு செய்கின்றது.

சங்க காலத்திலிருந்து பிற்காலப் பாண்டியர் காலமான 14,15-ஆம் நூற்றாண்டு வரையிலான தரவுகளை ஆய்வாக இக்கட்டுரைப் பயன்படுத்தியுள்ளது. மேலும் மார்க்ஸின் பொருளாதார அடிப்படைக் கோட்பாடுகள் என சமூக முதலீடு, தனிமனித முதலீடு போன்றவைகள் இவ்வாய்வுக்கு நெறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## காலமும் கடல் வணிகர்களும்

பிற்காலப் பாண்டியர்கள் காலம் வரையிலான தமிழகக் கடல்சார் வணிகர்கள் கீழ்க்கண்ட வகைப்படுத்தப்படுகின்றார்கள்.

1. இயற்கைப் பொருட்களுடன்-குடிசார் வாழ்க்கைக்காக வணிகம் நடத்துபவர்கள் - சங்க கால முற்பகுதி (கி.மு.310-கி.பி.100)
2. குடிசார் வாழ்க்கையுடன் முதலீடுகளை கொண்டு வணிகம் நடத்துபவர்கள் - சங்ககாலப் பிற்பகுதியும், சங்கம் மருவிய காலமும் (கி.பி.100-500)
3. வணிகக் குழுக்களாக உருமாறி கிராம சமூக அமைப்புடன் ஒன்றாமல் வணிகம் நடத்துபவர்கள் - பல்லவ மற்றும் சோழர்களின் இடைக்காலம் (கி.பி.600-1050)

4. தனியான முதலீடுகளைக் கொண்டு, வேளாண் பிரபுக்களுடன் சேர்ந்து வணிகம் செய்தல் - சோழர்களின் பிற்காலம் (கி.பி.1050-1300)

5. கிராமங்களில், நகரங்களில் ஊடுருவி வணிகம் நடத்துதல் - பிற்காலப் பாண்டியர்கள் காலம் (கி.பி.1300-1500)

**இயற்கைப் பொருள் கடல்சார் வணிகர்கள் (கி.மு.300-கி.பி.100)**

நெய்தல் நில பரதவர்கள் தொடக்கத்தில் கடல் உப்பினை 'பஃறி' என்ற ஓடத்தின் வழி உள்நாட்டு வணிகம் செய்து வந்துள்ளனர். கிரேக்க, ரோமானியர் தொடர்புகளினால், பரதவர்கள் மற்ற மக்களுடன் தொடர்பு கொண்டு, பொருட்களைத் துறைமுகங்களுக்கு கொண்டு சேர்த்தனர் என்பது *மதுரைக் காஞ்சியின்* 'பரதர் தந்த பல்வேறு கலம்' என்ற வரியும், 'குதிரைமுக அம்பி', 'யானைமுக அம்பி', 'சிங்கமுக அம்பி', 'மரப்புனை' போன்ற ஓடங்களும் நிரூபிக்கின்றன[2].

**முதலீட்டு வணிகர்கள் (கி.பி.100-கி.பி.500)**

கிரேக்க ரோமானிய தேவை, அரசர் மற்றும் சிற்றரசர்களின் ஆடம்பரத்தேவை ஆகியன பரிவர்த்தனை செய்வதற்கென்று ஒரு தனிப்பிரிவினையை உள்நாட்டு சமூகத்தில் தோற்றுவித்தன. இவ்வணிக மக்கள் பரதவர் சமூகத்திடமிருந்தும், குறிஞ்சி, முல்லை, மருதம் குடிவாழ்க்கையிலிருந்தும் தோன்றியவர்களாவர் என்பதனை பிற்கால சொல்லான 'வெள்ளாளஞ் செட்டி' என்பது சுட்டுகின்றது

இக்கடல்சார் வணிகர்கள் உள்நாட்டில், பலதரப்பட்ட வகுப்பினரிடமிருந்தும் கொள்முதல் செய்தார்கள் என்பதனை வியன்னா அருங்காட்சியத்தில் உள்ள கி.பி.2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க மொழி ஆவணம் குறிப்பிலிருந்து அறியலாம். இதன்படி இவ்வணிகர்கள் தந்தப்பொருட்கள், துணிவகைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை வணிகம் செய்தனர்[3].

இவ்வணிகர்கள் ரோமானிய வணிகர்களைப் போலல்லாமல், தாங்களே முதலீடு செய்து, தங்களின் சொந்தக் கப்பல் மூலமாக நேரிடையாகவே வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பது சுமத்திராவில் காணப்படும் தமிழர்கள் தம் 'செப்புக் காசும்', 'தங்கம் உரைத்துப் பார்க்கும் கல்லும்' வெளிப்படுத்துகின்றன. இக்கப்பல்கள் 'பெருநீர் ஓசீதனர்', 'நல்கலன் உய்ம்மார்' போன்றோர்களால் இயக்கப்பட்டுள்ளன[4].

ரோமானியர்களின் ஆயிரம் மெட்ரிக் டன் எடையுடைய[5] கப்பல்களின் அகன்ற இடத்தை நிரப்ப, தனி நபர் முதலீடுகள் போதாமலிருக்க, கூட்டு முதலீடுகளுக்காக வணிகக் குழுக்கள் ஏற்பட்டன. அவை 'வெள்ளறை நிகமம்', 'சாத்து' என்ற பெயர்களோடு விளங்கலாயின என்பதனை மீனாட்சிபுரம் தமிழ்-பிராமி கல்வெட்டும், கொடுமணல் பிராமி எழுத்தும், சிலப்பதிகாரச் செய்திகளும் தெரிவிக்கின்றன[6]. ஆகவே, இக்கடல்சார் வணிகர்கள் உள்நாட்டில் தனிநபர் முதலீடு வணிகர்களாக மாறினர். எனினும் சங்ககால கடல்வணிக வீழ்ச்சி முற்றிலும் புதிய சமூகப் பொருளாதார அமைப்புக்கு வழிவகுத்தது.

### வணிகக் குழுக்கள் காலம் (கி.பி.600-1050)

முற்கால பாண்டிய-பல்லவர் காலத்தில் உள்நாட்டு சமூகப் பொருளாதார அமைப்பு முறைகள், வேளாண் சமூகமாக, விற்பனைக்கென்று பொருட்களை உற்பத்தி செய்யாத கிராமங்களைத் தோற்றுவித்தது. மேலும் ரோமானிய கிரேக்க கடல் வணிகம் குறைவினால் சங்ககால நிகமங்கள், சாத்துக்கள், பல்லவர்கள் கால சிறுபான்மை உற்பத்தி வணிகர்களுடன் சேர்ந்து பதினெண் விசயமாக, திசையாயிரத்து ஐநூற்றுவராக உருவாகினார்கள். இக்குழுக்கள் நிலவழி, கடல்வழி என்று பிரித்துக் கொள்ளாமல், மொத்தமாக வணிகம் செய்தனர். இவர்கள் வேளாண்மைப் பகுதிகளையும், ஐவகை நிலப் பாகுபாடு பகுதிகளையும், தலைநகரங்களையும் இணைக்கும் பகுதிகளில் தங்கி வணிகம் நடத்தினார்கள். இதனைப் பல்லவர் கால கீழையனூர் கல்வெட்டும், பூலாங்குறிச்சி கல்வெட்டும், சோழர் கால முனி சந்தை கல்வெட்டும் குறிப்பிடுகின்றன[7]. இவர்களின் வணிகம் மலை ஓரங்களில் நடைபெற்றது என்பதனால், 'அடிக்கீழ் தளத்து ஐநூற்றுவர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

இவ்வெளிநாட்டு வணிகர்கள், ஊர்களில் நிரந்தரமாக தங்க அனுமதிக்கப்படாமல், தற்காலிக இடங்களாக 'நிலைத்தளம்' என்றும் 'பேட்டைத் தாவளம்' என்றும் ஏற்படுத்தி வணிகம் செய்தனர். இவ்வணிகர்கள் மன்னர்களுக்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம், சோழ மன்னர்கள் வணிகக் குழுவினை

ஆதரித்தனர். முதலாம் இராசேந்திரன், சீனாவிற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வணிக மேம்பாட்டிற்கு வழி கண்டார்[8].

**தனி முதலீடு வணிகர்களும், சித்திரமேழி பெரிய நாட்டாரும்-(கி.பி.1050-1300)**

பன்னாட்டு வணிகர்களின் செல்வம் கிராமப் புறங்களைப் பாதித்தது, சமூக நிலவுடைமையிலிருந்து தனியார் நிலவுடைமையினைத் தோற்றுவித்தது. இத்தனியார் நில உடைமையாளர்கள் 'சித்திரமேழி பெரிய நாட்டார்' என்ற அமைப்பினைத் தோற்றுவித்து, பன்னாட்டு (வெளிநாட்டு) வணிகருடன் ஒரு உறவினை ஏற்படுத்தினர். 'லோபொ தோவ'[9] துண்டுக் கல்வெட்டு சுமத்திராவில் கடற்கரை ஓரத்தில் ஒரு துறைமுகப்பட்டினம் ஏற்படுத்தி இருந்தார்களென்றும், அதில் ஒரு 'வேளாபுரத்தினை' ஏற்படுத்தியிருந்தார்களென்றும் இவர்கள் இத்துறைமுகத்தில் முழு ஆதிக்கம் செலுத்தி, அத்துறைமுகத்துக்கு வரும் மரக்கலங்கள், சிறுதோணிகளிடம் கொடை வசூலித்தனர் என்றும் தெரிவிக்கிறது. சீனத் துறைமுகங்களான காண்டன் மற்றும் சாய்டோன் போன்ற நகரங்களில் தமிழ் வணிகர்கள் பயணம் செய்துள்ளனர். நத்தம் கல்வெட்டுக்கள், திருப்பமனம் கல்வெட்டு, அரியலூர் இராசகம்பீரபுரம் கல்வெட்டுக்கள், வேளாண் பிரபுக்களுக்கும் பன்னாட்டு வணிகர்களுக்குமிடையே வியாபார ஒப்பந்தம் நிலவியுள்ளது என்பதனையும் தெரிவிக்கின்றன.

**பன்னாட்டு வணிகர்களில் கிராம ஊடுருவல் (கி.பி.1300-1500)**

பன்னாட்டு வணிகர்களுக்கும், வேளாண் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட உறவினால், பன்னாட்டு வணிகர்கள் என்ற பரந்துபட்ட அமைப்பு, சிறு சிறு பிரிவுகளாக கிராமப்புறங்களில் தங்கி தனக்கென்று சிலபகுதிகளை ஏற்படுத்திக் கொண்டதாகும். சின்னமனூர் பகுதிகளில் கீழை வட்ட பதினெண் விசயத்தோம் என்றும் நாலுநகரப் பதினெண் விசயத்தோமென்றும், கோட்டியூர் மணியம்பலத்து 'திசையாயிரத்து ஐநூற்றுவர்' என்றும், அளகை மாநகர 'ஐந்நூற்றுவர்' என்றும் அவர்கள் அழைக்கப்பட்டனர். மேலும் இவர்கள் தங்களுக்கெனச் சாரிகைக் கோட்டைப் பகுதிகளையும், அதாவது பொருள்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதிகளுக்குச் செல்லும் வழிகளில் கோட்டைத் தடுப்புகளை அமைத்து, எல்லாவிதமான பொருள்களையும் குவித்து வைக்கும் இடமாக

'மடிகை' என்ற நிலையங்களையும் ஏற்படுத்தினார்கள் என்று மன்னார்குடி கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 Karashima, N., 1992, *Towards a New Formation South Indian Society Under Vijayanagar Rule,* Oxford University press, New Delhi, pp.177-78.

2 *மதுரைக்காஞ்சி:* 317, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி. & *தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம் வாழ்வியல்* தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983, பக்.0-156.

3 கா.ராஜன். 1994, ' முசிறித் துறைமுகம் சில புதிய செய்திகள்'. *ஆவணம்,* 4, தமிழகத் தொல்லியல் கழகம், பக்.107.

4 *மதுரைக் காஞ்சி*.321, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

5 Michael Grant and Rachel Kilzinger. 1988, *Civilization of the Ancient Mediterranean Greece and Rome,* Vol. II. p.766.

6 *தொல்லியல் கருத்தரங்கு-2,* தமிழ்நாடு அரசு தொல்பொருள்துறை, பக்.73-85 .

7 Mahalingam, T.V., 1988, *Inscriptions of the Pallavas,* Indian Council of Historical Research, No.115. & Sabaya Sachi Bhattacharya and Romila Thapar *(ed).*,1986, *Situating Indian History,* Oxford University Press, p.51.

8 Appadorai, A.,1990, *Economic Conditions in Southern India (1000-1500 A.D.), Vol.II,* University of Madras,p.567.

9 எ.சுப்பராயலு, 1994, 'சுமத்திராவில் தமிழ்க் கல்வெட்டுக்கள்', *ஆவணம்,* 4, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்,116-124.

# 10. அஞ்சுவண்ணம், ஓர் இடைக்கால வணிகக்குழு

**எ.சுப்பராயலு**
புதுச்சேரி.

இக்கால மலையாள ஆய்வாளர்களின் முன்னோடியான குண்டர்டு 1844-இல் பதிப்பித்த சேரர் செப்புப் பட்டயங்களில் அஞ்சுவண்ணம் என்கிற சொல் முதலில் அறியப்பட்டது[1]. இப்பட்டயங்களுள் மூன்று கோட்டயம் ஸிரியன் கிறித்துவத் திருச்சபைக்கும் ஒன்று கொச்சி யூதர் திருச்சபைக்கும் சொந்தமானவை. கோட்டயம் செப்பேடுகளில் இரண்டு ஸ்தாணு ரவியின் (844-85) ஆட்சிக்காலத்திலும், மூன்றாவது வீரராகவ சக்கரவர்த்தியின் (1225) ஆட்சிக்காலத்திலும், கொச்சி செப்பேடு பாஸ்கர ரவியின் (962-1019) ஆட்சிக்காலத்திலும் வழங்கப்பட்டவை. இவற்றுள் ஒன்றில் இச்சொல் 'மணிக்கிராமம்' என்ற பெயருடன் சேர்ந்து காணப்பட்டது. இச்சொற்கள் முறையே வணிகத்தில் ஈடுபட்ட யூதர் மற்றும் கிறித்துவ சமூகங்களைக் குறிப்பனவாக குண்டர்ட்டு கருதினார். இந்தப் பட்டயங்களில் ஒன்றை மறுபதிப்பு செய்த வெங்கய்யாவும், வேறு இரண்டை மறுபதிப்புச் செய்த கோபிநாதராவும் குண்டர்ட்டின் கருத்திலிருந்து வேறுபடுகின்றனர். வெங்கய்யா இவ்விரண்டு அமைப்புக்களையும் யூதர் மற்றும் கிறித்துவர் என்பதை மறுத்து வளஞ்சியர் போன்ற வணிகக் குழுக்களாகக் கொண்டார்[2]. கோபிநாத ராவ் இதற்கு மாறாக அஞ்சுவண்ணத்தைக் கிறித்துவ தேவாலயத்துக்கு அமைக்கப்பட்ட ஈழவர், தச்சர் போன்ற ஐந்து வகைப் பணியாளர் சமூகங்களாகக் கொண்டார்[3]. மேலும் மணிக்கிராமம் என்பது ஓர் இந்து (இந்திய) வணிகக் குழு என்று விளக்கியுள்ளார்[4]. அஞ்சுவண்ணத்தைப் பொறுத்தவரை கோபிநாத ராவ் வெளியிட்ட கருத்து தவறு என்பது தெளிவு. ஏனெனில், வீரராகவ சக்கரவர்த்தியின் பட்டயத்தில்[5], மணிக்கிராமம் எனும் பட்டத்தால் பெருமைப்படுத்தப்பட்டிருந்த ஒரு வணிகத் தலைவருக்கு ஐங்கம்மாளர் அடிமைகளாகத் தரப்பட்டுள்ளனர். ஆனால் ஸ்தாணு ரவியின் பட்டயத்தில்[6] அஞ்சுவண்ணம் மற்றும் மணிக்கிராமம் என்பவை கொல்லம் நகரத்தில் அரசனால் வழங்கப்பட்ட பல தனி உரிமைகள் பெற்ற வணிக அமைப்புகளாகவும், தாங்களே அடிமைகளை வைத்திருந்ததாகவும் செய்தி உள்ளது. இவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எழுபத்திரண்டு வீடுபேறுகள் எனப்பட்டன.

கி.பி.1000-இல் சேர மன்னன் பாஸ்கர ரவியினால் வழங்கப்பட்ட கொச்சி யூதர் செப்புப் பட்டயத்தில் திரும்பவும் எழுபத்திரண்டு வீடுபேறுகள் சுட்டப்படுகின்றன[7]. இதன்படி இசுப்பு இரப்பான் எனும் யூத வியாபாரிக்கு 'அஞ்சுவண்ணப்பேறு' வழங்கப்பட்டு பல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளில் குறிப்பிடத்தக்கவை படகுகளிலும் வண்டிகளிலும் எடுத்துச் செல்லப்படும் வணிகச்சரக்குகள் மீது வரி வசூலித்தல், சுங்கவரி, துலாக்கூலி ஆகிய வரிகளிலிருந்து விலக்கு ஆகியன. இது ஏறத்தாழ ஸிரியன் கிறித்துவ பட்டயச் செய்தியை ஒட்டியே அமைந்துள்ளது. 'இசுப்பு இரப்பான்' அய்யப்பொழில் கல்வெட்டுக்களில் வரும் 'பட்டணஸ்வாமி' போன்ற ஒரு வணிகர் தலைவராகக் கொள்ளலாம்.

அஞ்சுவண்ணம், மணிக்கிராமம் முறையே யூத மற்றும் கிறித்துவ அமைப்புகள் என்ற குண்டர்ட்டின் கருத்துக்கு நேரடி ஆதாரங்கள் இல்லை. ஆயினும் ஸிரியன் கிறித்துவ பட்டயத்தின் இறுதிப் பகுதியில் பலவி (பாரசிக மொழி எழுத்து), அரபு மற்றும் ஈபுரு எழுத்துக்களில் உள்ள பல கையெழுத்துக்களைக் கவனத்தில் கொண்டே ஆக வேண்டும். இதன்படி கி.பி.9-ஆம் நூற்றாண்டில் கொல்லத்தில் மேற்கு ஆசியாவிலிருந்து வந்த யூதர், அரபுக்கள் (முஸ்லிம் மதத்தார்), கிறித்துவர் மற்றும் பாரசிகர் போன்ற பல வணிக மக்கள் கலந்து வாழ்ந்தனர் எனலாம். இவர்கள் கூட்டாக அஞ்சுவண்ணம் என அழைக்கப்பட்டனர் என்ற கருத்துக்கு இடம் உள்ளது. மணிக்கிராமத்தைப் பொறுத்த வரையில் அது உள்நாட்டு வணிகக் குழு போல் தெரிகிறது. ஏனெனில், அது கேரளத்தில் ராமன்தளி மற்றும் தாழக்காடு, தமிழ்நாட்டில் கொடும்பாளூர், உறையூர், சீனிவாசநல்லூர் மற்றும் சேலம் முதலிய உள்நாட்டு ஊர்க் கல்வெட்டுக்களிலும் பேசப்படுகின்றது. இருப்பினும் இதற்கும் அஞ்சுவண்ணத்துக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதையும் பார்க்கவேண்டும். துறைமுக ஊர்களில் இது அஞ்சுவண்ணத்தோடு இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு வணிகக் குழுவாக இருப்பினும் 9-ஆம் நூற்றாண்டிலேயே அது கடல்வணிகத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. தாய்லாந்து நாட்டில் தகுவாபா என்ற ஊரில் மணிக்கிராமமும் சேனாமுகமும் செயல்பட்டது[8].

அஞ்சுவண்ணம் குறித்து விவாதிக்கையில் 'ஹஞ்ஜமந' என்ற சொல் வழக்கையும் பார்க்கவேண்டும். மஹாராஷ்ட்டிரத்தில் தாணா மாவட்டம் சிஞ்சானியில் கிடைத்த 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில செப்புப் பட்டயங்களைப் பதிப்பிக்கையில் டி.சி.சர்க்கார் வட

கொங்கணத்தில் பல கல்வெட்டுக்களில் 'ஹஞ்ஜமந' என்ற சொல்லும் அதன் இன்னொரு வடிவமான 'ஆம்யமந' என்ற சொல்லும் நிறைய வழங்கப்படுவதைக் குறிப்பிட்டு அவை பார்சி (பாரசிக) மக்களின் குடியிருப்புகளைக் குறிப்பிடுவனவாகக் கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டார். மேலும் ஜெ.ஜெ. மோடி என்பவர் தெரிவித்தக் கருத்தை ஒட்டி அவெஸ்தி மொழியில் வழங்கும் 'ஹஞ்ஜமந' மற்றும் பாரசிக மொழியில் வழங்கும் 'அஞ்சுமந்' ஆகியவற்றோடு இச்சொற்களை தொடர்பு படுத்தலாம் என்றார்[9]. இச்சொற்கள் குழு, கூட்டம், கழகம் ஆகிய பொருள் தருபவை. மேற்குறிப்பிட்ட செப்புப் பட்டயத்தில் 'ஆம்யமந' சார்ந்த சிலருடைய பெயர்கள் 'ஆலி', 'முஆம்மது' போன்ற அரபு முஸ்லிம் பெயர்களின் திரிந்த வடிவங்களாக உள்ளன என்பதையும் சர்க்காரே எடுத்துக்காட்டியுள்ளார்.

வட மற்றும் தென் கன்னட மாவட்டங்களில், ப₃ஸ்ரூர், பா₃ரகூர் போன்ற இடங்களில், கிடைக்கும் கன்னடக் கல்வெட்டுக்களில், விஜயநகர அரசு காலம் வரை 'ஹஞ்ஜமந' இடம்பெற்றுள்ளது. இது தனியாகவோ நகரத்துடன் சேர்ந்தோ காணப்படுகின்றது. கைக்கினி என்ற ஊரில் உள்ள முதல் தேவராயர் (1427) கல்வெட்டொன்றில் 'ஹஞ்ஜமநத்' தலைவர்களில் ஒருவராக உம்மர மரக்கால என்பவர் காணப்படுகிறார். 'உம்மர' என்ற பெயரை வைத்து இவர் ஒரு பாரசிகர் என்றும் 'மரக்கால' என்பதிலிருந்து ஒரு மாலுமி என்றும் கே.வி.ரமேஷ் கருதுகிறார்[10]. ஆனால் டி.சி.சர்க்கார் பார்சிகளின் குடியிருப்பு அவ்வளவு தெற்கில் இருக்க வாய்ப்பில்லை என்றும், அதனால் கன்னடக் கல்வெட்டுக்களில் வரும் 'ஹஞ்ஜமந' கன்னட அல்லது ஒரு தென்னிந்தியச் சொல் என்றும், அஞ்சுவண்ணம் என்ற சொல்லின் பிந்தைய வடிவமாகக் கருதத்தகும் 'அஞ்சு பஞ்சாளத்தார்' என்ற தமிழ்ச்சொல்லுடன் தொடர்புடையது என்றும் விவாதிக்கிறார்[11]. இது இவர் முன்பு வெளியிட்ட கருத்துக்கு முரணானது என்பதைக் குறிப்பிடவேண்டும். மேலும் இது பல ஊகங்களை அடிப்படையாக் கொண்டது. ஆகவே கே.வி.ரமேஷ் இக்கருத்தை மறுத்துள்ளது சரியே. ஆயினும் 'ஹஞ்ஜமந' என்பது பாரசிகரை மட்டுமல்லாது, யவனர் அல்லது சோனகர் என்ற சொல்லைப் போல மேற்கு ஆசிய வணிகர்களை மொத்தமாகக் குறித்தது என்பதில் தவறில்லை. அவர்களுள் அரபுக்கள், யூதர், கிறித்துவர் மற்றும் பாரசிகர் ஆகிய யாவரும் அடங்குவர். ஆனால் 10-ஆம் நூற்றாண்டிலிருந்து அரபு முஸ்லிம்கள் இதில் பெருவாரியாக இருந்தார்கள் என்று தெரிகிறது.

'ஹஞ்ஜமந' தொடர்பாக வேறு ஒரு சான்றையும் இங்குச் சுட்டலாம், இந்தோனேசியாவில், குறிப்பாக ஜாவாவில் கிடைக்கும் கி.பி.9 மற்றும் 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் பலவற்றில் ஹாஞ்ஜெமன், 'ஹஞ்ஜமன'(hanjamana) மற்றும் 'ஹாஞ்ஜமன்' போன்ற பெயர்கள் காணக் கிடைக்கின்றன[12]. இச்சொற்கள் 'ஹாஞ்ஜமத' என்ற சொல்லின் மாற்று வடிவங்கள் என்பதில் ஐயமில்லை. அரபு மொழியில் உயிரெழுத்து எழுதப்படுவதில்லை. அதனால் வேறு மொழி பேசுவோர் அரபுச் சொற்களில் வரும் உயிரெழுத்தை இனம் காணல் கடினம். ஆகவே 'ஹ' 'ஹா' என்றும் 'ஹி' என்னும் இந்தோனேசிய மொழியில் எழுதப்பட்டது. இச்சொற்கள் வணிக அமைப்புகள் பலவற்றின் பெயர்களோடு சேர்ந்து காணப்படுகின்றன. இவ்வணிக அமைப்புகளுள் தென்னிந்தியா போன்ற வெளிநாடுகளிலிருந்து வந்த வணிக அமைப்புக்களும் அடங்கும்.

அஞ்சுவண்ணம் எனும் சொல் தமிழ் அல்லது மலையாளம் வழங்கும் கடற்கரைப் பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றது. இது 'ஹஞ்ஜமந' என்பதிலிருந்து பிறந்திருக்கலாம். எனினும் இதனை உறுதிப்படுத்த நேரடிச் சான்றில்லை. இவ்விரண்டு சொற்களும் தமிழ்க் கல்வெட்டுக்களில் இணைந்து காணப்படவில்லை. ஆனால் அஞ்சுவண்ணம் என்பதனுக்கு வேறு பொருள் கூறவும் சமகாலச் சான்று எதுவுமில்லை. அஞ்சுவண்ணத்தை 'அஞ்சு பஞ்சாளத்தார்', அதாவது தச்சர், கொல்லர் முதலிய ஐந்து வகைக் கம்மாளர் என்று கருத இடமில்லை. 'அஞ்சு பஞ்சாளத்தார்' என்ற சொல் மிகவும் பிற்காலத்திலேயே காணப்படுகிறது. மேலும் கம்மாளர் விஜயநகர அரசு காலம் வரை வணிகர், வெள்ளாளர் போன்ற செல்வமிக்க, நில உடைமைச் சமூகங்களை அண்டி அவர்கள் கீழ் பணிபுரிபவர்களாகவே இருந்தனர்.

இச்சொல்லின் உண்மையான பொருளைக் கண்டறியும் வகையில் தமிழறிஞர் டி.வி.சதாவசிவ பண்டாரத்தார் *பல்சந்தமாலை* என்ற பாடற்தொகுப்பில் கண்டறிந்து வெளிப்படுத்திய செய்தி ஒன்று மிக முக்கியமானது[13]. *பல்சந்தமாலையில்* அஞ்சுவண்ணம் பற்றிய சில பாடல்கள் உள்ளன. அவற்றில் அஞ்வண்ணத்தைச் சேர்ந்தோர் 'யவனர்' எனவும் 'சோனகர்' எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் கலுபதி அல்லது கலீஃபாவைப் பின்பற்றுபவர்கள், அல்லாவைத் தொழுபவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பாடல்கள் அஞ்சுவண்ணத்தினர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தோர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

அஞ்சுவண்ணம் கேரளக் கடற்கரையிலும், கீழைக் கடற்கரையில் குமரி முதல் விசாகப்பட்டணம் வரையும் உள்ள துறைமுக ஊர்கள் பலவற்றிலும் செயல்பட்டது. கேரளக் கடற்கரையில் கோழிக்கோடுக்கு அருகில் பந்தலாயினி கொல்லம் மற்றும் தெற்குக் கொல்லம் (குரக்கேணிக் கொல்லம்), கீழைக் கடற்கரையில் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கருகில் தீத்தாண்டதானபுரம், மயிலாப்பூர் (சென்னை), நெல்லூருக்கருகில் கிருஷ்ணாபட்டணம், விசாகபட்டணம் போன்ற இடங்களில் ஆங்காங்குள்ள வேறு வணிகக் குழுக்களோடு சேர்ந்து பேசப்படுகின்றது. பந்தலாயினி கொல்லத்திலுள்ள கல்வெட்டு சிதைந்துவிட்டபடியால் முழு விவரம் கிடைக்கவில்லை[14]. தீத்தாண்டதானபுரத்தில் மணிக்கிராமம், சாமந்த பண்டசாலி, தோயாவத்திர செட்டி, தென் இலங்கை வளஞ்சியர், கைக்கோளர், தூசுவர், வாணியர், நீண்ட கரையார்[15] ஆகிய பல வணிகக் குழுக்கள் மற்றும் நெசவுத் தொழில்புரிவோருடன் அஞ்சுவண்ணம் இணைந்து செயல்பட்டது[16]. மயிலாப்பூரில் அது மணிக்கிராமத்துடன் செயல்பட்டது. கிருஷ்ணாபட்டணத்தில் மலைமண்டலத்தின் அஞ்சுவண்ண வணிகர் என்று சுட்டப்பட்டு, பதிநெண்பூமியைச் சேர்ந்த நாடு, நகரம் மற்றும் சமஸ்த பரதேசிகள் எனப்பட்ட வணிகக்கூட்டில் ஓர் உறுப்பாகக் காணப்படுகிறது[17].

விசாகப்பட்டணத்தில் மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு தெலுங்கிலும் மற்றொன்று தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. தமிழ்க்கல்வெட்டும்[18] ஒரு தெலுங்குக் கல்வெட்டும்[19] கி.பி.1090-இல் எழுதப்பட்டவை. தமிழ்க்கல்வெட்டு சிதைந்திருந்தாலும் அது தெலுங்குக் கல்வெட்டின் தமிழ் வடிவம் என்பதில் சந்தேகமில்லை. இவ்விரண்டு கல்வெட்டுக்களும் ஒரே கல்லின் இரு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன. மேலும், தெலுங்குக் கல்வெட்டு சில தமிழ்த் தன்மைகளைக் கொண்டுள்ளது. இத்தெலுங்குக் கல்வெட்டு விசாகப்பட்டணம் ஆன குலோத்துங்க சோழ பட்டணத்து நகரத்தார் (அதாவது நகர நிர்வாக மன்றம்) அங்கிருந்த 'அஞ்சூட்டுவ' (அதாவது அஞ்ஞூற்றுவ) பெரும்பள்ளி என்ற நிறுவனத்துக்கு உட்பட்ட மனைகள் முதலியவற்றின் மீதான வரிகளை நீக்கினர் எனவும் அந்த வரிவிலக்கு பற்றிய ஆவணத்தை அப்பள்ளியைச் சேர்ந்த அல்லது மேற்பார்வை செய்த வணிகர் ஒருவரிடம் கொடுத்தனர் எனவும் செய்தி தருகிறது. அந்த வணிகர் அஞ்சுவண்ணத்தைச் சேர்ந்த ஒரு வணிகர் என்பதுடன் அவருடைய நீண்ட பெயர் சுவையான செய்திகளைத் தருவதாகவும்

உள்ளது. மாதோட்டம் ஆன சோழகுலவல்லிபட்டினத்து அஞ்சு வண்ணத்து வணிகரான அவர் நானா ராஜ வித்3யாத4ர ஸமங்கத்து க4ண்டி அசாவு ஆன பதினெண்பூமி நகர சேனாபதி ஆன மலைமண்டல மாதா என அழைக்கப்பட்டார். இப்பெயரில் 'அசாவு' என்பது அவர் இயற்பெயராகவும் பின்னும் முன்னும் உள்ள சொற்கள் பட்டங்களாகவும் கொள்ளலாம். வித்3யாத4ர எனும் பட்டம் ஒரு சோனக அதிகாரி வசித்த தஞ்சாவூர் ராஜ வித்3யாத4ரப் பெருந்தெருவையும்[20], கங்கைகொண்ட சோழபுரத்து ராசவிச்சதிரப் பெருந்தெருவையும் நினைவுபடுத்தும். எனவே 'அசாவு' என்பவர் ஒரு சோனக அல்லது முஸ்லீம் வியாபாரியென்று ஊகிப்பதில் தவறில்லை. வியாபாரியின் பெயரில் ஓர் உறுப்பான 'பதிநெண்பூமி நகரசேனாபதி' என்ற பட்டமும், அஞ்ஞூற்றுவ பெரும்பள்ளியின் பெயரில் உள்ள 'அஞ்ஞூற்றுவ' என்ற முன்னொட்டும் அந்த வியாபாரிக்கும் அஞ்ஞூற்றுவர் வணிகக் குழுவுக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டும். மேற்குறிப்பிட்ட அஞ்ஞூற்றுவப் பெரும்பள்ளி ஒரு முஸ்லிம் தொழுகை இடம் என்றும் கொள்ளவேண்டும். 'மலைமண்டல மாதா' என்ற இன்னொரு பட்டம் கேரளக் கடற்கரையுடன் இவர் கொண்ட ஏதோ ஒரு தொடர்பைக் காட்டும். இவருடைய ஊரான மாதோட்டம் வடமேற்கு இலங்கையில் இருந்தத் துறைமுக நகரமாகும். அது மாந்தை எனவும் சிங்களத்தில் 'மஹாதித்த' எனவும் அழைக்கப்பட்டது. ஆக, இவ்வியாபாரி கேரளக் கடற்கரை, இலங்கைக் கடற்கரை, ஆந்திரக் கடற்கரை ஆகிய மூன்று பகுதிகளோடு தொடர்புடையவர் என்பதை இவர் பெயர் காட்டும்.

இரண்டாவது தெலுங்குக் கல்வெட்டும்[21] இதேபோன்றதொரு கொடையினைத் தெரிவிக்கிறது. இக்கொடை அஞ்ஞூற்றுவ பெரும்பள்ளிக்கு மஹாமண்டலேசுவரன் குலோத்துங்க பிரிதிவீசுவரன் எனும் சிற்றரசனால் வழங்கப்பட்டது. இதன் காலம் சகம் 112(.) என சந்தேகமாகப் படிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது சகம் 1012 (கி.பி.1090) ஆக இருத்தல் வேண்டும். முன்னதற்கு மூன்று மாதம் கழித்து இது பொறிக்கப்பட்டது. இதில் கூறப்பட்டுள்ள பள்ளியின் எல்லைகள், நீக்கப்பட்ட வரிகளின் பெயர்கள் அனைத்தும் முன்னிரண்டு கல்வெட்டுக்களில் உள்ளன போன்றே உள்ளன. ஆனால், இதில் கொடை பெறுபவர் வேறொரு வியாபாரி. அவர் பசயில் அஞ்சுவண்ணத்தைச் சேர்ந்தவர், பசயில் இலங்கையில் இருந்த இன்னொரு துறைமுக ஊராகலாம். இதிலும் வியாபாரியின் பெயர் ஆய்வுக்குரியதாக உள்ளது. போ3யராண்டி ப3ல்ல என்பவரின் மகன் சாவநாண்டிப3ல்ல என்ற இவரின் பட்டம் மாவங்கரி வல்லப4 சமய சக்ரவர்த்தி என்றுள்ளது. சுமத்திராவில்

பாருஸில் கிடைத்த அய்யப்பொழில் கல்வெட்டு (கி.பி.1088)[22] அந்த ஊரின் பழைய பெயர் தமிழில் வாரோசு ஆன மாதங்கரி வல்லவ தேசி உய்யக்கொண்டபட்டினம் என்று குறிப்பிடுகின்றது. இதில் வரும் மாதங்கரி வல்லவ என்ற அடைமொழியும் மேலுள்ள வியாபாரியின் பெயரில் வரும் மாவங்கரி வல்லப4 என்ற அடைமொழியும் தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை.

விசாகப்பட்டணக் கல்வெட்டுக்களும், பாருஸ் கல்வெட்டும் காலத்தால் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக உள்ளன. இவை யாவும் முதற்குலோத்துங்கன் (1070-1120) காலத்தைச் சேர்ந்தவை. இவ்வரசன் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளுடனும் சீனாவுடனும் கடல் வணிகம் சுறுசுறுப்பாக இருந்தது என்பதற்கு இக்கல்வெட்டுக்களுடன் இவ்வரசன் சீனாவுக்கு அனுப்பிய தூது, நாகபட்டினத்தில் கடாரத்தரசன் கட்டிய புத்தப்பள்ளிக்குக் கூடுதல் நிலக்கொடை வழங்கி ஆதரித்தமை போன்றவையும் சான்று பகர்கின்றன. அப்பொழுது தென்னிந்தியா எங்கும் இயங்கிவந்த 'அய்யப்பொழில் அஞ்ஞூற்றுவர்' என்றும் 'நானாதேசி' என்றும் 'பதினெண்விஷயத்தார்' என்றும் பலவாறு அழைக்கப்பட்ட பெரிய வணிகக் கூட்டு இந்தக் கடல் வணிகத்தில் பெருமளவு பங்கேற்றது. இலங்கை, பர்மா (மியன்மர்), சுமத்ரா ஆகிய நாடுகளில் கிடைக்கும் இவ்வமைப்பின் கல்வெட்டுக்கள் இதற்குச் சான்று. மேற்சுட்டிய பாருஸ் கல்வெட்டு முக்கியமானது. அதில் வாரோசு ஆகிய மாதங்கரிவல்லவ தேசி உய்யக்கொண்ட பட்டினத்துக்கு வரும் கப்பல் (மரக்கலம்) உடைமையாளர் அல்லது அதில் சரக்கு கொண்டு வருவோர், கப்பல் மீகாமன், தோணி இயக்குபவர் ஆகியோர் அப்பட்டினத்தில் உள்ள தங்கள் முகவர்களுக்கு விற்பனைச் சரக்குகள் மீது 'அஞ்சுதுண்டாயம்' என்ற மகமையைச் செலுத்தவேண்டும் என்று 'அஞ்ஞூற்றுவர்' கூடித் தீர்மானித்தனர். இதில் கப்பல் மீகாமன் மரக்கல நாயன் என்று சுட்டப்படுகிறான். மரக்கல நாயன் 15-ஆம் நூற்றாண்டு முதல் மலையாள வரலாற்றுக் கதைப்பாடல்களிலும், போர்த்துக்கீசிய ஆவணங்களிலும் சுட்டப்படும் மரைக்காயர் என்ற சொல்லின் முதல் வடிவம் என்று ஊகிக்கலாம். மரைக்காயர் என்ற சொல் தமிழ் மற்றும் மலையாளம் பேசும் முஸ்லிம் வணிகர்களையே குறித்தது. ஆகவே, பாருஸ் கல்வெட்டு குறிப்பிடும் மரக்கல நாயன் முஸ்லிம் மாலுமியாகலாம். அதாவது 11-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வணிகர்களில் முஸ்லிம் வணிகர்களும் இருந்தார்கள் என்று சொல்லவேண்டும். அஞ்சுவண்ணம் பற்றி மேற்கண்ட செய்திகள்,

குறிப்பாக விசாகப்பட்டணக் கல்வெட்டுச் செய்திகள் இக்கருத்துக்கு அரண்செய்யும்.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 Gundert, H., 1844, "Translation and Analysis of the Ancient Documents Engraved on Copper in Possession of the Syrian Christians and Jews of Malabar", *Madras Journal of Literature and Science*, XIII, pt.1, pp.115-46.

2 *எ.இ. 4/ப.293-93*

3 *Travancore Archaeological Series*, II, p.74.

4 *எ.இ.* 17/ப.69-73

5 *எ.இ.* 4/ப.291-97

6 *Travancore Archaeological Series*, II, p.81.

7 *எ.இ.* 3/ப.67-68

8 *Journal of Oriental Research*, VI, 1932, pp. 299-310.

9 *எ.இ. 32/ப.48*

10 Ramesh, K.V., 1970, *A History of South Kanara*, pp. 252-53.

11 *எ.இ.* 35/ப.292

12 Sarkar, H.B., 1972, *Corpus of the Inscriptions of Java (up to 928 AD)*, Firma K.L. Mukhopadhyay, Calcutta.

13 தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், *கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்* மணிவாசகர் நூலகம், பக்.16-22.

14 *தெ.இ.க*, 7/162

15 *க.ஆ.அ.* 598/1927

16 *Chennai Managar Kalvettukkal*, 1970, No. 1967/20.

17 *Nellore Inscriptions*, Gudur 45.

18 *தெ.இ.க*, 26/103

19 *தெ.இ.க*, 10/651

20 *தெ.இ.க*, 2/66

21 *தெ.இ.க*, 10/211

22 எ.சுப்பராயலு, 1994, 'சுமத்திராவில் தமிழ்க் கல்வெட்டுக்கள்', *ஆவணம்*, 4, தமிழகத்தொல்லியல் கழகம், ப,118.

# 11. புதுக்கோட்டையில் வணிகக் குழுக்கள் ஓர் ஆய்வு

**கரு.இராசேந்திரன்**
மேலப்பனையூர்

ஒரு நாட்டிற்கு வருவாய் தரக்கூடிய முக்கியமான தொழில்களில் வணிகமும் ஒன்று. வணிகம் செய்தவர் தங்களை வியாபாரி[1], வாணியர்[2], வணிகர்[3], செட்டியார்[4], நகரத்தார்[5] என்று பொதுவாகவும் பதினெண் விஷயத்தார், நானாதேசிகள், ஐநூற்றுவர், வளஞ்சியர் என்று சிறப்பாகவும் பல்வேறு பெயர்களில் அழைத்துக் கொண்டனர். சங்ககாலத்தில் வணிகம் செய்தவரை வணிகப் பொருளின் அடிப்படையில் கூலவணிகன், அறுவை வணிகன், பொன்வணிகன் என வகைப்படுத்தி தமிழகத்தார் அழைத்ததைப் பார்க்கும்போது பண்டைக் காலத்திலேயே தமிழகத்தில் வணிகம் சிறப்புற்றிருந்தது தெரிகிறது.

### வணிகர் ஊரும் தெருவின் பெயரும்

வணிகர்கள் குடியிருந்த ஊர் நகரம்[6], பட்டணம்[7], மணிக்கிராமம்[8], வேளாபுரம்[9] என்று அழைக்கப்பட்டது. சிலவிடங்களில் நகரத்தூர்[10], நகரப்பட்டி[11], நகரத்துப்பட்டி[12] என நகர முன் ஒட்டுச் சேர்க்கப்பட்டும் அழைக்கப்பட்டது. பிரான்மலைக் கல்வெட்டொன்று 'பொங்கு மாடவீதி பதினெட்டுப் பட்டினமும் முப்பத்திரெண்டு வேளாபுரமும்'[13] என்று வணிகர்களது ஊர்ச் சிறப்பைப் பற்றி பேசுகிறது. வணிகர்கள் குடியிருந்த தெரு பெருந்தெரு என்று அழைக்கப்பட்டது[14].

### புதுக்கோட்டையும் வணிகக் குழுக்களும்

புதுக்கோட்டை சோழ, பாண்டிய நாடுகளின் எல்லை சந்திக்குமிடத்தில் வெள்ளாற்றை மையமாகக் கொண்ட நிலப்பரப்பாகும். வரலாற்றின் மத்திய காலத்தில் தமிழகத்தில் செயல்பட்ட மணிக்கிராமத்தார்[15], திசைஆயிரத்து ஐநூற்றுவர்[16], ஐயப்பொழில்[17], மலைமண்டத்துக் குதிரைச் செட்டிகள்[18], தென்னிலங்கை வளஞ்சியர்[19], நானாதேசிகள், பதினெண் விஜயத்தார் போன்ற வணிகக் குழுக்கள் புதுக்கோட்டை பகுதியில் இருந்ததை இங்குள்ள கல்வெட்டுக்கள்

தெரிவிக்கின்றன. இப்பகுதியில் இன்றைக்கும் வணிகப் பெருமக்கள் தங்களை நாட்டுக்கோட்டை நகரத்தார், சுந்தரத்து நகரத்தார், வல்லநாட்டுச் செட்டியார் என மூன்று வகைப் பிரிவினராக அழைத்துகொள்கின்றனர்.

**நாட்டுக்கோட்டை நகரத்தார்**

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வைகை ஆற்றுக்கு வடக்கு பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு, கடலுக்கு மேற்கு என்ற நான்கு எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 78 ஊர்களில் குடியிருப்பவர்கள். இவர்கள் இரணியூர்க் கோயில், இலுப்பைக்குடிக் கோயில், இளையாத்தக்குடிக்கோயில், சூரக்குடிக்கோயில், நேமம் கோயில், மாத்தூர் கோயில், பிள்ளையார்பட்டிக் கோயில், வயிரவன் பட்டிக் கோயில், வேலங்குடிக் கோயில் என்ற ஒன்பது சிவன் கோயில்களிலுள்ள இறைவனைக் குலதெய்வமாகக் கொண்ட ஒன்பது பிரிவினர் ஆவர். ஒவ்வொரு பிரிவிலும் பல உட்பிரிவுகள் உண்டு[20]. இவர்களது உறவின் முறை நியதி வேலங்குடிக் கோயிலில் கல்வெட்டாக இருப்பதாக இவர்களது வரலாற்று நூலில் கூறப்பட்டுள்ளது[21]. அதில் இவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய உறவின் முறை நியாயங்களை தெரிவிக்கின்றபோது 'இவர்கள் செய்ய வேண்டிய வியாபாரம், இரத்தினம், சுவர்ணம், பல சரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது. சீவவதையான வியாபாரம் செய்வதில்லை. வாய்மை தவறாத மேலோர்களிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது. தர்ம வட்டி வாங்குகிறது. குதிரை வியாபாரமும், வெற்றிலை முதலிய அமுகல் சரக்கு வியாபாரமும் செய்யக்கூடாது'[22] எனக் கண்டுள்ளதாகத் தெரிவிக்கிறது. ஒன்பது நகரச் சிவன்கோயில்களுள் ஒன்றான மாத்தூர்கோயிலிலுள்ள ஈசன் ஐநூற்றீசர் எனப் பெயர் கொண்டிருப்பதோடு கல்வாசல் நாட்டுச் சுந்தர பாண்டியபுரத்து நகரத்தார்களை திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என பிரான்மலைக் கல்வெட்டொன்று[23] கூறுவதாலும் இவர்கள் திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதலாம். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் உள்நாட்டு வணிகம் மட்டுமல்லாது வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டவர்கள். 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்னும் பழமொழி செட்டி நாட்டிற்கே உரிய பழமொழி அக்காலத்தில் கடல் பயணம் செய்த செட்டியார்கள்

கப்பலில் செல்லும்போது விபத்து ஏதும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நம்பிக்கையில் மரத்தால் செய்யப்பட்ட முருகன் சிற்பத்தை பயணத்தின்போது மடியில் கட்டிக் கொண்டு செல்வது வழக்கமாகும்[24]. சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு அருகிலுள்ள கோட்டையூர் ராஜா முத்தையா செட்டியார் அவர்களது வீட்டுச் சேகரிப்பிலிருந்த கையடக்கமுள்ள முருகன் மரச்சிற்பம் இதை உறுதி செய்யும். இந்தோனேசியா நாட்டில் கண்டெடுக்கப்பட்ட கி.பி.11-ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதக்கூடிய இருமொழி கல்வெட்டு ஒன்று அங்குள்ள ஜகார்த்தா அரசு அருங்காட்சியத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது[25]. அக்கல்வெட்டின் தமிழ்ப் பகுதியில் திசை ஆயிரத்து என்ற குறிப்பு உள்ளது. இதன் மூலம் ஐநூற்றுவர் குழுவினர் அக்காலத்திலேயே கடல் கடந்து சென்று வியாபாரம் செய்தனர் எனக் கருதலாம். நாட்டுச் செட்டி என்பது நாளடைவில் நாட்டுக்கோட்டை செட்டி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். வரலாற்று ரீதியாக இந்நகரத்தார் கி.பி.1805-ஆம் ஆண்டளவில் இலங்கை நாட்டில் கொழும்பிற்கும் கி.பி.1824-ஆம் ஆண்டளவில் சிங்கப்பூர், பினாங்கு ஆகிய இடங்களுக்கும் கி.பி.1852-ஆம் ஆண்டில் பர்மாவில் மேல்மோனுக்கும் வியாபாரம் செய்யச் சென்றார்கள் என *நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு* நூலில்[26] கூறப்பட்டுள்ளது. கொழும்பிலும் கோலாலம்பூர், மலாக்கா போன்ற இடங்களிலும் செட்டித்தெரு என்ற பெயரில் தெருக்கள் இருப்பதும்[27] இந்நகரத்தார்களுக்கு மேற்கண்ட சில இடங்களில் வீடுகள், இரப்பர் தோட்டங்கள், நகரத்தார் விடுதிகள் இன்றைக்கும் இருப்பதும் இவர்களின் வெளிநாட்டுத் தொடர்பைக் காட்டுவனவாகும்.

## கல்வெட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்

வணிகப் பெருமக்கள் தாங்கள் ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை தான் வாழ்ந்த பகுதியிலுள்ள கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து ஏரி, குளங்களை வெட்டி அறப்பணிகள் செய்து அதற்கான கல்வெட்டுக்களை நிறுவினர். திருமயம் வட்டம் ராங்கியம் ஈசுவரன் கோயிலில் உள்ள கி.பி.13-ஆம் நூற்றாண்டு சுந்தரபாண்டியன் கல்வெட்டொன்று இளையாத்தக்குடி நகரத்தார்கள் தங்கள் ஊர்ப் பாதுகாவலுக்கு ராங்கியம் ஊரவரை நியமித்ததைத் தெரிவிக்கிறது[28]. அதன்பிறகு இளையாத்தக்குடி நகரத்தாரில் கழனிவாசலுடையார்

செழியதரையர் திருமயம் வட்டம் செவலூர் ஈசுவரன் கோயிலுக்கு கி.பி.1458-ஆம் ஆண்டில் சுப்பிரமணியர் மற்றும் வள்ளி தெய்வானை ஆகியத் தெய்வ திருமேனிகளைச் செய்து வைத்ததன் பொருட்டு அவருக்கு கோயிலில் மரியாதை திருநாளுக்கு பரிவட்டமும் கட்டிக் கொள்ள கோயில் பண்டாரத்தாரும் ஊரவரும் அவருக்கு உரிமை தந்து கல்வெட்டு வெட்டிக் கொள்ளச் செய்தனர்[29]. மேற்படி கோயில் வாசற்படிக்கு தென்புறமுள்ள கி.பி.1498-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் 'பொன்னமராவதி நாட்டு வடபற்று செவலூர் உடையார் திருப்பூமீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் பண்டாரத்தாரும் ஊரவரும் இளையாத்தக்குடி நகரத்தாருக்கு கல்வெட்டுக் கொடுத்தப்படி இந்நாயனார் கோயில் திங்கள் நிவந்தங்களுக்கு அருளிப்பாடுயிட்டால் நகரத்தார், நின்றவர்களில் மூப்பானவர்கள் வரக் கடவார்களாகவும்' என கூறப்பட்டுள்ளது[30]. மேற்படி கோயில் வடபுறம் சுவரில் உள்ள கல்வெட்டு கி.பி.1498-க்குரியது. அது செவலூர் சிவன்கோயிலுக்கு அமுதுபடி செய்வதற்கு இளையாத்தக்குடியாரில் கழனிவாசலுடையார் செழியதரையர் சிவந்தகால அழகியரான தேசியராயர், கோயில் பண்டாரத்தாரிடமும் ஊராரிடமும் சக்கரம் 140 பணம் கொடுத்து செவலூர் பூங்குளத்து வயல், மாதன் வயல், கயிற்று குளத்து நிலம் ஆகியவைகளை விலைக்கு வாங்கி கோயிலுக்கு விட்டதைத் தெரிவிக்கிறது[31] திருமயம் வட்டம் இராங்கியம் சிவன் கோயிலில் சுவாமி கோயிலின் வடபுறம் சுவரிலுள்ள கி.பி.1501-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இளையாத்தக்குடியான குலசேகபுரத்து காளையார் காலப் பெருந்தெருவில் இருந்த ஒக்கூர் உடையான் வீரப்பெருமாள் பிறவிக்கு நல்லாரான சேரகோனார், ஆவுடையார் ஆகியோரிடமும் 250 பணம் பெற்றுக் கொண்டு இராங்கியம் திருப்பூமிஸ்வர நாயனாருக்கு திருநாமத்துக்காணி ஆக அவ்வூர் ஏறனேரி வயலில் நிலம்விட்ட செய்தி கூறப்பட்டுள்ளது[32]. திருமயம் வட்டம் மறவாமதுரை அகளங்கீசுவரர் கோயில் சுவரில் உள்ள கல்வெட்டு ஒன்று சகாத்தம் 1440 மேற்செல்லாநின்ற தாருன வருஷம் ஆனி மீ௨ கல்வாசல் நாட்டு இளையாத்தக்குடியான குலசேகரபுரத்து திருவேட்பூருடையான் நல்லபெருமாள் திருநெல்வேலியுடையரான விசையராயர் அக்கோயில் நாச்சியார் ஆட்சி வல்லியையும் கற்பக் கிருகத்தையும் தன்மமாக செய்த குறிப்பு காணப்படுகிறது[33]. மேற்படி ராங்கியம் பூமீஸ்வரர் கோயில் சுவாமி

கோயில் தென்புறம் சுவரிலுள்ள கல்வெட்டு ஒன்று கி.பி.1528-ஆம் ஆண்டிற்கு உரியது. அதில் இளையாத்தக்குடி காளையர்கால பெருந்தெருவிலிருந்த திருவேட்பூருடையாரான இன்பவனப் பெருமாள் என்பவரும் உலகுடையார் என்பவரும் இராசசிங்க மங்கல ஊராவரும் அவ்வூர் கோயில் காலைசந்திப் பூசைக்காக ஒரு வயலினை நிலக்கொடையாக விலைக்கு வாங்கிவிட்டதைத் தெரிவிக்கின்றது[34].

## இலுப்பைக்குடிக் கோயிலார்

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் மலையக்கோயில் என்ற ஊரில் மலை மீதுள்ள கோயிலுக்குச் செல்லும் படிக்கட்டிற்கு அருகில் பாறையின் மீது வெட்டப்பட்டுள்ள கி.பி.1881-ஆம் ஆண்டுக் கல்வெட்டு.

> சுப ஸ்ரீ சாலிப வாகன சகாப்தம் 1880
> கலியாதி 4982 யிங்கி
> லீஷ் 1881க்கு தமிழ் விசு
> ஐப்பசி மீஉ 14 மலையக் கோயிலுக்கு கேரளசிங்க வளநாடாகிய பிறம்பா, நாட்டில் இலுப்பைக்குடியான புகலிடமான பட்டணத்தில் சூடாமணி புறமுடையான் நச்சாந்து பட்டியொன்று விளங்கிய திருமலை சமுத்திரத்திலிருக்கும் பெரிய கருப்பன் செட்டியார் மகன் ராமநாதன் செட்டி உள்ளிட்டார் மலையடிவாரம் குறடு மலைக்கு போய்வர படியும் செய்து[35]

என்ற விவரத்தை கூறுகிறது.

## பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு

திருமயம் பெருமாள் கோயிலுக்கு கீழ்புறமுள்ள சத்தியபுஷ்கரணி என்ற குளத்தின் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கி.பி.19-ஆம் நூற்றாண்டுக்குரியது.

> காலயுக்தி ளு தை மீஉ 12.2 மதுரை ஜில்லா சிவகங்கைச்சீமை சாக்கை தாலுகா.
> காரைக்குடியிலிருக்கும் நாட்டு கோட்டையூரில்
> கல்வாசல் நாட்டில் இளையாத்தக்குடியான

குலசேகர புரத்தில் இரணியூர்
மருதங்குடியான ராசநாராயண
புரத்தில் பிள்ளையார்பட்டி திருவேள்பூருடையான் மெ.முருகப்ப செட்டியார்,
குமாரன் ராமநாதன் செட்டியார் சக்தியபுஷ்கரணி தர்மம்

மேற்கண்ட கல்வெட்டுக்கள் மூலம் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் உட்பிரிவுகளையும் திருப்பணிகளையும் அறிய முடிகிறது[36].

**சுந்தரத்து நகரத்தார்**

புதுக்கோட்டைக்கு மேற்கே சுமார் 30 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு சிற்றூரே சுந்தரசோழபுரமாகும். சுந்தர சோழபுரத்தில் இருந்த வணிகப் பெருமக்கள் தங்களை சுந்தரத்து நகரத்தார் என்று அழைத்துக் கொண்டனர் என்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சுந்தரத்து நகரத்தார்கள் இன்றைக்கு சுந்தரத்தில் இல்லாது தமிழகத்தின் பிற இடங்களில் இருந்தாலும் தங்களை சுந்தரத்து நகரத்தார்கள் என்றே அழைத்துக் கொள்கின்றனர். திருமயம் வட்டம் பூபாலைக்குடி புஷ்பவனேஷ்வர் கோயிலில் உள்ள எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரன் கல்வெட்டு ஒன்று சுந்தரசோழபுரத்து கூடலுடையார்களில் பெரியான் இலக்கிச்சானான இராசராச சிலைசெட்டி உள்ளிட்டார் திருப்பூவாலைக்குடி திருப்பள்ளி நாச்சியாருக்கு அமுதுபடிக்கு தேவவயலினை காணியாகக் கொடுத்த செய்தி தெரிகிறது[37]. மேற்படி சுந்தரசோழபுரத்து சுயம்பிரகாசர் கோயிலில் உள்ள 13-ஆம் நூற்றண்டில் சுந்தரபாண்டியனின் காலத்தில் ஒல்லையூர் கூற்றத்து சுந்தர சோழபுரமான தேசியுகந்த பட்டணத்து நகரத்து இசைந்த நகரத்தோம் துகலூருடையான் என்பவர் சுந்தரத்தை சேர்ந்த பெரியவயலில் இவ்வூர் கோயிலுக்காக நிலம் வாங்கிவிட்ட விவரத்தைக் கூறுகிறது[38]. பொன்னமராவதி ராஜேந்திரசோழீசுபரமுடையார் கோயில் கல்வெட்டு ஒன்றில் சுந்தரசோழபுரத்து தேசியுகந்த பட்டணத்து பரம்பையூருடையான் அக்கோயில் மண்டபத்து கூரைப்பாக்கல் தர்மம் செய்த செய்தியைக் கூறுகிறது[39]. பூவாலைக்குடி கல்வெட்டு ஒன்றில் செவலூரில் இரண்டு பேர் சண்டையிட்டுக் கொண்டதனை சுந்தரத்து நகரத்தார் சந்து செய்த

செய்தி கூறப்பட்டுள்ளது[40]. வெங்களப்ப நாயக்கர் காலத்தில் சுந்தர சோழபுரம் ஈசுவரன் கோயிலுக்கு சுந்தரத்து நகரத்தார் மேல்நிலைப் புரவிலுள்ள அமக்கனி குளத்தையும் நிலத்தையும் சர்வமானியக் கட்டளையாக விலைக்கு வாங்கி விட்ட செய்தியைக் கூறுகிறது[41]. சுந்தரசோழபுரம் பெருமாள் கோயில் கல்வெட்டில் அதாவது கி.பி.14-ஆம் நூற்றாண்டளவில் விக்கிரம பாண்டியன் காலத்தில் இருந்த நிசதராயர் ஓலை கண்டு சுந்தர சோழபுரம் நகரத்தார்கள் அவ்வூர் பெருமாள் கோயில் பொலிஞ்ச நின்ற எம்பெருமானுக்கு தங்கள் ஊர் புரவில் நிலம் தந்த செய்தி கூறப்பட்டுள்ளது[42]. திருமயம் வட்டம் மேலப்பனையூர் அகிலாண்டேஸ்வரி கோயிலின் மேல்புரம் உள்ள கி.பி.15-ஆம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதக்கூடிய கல்வெட்டில் மேலப்பனையூர் அறிவுடைப் பெருந்தெருவில் குளமங்கலம் அச்சிரகாண்டான் பெருந்தெருவிலும் இருந்த சுந்தரசோழபுரம் நகரத்தார்கள் மேலபனையூர் அகிலாண்டேஸ்வரி கோயிலில் திருநிலைக்காலும் ஒரு பாக்கல் நீங்கலாக கோயில் முழுவதும் கட்டி வைத்த செய்தியைச் சொல்கிறது[43]. சுந்தர சோழபுரம் ஈசுவரன் கோயிலில் பலவகைப் படை பஞ்சரமும் அகவாயும் சுந்தரசோழபுரத்து நகரத்தார் கூடலுடையான் செய்து வைத்தார்[44]. இதுபோலவே சுந்தர சோழபுரத்து தான் தோன்றி ஈசுவரன் கோயிலில் சுந்தர சோழபுரம் நகரத்தாரில் மருதாந்தபுரம் உடையான் மற்றும் அவ்வூர் சமயசூரியச் சீலைசெட்டி, பரம்பையூருடையான் தில்லை அழகன், அரட்டன் சந்தான சந்திவனப் பெருமாள் ஆகியோர்[45] இக்கோயிலுக்கு பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். சுந்தரசோழபுரம் நானாதேசியுகந்த பட்டணம் என்றழைக்கப்பட்டதால் சுந்தரத்து நகரத்தார்கள் நானாதேசி வணிகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதலாம்.

**வல்லநாட்டுச் செட்டியார்**

புதுக்கோட்டை நகருக்கும் ஆலங்குடிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு இடைக்காலம் முதல் 'வல்ல நாடு' என்று அழைக்கப்படுகிறது. வல்ல நாட்டு ஊர்களில் இன்றைக்கு இருந்து வருகிற செட்டியார் பெருமக்கள் வல்லநாட்டுச் செட்டியார்கள் என தங்களை கூறிக் கொள்கின்றனர். இவர்கள் இன்றைக்கு ஒரு தனிக் குழுவாகவே இருந்து வருகின்றனர். வல்ல நாட்டின் முக்கிய ஊர்களில் திருவரங்குளம் ஒன்று. திருவரங்குள நாயனார் கோயிலிலுள்ள சேமப் பிள்ளையாருக்கு சந்தியா

தீபம் எரிக்க வல்லநாடன் பெருந்தெரு நகரத்தார்கள் ஒப்புக்கொண்டதைத் திருவரங்குளம் கல்வெட்டுத் தெரிவிக்கிறது[46]. ஆலங்குடி நாமபுரிசுவரர் கோயிலில் உள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு தென்கவிநாடு கலசமங்கலத்திலிருந்த கரிகால சோழச் சிலை செட்டியார் மேற்படி கோயிலுக்கு திருக்குளம் வெட்டிய செய்தியினைக் கூறுகிறது[47]. ஆலங்குடி மேற்படி கோயில் கல்வெட்டு ஒன்று ஆலங்குடியிலிருந்த நகரத்தாரில் சேரையூருடையான் என்பவன் முருகன் கோயில் கட்டுவித்ததைத் தெரிவிக்கிறது[48]. மேற்படி ஆலங்குடி நாமபுரீசுவரர் கோயிலிலுள்ள சுவாமிகோயில் கல்வெட்டு ஒன்று ஆலங்குடி தெற்கு தெருவிலிருந்த நகரத்தார் தன்மம் என்கிறது[49]. இன்றைய புதுக்கோட்டை நகருக்கு அண்மையிலுள்ள கலசக்காட்டில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சேதிகுல மாணிக்கபுரம் என்ற வணிக நகரம் இருந்தது[50]. அது பிற்காலத்தில் தேசிகுலமாணிக்கபுரம்[51] என்றழைக்கப்படுகிறது.

இம்மூவகை வணிகப் பெருமக்கள் தாங்கள் செய்த தான தர்மங்களின் பொருட்டு வெட்டி வைத்த கல்வெட்டுக்கள் இவர்களது பெயர்களையும் பெருமைகளையும் அறிவதற்குத் துணைபுரிகின்றன எனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 வியாபரி, *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள் (பு.ச.க.)* 110, 122,140,158,214,283

2 வாணியர், *பு.ச.க.*808

3 வணிகர், *பு.ச.க.*808

4 செட்டியார், *பு.ச.க.*158, 271, 280, 281, 968

5 நகரத்தார், *பு.ச.க.*122, 280, 390

6 நகரம், *பு.ச.க* 280, 387

7 பட்டணம், *தெ.இ.க* 8/442

8 மணிக்கிராமம், *தெ.இ.க.* 8/442

9 வேளாபுரம், *தெ.இ.க* 8/442

10 நகரத்து ஊர், *பு.சு.க.* 621

11 நகரப்பட்டி திருயம் வட்டத்திலுள்ள ஓர் ஊர்.

12 நகரத்துப்பட்டி திருமயம் வட்டத்திலுள்ள ஓர் ஊர்

13 *தெ.இ.க.* 8/442

14 பெருந்தெரு, *பு.சு.க.* 328, 360, 404, 431, 466, 616

15 மணிக்கிராமத்தார், *தெ.இ.க.* 8/442

16 திசை ஆயிரத்து ஐநூற்றுவர், *பு.சு.க.* 61, 390, 1022

17 ஐயப்பொழில், *பு.சு.க.* 134, 148

18 மலைமண்டலத்து குதிரைச் செட்டிகள், *பு.சு.க.* 629

19 தென்னிலங்கை வளஞ்சியர், *பு.சு.க.* 995

20 சோமலெ, *நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு,* லெ.சோமு வெளியீடு ப.17.

21 *மேலது,* ப. 6.

22 *மேலது.* ப.22.

23 *தெ.இ.க.* 8/442

24 *தினமணி*, மதுரைப்பதிப்பு, நாள், 20.06.92, ப.6

25 எ.சுப்பராயலு, 1994, "சுமத்திராவில் தமிழ்க் கல்வெட்டுக்கள்", *ஆவணம்*, 4, தமிழகத்தொல்லியல் கழகம், ப,116.

26 சோமலெ, *நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு,* லெ.சோமு வெளியீடு, ப.16.

27 வானொலி விளம்பரம், மலேசிய சுற்றுப்பயணத்தின்போது கட்டுரை ஆசிரியாரால் கண்டறியப்பட்டது.

28 *பு.சு.க.* 491

29 *பு.சு.க.* 802

30 *பு.சு.க.* 833

31 பு.ச.க. 834

32 பு.ச.க. 835

33 பு.ச.க. 848

34 பு.ச.க. 854

35 கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு

36 திருமயம் புஷ்கரணி ஊரணி கல்வெட்டு

37 பு.ச.க. 400

38 பு.ச.க. 422

39 பு.ச.க. 788

40 பு.ச.க. 815

41 பு.ச.க. 941

42 பு.ச.க. 937

43 பு.ச.க. 1004

44 பு.ச.க. 1014

45 பு.ச.க. 1015, 1016, 1017

46 பு.ச.க. 431

47 பு.ச.க. 466

48 பு.ச.க. 813

49 பு.ச.க. 839

50 பு.ச.க. 122

51 பு.ச.க. 803, 806, 811

# 12. வணிகக் குழுக்களும் சமூகமும்

அ.சந்திரபோஸ்
செங்கல்பட்டு

சோழர் காலம் முதல், குறுநில அரசாக செயல்பட்டுவந்த தானவநாடு தற்போதைய புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டத்தின் ஒரு பகுதியையும், தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய நிலப்பரப்பு ஆகும். தானவ நாட்டின் மையப் பகுதியில் அமைந்திருந்த கிடாரங்கொண்ட சோழபுரம் இந்நாட்டின் தலைமையிடமாக இருந்ததுடன், ஒரு வணிக நகரமாகவும் இருந்துள்ளது. வணிகர்களான நகரத்தார்கள் குடியிருந்தப் பகுதிகள் அவர்தம் பெயரால் நகரம் என இன்றும் தனி ஊராக அழைக்கப்பட்டுவருகிறது. தமிழகத்தில் இரண்டாம் பாண்டியப் பேரரசின் ஆட்சியின் போது, பல்வேறு சமுதாய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பல கல்வெட்டுக்கள் கீரமங்கலம் திருமெய்நின்றநாதர் கோயிலின் சுவர்களில் காணப்படுகின்றன. அவற்றில் வணிகக் குழுக்களான பதினெண் விசயத்தார் மற்றும் நகரத்தார் பற்றிய மூன்று கல்வெட்டுக்களும் உள்ளன. அவற்றைப் பற்றி ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியனின் (கி.பி.1251-1283) 11-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1262) திருமெய்நின்றநாதர் கோயில் மண்டபத்தின் கிழக்குச் சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு வணிகர் பற்றிய முதலாவது சான்றாகும்[1]. கல்வெட்டின் சில வரிகள் அழிந்துபட்டும், எழுத்து பொறிக்கப்பட்ட சில கற்கள் மாற்றியமைக்கப்பட்டும் உள்ளன. எனினும் கிடைத்திருக்கும் வரிகள் முக்கியச் செய்திகளைக் காட்டுவனவாக உள்ளன. கோயிலின் தெற்கு நுழைவாயிலில் அமைந்திருக்கும் பிழை பொறுத்த பிள்ளையார் திருமேனிக்கு வழிபாடு மற்றும் பூசை காரியங்கள் செய்ய பொருள் வழங்குவதற்கு வணிகக் குழுக்களான பதினெண் விசயத்தார்களும், நகரத்தார்களும் ஒன்றுகூடி அவர்களுக்குள்ளாகவே அவர்களது விற்பனைப் பொருள்களின் மீது சுங்கவரி விதிப்பதற்குறியத் தொகையை நிர்ணயம் செய்வதென பல்வேறு வணிகர்களுக்கிடையில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட செய்தியைக் கல்வெட்டுக் கூறுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது கல்வெட்டில் கூறப்பட்டுள்ள தெற்குப்புற நுழைவாயிலை கோயிலில் காணமுடியவில்லை. தெற்குப்புற நுழைவாயில் இருந்ததற்கான அடையாளம் கூட கோயிலின் சுற்றுப்புறச் சுவற்றில் காணப்படவில்லை. கிழக்கு நுழைவாயில் மட்டுமே இக்கோயிலுக்கு உண்டு. மேலும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பிழை பொறுத்த பிள்ளையார் சிற்பத் திருமேனி குறிப்பிடப்பட்ட இடத்தில் காணப்படவில்லை. ஆனால், கிழக்கு நுழைவாயிலின் தென்புரத்தில் ஒரு பிள்ளையார் சிற்பத் திருமேனியாக அண்மைக்கால கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட பிள்ளையார் சிற்பம் இதுவாகத்தான் இருக்க முடியும். இது தவிர கோயில் திருச்சுற்றுச் சுவருக்குள் பிள்ளையார் கோயில் பரிவார தேவதை வரிசையில் வழக்கம்போல அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கல்வெட்டு, மாறவர்மன் முதலாம் குலசேகரப்பாண்டியனின் (கி.பி.1268-1313) 38-ஆவது ஆட்சியாண்டில் (1306கி.பி.) கருவறையின் தென்புறம் குமுதப்பட்டையில் பொறிக்கப்பட்டுள்ளது[2]. தானவ நாட்டில் கிடாரங்கொண்ட சோழபுரத்தின் கிழக்கில் குக்கிராமமான கீரமங்கலத்தில் உள்ள அரசமிக்காமன் பெருந்தெருவில் பல்வேறு இடங்களிலிருந்து நகரத்தார்கள் கூடி செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி இக்கல்வெட்டுக் கூறுகின்றது. அதன்படி, ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குள்ளாகவே வசூல் செய்யப்பட்ட தொகையை மெய்நின்ற நாதரின் தினபூசைக்காவும், மெய்நின்ற நாதர் கோயிலின் முன்பு அமைந்துள்ள 'நானாதேசம்' என அழைக்கப்பட்ட குளத்தை சீரமைக்கவும் கொடுப்பதென ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த எழுதப்பட்ட ஒப்பந்தத்தின் முடிவில், குலசேகரபுரம் என்ற நியமம், சயங்கொண்ட சோழபுரம், வரகூர், சிறுவரம்பூர் ஆகிய ஊர்களிலிருந்து அதன் பிரதிநிகளாகக் கலந்துகொண்டவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இக்கல்வெட்டில் இறைவன் மேனின்றநாயனார் என அழைக்கப்படுகிறார். கோயிலின் முன்பாக அமைந்திருக்கும் குளம் 'நானாதேசம்' எனக் கல்வெட்டில் அழைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்க ஒன்று. இவ்வாறு அழைக்கப்பட்டிருப்பதிலிருந்தே வணிகக்குழுவின் நிதி நல்கையுடனே இக்குளம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை யூகிக்க முடிகின்றது.

அண்மையில் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர், பல்லாவரம் அருகே 'ஐநூற்றுவர் குளம்' ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர்[3]. அதேபோல புதுக்கோட்டை மாவட்டம் முனிசந்தையில் 'ஐநூற்றுவ பேரேரி' உள்ளது[4]. இது போன்று வணிகக் குழுக்கள் பல ஏரி, குளங்களைத் தோற்றுவித்துள்ளதை ஆய்வாளர்களின் மூலம் அறியமுடிகிறது.

மூன்றாவது கல்வெட்டு, கோயிலின் தென்மேற்கில் அமைந்திருக்கும் விநாயகர் கருவறையின் பின்புறச்சுவரில் காணப்படுகிறது. இது அதே மாறவர்மன் முதலாம் குலசேகரப்பாண்டியனின் 41-ஆம் ஆட்சியாண்டைச் (கி.பி.1309) சேர்ந்தது[5]. இக்கல்வெட்டில் ஒரு நில விற்பனை பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது செயசிங்க குலகால வளநாட்டுத் தென்னச்சினத்துத் தானவ நாட்டில் உள்ள சோழசிகாமணிபுரம் என்ற கண்டியூரின் மேற்கில் உள்ள சிற்றூரான செங்கமங்கலத்து ஊரார்கள் கீரமங்கலம்அரசமிக்காமல் பெருந்தெருவில் வசித்து வந்த நகரத்தார்களுக்கு சேந்தன்குடிகாடு என அழைக்கப்பட்ட நிலம் விற்பனை செய்யப்பட்டது. அரசுக்குச் செலுத்தவேண்டிய நிலத்தின் மீதான நிலுவை வரியைச் செலுத்துவது பொருத்தே இவ்விற்பனை நிகழ்கின்றது. கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் 40 ஆண்டுகால நிலுவை வரிக்கு (Tax) ஊரார்களே பொறுப்பாளர்கள். எனினும் இந் நிலத்தை வாங்கியவர் நகரத்தார். அதாவது இந்த விற்பனையில் தொடர்புடைய பெரிய அளவிலான நிலப்பரப்பை நகரத்தார் வாங்கும் திறன் பெற்ற பெரும் செல்வந்தர்களாக இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது[6]. தங்களுக்குள் வரிவசூல் செய்யாமலேயே அறப்பணிகள் ஆற்றும் அளவிற்கு அவர்கள் செல்வந்தர்களாக இருந்தனர் என்பதை இக்கல்வெட்டு மறைமுகமாக உணர்த்துகின்றது.

இந்த நிலம் 19-ஆம் நூற்றாண்டின் முடிவு வரை நகரத்தார் வசமே இருந்தது. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சேந்தன்குடி பாளையப்பட்டிற்கும் நகரத்தார்களுக்கும் இடையேயான பதவிக்கும் பணத்திற்குமான போட்டியில் இருதரப்பிலும் பலபேர் கொலையுண்ட சம்பவத்திற்கு சேந்தன்குடிகாடு நிலம் நகரத்தாரால் வாங்கப்பட்டதும் ஒரு காரணமாக இருந்திருக்கின்றது.

நகரத்தார்கள் குடியேறியதால் நகரம் என்ற காரணப் பெயர் பின்னர் தனி ஊராக மாற்றம் பெற்றது. பாளையப்பட்டின் சமீன்தாருக்கும்

நகரத்தார்களுக்கும் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இவ்வூரில் நகரத்தாரின் செல்வாக்கு குன்றியது.

இந்த ஆய்வின் மூலம், கடல் கடந்து வியாபாரம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட வணிகக் குழுக்களான நானாதேசத்தாரும், நகரத்தாரும் சமூகப் பணிகளாக பல அறசெயல்களையும் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. அந்த வகையில கீரமங்கலம் மெய்நின்ற நாதர் கோயிலின் வழிபாட்டிற்கும், பூசை பணிகளுக்கும் வழிவகை செய்தனர். மேலும் இதுபோன்ற அறப்பணிகளுக்கான செலவை ஈடு செய்ய வியாபாரப் பொருட்களின மீது தாங்களாகவே வரிவிதிப்பு செய்து கொண்ட நிகழ்ச்சி கீரமங்கலம் ஒரு விற்பனைச் சந்தையாக அந்தக் காலத்தில் இருந்தது (இன்றும் இருக்கின்றது) என்பதையும் கருத்தில் கொள்வதாக உள்ளது. இதுபோன்ற வணிகக் குழுக்களின் சமூகப் பணி பற்றிய கல்வெட்டுக்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் கிடைத்திருக்கின்றன. அதேபோல வணிகக் குழுக்கள் வட்டார சமூக நலத்தின் மீது அக்கறையுடன் செயலாற்றி வந்திருப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 *க.ஆ.அ.* 119/1935-36

2 *க.ஆ.அ.* 125/1935-36

3 *தினமணி*, 16 நவம்பர், 1998.

4 *பு.ச.க.* 61

5 *க.ஆ.அ.* 124/1935-36

6 இந்த நிலம் 19-ஆம் நூற்றாண்டின் முடிவு வரை நகரத்தார் வசமே இருந்தது. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சேந்தன்குடி பாளையப்பட்டிற்கும் நகரத்தார்களுக்கும் இடையேயான பதவிக்கும் பணத்திற்குமான போட்டியில் இருதரப்பிலும் பலபேர் கொலையுண்ட சம்பவத்திற்கு சேந்தன்குடிகாடு நிலம் நகரத்தாரால் வாங்கப்பட்டதும் ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. நகரத்தார்கள் குடியேறியதால் நகரம் என்ற காரணப் பெயர் ஏற்பட்டு பின்னர் தனி ஊராக மாற்றம் பெற்றது. பாளையப்பட்டின் சமீன்தாருக்கும் நகரத்தார்களுக்கும் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இவ்வூரில் நகரத்தாரின் செல்வாக்குக் குன்றியது.

# 13. முத்து வணிகர்கள்

**ந.அதியமான்**
தஞ்சாவூர்

சங்க காலத்திற்கு முன்பிருந்தே மன்னார் வளைகுடாவில் எடுக்கப் பெற்ற முத்துக்கள் வட இந்தியா மற்றும் கிரேக்க, ரோமானிய நாடுகளில் புகழ்பெற்று விளங்கின. இதற்கு மெகஸ்தனிஸ் முதலான வெளிநாட்டவர் குறிப்புகள், இலக்கியங்கள், வடமொழி நூலான *அர்த்தசாஸ்திரம்*, பாளி மொழி நூலான *மகாவம்சம்* போன்றவை சான்று தருகின்றன. சங்க இலக்கியங்கள் பாண்டிய நாட்டை ஒட்டிய கடல் பகுதியில் முத்துக்குளித்தல் பற்றியும், இத்தொழில் புரிந்த பரதவர்கள் பற்றியும் மிகுந்து குறிக்கின்றன. அறுபதுகள் (1960-69) வரை மன்னார் வளைகுடாவில் முத்துக்குளித்தல் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி செயற்கையாக முத்துச்சிப்பி வளர்க்கும் தொழில்நுட்பம் இந்தியாவிலும், பிறநாடுகளிலும் சிறப்பாக ஜப்பானிலும் வளர்ந்த காரணத்தினால் மரபுவழி முத்துக்குளித்தல் தற்போது நடைபெறுவதில்லை.

தமிழகக் கடற்பகுதியில் முத்துக்குளித்தலின் வரலாறு[1], முத்துக்குளிக்கும் தொழில்நுட்பம்[2], ஆளுவோர்[3] குறித்த ஆய்வுகள் ஏற்கெனவே செய்யப்பெற்றுள்ளன. எனினும், முத்து வணிகர்கள் பற்றி தனித்த ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அம்முயற்சியை இக்கட்டுரை மேற்கொள்ளுகிறது.

இக்கட்டுரைக்குச் சான்றுகளாக சங்க இலக்கியங்கள், வெளிநாட்டவரின் பயணக்குறிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்திய விடுதலைக்கு முன்னர் இலங்கையிலும் இந்தியக் கடற்பகுதியான மன்னார் வளைகுடாவிலும் முத்தெடுத்தல் தொழிலில் ஈடுபட்டோர், இரு நாடுகளிலும் வாழ்ந்த பரதவர்கள் ஆவர். மேலும் இலங்கைப் பகுதியில் முத்துக்குளித்தல் நடைபெறும்போது இந்தியக் கடற்பகுதியில் நடைபெறாது. அதுபோல் இந்தியப் பகுதியில் முத்துக்குளித்தல் நடைபெறும்போது இலங்கைப் பகுதியில் நடைபெறாது. எனவே, இருபகுதியிலும் வாழ்ந்தோர் இத்தொழிலில் ஒன்றாக ஈடுபட்டனர்.

ஆகையால், இலங்கைப் பகுதியில் நடைபெற்ற முத்துக்குளித்தல் பற்றிய சான்றுகளும் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் முத்தெடுத்தல் குறித்த செய்திகள் அதிகம் காணப்பட்டாலும் முத்து வணிகம் செய்தோரைப்பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. ஆனால் கி.மு.2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டில் முத்து வணிகரைப் பற்றிய குறிப்பு உள்ளதாகக் கருதலாம். கல்வெட்டில் உள்ள,

வெள்அறைய் நிகமது

காவிதிஇய் காழிதிக அந்தை

என்ற வரிகளில் 'காழ்' என்பதை முத்து என்றும் 'அதிக' என்பதை கண்காணிப்பாளர் (அதிகாரி) என்றும் ஐராவதம் மகாதேவன் வெள்ளறையைச் சார்ந்த வணிகனான முத்துக்குளித்தலின் கண்காணிப்பாளனைக் குறிப்பதாகக் கொள்கிறார்[4].

கீழக்கரையான நினைத்ததை முடித்தான்பட்டினத்தில் 11-ஆம் நூற்றாண்டு வரை பதினெண்விசையத்து திசையாயிரத்து ஐநூற்றுவர் முத்துவணிகத்தில் ஈடுபட்டு அவற்றின் வருமானத்தில் ஒரு பகுதியை அங்குள்ள கோயிலுக்கு அளித்துள்ளனர்[5]. பண்டைய போசள நாட்டின் மையப்பகுதியில் (தற்போதைய கர்நாடக மாநிலம்) அரிசிக்கெரே (Arsikere) என்னுமிடத்திலுள்ள 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெட்டப்பட்ட கல்வெட்டில் 'சட்டி செட்டி' என்னும் பெயருடைய ஐயவொளே வணிகக்குழுவின் வணிகர் முத்து, குதிரை, யானை ஆகியனவற்றை வணிகம் செய்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது[6]. 13-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்கு வருகைபுரிந்த மார்கோபோலோ (1260-1300) தனது குறிப்பில் காயல் துறைமுகப்பகுதியில் நடைபெற்ற முத்துக்குளித்தலின் போது வணிகர்கள் பல குழுக்களாகப் பிரிந்து, முத்துக்குளிப்போரை வாடகைக்கு அமர்த்தி, சிப்பிகளை வெளிக்கொணர்ந்தனர் எனக் கூறியுள்ளார்[7]. அவ்வாறெனில் எடுத்த முத்துக்களின் ஒரு பகுதியை அரசுக்கு அளித்து பிறவற்றை வணிகக் குழுக்கள் வணிக நோக்கிற்காக எடுத்துச் சென்றிருத்தல் வேண்டும். ஆனால் எவ்வகை வணிகக் குழுக்கள் முத்துக்களை வணிகம் செய்தன என்பது குறிப்பிடப்படவில்லை. சீனப்பயணி வாங்-த-யுவான் (கி.பி.1349) தமது குறிப்பில் மன்னார் வளைகுடாவில் எடுக்கப்பட்ட முத்துக்கள்

சல்லடைகளில் அளவுவாரியாகப் பிரிக்கப்பட்டதாகவும். அரசு அலுவலர்கள் இம்முத்துக்களுக்கு வரிவிதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்[8].

1518-ஆம் ஆண்டு தூத்துக்குடிப் பகுதிக்கு வருகைபுரிந்த தூயர்த் பார்போசா (Duarte Barbosa) காயல் பகுதி முத்துக்குளித்தலில் 'செட்டி' எனப்படும் இந்து சமய வணிகர்களும், இசுலாமிய வணிகர்களும் வணிகத்தில் பங்கு வகித்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்[9]. சீசர் ஃபிரடெரிக் (Caesar Frederick, கி.பி.1563-1581) தமது குறிப்பில் 'செட்டி' (Chitti) என்னும் சான்றோர் (learned men) முத்துக்களை சல்லடைகளைக் கொண்டு பிரித்து எடை, அழகு, திடம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு நான்கு வகைகளாகப் பிரித்ததாகக் குறிப்பிடுகிறார்[10]. இம்முத்துக்களை விலைக்கு வாங்க பல நாடுகளிலிருந்து வணிகர்கள் அங்குக் கூடியதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, முத்துக்களைத் தரம் பிரிக்கும் செயலையும், வணிகத்தையும் இக்குழுக்களே செய்திருக்க வேண்டும். பெட்ரோ தெய்செய்ரா (Pedro Teixiera கி.பி.1586) என்பாரும் தூத்துக்குடிப் பகுதியில் முத்துக்களை வாங்க வணிகர்கள் பல பகுதியிலிருந்து கூடியதைக் குறிப்பிட்டுள்ளார்[11]. தேவர்னியர் (கி.பி. 1631-1668) மன்னர் வளைகுடா மற்றும் பாரசீக வளைகுடாவில் நடைபெற்ற முத்துக்குளித்தல் நுட்பத்தை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்[12]. இவர் கோவாவிற்கு வருகை புரிந்தபோது அங்கு இரு பகுதியிலுமிருந்து வந்த முத்துக்கள் விற்பனை செய்யப்பட்டமையையும் குறித்துள்ளார்.

இலங்கைப் பகுதியின் முத்துக்குளித்தல் பற்றிக் குறிப்பிடும் ரிபைரோ (Rebeiro கி.பி.1685), முத்துக்குளிக்கும் காலங்களில் வணிகர் ஒருவர் ஓர் ஆண்டில் எடுக்கப்படும் முத்துக்களுக்கு ஒட்டுமொத்த குத்தகைக்கு எடுத்து அதனை பிற வணிகர்களுக்கு விற்பனை செய்வர் எனக் கூறியுள்ளார்[13].

ஃபாதர் மார்டின் (Father Martin, 1700) என்னும் யூதப் பாதிரியார் தூத்துக்குடிப் பகுதியில் முத்துக்குளித்தல் தொடங்கும் முன்னரே வணிகர்கள் படகின் உரிமையாளருக்கும், முத்துக் குளிப்போருக்கும் முன்பணம் அளித்து பதிவு செய்வர் எனவும் அவ்வாண்டில் முத்துக்கள் சரிவரக் கிடைக்கவில்லையெனில் வணிகர்கள் மிகுந்த பணத்தை இழந்துவிட வாய்ப்புண்டு எனவும் குறிப்பிடுகிறார்[14]. மேலும் இம்முறையைக் கையாண்டு டச்சுக்காரர்களும்

இவ்வணிகர்களுக்குப் போட்டியாகத் தொழிலில் 1700-ஆம் ஆண்டு நடந்த முத்துக் குளித்தலில் ஈடுபட்டனர் எனத்தெரிகிறது[15].

18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு பாண்டிச்சேரி அரசின் ஆளுநரின் உதவியாளராயிருந்த ஆனந்தரங்கப்பிள்ளையவர்களின் நாட்குறிப்பில் சில செய்திகள் கிடைக்கின்றன. 1749-ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 'சின்னவாண்ட செட்டி' என்பவர் ஆனந்தரங்கப்பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் அவ்வாண்டு முத்துக்குளித்தலில் அதிக அளவிலான முத்துக்கள் கிடைத்தாகக் குறிப்பிட்டுள்ளதை தமது நாட்குறிப்பில் குறித்துள்ளார்[16]. அச்சமயம் பிரெஞ்சு ஆளுநர் முத்துக்களை வாங்க விரும்பியபோது பின்நாட்களில் விலை குறையும் என்பதால் தற்சமயம் முத்துக்கள் வாங்க வேண்டாமென தான் கருத்துரைத்ததாக ஆனந்தரங்கப்பிள்ளை குறித்துள்ளார்[17]. இலங்கை முத்துக்குளித்தலில் கண்காணிப்பாளராய் இருந்த ராபர்ட்செென் என்ற ஆங்கிலேயர் 1799-ஆம் ஆண்டில் நடைபெற்ற முத்துக்குளித்தலை 'குண்டப்ப செட்டி' என்பவர் ஒட்டுமொத்தக் குத்தகைக்கு எடுத்ததாகக் குறிப்பிடுகிறார். மேலும் இவரே பலகாலம் தொடர்ந்து ஆளுமை செலுத்தி வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்[18]. அதே இலங்கைப் பகுதியில் 1865-ஆம் ஆண்டு கண்காணிப்பாளராய் இருந்த வான் (Vane கி.பி.1865), முத்துக்களை விலைக்குப் பெறுவதில் இந்துசமய வணிகர்களான செட்டிகளுக்கும், இசுலாமிய வணிகர்களுக்கும் கடும் போட்டி நிலவியதைக் குறித்துள்ளார்[19].

மேற்கண்ட சான்றுகளினடிப்படையில் முத்துக்களை வணிகம் செய்தோரைப்பற்றி பின்வரும் முடிவுகளை எட்டலாம். முத்துக்குளிக்கும் தொழிலில் ஈடுபட்டோர் மற்றும் அப்பகுதியை ஆட்சி செய்தோர் இவ்வணிகத்தை மேற்கொள்ளவில்லை. முத்துக்கள் வெளிக்கொணரப் பட்ட பின் அவற்றை விலைக்குப் பெற்று பிற இடங்களில் வணிகம் செய்வதை வணிகக் குழுக்களே மேற்கொண்டிருந்தன. கீழக்கரை மற்றும் கர்நாடக மாநிலம் அரிசிக்கெரே கல்வெட்டுக்கள் ஐநூற்றுவர் (ஐநூற்றுவர்>ஐயவொளெ>அய்யப்பொழில்) அல்லது ஐயவொளெ வணிகக் குழுவைச் சேர்ந்த வணிகர்கள் முத்து வணிகம் மேற்கொண்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

முத்துக்களை மட்டும் வணிகப் பொருளாகக் கொண்டிருந்த குழுக்கள் இருந்திருக்கமுடியாது. உள்நாட்டில் மட்டுமன்றி பிற நாடுகளுக்கும் இவை எடுத்துச் செல்லப்பட்டு வணிகம் மேற்கொள்ளப்பட்டதால் இவற்றை கடல் கடந்து வணிகம் செய்யும் குழுக்களே மேற்கொண்டிருத்தல் வேண்டும். இம்முத்துக்களை வெளிக் கொணர்ந்த பின்னர் இதை வாங்குவதற்கு வணிகர்களிடையே போட்டி இருந்தமையை சான்றுகள் வாயிலாக நன்கு அறிய முடிகிறது. இடைக்காலத்தில் இந்தியக் கடற்கரைப் பகுதியில் குடியேறிய அரேபியாவைச் சார்ந்த இசுலாமியரும் இப்போட்டியில் ஈடுபட்டனர் என்பதையும் அறியலாம்..

**அடிக்குறிப்புக்கள்**

---

[1] Arunachalam, S., 1952, *The History of the Pearl Fishery of the Tamil Coast*, Annamalai University Historical Series No. 10, Annamalai Nagar.

[2] Athiyaman, N., 2000, *Pearl and Chank fishing of South Indian Coast- A Histographic and Ethnographic Perspective*, Tamil University, Thanjavur.

[3] ந.அதியமான், 1998, 'முத்துக் குளிப்போரும் ஆள்வோரும்'., *வரலாற்றுக் கலம்பகம்*, பேராசிரியர் செ.இராசு மணிவிழா ஆய்வுக்கோவை, மனோபதிப்பகம், தஞ்சாவூர், பக்.143-149.

[4] Mahadevan, I., 2003, *Early Tamil Epigraphy: From the Earliest Times to the Sixth Century AD*, Cre-A, Chennai. p.122.

[5] *தெ.இ.க*, 12/396

[6] Meera Abraham, 1988, *Two Medieval Merchant Guilds of South India*, Manohar Publications, New Delhi.p.173.

[7] Yule, H. and Cordier, H., 1993, *The Book of Ser Marco Polo*, Vol.2, Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., New Delhi.pp.331-332.

[8] Rockhill, W.W., 1915, T'OUNG PAO: Notes on the Relations and Trade of China with Eastern Archipelago and the Coasts of the Indian Ocean during the Fourteenth

Century, Part II, LIBRAIRE ET IMPRIMERIE, CI-DEVANT, E.J. BRILL LEIDE.p.386.

[9] Dames, M.L.(ed.), 1967, *The Book of Duarte Barbosa*, Vol. I & II, Kraus Reprint Limited, Nendeld. pp.I-81, II-116.

[10] Caldwell, B.R., 1982, *A History of Tinnevelly*, Asian Educational Services, New Delhi.pp.73-74.

[11] Sinclair, W.F. and Fergusson, D., 1967, *The Travels of Pedro Teixeira*, Kraus Reprint Limited, Nendeld.p.179

[12] Ball, V. and Crooke, W., 1925, *Travels in India by Jean-Baptise Tavernier*, Oxford University Press, London.

[13] Pieris, P.E.(ed.), 1909, *Ribeiro's History of Ceilao*, The Colombo Apothecaries Co. Ltd. Printers, Colombo. p.167.

[14] Hornell, J., 1922, "The Indian Pearl Fishery of Gulf of Mannar and Palk Bay", *Madras Fisheries Bureau Bulletin*, Vol XVI, Madras.p.32.

[15] Sathyanatha Aiyar, R., 1924, *History of the Nayaks of Madura*, Humphrey Milford, Oxford University Press.p.303.

[16] ஞானதியாகு (ப,ஆ.), 1949, *ஆனந்தரங்கம் பிள்ளையவர்களின் சொஸ்த லிகிதக் குறிப்பு, பாகம்.2*, சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸ், பாண்டிச்சேரி, ப.22.

[17] *மேலது*. ப.55.

[18] Steuart, J., 1843, *Account of The Pearl Fisheries of Ceylon*, COTTA, Church Mission Press.p.83.

[19] Vane, G. 1865 "Pearl Fisheries in Ceylon & C.", *Selections from the Records of Bombay Government No. LXXXVI New Series*, Educations Society's Press. p.17.

[20] Hornell, J., 1922, "The Indian Pearl Fishery of Gulf of Mannar and Palk Bay", *Madras Fisheries Bureau Bulletin*, Vol XVI, Madras.

# 14. சேதுபதிகளின் கடல்சார் வணிகம்

சி.கே.சிவப்பிரகாசம்
பூண்டி

தமிழகத்தின் தவிர்க்க முடியாத கடல் தொடர்பு இயற்கை அளித்த நன்கொடையாகும். அதன் கடல்சார் வரலாறு தமிழரின் பொருளாதார வாழ்வுடன் பிணைந்ததாகும். சங்க காலம் முதற்கொண்டு தமிழக மன்னர்களும் மக்களும் கொண்டிருந்த கடல்சார் தொடர்புகள் அவர்தம் வாழ்விற்கும் வளத்திற்கும் வழி வகுத்ததோடு கடல் கடந்த தமிழ்ப் பண்பாட்டுப் பரவலுக்கும் வழிகோலின. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதிகளின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கடல்சார் வணிக வரலாற்றினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சேதுபதிகள் மறவர் நாடு எனப்படும் இராமநாதபுரம் அரசினை 1604-ஆம் ஆண்டு முதல் 1795-ஆம் ஆண்டு வரை அரசோச்சினர். இந்நாட்டின் கடற்பகுதி சேது கடற்கரை மற்றும் 'முத்துக் கடற்கரை' எனப்படும். இப்பகுதி பாக் ஜலசந்தியில் சுந்தரபாண்டியப்பட்டினம் முதற்கொண்டு மன்னார் வளைகுடாவின் கன்னிராசபுரம் வரையிலான நீண்ட கடற்கரையைப் பெற்றதாகும்[1].

17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சேதுபதி மன்னர்களின் கவனம் வணிகத்தில் அதிகமாக ஈடுபடவில்லை. தங்களது அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் சூழலிலேயே அம்மன்னர்கள் இருந்தனர். டச்சுக்காரர்கள் போன்ற அயல் நாட்டவர்கள் இராமநாதபுரம் பகுதியில் வணிகத்தில் ஈடுபட்டாலும், தொடக்கத்தில் அது அப்பகுதியின் வளத்திற்கு வழிசேர்க்கவில்லை. ஆனால் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டதெனலாம். ஏனெனில் சேதுபதி மன்னர்களின் வளர்ச்சியுற்ற அரசியல் அதிகாரமும் செல்வாக்கும் வணிக வளர்ச்சிக்கு வழிகோலியது எனலாம்.

திருமலை இரகுநாத சேதுபதி (1647-1672) மற்றும் கிழவன் சேதுபதி என்ற இரகுநாத சேதுபதி (1674-1710) ஆகியோரின்

நன்முயற்சியால் மறவர் நாட்டில் கடல்சார் வணிகம் சிறப்புற்றது. 'முத்துக் குளித்தலைப் பாதுகாப்பவன்' என்ற பட்டத்தைத் திருமலை நாயக்கர் மூலமாகப் பெற்ற திருமலை இரகுநாத சேதுபதி கடல்சார் வணிகத்தை சோழமண்டலம், இலங்கை ஆகியவற்றுடன் மட்டுமல்லாமல் மலபார் மற்றும் வங்காளம் ஆகிய பகுதிகளுடனும் கொண்டிருந்தார். கிழவன் சேதுபதி காலம் முதற்கொண்டு ஐரோப்பிய வணிகர்களுடனான தொடர்பு பெருகிற்று. இம்மன்னன் 1684 மற்றும் 1693-ஆம் ஆண்டுகளில் டச்சுக்காரர்களுடன் செய்து கொண்ட உடன்பாடுகள் இப்பகுதியின் வணிக வளர்ச்சியின் முக்கியக் கட்டத்தினைக் குறிப்பதாகும். இவ்வுடன்பாடுகள் டச்சுக்காரர்களுக்கு மறவர் நாட்டின் மீதும் மற்றும் பாம்பன் கால்வாய் மீதான வணிக உரிமைகளை அளித்தன[2].

டச்சுக்காரர்களுடனான வணிகத் தொடர்பு மறவர் நாட்டின் பொருளாதார வளத்தினை அதிகரித்தது என்பதில் ஐயமில்லை. தமிழக கடற்கரைப் பகுதிகளில் அயல் நாட்டவர்களின் செல்வாக்கு இலாபகரமான வணிகத்திற்கு வழிகோலியதையும், அதிகளவிலான மக்கள் கடல்சார் வணிகத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததனையும் ஜெசுட் (யூதப்) பாதிரியார்களின் கடிதங்கள் மூலமாக அறிகிறோம்[3].

இராமநாதபுரம் பகுதியின் கடல்சார் வணிகத்தில் ஈடுபட்ட பல்வேறு பிரிவு மக்களில் அரேபிய வணிகர்களின் வழித் தோன்றல்களாகிய இசுலாமியரின் பங்கு முக்கியமானதாகும். 11-12-ஆம் நூற்றாண்டுகளிலேயே தோன்றிய அரேபிய வணிகர்களின் 'அஞ்சுவண்ணம்' எனப்படும் வணிகக்குழு 17-ஆம் நூற்றாண்டளவில் சேது கடற்கரையில் செல்வாக்குப் பெற்ற வணிகக் குழுமமாகத் திகழ்ந்துள்ளது. இக்குழுமத்தின் ஈடுபாட்டால் கிழக்கு மேற்கு நாடுகளுக்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதியானதை ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் சோனகர்களின் அறுபதுக்கும் மேற்பட்ட தறிகள் பரமக்குடியில் செயல்பட்டதனை அறிகிறோம்[4]. இத்தறிகளில் நெய்யப்பட்ட துணிகள் டச்சுக்காரர்களைக் கவர்ந்த முக்கிய வணிகப் பொருளாகும். இவை சேது நாட்டின் உள்நாட்டு வணிக வளர்ச்சியினையும் பெருக்கிற்று.

இக்கால இசுலாமிய வணிகர்களில் ஒரு பிரிவினர் (Labbais) பாய் தொழிலிலும், முத்து மற்றும் சங்குத் தொழில்களிலும் ஈடுபட்டனர். 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த கீழக்கரைக்கும் பர்மியத் துறைமுகங்களுக்குமிடையே வணிகத் தொடர்புகள் இருந்துள்ளன. அதற்கென நாட்டு மரக்கலன்களைப் பயன்படுத்தியுள்ளனர். கிழவன் சேதுபதிக் காலத்தில் வள்ளல் சீதக்காதியும் மற்ற இசுலாமியரும் மறவர் நாட்டின் வணிகம் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கு பாடுபட்டுள்ளனர். அவர்களின் மரக்கலங்கள் கீழக்கரை, பாம்பன், தேவிப்பட்டினம் மற்றும் தொண்டி துறைமுகங்களுக்கு வணிகப் பொருட்களைக் கொண்டிறக்கின.

முத்து இராமலிங்க சேதுபதி (1763-1772, 1782-1795) வங்காளத்துடன் சங்கு வர்த்தகத்தையும், யாழ்ப்பாணத்துடன் அரிசி வர்த்தகத்தையும் கடல்சார் வணிகமாகக் கொண்டிருந்தார். இது தொடர்பாக இசுலாமிய வணிகர்கள் பலருடன் தொடர்புக் கொண்டிருந்தார். மேலும், இம்மன்னர் அரசு ஒப்பந்தத் தறிகளிலிருந்து துணிகளைப் பாண்டிச்சேரி, தரங்கம்பாடி மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு அனுப்பியுள்ளார். இவர் இலங்கையுடனான வணிகத்தினைக் கண்காணிக்க ஒரு பிரதிநிதியை கல்கத்தாவில் நியமித்திருந்தார்[5].

மன்னார் வளைகுடாவின் மீதான உரிமம் பெற்றிருந்த போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் சேதுபதி அரசின் முத்துக் குளிக்கும் தொழிலை ஆதரித்தனர். 17-ஆம் நூற்றாண்டில் அப்பகுதியில் பயணம் மேற்கொண்ட தேவர்னியர் என்னும் இத்தாலியப் பயணி மன்னார் வளைகுடாவில் கிடைத்த முத்துக்களின் தரத்தினைப் புகழ்ந்துள்ளார்[6]. சேது கடற்கரையில் முத்துக்குளிக்கும் தொழிலில் உரிமையைப் பெறுவதற்கு டச்சுக்காரர்கள் விலைமிகு பரிசுகளுடன் சேதுபதி மன்னர்களை அணுகியதைக் குறிக்கும் இராமலிங்க விலாசம் அரண்மனையிலுள்ள ஓவியக்காட்சி அமைகிறது. 1694-ஆம் ஆண்டு உடன்பாட்டின் மூலமாக டச்சுக்காரர்கள் கிழவன் சேதுபதியிடம் மேற்கூறிய உரிமையைப் பெற்றனர். சேதுகடற்கரையின் மீதான சேதுபதி மன்னர்களின் மேலாண்மையும் டச்சுக்காரர்களின் முத்துக்குளிக்கும்

தொழிலின் மீதான உரிமையும் மதுரை அரசின் மேற்கூறப்பட்ட உரிமைகளைக் குறைத்தன[7].

முத்து இராமலிங்க சேதுபதி பிரெஞ்சு மற்றும் டச்சுக்காரர்களுடனான வணிகத் தொடர்பினை நிலைநாட்டிக்கொள்ள சென்னையிலும் ஒரு பிரதிநிதியை நியமித்திருந்தார். அவர் காலத்தில் மறவர் நாட்டு கைத்தறித் துணிகளை டச்சுக்காரர்கள் விலை கொடுத்து வாங்கினர். அவற்றை தேவிப்பட்டினம் துறைமுகம் வழியாகத் தரங்கம்பாடிக்கு அனுப்பி ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்தனர். 18-ஆம் நூற்றாண்டில் போர்டோநோவோ பகோடா எனப்படும் டச்சுக்காசுகள் மறவர் நாட்டில் நாணய மாற்றமாகப் பயன்பட்டன.

இக்காலத்தில் ஏற்றுமதிக்குட்பட்ட பொருட்களில் முக்கியமானவை சங்குகள், உப்பு, கருவாடு, மீன், பருத்தி, தோல், நெல், துணி வகைகள் ஆகும். கம்பளித் துணிகள், கோதுமை, மிளகு, ஏலம், இலவங்கம், இரும்பு, பவளம், மதிப்பு மிக்க கற்கள், தேக்கு, ஈழமரம் ஆகியன இறக்குமதிக்குட்பட்டன.

இக்காலத்தில் சேதுநாட்டின் முக்கியத் துறைமுகங்களாவன: தொண்டி, கீழக்கரை, பெரியபட்டினம், பாம்பன் மற்றும் தேவிப்பட்டினம் ஆகியனவாம். இவற்றில் முக்கியமாகத் தேவிப்பட்டினத்தில் டச்சுக்காரர்களின் வர்த்தகம் தீவிரமாக நடைப்பெற்றது. சேதுபதிகளின் சங்கு வணிகம் இத்துறைமுகத்தில் தான் வெகுவாக நடைபெற்றது. இப்பட்டினத்தில் நடைபெற்ற சங்கு வணிகத்தில் ஒரு பங்கு அங்குள்ள உலகமாதேவிப்பட்டினம் கோயிலுக்கு உரிமமானது[8].

அருன்தொகை மங்கலம், நினைத்ததை முடித்தான் பட்டினம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட கீழக்கரை சேதுநாட்டின் துறைமுகங்களில் பழமையான ஒன்றாகும். இத்துறைமுகத்தில் 16-ஆம் நூற்றாண்டில் பதினெண் விசயத்தார் குழுமம் சிறப்பாகச் செயலாற்றியதை அறிகிறோம். 1675-ஆம் ஆண்டு செப்புப் பட்டயம் ஒன்று இத்துறைமுகத்தினைக் குறிப்பிடுகிறது. கீழக்கரைத் துறைமுகம் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான மகமை உரிமையை அவ்வூரின் மீனாட்சி சொக்கநாதர் கோயிலின் தானிகர் இராமலிங்க குருக்கள் பெற்றிருந்தமையை அப்பட்டயம் குறிப்பிடுகிறது[9]. கீழக்கரையிலுள்ள

தெருக்களின் பெயர்கள் அத்துறைமுகத்தின் தன்மைக்கும், கடல்சார் வணிகத்திற்கும் சான்றுகளாக அமைகின்றன. டச்சுக்காரர்களின் நெசவுத் தொழிற்சாலை பருத்திக்காரத் தெருவில் அமைந்திருந்தது. பன்னாட்டுத்தெரு உள்நாட்டு, அயல்நாட்டுப் பொருட்களின் பண்டகத் தலமாக செயல்பட்டுள்ளது. இத்துறைமுகம் மீன் வணிகத்திற்கும் பெயர் பெற்றதாம். பொதுவாக, இராமநாதபுரம் கடற்கரைகள் சிறிய மரக்கலங்களே செயல்பட ஏதுவாக இருந்தன.

சேதுநாட்டில் கடல்சார் வணிகத்தில் ஈடுபட்ட இசுலாமியர்களிடையேயும், இந்து மன்னர்களாகிய சேதுபதிகளிடையேயும் அவர்தம் மக்களிடையேயும் நல்லுறவும் நல்லுணர்வும் காணப்பட்டன. எடுத்துக்காட்டாக கிழவன் சேதுபதிக்கும், சீதக்காதி மரக்காயருக்கும் இடையிலான உறவு நட்புறவாகும். உமறுப்புலவர் தன்னுடைய கவிதையாகிய சீதக்காதியின் திருமண வாழ்த்தில் சீதக்காதி எவ்வாறு இந்து முறையில் திருமணம் செய்து கொண்டார் என்பதனை விளக்குகிறார்[10]. மேலும் சீதக்காதியின் சமாதியில் இந்துக் கோயிலின் பாணியினைக் காணலாம். சேதுபதிகளின் கடல்சார் வணிகம் அவர்கள் நாட்டில் சமய நல்லிணக்கத்திற்கும் காரணமாக அமைந்தது எனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

---

[1] Sabapathy, P., 1995, *Society Under Setupatis of Ramnad (1604-1795 A.D)*, Ph.D.Thesis Bharathidasan University, p.9.

[2] Arasaratnam, S., 1968, "Commercial Policies of the Setupatis of Ramanathapuram (1660 - 1690)", *Abstraction of Papers of the International Conference on Tamil Studies*, Madras.

[3] Lockman, J., 1743, *Travels of the Jesuits,* Asian Educational Services, New Delhi, (Reprint 1995).Vol.I, p.376. (Letter of Father Martin, 1.6.1700).

[4] *Revenue Consultation*, Vol.182 (A), 12.2.1773. p.862.

[5] *Ibid.*, 62 A (1795), pp.1796-97.

[6] Ball, V. and Crooke, W., 1925, *Travels in India by Jean-Baptise Tavernier*, Oxford University Press, London. Ch.20.

[7] T.Rajaram Row, 1981, *Manual of Ramnad Samasthanam*, Gleghorn Press, Madurai, p.225.

[8] எஸ்.எம். கமால், (ப.ஆ.), 1992, *இராமநாதபுரம் சேதுபதி செப்பேடுகள்*, சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம். செப்பேடு.25.

[9] *க.ஆ.அ.* 348,396/1907

[10] உமறுப் புலவர், *சீதக்காதி திருமண வாழ்த்து*, வரி.333.

# 15. நகரத்தாரும் கடல் வணிகமும்

**நா.வள்ளி**
காரைக்குடி

**நா**ட்டுக்கோட்டைச் செட்டியார்கள் எனப்படும் நகரத்தார்கள் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 75 ஊர்களைப் (முன்பு 96 ஊர்கள்) பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்களுடைய கல்வெட்டுக்கள் 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. சுமார் ஒரு லட்சம் மக்கள் தொகையே கொண்ட சிறுபான்மைச் சமூகத்தினரான இவர்கள் 18,19-ஆம் நூற்றாண்டுகளில் கடல் வணிகத்தில் சிறந்திருந்தனர். இந்தியாவில் ஒரு வலுவான வணிகச் சமூகமாக விளங்கினர்.

**ஐந்நூற்றுவரும் நகரத்தாரும்**

பண்டு, அஞ்சு வண்ணத்தார், மணிக்கிராமத்தார், நானாதேசி திசையாயிரத்து ஐநூற்றுவர் போன்ற வணிகக் குழுக்கள் தமிழகத்தில் சிறந்திருந்தன. அவர்களுள் பல்வேறு திசைகளிலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்த ஐந்நூற்றுவர் (நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர்) வழிவந்தவர்களாகவோ அல்லது அவர்களுள் ஒரு பிரிவினராகவோ நகரத்தார்கள் இருக்க வேண்டும். அதற்கான சான்றுகளும் உள்ளன.

இளையாற்றங்குடி, நேமங்கோயில், இலுப்பைக்குடிக்கோயில், மாத்தூர்க்கோயில், வயிரவன்கோயில், வேலங்குடிக் கோயில், பிள்ளையார்பட்டிக் கோயில், இரணிக்கோயில் என்ற ஒன்பது ஊர்களில் உள்ள சிவன்கோயில்களின் அடிப்படையில் நகரத்தார்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேல் குறிப்பிட்ட கோயில்களுள் பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயிலில் உள்ள பிள்ளையார் பெயர் தேசிகப்பிள்ளையார்[1]. மேலும் இக்குடைவரைக் கோயிலில் உள்ள தூண்களில் வெட்டப்பட்டுள்ள 12-ஆம் நூற்றாண்டுப் பாண்டியர்காலக் கல்வெட்டு ஒன்று, கானநாட்டு காரிக்குடி ஐந்நூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்கள் பிள்ளையார்பட்டியைச் சுற்றியுள்ள (பிள்ளையார் பட்டியின் பழைய பெயர் மருதங்குடி) மருதங்குடி முதலான ஊர்களை விலைக்கு வாங்கி ராஜநாராயணபுரம் என்று பெயரிட்டுக் குடியேறியதைக் குறிக்கிறது. குடியேறிய அவர்களுக்குச் சில வரிகளை வசூலித்துக் கொள்ளும்

உரிமையைப் பாண்டிய மன்னன் வழங்கிய செய்தியை அக்குடைவரையில் உள்ள மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது[2].

மாத்தூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் ஐந்நூற்றீசுவரர் என்பதாகும். சூரைக்குடிக் கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகையில் கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிகநாராயணபுரம் என்றே இன்றளவும் குறிப்பிடுகின்றனர். இச்செய்திகள் எல்லாம் நகரத்தார்களுக்கும், ஐநூற்றுவருக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன.

**ஆங்கிலேயர் ஆட்சியில் நகரத்தாரின் வணிகநிலை**

18-19-ஆம் நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் (பாண்டிய நாட்டில் தங்களுடைய கிராமங்களிலிருந்து புறப்பட்டு) சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், புதுச்சேரி ஆகிய துறைமுக ஊர்களில் நகர விடுதிகள் அமைத்துத் தங்கியிருந்து, அங்கிருந்து கடற்கரை ஓரமாகவே பாய்கட்டிக் கப்பல்களில் இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். பெரும்பாலும் நாகபட்டினத்திலிருந்தே சென்றிருக் கின்றார்கள். கல்கத்தாவிற்கும் கடல் மார்க்கமாகவே சென்றுள்ளனர். அங்கிருந்து பாய்மரக் கப்பல்கள் மூலமாகப் பர்மாவிற்குச் சென்றுள்ளனர்[3].

1800-ஆம் ஆண்டளவில் வணிகத்தின் பொருட்டு வடநாடு சென்ற நகரத்தார்கள் கல்கத்தாவில் நகரவிடுதி அமைத்துத் தங்கியிருந்தனர். அந்த விடுதியிலுள்ள ஒரு தமிழ்க் கல்வெட்டு நகரத்தார்களின் வணிகம் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது. அக்கல்வெட்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

> நீலமா மிடற்றால வாயினான் பாலதாயி
> னார் ஞாலமாள்வரே மங்களம்
> நாட்டுக்கோட்டை தனவைசிய
> நகரத்தார்கள் தொழில் முரை முத
> ல் முதலில் செய்யமுயன்ற துரமுக ஊ
> ர்கள் ஐந்து அதாவது நாகூர் சென்னை
> கல்க்கற்றா காலி பினாங்குமேயாகும்
> இவடத்திற்கு நம்மிட பிள்ளைகள் வந்து
> சக்திவேல் ஸ்தாபித்து தொழில் ஆரம்பி
> த்து நடந்து வருகிறதும் நடந்த வரைஇல் 120

ஆகிரது நாட்டுக்கோட்டை
நகரத்தார் பெரிய வீடு 1921[4].

கல்கத்தாவிலிருந்து அரிசி, நவதானியங்கள், மிளகு, துணிவகைகள் முதலியவற்றைக் கடல்வழியாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். கப்பல் கம்பெனிகள் ஆண்டு இறுதியில் ஏற்றுமதி செய்த பொருட்களுக்குக் கப்பல் கட்டணத்துக்காகச் செலுத்திய தொகைகளில் 100-க்கு 5 சதவிகிதம் திருப்பிக் கொடுத்தன. இவ்வாறு கிடைத்த தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து தர்மத்திற்குச் செலவிடுவதென நகரத்தார்கள் முடிவு செய்தனர். இவ்வகையில் அக்காலத்தில் 25,000 ரூபாய் வரையில் வருவாய் வந்து கொண்டிருந்தது என்றால் நகரத்தார்கள் ஏற்றுமதி செய்த பொருள்களின் மதிப்பீட்டை நம்மால் ஒருவாறு ஊகிக்க முடிகிறது. 1860-ஆம் ஆண்டளவில் நகரத்தார்கள் பம்பாய் சென்றும் வணிகத்தில் ஈடுபட்டனர்.

**கொண்டு விற்றல்**

கொடுக்கல், வாங்கல் எனப்படும் வட்டித் தொழிலில் நகரத்தார்கள் பிற்காலத்தில் ஈடுபட்டாலும் முதலில் அரிசி, மிளகு, போன்ற நவதானியங்கள், பஞ்சு, துணி வகைகள் ஆகியவற்றைக் கொண்டு சென்று விற்றலாகிய வணிகத்திலே ஈடுபட்டிருந்தனர். இதை குறிப்பிடும் 'கொண்டுவிற்கப் போதல்' என்ற சொல் நகரத்தாரிடையே இன்றும் வழக்கிலிருக்கிறது. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள் பல, ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இருந்ததாலும், கடற்பாதுகாப்பு, அந்நியச் செலவாணி, கட்டணவசூலிப்புமுறை ஆகியவை எளிதாக இருந்ததாலும் துணிச்சலுடன் பல்வகை இன்னல்களையும் பொருட்படுத்தாது அயல் நாடுகளுக்குச் சென்று வணிகத் தொழிலில் ஈடுபட்டு அந்தந்த நாடுகளை வளப்படுத்தித் தாங்களும் வளமாக வாழ்ந்தனர். இலங்கை, இந்தோசீனா, மலேயா போன்ற நாடுகளில் தேயிலைத் தோட்டங்களையும் இரப்பர்த் தோட்டங்களையும் உண்டாக்கி அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். மலேயாவில் முதன்முதலாக இரப்பர் பயிரிட்ட இந்தியர் நச்சாந்துபட்டி என்ற ஊரைச்சேர்ந்த பெ.ராம. குடும்பத்தார் என்பது குறிப்பிடத்தக்கது[5].

**பர்மா**

பர்மாவின் செழிப்பிற்கு நகரத்தார்களே காரணம். மண்வளமும் நீர்வளமும் ஏராளமாக இருந்தும் உழைப்பவர்களும்,

உழைப்பவர்களுக்குப் பொருளுதவி செய்பவர்களும் இல்லாத காரணத்தால் பர்மிய நிலங்கள் காடு மேடாகக் கிடந்தன. கல்கத்தாவில் வணிகம் செய்து கொண்டிருந்த நகரத்தார்கள் பாய்மரக் கப்பல்கள் மூலம் பர்மாவிற்குச் சென்று தங்கள் முயற்சியால் அந்நிலங்களைப் பொன்விளையும் பூமியாக்கினர். பர்மா அரிசி உலகச் சந்தையில் முதலிடம் பெற்றது.

கி.பி.1860-இல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிவராமல் சூயஸ்கால்வாய் வழியாக வந்து சென்றன. இதனால் நகரத்தார்கள் அதிகம் பயனடைந்தனர். பர்மாவில் விளைந்த அரிசியை உலகச் சந்தைக்கு எளிதில் எடுத்துச் சென்று விற்க முடிந்தது.

1850-ஆம் ஆண்டு முதல் இரண்டாம் உலகப்போர் ஆசியாவிற்குப் பரவிய 1941-ஆம் ஆண்டு வரை நகரத்தார்கள் வேறெந்த நாட்டையும் விட பர்மாவில்தான் கூடுதலாக முதலீடு செய்தனர். பர்மியத் துறைமுகமான 'மோல்மேன்' என்ற ஊர்தான் நகரத்தார்கள் முதன்முதலில் குடியேறித் தொழில் செய்த ஊராகும். ஆங்கிலேயர் பர்மாவைக் கைப்பற்றுவதற்கு முன்னரே நகரத்தார்கள் இவ்வூருக்குச் சென்றனர். நாளடைவில் பர்மாவில் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவி, தங்கள் கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்தவகையில் செய்து வந்தனர். பெரும்பாலான நிலங்கள் நகரத்தார்களின் உதவியால் வேளாண்மைக்குக் கொண்டுவரப் பெற்றன. பர்மாவில் நகரத்தார் பலருக்கு வீடுகள், எண்ணைக் கேணிகள், மரச்சாலைகள், வயல்கள் போன்றவை உரிமையாக இருந்தன. இரங்கூனில் 'நகரத்தார் ரோடு' என்று ஒரு தெருவிற்குப் பெயர் இருந்திருக்கிறது.

பர்மா தேக்கு உலகப் புகழ்பெற்றது, பர்மாவிலிருந்து செட்டிநாட்டிலுள்ள நகரத்தார்களின் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு கப்பலில் வெளிநாட்டுப் பொருட்களும், தேக்கு மரங்களும், திருவாடானைக்கு அருகிலுள்ள தொண்டியில் வந்திறங்கின[6]. பெரிய தேக்கு மரங்களை, படகுகளில் ஐராவதி ஆற்றின் மூலம் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து, தேக்கு மரங்களை உறுதியான கயிறுகள் அல்லது சங்கிலிகளால் கட்டி கப்பலோடு பிணைத்து, நீரில் மிதக்க விட்டு விடுவார்கள். கப்பல்கள் தொண்டிக்கு வந்தவுடன் யானைகளின் உதவியுடன் கரைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து மாட்டு வண்டிகள் மூலம் தேவக்கோட்டை வழியாக அவரவர் ஊர்களுக்கு

எடுத்துச் செல்வர். இவ்வாறு வந்த தேக்குமரங்கள் கொண்டு கட்டப்பட்டவைதான் நகரத்தார்களது அரண்மனை போன்ற வீடுகள்.

அக்காலத்திலேயே பர்மாவில் மட்டும் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேலும், மலாய் நாட்டிலும் பிறநாடுகளிலும் 100 கோடிக்கு மேலும் நகரத்தார் தொழில் நடத்தினர் என்று வள்ளல் அழகப்பர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்[7].

இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பிறகு நகரத்தார்கள் பர்மாவை விட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் பெறாமல் பர்மாவில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை நகரத்தார்கள் விட்டுவிட்டு ஒரு கட்டத்தில் நடந்தே இந்தியா திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. நகரத்தார் பலருக்கும் பர்மாவில் சொத்து இருந்ததால் இச்சூழ்நிலையில் நகரத்தார் பொருளாதாரத்தில் ஒரு பெரிய சரிவு ஏற்பட்டது. இன்றும் நகரத்தாரின் சொத்துக்கள் பர்மாவில் ஏராளமாக உள்ளன.

**இலங்கை**

கொழும்பில் நகரத்தார் வணிகம் செய்யும் வீதிக்குச் 'செட்டியார் தெரு' என்றே பெயர். சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக அரிசி விற்பனை, நகை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் ஆகியவை இப்பகுதிகளில் சிறந்து விளங்கியதால் இலங்கையின் பொருளாதாரத்திற்குச் செட்டியார் தெருவே அச்சாணியாக இருந்து வந்திருக்கிறது. 1914-ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கும் வரை நகரத்தார்கள் யாழ்ப்பாணத்தில் தொழில் செய்துள்ளனர். இரங்கூன், ஹூரிக்கேன், நாகபட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பல கப்பல்களில் அரிசி வரவழைத்து வியாபாரம் செய்துள்ளனர்[8].

**வங்காள தேசம்**

இங்குள்ள ஹூரிக்கேன் நகரம் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அரிசி வியாபாரத்திலும் கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் புகழ் பெற்றது. தஞ்சாவூர் அரிசி, பர்மிய அரிசி ஆகியவை இங்கு வரவழைக்கப்பெற்று இங்கிருந்து பற்றாக்குறைப் பகுதிகளான இன்றைய மேற்குவங்காளம், வங்காளதேசம் மற்றும் வடஇந்தியப் பகுதிகளுக்கும் இலங்கைக்கும் தனிக் கப்பல்களில் அனுப்பப்பட்டன. இந்த வியாபாரத்தில் நகரத்தார் கடைகள் முப்பதுக்கும் மேல் ஈடுபட்டன. எல்லாக் கடைகளும் தேவைப்பட்டபோது தனிக் கப்பல்களை வாடகைக்கு

எடுத்துக் கொண்டன. சில கடைகளுக்குச் சொந்தக் கப்பல்களே இருந்தன[9].

**மலேசியா**

மலேசியா பணம் கொழிக்கும் நாடாக இருப்பதற்கு அடிப்படை அந்நாட்டிலுள்ள இரப்பர் என்னும் மூலதனமேயாகும். நகரத்தார்கள் அங்கு தாங்களே இரப்பர் பயிரிட்டதோடல்லாமல் இரப்பர் தோட்டங்களில் பயிர் செய்பவர்களுக்கு, கடனாக பொருளுதவியும் செய்தனர். மலேசியா சுல்தான்களுக்கு கடன் கொடுத்து உதவிய சமூகம் நகரத்தார் சமூகமாகும்[10].

**இந்தோசீனா**

இந்நாடு பிரெஞ்சு ஆட்சியில் சில நூற்றாண்டுகள் இருந்தது. இந்நாட்டின் தலைநகரம் செய்கோன். நகரத்தார்களுக்கும் செய்கோனுக்கும் வணிகத் தொடர்புகள் அதிகம்[11].

**இந்தோனேஷியா**

இந்நாட்டோடு பவளம், முத்து முதலிய வணிகங்களில் நகரத்தார்கள் ஈடுபட்டிருந்தனர். இப்பொருள்களைக் குறிக்க பவளம், முத்து என்ற தமிழ்ச் சொற்களே இன்றளவும் அந்நாட்டில் வழங்கி வருகின்றன என்கிறார் அறிஞர் சோமலெ. இந்தோனேஷியத் தீவுகளில் முக்கியமான சுமத்திரா தீவின் தலைநகரமான மைடான்டில்லியும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் நகரத்தார்கள் தொழில் செய்தனர்[12].

**மொரிஷியஸ்**

19-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்தத் தீவின் தலைநகரான போர்ட் லூயி என்னும் நகரில் நகரத்தார் வணிகம் செய்தனர்[13].

**நிறைவுரை**

18-19-ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்று பெரும் பொருள் ஈட்டிய நகரத்தார்கள், தமிழகத்திலும், வடஇந்தியாவிலும், தாங்கள் சென்ற அயல்நாடுகளிலும் கோயில் திருப்பணிகளையும், மற்றும் பலவிதமான அறப்பணிகளையும் செய்தனர். அயல் நாடுகளிலும் முருகனுக்கும் மற்ற கடவுளர்க்கும் கோயில்கள் எழுப்பிய நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும் திராவிடச் சிற்பக்கலை மரபையும் கணிசமாக வளர்த்தனர். செட்டிநாட்டில் ஒவ்வொரு நகரத்தார் வீடுகளுக்கும் ஒவ்வொரு பட்டப்பெயர் உண்டு.

திராவிடச் சிற்பக்கலை மரபையும் கணிசமாக வளர்த்தனர். செட்டிநாட்டில் ஒவ்வொரு நகரத்தார் வீடுகளுக்கும் ஒவ்வொரு பட்டப்பெயர் உண்டு.

அவ்வீட்டிலுள்ளோர் செய்த அறப்பணிகள் காரணமாகவோ அல்லது அவர்கள் தொழில் செய்யச் சென்ற நாடுகள், ஊர்களின் அடிப்படையிலோ அல்லது அவர்களது பண்புகள் அடிப்படையிலோ அப்பட்டப்பெயர்கள் அமைந்திருக்கும். அந்த வகையில் கீழே குறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள் நகரத்தார்களுக்கு அயல்நாட்டோடு உள்ள தொடர்பை விளக்குவதாக உள்ளதைக் காணலாம்.

(இலங்கை) மாந்தளை அருணாசலம் செட்டியார்
(மலேசியா) ஈப்போ நாராயணன் செட்டியார்
(மலேசியா) தாப்பா நாச்சியப்பச் செட்டியார்
(இலங்கை) மாதம்பையார் வீடு
கானப்பூரார் வீடு
லண்டன் வீடு
(இலங்கை) கொழும்பு சொக்கலிங்கம் செட்டியார்
(பர்மா) பாசின் பழனியப்பச் செட்டியார்
(வங்காள தேசம்) அரிக்கன் பழனியப்பச் செட்டியார்
(மலேசியா) கிட்டா நாராயணன் செட்டியார்
(இலங்கை) காலி வீடு

அதுமட்டுமல்ல எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார்களோ அந்தந்த நாடுகளில் உள்ள சிறப்பான பொருட்களைச் செட்டி நாட்டிற்குக் கொண்டுவந்து தங்கள் பெண்களுக்குச் சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. அப்பொருட்களைப் பயன்படுத்தும்போது எந்தெந்த நாட்டிலிருந்து ஊரிலிருந்து அப்பொருட்கள் வந்தனவோ, அந்தந்த நாட்டின், ஊரின் பெயரையும் சேர்த்தே அப்பொருளின் பெயரைக் குறிப்பிடும் முறை இன்றளவும் காணப்படுகிறது. சான்றாகக் கம்போஜா மரவை, மோல்மேன் தட்டு, அரிக்கன்லைட்டு, கொழும்புக் கேத்தல், மாந்தளைக் கரண்டி, பர்மாப்பாய், பர்மாத்தடுக்கு, பர்மாத்தேக்கு, செய்கோன் மரவை, பொங்கி மரவை, ஜப்பான் டைல்ஸ், லண்டன் ஓடு போன்றன.

வங்கிகள் செய்து வரும் பணிகள் பலவற்றை நீண்ட காலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்து வந்த நகரத்தார்கள் வங்கித் துறையின் முன்னோடிகளாகவும் விளங்கினர். மக்கள் ஓரிடத்திலிருந்து,

மற்றோரிடத்திற்குப் பணத்தை எளிதாக அனுப்ப, பெற்றுக்கொள்ள உதவும். வரைவோலை (Demand Draft) எனப்படும் உண்டியல் முறையை அறிமுகப்படுத்தியவர்கள் நகரத்தார்கள். எனவே, நகரத்தார்களின் கடல் வணிக வரலாறு, தமிழக, இந்திய, உலக வணிக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 பிள்ளையார்பட்டிக் குடைவரைக்கோயிலில் திருவீங்கைக்குடி மகாதேவர் கருவறைத் திருவாயிலுக்கு இடதுபக்கச் சுவரில் உள்ளது. திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியனின் பதினொன்றாவதின் எதிராமாண்டுக் கல்வெட்டு (கி.பி.1220), சா.கணேசன், *பிள்ளையார் பட்டி தலவரலாறு'* ,பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை வெளியீடு. 1983, பக்.26–7.

2 சா.கணேசன், 1983, *பிள்ளையார்பட்டி தலவரலாறு*, பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை வெளியீடு பக்.36-37. & திருவீங்கைக்குடி மகாதேவர் கருவறை வாயிலுக்கு வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு; காலம் 1284; எம் மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர பாண்டியன் கல்வெட்டு.

3 கட்டுரையாசிரியர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பெரியவர்கள் சொல்லக் கேட்டது.

4 *ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்* (1863-1963), பதிப்பாசிரியர் சோமலே,

5 பெ.ராம. குடும்பத்திற்குச் சொந்தமான பேரையூர் அம்மாள்குளம், ஸ்ரீபொய்யாத விநாயகர் மஹா கும்பாபிஷேக மலர் - 31-1-1975, மலேசியாவில் 'மலேஸியா மொத்தேகா' போன்ற பல நாளிதழ்களில் இச்செய்தி வெளியாகியுள்ளது.

6 பர்மாவிலிருந்து தேக்குமரங்களை தமிழகத்திற்கு கொண்டுவந்து கடை வைத்திருந்த கண்டனூரைச் சேர்ந்த 96 வயதினரான சொக்குச் செட்டியார் கூறியது.

7 சோமலெ, 1979, *அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்*, சோமு நூலகம்.

8 *மேலது.*

9 *மேலது.*

# 16. பெருவழிகள்

**இல.தியாகராஜன்**
அரியலூர்

**ப**ண்டைக்காலத்தில் வணிகப் போக்குவரத்துக்குப் பயன்பட்ட நெடுஞ்சாலைகள் பெருவழிகள் என அழைக்கப்பட்டன. சங்க இலக்கியங்கள், பல்லவர், சோழர் மற்றும் பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் வணிகர்கள் சென்ற பெருவழிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன[1]. வெள்ளாறு-கொள்ளிடம் ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இன்றைய அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர், ஆத்தூர், திட்டக்குடி, காட்டுமன்னார்குடி, துறையூர், லால்குடி, திருவையாறு ஆகிய வட்டங்கள் அடங்கியுள்ளன (படம்.1). இப்பகுதியில் 101 பிரம்மதேய ஊர்கள் உட்பட 44 வணிக நகரங்கள் இருந்துள்ளன[2].

இப்பகுதியில் கிடைக்கும் சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் நகரங்கள் மற்றும் பிரம்மதேய ஊர்கள் வழியாகச் சென்ற பெருவழிகள் பற்றிக் கூறுகின்றன. இத்தகைய பெருவழிகளைப் பற்றி முழுமையான ஆய்வு இதுவரை செய்யப்படவில்லை. ஆதலால், அவை பற்றி ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

**கொங்கப் பெருவழி**

இப்பெருவழியின் பெயரிலிருந்து இது கொங்கு நாட்டுக்குச் சென்ற நெடுஞ்சாலை என்று தெரிகிறது. திருவையாறு வட்டம் தில்லைஸ்தானத்தில் உள்ள முதலாம் பராந்தகனின் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.915) இப்பெருவழி பற்றிக் கூறுகிறது[3]. தில்லைஸ்தானத்தின் ஒரு பகுதி ஆதித்தபுரம் என்ற பெயரில் வணிக நகரமாகத் திகழ்ந்தது எனவும் மணிக்கிராமத்தார் என்ற வணிகக் குழுவினர் இங்குத் தங்கி வணிகம் செய்தனர் என்றும் இங்குள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன[4].

ஆதித்தபுரம் என்ற பெயர் இந்நகரம் முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் உருப்பெற்றது என்பதைக் காட்டுகிறது. இம்மன்னன் கொங்கு நாட்டை வென்று, கொண்டு வந்த பொன்னால் தில்லைக்குப் பொன்

வேய்ந்தான் என்பது வரலாறு[5]. இக்குறிப்புக்களிலிருந்து ஆதித்தன் காலம் முதல் தஞ்சையிலிருந்து தில்லைஸ்தானம் வழியாக கொங்குவரை செல்லும் பெருவழி இருந்தது என்பது புலனாகிறது. இப்பெருவழி பிரம்மதேய ஊரான அன்பில் வழியாகச் சென்றது பற்றிய மற்றொரு குறிப்பும் வீர இராமநாதன் கல்வெட்டில் (கி.பி.1262) கிடைக்கிறது[6]. இதிலிருந்து இப்பெருவழி பழைய பெயருடன் கி.பி.13-ஆம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்தது எனவும் அறிகிறோம்.

## அலையூர் எல்லைப் பெருவழி

லால்குடி வட்டம் திண்ணக்குளம் ஊரில் உள்ள முதலாம் குலோத்துங்கனின் கி.பி.1119-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு 'அலையூர் எல்லைப்பெருவழி' எனும் நெடுஞ்சாலை பற்றிக் குறிப்பிடுகிறது[7]. சோழர் காலத்தில் திண்ணக்குளம் ஊர் திருநெற்குன்றம் என்ற பெயரில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பகுதியாக இருந்தது எனவும் இங்கு வீரராஜேந்திரபுரம் என்ற பெயரில் வணிகர்கள் வாழ்ந்த நகரப்பகுதி இருந்தது எனவும் கல்வெட்டுக்களிலிருந்து அறிகிறோம்[8]. இதிலிருந்து இப்பெருவழி இந்நகரத்திலிருந்து அலையூர் நோக்கிச் சென்றது எனத்தெரிகிறது. அலையூர் பிரம்மதேயமாக விளங்கிய ஊராகும்[9]. இது தற்பொழுது விஷ்ணாம்பேட்டை என்ற பெயரில் விளங்குகிறது[10].

## குலோத்துங்கப் பெருவழி

அரியலூர் வட்டம் திருமழப்பாடியில் கி.பி.1180,1212,1228 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுக்கள் குலோத்துங்கப்பெருவழி பற்றிக் கூறுகின்றன.[11] திருமழப்பாடியையொட்டிக் கண்டராதித்தம் என்ற ஊர் உள்ளது. இது சோழர் காலத்தில் கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் பிரம்மதேயமாக விளங்கிய ஊராகும். இவ்வூரிலிந்த நிலங்களைப் பற்றிக் கூறும் மேற்சொன்னக் கல்வெட்டுக்களிலிருந்து இப்பெருவழி, இவ்வூர் வழியாகச் சென்றதை அறியமுடிகிறது. இவ்வூரில் வணிகர்கள் வாழ்ந்துள்ளனர்[12]. திருமழப்பாடியில் சோழ மன்னர் வந்து தங்கும் அரண்மனைகள் இருந்தது என்றும் இங்கு முதலாம் குலோத்துங்கன் வந்து தங்கி ஆணைகள் பிறப்பித்தான் என்றும் அறிகிறோம்[13]. மேலும் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டுகளில் திருமழப்பாடி

ஜினசிந்தாமணிநல்லூர் என்ற பெயரில் வணிக நகரமாக வளர்ந்தது[14]. இங்கு ஐய்யபொழில் பெருந்தெரு, வைச்சியநாதப் பெருந்தெரு எனும் பெருந்தெருக்கள் இருந்தன[15]. இவ்வூருக்கு மலைமண்டலம், துளு ராஜ்யம் ஆகிய மேற்குக் கடற்கரைப் பகுதிகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்துள்ளனர்[16]. போசளர் காலத்தில் இங்கு உப்பு வணிகமும், நெசவுத்தொழிலும் சிறப்பாக நடைபெற்றன[17].




படம் 1 வெள்ளாறு - கொள்ளிடம் ஆற்றுப்பகுதி

இக்குறிப்புக்களிலிருந்து திருமழப்பாடியும் கண்டராதித்தமும் வணிக மற்றும் அரசியல் முக்கியத்துவமிக்க இடங்களாகத் திகழ்ந்தன என அறியலாம். இவ்வூர் வழியாகச் சென்ற பெருவழி 'குலோத்துங்கப் பெருவழி' என அழைக்கப்பட்டது. இப்பெயர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. இருப்பினும் இங்குள்ள அரண்மனைக்கு முதலாம் குலோத்துங்கன் வந்துள்ளார். எனவே இப்பெருவழிகள் இவர் பெயரில் இவர் காலத்திலேயே ஏற்பட்டது எனலாம்.

### இராஜராஜன் பெருவழி

உடையார்பாளையம் வட்டம் கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள கி.பி.1317-ஆம் ஆண்டிற்குரிய இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியரின் கல்வெட்டில் 'குலோத்துங்கசோழன் திருமதில் பெருவழி' என்று பெயர் கூறப்பட்ட 'விளாங்குடையான் பெருவழி', 'திருவாசல்நாராசத்து கூழையானைபோனப் பெருவழி' என்ற இரண்டு பெருவழிகள் குறிப்பிடப்பெறுகின்றன[18]. கி.பி.1329-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஐந்தாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியரின் மற்றொரு கல்வெட்டு 'இராஜராஜன் பெருவழி' பற்றிக்கூறுகிறது[19].

இக்கல்வெட்டுக்கள் தரும் ஊர்ப் பெயர்களிலிருந்து முதலிரண்டு பெருவழிகளும் முறையே கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து கொள்ளிடக்கரை ஓரமாக விளாங்குடி-கீழப்பழுவூர்-திருமானூர்-விளாங்குடி-தஞ்சாவூர் மற்றும் கீழப்பழுவூர்-திருமழப்பாடி ஆகிய ஊர்களுக்கும் கங்கைகொண்ட சோழபுரம் தா.பழுவூர் வழியாக ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கும் சென்றிருக்கலாம் என்று தெரிகிறது. 'இராஜராஜன் பெருவழி' கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து கொல்லாபுரம், கங்கை விடங்கநல்லூர் வழியாக சிதம்பரம் சென்றிருக்கலாம் என்று தெரிகிறது[20].

### மகதேசன் பெருவழி

வெள்ளாற்றின் வடகரையில் உள்ள ஆறகளூர் (ஆத்தூர் வட்டம்) மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மகதேசன் பொன்பரப்பின வாணகோவரையன் என்ற சிற்றரசனின் தலைநகரமாகவும்[21], திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் தங்கியிருந்த வணிக நகரமாகவும் விளங்கியது[22]. இவ்வூரிலிருந்து 'மகதேசன் பெருவழி' என்ற நெடுஞ்சாலை காஞ்சிபுரம் நோக்கிச்சென்றது பற்றிக் கல்வெட்டொன்றால் அறிகிறோம்[23].

### அடிக்கீழ்தளம், சூரதளம், எறிவிரதளம்

வெள்ளாற்றங்கரையிலுள்ள ஆறகளூர்[24], வெண்பாவூர்[25], வாலிகண்டபுரம்[26] மற்றும் பச்சைமலைப் பகுதியிலுள்ள சிங்களாந்தகபுரம்[27] ஆகியவை சோழர் கால வணிக நகரங்களாக

விளங்கிய ஊர்கள் எனவும் அவை முறையே 'அடிக்கீழ்தளம்', 'சூரதளம்', 'எறிவீரதளம்' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன என்றும் கல்வெட்டுக்கள்மூலம் அறிகிறோம். இத்தகைய இடங்கள் பெருவழிகளில் செல்லும் வணிகர்களைப் பாதுகாக்கின்ற படை வீரர்கள் தங்கியிருந்த படைத்தளங்கள் என்பது அறிஞர் கருத்து[28]. மேற்கண்ட ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களில் பெருவழிகள் பற்றிய குறிப்பு இல்லையென்றாலும் இவற்றின் பெயரிலிருந்து இவ்வூர்கள் பெருவழிகளில் அமைந்திருந்தன என்று ஊகிக்கலாம். இன்றும் இவ்வூர்கள் திருச்சி-சென்னை, திருச்சி-சேலம் தேசியப் பெருவழிகளில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**நம்வணிகன் பெருவழி**

பாபநாசம் வட்டம் சக்கராப்பள்ளியில் உள்ள கி.பி.1267-ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு போசளர் தலைநகரமான கண்ணனூர்க்கொப்பத்தில் தங்கி வணிகம் செய்த திசையாயிரத்து ஐநூற்றுவர் எனும் வணிகக் குழுவினர் இவ்வூர்க் கோயிலுக்கு வழங்கிய கொடை பற்றிக்கூறுகிறது[29]. மேலும் இது இவ்வூர் வழியாகச் சென்ற பெருவழியை 'நம்வணிகன் பெருவழி' என்று கூறுகிறது. இதிலிருந்து கண்ணனூரிலிருந்து காவிரிக் கரையோரமாக சக்கராப்பள்ளி வழியாக ஒரு பெருவழி பூம்புகார் நோக்கிச் சென்றதெனத் தெரிகிறது.

**உஞ்சினி பெருவழியப்பார் கோயில்**

இன்று அரியலூரிலிருந்து கொல்லாபுரம் (நகரம்), இராயம்புரம் (நகரம் இராஜகம்பீரபுரம்), செந்துறை, (பிரம்மதேயம்), உஞ்சினி, வாரியங்காவல் (ஆரியங்காவு?) வழியாக ஜெயங்கொண்டசோழபுரம் (நகரம்) வரை ஒரு நெடுஞ்சாலை செல்கிறது. உஞ்சினியில் பெருவழியப்பார்கோயில் என அழைக்கப்படும் அய்யனார்கோயில் உள்ளது. இதனை இப்பகுதியைச்சேர்ந்த செட்டியார், வன்னியர், நத்த மக்கள், வெள்ளாளர் ஆகியோர் தங்கள் குடிசாமியாக (குலதெய்வம்) வழிபடுகின்றனர்[30]. இக்கோயிலின் பெயர் ஒரு பெருவழியில் அமைந்து அவ்வழியாகச்செல்லும் வணிகர்களால் வணங்கப்பட்ட கடவுளின் பெயர் என்பதைக் காட்டுகிறது.

**பிரம்ம தேயங்கள் வழியாகச் சென்ற பெருவழிகள்**

வணிகர்கள் தங்கி வியாபாரம் செய்த பகுதிகள் பெருந்தெருக்கள் என அழைக்கப்பட்டன. அத்தகைய பெருவீதிகள் வணிக நகரங்களைத் தவிர பிரம்மதேய ஊர்களிலும் இருந்தன. இத்தகைய ஊர்கள் வழியாகவும் பெருவழிகள் சென்றுள்ளன. இதனால் பெருவழிகள் நகரங்களை மட்டும் இணைக்காமல் பிரம்மதேய ஊர்களையும் இணைத்துள்ளன எனத்தெரிகிறது.

வெள்ளாற்றின் வடகரையில் திட்டக்குடி வட்டத்தில் பெண்ணாகடம் என்ற ஊர் உள்ளது. இது முதலாம் இராஜேந்திரசோழனால் முடிகொண்டச்சோழச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் கி.பி.1024-இல் பிரம்மதேயமாக உருவாக்கப்பட்டது[31]. இவ்வூரில் வணிக நகரத்தார் வாழ்ந்த பகுதிகள் 'முடிகொண்டசோழப் பெருந்தெரு', 'உத்தமசோழப் பெருந்தெரு', 'குலோத்துங்கசோழப் பெருந்தெரு' என அழைக்கப்பட்டன[32]. ஸ்ரீமுஷ்ணத்திலுள்ள கி.பி.1102-ஆம் ஆண்டுக்குரிய முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு 'பெண்ணாகடமேற மேற்கு நோக்கிப்போன பெருவழி' என இவ்வூரிலிருந்து பெண்ணாகடம் நோக்கிப்போன பெருவழி பற்றிக்கூறுகிறது[33]. மேலும் பெண்ணாகடம் சிவன் கோயிலில் உள்ள இதே மன்னரின் கி.பி.1103-ஆம் ஆண்டைச்சேர்ந்த கல்வெட்டு இவ்வூர் வழியாகச் சென்ற பெருவழி பற்றிக் கூறுகிறது[34].

ஸ்ரீமுஷ்ணத்தின் அருகே இராஜேந்திரசோழபுரம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய வணிக நகரங்கள் உள்ளன. இவற்றின் அமைவிடத்திலிருந்து இவ்வூர்களை இணைத்துப் பெண்ணாகடம் வரை ஒரு பெருவழி சென்றிருக்கலாம் எனத்தெரிகிறது.

திட்டக்குடி என்ற ஊர் பல்லவர் காலத்தில் திட்டைக்குடியான நரசிங்கச் சதுர்வேதிமங்கலம் எனவும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இப்பெயர் திருச்சிற்றம்பலச் சதுர்வேதிமங்கலம் எனவும் அழைக்கப்பட்டது[35]. இவ்வூரில் வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் 'வீரசுந்தரப் பெருந்தெரு'[36], 'வீரராஜேந்திரப் பெருந்தெரு'[37] ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டன. இவ்வூரின் கிழக்குப் பகுதியாக விளங்குவது வசிஷ்டபுரம் ஆகும். இங்குள்ள விஷ்ணுக்கோயிலில்

கிடைக்கின்ற முதலாம் இராஜராஜனின் 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இவ்வூர் வழியாகச்சென்ற பெருவழி பற்றிக் கூறுகிறது[38]. திட்டக்குடியின் கிழக்கே பெண்ணாகடம் அமைந்துள்ளது. இதிலிருந்து மேலே சொன்ன பெருவழி பெண்ணாகடம், திட்டக்குடி ஆகிய ஊர்களையும் இணைத்தது எனலாம்.

அரியலூர் வட்டத்திலுள்ள கீழப்பழுவூர் சோழர் காலத்தில் 'பிரம்மதேயம் சிறுபழுவூர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது[39]. இவ்வூர் செங்குளம் என்ற ஏரிக்கரையையொட்டி சென்ற பெருவழி (தற்காலத்து அரியலூர் - கீழப்பழுவூர் - திருமானூர் சாலை) பற்றி முதலாம் இராஜராஜனின் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகிறது[40]. இம்மன்னரின் மற்றொரு கல்வெட்டிலிருந்து இப்பெருவழி வழியாகத் தேர்கள் சென்றன எனவும் இதனால் இதற்குத் 'தேர்போகும்வழி' என்ற பெயர் இருந்தது எனவும் அறியமுடிகிறது[41].

லால்குடி வட்டத்திலுள்ள திருமங்கலம் என்ற ஊர் முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து பிரம்மதேயமாக விளங்கிய ஊராகும். இவ்வூரிலிருந்து வடக்கு நோக்கி ஒரு பெருவழி சென்றது. இது மகேந்திரமங்கலம் என்ற மற்றொரு பிரம்மதேய ஊரையும் திருமங்கலத்தையும் இணைத்தது என்று கி.பி.1000-ஆம் ஆண்டுக்குரிய இம்மன்னரின் கல்வெட்டால் அறிகிறோம்[42].

லால்குடி வட்டத்திலுள்ள அன்பில் என்ற ஊர் பல்லவர் காலம் முதல் பிரம்மதேயமாக விளங்கிய ஊராகும்[43]. இங்கு 'கருணாகரப்பெருந்தெரு' என அழைக்கப்பட்ட தெருவில் வணிகர்கள் வாழ்ந்துள்ளனர்[44]. இவ்வூர் வழியாகச் சென்ற பெருவழி பற்றி முதலாம் பராந்தகனின் ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது[45].

இதே வட்டத்தில் அமைந்துள்ள ஆலம்பாக்கம் என்ற ஊரைத் தந்திவர்ம பல்லவன் தன்னுடைய பெயரில் தந்திவர்ம மங்கலம் எனும் பிரம்மதேயமாக உருவாக்கினான். இவ்வூர்வழியாகச் சென்ற பெருவழி பற்றி கி.பி. 896, 910 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன[46].

திருமழப்பாடியில் கி.பி.894-இல் எழுதப்பட்ட முதலாம் ஆதித்தனின் கல்வெட்டு வட்டநார்குடி என்ற பிரம்மதேய ஊர் பற்றிக்

கூறுகிறது[47]. இதன் இன்றைய அமைவிடம் பற்றி அறிய இயலவில்லை. ஆயினும் இப்பிரம்மதேய ஊர்வழியாக ஒரு பெருவழி சென்றது பற்றி அக்கல்வெட்டுக் கூறுகிறது.

கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ள இன்றைய காட்டுமன்னார்குடி என்ற ஊர் முதலாம் பராந்தகசோழனால் வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் பிரம்மதேயமாக உருவாக்கப்பட்டது[48]. இவ்வூரிலிருந்து குண்டையூர் நோக்கிப்போனப் பெருவழி பற்றி உத்தமசோழனின் 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகிறது[49]. குண்டையூர் இன்று எப்பெயரில் உள்ளது என அறியமுடியவில்லை.

**பிற பெருவழிகள்**

லால்குடி வட்டத்திலுள்ள கானக்கிளியநல்லூர் என்ற ஊர் சோழர் காலத்தில் கானக்கிளியூர் நாடு என்ற நாடுப்பிரிவின் தலைமைக் கிராமமாக விளங்கியது[50]. இங்குள்ள கி.பி.1122-ஆம் ஆண்டைச்சேர்ந்த விக்கிரமசோழனின் கல்வெட்டு இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு இப்பகுதி நாட்டார் இறையிலியாக நிலம் வழங்கியது பற்றிக் கூறுகிறது. அந்நிலத்தின் எல்லைகளில் ஒன்றாக இவ்வூரிலிருந்து 'சிறுவயலூர் ஏறப்போன பெருவழி' என்ற ஒரு நெடுஞ்சாலை குறிக்கப்படுகிறது[51]. சிறுவயலூர் இதே பெயரில் கானக்கிளியநல்லூர் அருகே அமைந்துள்ளது.

அணிதீரமங்கலம் என்ற பிரம்மதேய ஊர் லால்குடி சிவன்கோவிலுக்குத் தேவதானமாக விளங்கிய ஊராகும். இப்பிரம்மதேயம் வழியாக ஒரு பெருவழி சென்றது பற்றி முதலாம் இராஜராஜனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது[52].

இதே வட்டத்தைச் சேர்ந்த ஊட்டத்தூர் என்ற ஊர் சோழர் காலத்திலிருந்து ஊற்றத்தூர் நாடு என்ற நிருவாகப்பிரிவின் தலைமைக் கிராமமாக விளங்கியது. இவ்வூரிலுள்ள மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டுக்கள் இங்கிருந்த 'நகரத்தார் மதில்' பற்றிக் குறிப்பிடுகிறது[53]. இதிலிருந்து இங்கு சுற்றுச் சுவர்களுடன் கூடிய பாதுகாப்பான பகுதியில் வணிக நகரத்தார் வாழ்ந்தனர் என்று அறியலாம். கி.பி.1230-ஆம் ஆண்டைச்சேர்ந்த இம்மன்னரின் மற்றொரு கல்வெட்டு இவ்வூரிலிருந்து

'மணியன்குறிச்சிக்குப் போன பெருவழி' பற்றிக் கூறுகிறது[54]. இவ்வூர் இதே பெயரில் ஊட்டத்தூருக்கு வடகிழக்கே இன்றைய பெரம்பலூர் லால்குடி-திருச்சிப் பெருவழியில் அமைந்துள்ளது.

**முடிவுரை**

மேலே குறிப்பிடப்பெற்ற கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து சோழர், பாண்டியர் ஆட்சிக்காலத்தில் வெள்ளாறு-கொள்ளிடம் ஆற்றுப்பகுதியில் அமைந்திருந்த வணிக நகரங்கள், பிரம்மதேயங்கள் ஆகியவற்றை இணைத்துப் பல வணிகப் பெருவழிகள் இருந்தன என அறிகிறோம். அப்பெருவழிகள் அக்காலத்தில் கொங்குநாடு மற்றும் சோழ நாட்டுத் தஞ்சை, பழுவூர், அரியலூர், ஜெயங்கொண்டம், கங்கைகொண்ட சோழபுரம், காட்டுமன்னார்குடி, சிதம்பரம் முதலிய முக்கிய ஊர்களை இணைத்தன எனவும் அறிகிறோம். தொண்டை நாட்டுக்கும் இப்பகுதியிலிருந்து நெடுஞ்சாலை சென்றது. இவற்றின் மூலம் இப்பகுதியில் வணிகம் சிறப்பாக நடைபெற்றிருக்கவேண்டும் எனவும் அறியலாம். பாண்டியர் காலத்துக்குப்பிறகு பெருவழி பற்றிக் கல்வெட்டுக்களில் குறிப்பெதுவும் கிடைக்கவில்லை.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 தி.சுப்பிரமணியன், 1982, "வீரப்பட்டணக்கல்", தொல்லியல் கருத்தரங்கு தொகுதி-1 (ப.ஆ.) ஆ.பத்மாவதி, இரா.நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,சென்னை.

________, 1983, 'அடிக்கீழ்தளம்', தொல்லியல் கருத்தரங்கு (ப.ஆ.) அ.இராசேந்திரன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

________, 1985, 'தாவளம்', *தொல்லியல் ஆய்வுத்தொகுதி*, தொல்பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக்கழகம், மதுரை, பக்.107-115.

2 Thyagarajan, L., 1999, *Historical Archaeology of the Ariyalur Region upto A.D.1817-A Study*, Ph.D., Thesis, Bharathidasan University, pp.A.140-142, A158-160.

3 *க.ஆ.அ.* 281/1911

4 *க.ஆ.அ.* 33/1895, *தெ.இ.க*, 5/590, 46 /1895, *க.ஆ.அ.* 281/1911

5 தி.வை.சதாசிவபண்டாரத்தார், 1974, *பிற்காலச்சோழர் வரலாறு*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், பக்.30 *சிங்கத்துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன் குலமுதலோன்*-திருத்தொண்டர் திருவந்தாதி, பக்.65.

6 *க.ஆ.அ*. 597/1902, *தெ.இ.க* 8/194.

7 இக்கட்டுரையாசிரியரால் இவ்வூரில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு.

8 *மேலது.*

9 *க.ஆ.அ*. 262/1910, *தெ.இ.க* 13/43

10 Subbarayalu, Y., 1972, *The Political Geography of the Chola Country*, Department of Archaeology, Madras.p.174.

11 *க.ஆ.அ*. 72/1920, 74 /1895, 57/1920

12 *க.ஆ.அ*. 196 /1928-29; 7/1920

13 *க.ஆ.அ*. 231 /1916

14 *க.ஆ.அ*. 82,92,91, 22/1920

15 *க.ஆ.அ*. 185/1927-28, 82/1920

16 *க.ஆ.அ*. 25,43/1920

17 *க.ஆ.அ*. 70/1895, 152/1928-29

18 *க.ஆ.அ*. 78/1892, *தெ.இ.க* 4/525

19 *க.ஆ.அ*. 76/1892, *தெ.இ.க* 4/523

20 Pierre Pichard (eds.), 1994, *Gangaikondacholopuram, Vol I*, Ecole Francoise D'Extreme Orient, Paris,pp.190-191.

21 *க.ஆ.அ*. 14, 15, 10/1903

22 *க.ஆ.அ*. 264 /1943-44

23 இரா.பூங்குன்றன், 'ஆறகளூர்', *கல்வெட்டு*, இதழ் 16, பக்.1-6.

24 *க.ஆ.அ.* 264 /1943-44

25 இவ்வூரிலிருந்து இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் காலத்துப் புதிய கல்வெட்டுக்கள்

26 *க.ஆ.அ.* 264 /1943-44

27 *க.ஆ.அ.* 233,230,237/1943-44

28 அடிக்குறிப்பு 1-ஐக் காண்க.

29 இவ்வூரிலிருந்து பேராசிரியர் கங்காதரன், வரலாற்றுத்துறை, பழனியாண்டவர் கலை பண்பாட்டுக்கல்லூரி அவர்களால் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு. இக்கல்வெட்டின் மூலபாடத்தை எனது ஆய்வுக்கு வழங்கிய அவருக்கு எனது நன்றி.

30 இக்கோயில் அறங்காவலர் திரு.வைத்தியநாதப் படையாச்சி வழங்கிய தகவல்.

31 விருத்தாச்சலம் சிவன்கோயிலிலிருந்து இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு.

32 *க.ஆ.அ.* 244,242,264/1928-29

33 *க.ஆ.அ.* 233/1916

34 *க.ஆ.அ.* 238/1928-29

35 வசிஷ்டபுரம் அரங்கநாதர் கோயிலிலிருந்து இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் இராஜராஜன் மற்றும் இரண்டாம் குலோத்துங்கன் காலப் புதிய கல்வெட்டுக்கள்

36 *க.ஆ.அ.* 19/1913

37 திட்டக்குடி வைத்தியநாதசுவாமி கோயிலிலிருந்து இக்கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்கள்.

38 காண்க, அடிக்குறிப்பு-35.

39 *க.ஆ.அ.* 222,228 /1926

40 *க.ஆ.அ.* 107/ 895, *தெ.இ.க* 5/301

41 *க.ஆ.அ.* 234/1926

42 *க.ஆ.அ.* 251/1929

43 *க.ஆ.அ.* 283/ 1901, *தெ.இ.க.* 8/503

44 *க.ஆ.அ.* 589/1902

45 *க.ஆ.அ.* 588/1902

46 *க.ஆ.அ.* 705,720/1909

47 *க.ஆ.அ.* 18/1920, *தெ.இ.க.* 13/301

48 *க.ஆ.அ.* 539/1920

49 *க.ஆ.அ.* 621/1920

50 இல.தியாகராஜன், 1996, *கானக்கிளியூர் நாடு*, காமரசவல்லி பதிப்பகம், அரியலூர்.

51 *மேலது.* ப.54

52 *க.ஆ.அ.* 110/1928-29

53 *க.ஆ.அ.* 500/1912

54 *மேலது.*

# 17. சோழர் காலக் கல்வெட்டுக்கள் கூறும் பெருவழிகள்

**சீ.நீலாவதி**
புதுக்கோட்டை

இடைக்காலச் சோழ வணிகத் தொடர்புக்கு அடிப்படையாக பெருவழிகள் அமைந்திருந்தன. இப்பெருவழிகள் சோழர்காலக் கல்வெட்டுக்களில் எவ்வகையில் இடம் பெற்றுள்ளன என்பதைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சோழ மன்னர்கள் பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் நிலங்களைத் தானமாக வழங்கும்போது, அந்நிலத்திற்கான எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். இக்கட்டுரையில் கூறப்படும் 15 கல்வெட்டுக்களிலும் 'பெருவழிகள்' நிலத்தின் எல்லைகளை சுட்டுவனவாக அமைந்து உள்ளன. இவற்றை வழி, நெறி, பெருவழி, காட்டுவழி, நாட்டுவழி எனக் கல்வெட்டுக்களும் அத்தம், நெறி, வழி, வதி, இட்டுநெறி எனக் காப்பியங்களும் குறிப்பிடுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளை முதன்மையாகக் கொண்டு வழிகளை இரண்டு வகைகளாக, உள்ளூர் வழிகள், பேரூர் போகும் பெருவழிகள் எனப் பிரிக்கலாம்.

**உள்ளூர் வழிகள்**

பெருவழிகளோடு இணையாமல் அந்தந்த ஊர்களின் பயன்பாட்டிற்கு மட்டுமே உள்ள வழிகள், உள்ளூர் வழிகள் எனப்படும். இதனை அட்டவணை-2 தெளிவாக்குகின்றது. இவ்வழிகள் ஊர்களின் பெயரையோ, தனிநபரின் பெயரையோ, இயற்கை அமைப்பின் பெயரையோ சுட்டுவதாக அமைந்துள்ளன. திருமஞ்சன வழி[1], பிணம் போகும் வழி[2], கோயிலுக்குப் போகும் வழி[3], ஏரிக்குப் போகும் பெருவழி[4] என்பனவாகும். திருமஞ்சன வழி என்பது தெய்வ வழிபாட்டிற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கும், கோயில் வழிகள் திருவிழா காலங்களில் சுவாமி வீதிவுலா வருவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒருசில கல்வெட்டுக்களில் உள்ளூர் வழிகளின் பெயர்கள் வதி, வாய்க்கால், கண்ணாறு முதலிய நீர்ப்போக்கு வழிகளோடு எல்லைகளைச் சுட்டும் போது வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, சதாசிவன் மயக்கால் நடுவில் வழி[5], ஸ்ரீதேவி வழிக்கு[6], மேற்கு காள வழிக்கு[7], ஆறாம்

கண்ணாற்றுக்கு மேற்கு காளி வழி[8] என்னும் கல்வெட்டுச் சொற்கள் தெளிவுபடுத்துகின்றன.

**பேரூர் போகும் பெருவழிகள்**

எல்லைகளைச் சுட்டுவதோடு மட்டுமின்றி பேரூர்களுக்குச் செல்லும் பெருவழிகள் பற்றியும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதை அட்டவணை-1-இல் தரப்பட்டுள்ளன. அவை

1 குண்டையூர்க்குப் போகும் பெருவழி[9]

2 மணிமங்கலத்துக்குப் போகும் பெருவழி[10]

3 தஞ்சாவூர்ப் பெருவழி[11]

என்பனவாகும். இவற்றில் முதலிரண்டு பெருவழிகளும் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகும் வழியாகும். மூன்றாவதாகச் சுட்டப்பெற்றுள்ள தஞ்சாவூர்பெருவழி குறித்து தஞ்சாவூர் மாவட்டம் அவனிவநல்லூர் கல்வெட்டு ஒன்றும் (முதலாம் இராஜராஜன் 4-ஆம் ஆட்சியாண்டு), ஆடுதுறைக் கல்வெட்டுக்கள் இரண்டும் (முதலாம் குலோத்துங்கன்-14-ஆம் ஆட்சியாண்டு) குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மூன்றிலுமே தெற்கே தஞ்சாவூர் பெருவழிக்கு வடக்கு என்ற ஒரே மாதிரியான வரிகள் இடம்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ள எல்லைகளை ஆராய்ந்து பார்க்கின் இம்மூன்று கல்வெட்டுக்களிலும் சுட்டப்பெறும் இப்பெருவழி வெவ்வேறு வழிகளாக இல்லாது ஒரே வழியாக இருந்திருக்கலாம் என்பதை அட்டவணை 1-இல் எண்,3.4.5-இல் காணலாம். இவ்வாறு மூன்று கல்வெட்டுக்களில் தஞ்சைப்பெருவழி இடம்பெற்றிருபபினும் இதன் நீளம், அகலம் பற்றிய குறிப்புகளை அறிய இயலவில்லை.

பெருவழிகளின் அகலம் பற்றி அரிதாக மிகச்சில கல்வெட்டுக்குறிப்புகள் கிடைக்கின்றன. சான்றாக, திருவாலங்குடியில் உள்ள ஒரு கல்வெட்டு

" (இரண்டு) 2 கோல் அகலம் அருவி வழிக்கு
மேற்கு போந்த பெருவழிக்கு
வடக்கும் மேற்கு எல்லையாக
பெருமக்குள வழியாக வைத்த நிலம் 2 கோல்"[12]

எனக் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. இக்கல்வெட்டிலிருந்து அருவி வழி '2 கோல் அளவு அகலம் இருந்தது எனவும், பெருமக்குள வழி என்ற ஒன்றை உருவாக்க 2 கோல் அகல நிலம் ஒதுக்கப்பட்டது எனவும் தெரிகின்றது. ஒரு கோல் நீளம் 12 அடி அல்லது 16 அடி என்று கொள்ளலாம். ஆகவே இப்பெருவழிகள் குறைந்தது 24 அடி அகலம் கொண்டும் அதிக அளவு 32 அடி கொண்டதாகவும் கொள்ள இடமுண்டு. எப்படியும் இப்பெருவழிகள் அகலமான வழிகள் என்பதில் ஐயமேதுமில்லை.

இக்கல்வெட்டுக்களைத் தொகுத்து ஆராயின், 1, பெருவழிகள் அனைத்துமே ஆறுகளை ஒட்டியே சென்றுள்ளன. 2. இப்பெருவழிகள் இன்று காணப்படும் பெருவழிகளைப் போல் இல்லாவிடினும் அன்றைய போக்குவரத்துப் பயன்பாட்டிற்குப் போதுமானதாக இருந்திருக்கும். 3.காலம் செல்லச்செல்ல 'பெருவழிகள்' எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன என்பது அட்டவணை 3-இலிருந்து தெளிவாகின்றது. எனவே இப்பெருவழிகள் பிற்காலத்தில் வணிக வழிகளாகவும் போக்குவரத்துக்கு உதவும் நெடுஞ்சாலைகளாகவும் இருந்திருக்கக்கூடும்.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 *தெ.இ.க.* 19/139

2 *தெ.இ.க.* 23/489

3 *தெ.இ.க.* 26/124

4 *தெ.இ.க.* 8/459

5 *தெ.இ.க.* 23/288

6 *தெ.இ.க.* 26/757

7 *தெ.இ.க.* 26/757

8 *தெ.இ.க.* 26/776

9 *தெ.இ.க.* 19/400

10 *தெ.இ.க.* 26/468

11 *தெ.இ.க.* 8/207, 21/363, 23/365

12 *தெ.இ.க.* 19/191

## அட்டவணை-1 பெருவழிகளின் பெயர்கள்

| வ.எண் | நோக்கீடு | மாவட்டம் | வட்டம் | ஊர் | மன்னன் | ஆட்சி ஆண்டு | கி.பி. | காலம் | சாலையின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தெ.இ.க. 19/191 | தஞ்சாவூர் | மாயூரம் | திருவிலக்குடி | கோபரகேசரி | 7 | - | 1 | அருவி வழி<br>போந்த வழி<br>பெருமக்குளவழி |
| 2 | தெ.இ.க 19/139 | தஞ்சாவூர் | பாபநாசம் | கோயில் தேவ ராயன் பேட்டை | கோபரகேசரி | - | 975 | 1 | திருமஞ்சன வழி<br>பெருவழி |
| 3 | தெ.இ.க 19/400 | கடலூர் | சிதம்பரம் | உடையார் குடி | இராஜராஜன் -I | 2 | 986 | 2 | குண்டையூர்க்குப்<br>போன பெருவழி |
| 4 | தெ.இ.க 8/207 | தஞ்சாவூர் | கும்பகோணம் | அவனிவ நல்லூர் | இராஜராஜன் -I | 4 | 989 | 2 | தஞ்சாவூர்<br>பெருவழி |
| 5 | தெ.இ.க 23/363 | தஞ்சாவூர் | பாபநாசம் | ஆடுதுறை | குலோத்துங்கன் -I | 14 | 1084 | 3 | தஞ்சாவூர்<br>பெருவழி |
| 6 | தெ.இ.க 23/365 | தஞ்சாவூர் | பாபநாசம் | ஆடுதுறை | ,, | ,, | ,, | 3 | தஞ்சாவூர்<br>பெருவழி |
| 7 | தெ.இ.க 8/458 | திருநெல்வேலி | ஸ்ரீவைகுண்டம் | மாறமங்கலம் | ,, | 4 | 1094 | 3 | காரிநக்கலுக்குப்<br>போன பெருவழி |
| 8 | தெ.இ.க 26/468 | திருநெல்வேலி | திருநெல்வேலி | மணற்படை வீடு | ,, | 43 | 1112 | 3 | அச்...மணிமங்கலத்<br>துக்கு பெருவழி |

# அட்டவணை - 2 உள்ளூர் வழிகளின் பெயர்கள்

| வ.எண் | தொகுதி | மாவட்டம் | வட்டம் | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | கி.பி. | காலம் | சாலையின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தெ.இ.க 26/776 | திருச்சி | திருச்சி | ஆலம்பாக்கம் | குலோத் துங்கன்-I | 15 | 1085 | 3 | ஸ்ரீதேவி வதி காளி வதி |
| 2 | தெ.இ.க 26/757 | திருச்சி | லால்குடி | ஆலம்பாக்கம் | குலோத் துங்கன்-I | 19 | 1089 | 3 | ஸ்ரீதேவி வதிக்கு மேற்கு காள வழிக்குத் தெற்கு |
| 3 | தெ.இ.க 8/459 | திருநெல்வேலி | திருச்செந்தூர் | மாறமங்கலம் | குலோத் துங்கன்-I | 44 | 1114 | 3 | ஏரின்று வலம் ஏரிக்கு போன பெருவழி |
| 4 | தெ.இ.க 23/288 | தஞ்சாவூர் | கும்பகோணம் | திருவிடைமருதூர் | விக்கிரம சோழன் | 5 | 1121 | - | நம்விட்டுக் கட்டணத்து வழியொழுங்கு கட்டணம் |
| 5 | தெ.இ.க 23/365 | தஞ்சாவூர் | பாபநாசம் | ஆடுதுறை | இராஜேந் திரன்-II | 16 | 1161 | - | தஞ்சாவூர் பெருவழி |
| 6 | தெ.இ.க 26/124 | கோயம்புத்தூர் | உடுமலைப் பேட்டை | உடுமலைப்பேட்டை | குலோத் துங்கன்-II | - | 1202 | 4 | இவ்வூர் பிடாரி கோயிலுக்கும் பெராறு பெருவழிக்குக் கிழக்கு |
| 7 | தெ.இ.க 19/139 | தஞ்சாவூர் | பாபநாசம் | கோவிலடி | கோபர கேசரி | - | 975 | 1 | திருமஞ்சன வழிக்கு பெருவழிக்கு |

**அட்டவணை - 3 காலமுறைப்படி பெருவழிகள்**

| வ.எண். | காலம் (கி.பி.) | காலக் கட்டம் | பெருவழிகள் |
|---|---|---|---|
| 1 | 975 - 985 | 2 | 3 |
| 2 | 985 - 1070 | 3 | 3 |
| 3 | 1070 - 1178 | 4 | 8 |
| 4 | 1178 - 1279 | 1 | 1 |
| | மொத்தம் | | 15 |

# 18. மரக்காணமும் உப்பளங்களும்

**சு.இராசகோபால்**
சென்னை

கீழைக்கடற்கரையில் கடலிலிருந்து 2 கி.மீ. தொலைவு உட்தள்ளி அமைந்த ஊர் மரக்காணம். இதன் வடக்கில் சதுரங்கப்பட்டணம், மாமல்லபுரம் ஆகியவையும் தெற்கில் புதுச்சேரி, கடலூர் ஆகியவையும் குறிபிடத்தக்க கடற்கரை ஊர் மற்றும் துறைமுகங்கள் ஆகும். '*எரித்திரையன் கடற்செலவு*' நூலாசிரியர் குறிப்பிடும் பொதுக்கா (புதுச்சேரி), 'சோபாட்மா' (சதுரங்கப்பட்டணம்-நீர்ப்பெயறு)[1] ஆகியவற்றின் நடுவில் அன்று அமைந்திருந்த எயிற்பட்டணமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியாகவோ மரக்காணத்தைக் கருதலாம்[2]. மரக்காணத்திலிருந்து மேற்கு நோக்கி உள்நாட்டிற்குள் செல்லும் இன்றையப் பெருவழி கந்தாடு, பெருமுக்கல், திண்டிவனம் (கிடங்கில்), செஞ்சி (சிங்கபுரம்), திருவண்ணாமலை, செங்கம் (செங்கண்மா), தருமபுரி (தகடூர்) ஆகிய தொன்மையான ஊர்களையும் சந்திப்புகளையும் கடந்து ஒகேனக்கல் வழியாக காவிரி ஆற்றைக் கடந்து கர்நாடகம் செல்கின்றது.

சங்ககால நல்லியக்கோடனின் ஓய்மாநாட்டில் ஒரு துறைமுகப் பட்டினமாக எயிற்பட்டினம் விளங்கியது. வீங்கு திரை கொணர்ந்த விரைமரங்கள் (அகில் மரங்கள்) இத்துறை முகத்தில் இறங்கின. அவை அடுக்கி வைக்கப்பட்ட காட்சி தூங்கும் ஒட்டகங்களை ஒத்திருந்தது[3]. சோழர் காலத்தில் இங்கு துறைமுக நடவடிக்கைகள் நிகழ்ந்தமை பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. இக்காலக் கல்வெட்டுக்கள் மனக்கானத்தையும் (மரக்காணம்) அங்கிருந்த இராசராசப்பேரளத்தையும் சுட்டுகின்றன[4]. ஒரு கல்வெட்டு 'மரக்காணமாகிய இராஜராஜப்பேரளம்' என்றே அழைக்கின்றது[5]. இவ்வளத்தில் உப்பு விளைவித்த அளக்குடிகளும், அளம்கங்காணி செய்த அதிகாரியும், தனிநபர் அளங்களும், சுவாமி போகமாக இவ்வளங்கள் இருந்தமையும் இக்கல்வெட்டுக்களில் பேசப்படுகின்றன.




படம் 1 மரக்காணத்தை தொடும் பெருவழியும் கடல்வழியும்

### சங்க கால உப்பு வணிகம்

சங்க கால வணிகத்தை உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் என்று பிரித்துக் கொண்டால் உள்நாட்டு வணிகத்தில் உப்பு வணிகம் முதலிடம் பெற்று விளங்கியது. போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக இருந்தமையால் பெரும்பகுதி ஊர்கள் பொருள்களின் தேவையில் தன்னிறைவு பெற்றவையாக இருந்தன. உப்பு கடற்கரைப் பகுதியில் அதிகமாகக் கிடைத்தாலும், உணவில் இன்றியமையாத கூறாக இருந்ததாலும் அது கடற்கரையிலிருந்து உள்நாட்டு வணிகப் போக்குவரத்தில் அதிகம் எடுத்துச் செல்லப்பட்டது. பரதவர் (உழாத உழவர்) உப்பு உற்பத்தி செய்தவர்களாகவும், உமணர் உப்பு வணிகம் செய்தவர்களாகவும் இருந்தனர். உமணர் மருதநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் தம்நாட்டில் விளைந்த வெண்ணெல்லைக் கொடுத்துக்

கடலோரத்தில் விளைந்த உப்பைப் பெற்றுள்ளனர் என்றும் கருதலாம். மேலும் இவர்கள் கழுதைகளின் மீது மிளகினை ஏற்றித் தொலைவிடங்களுக்குக் கொண்டுச் சென்றனர் என்றும் அறிகின்றோம். உமணரது வாழ்க்கை நிலையற்ற வாழ்க்கையாக இருந்தது. தாங்கள் செல்லுமிடங்களுக்கு தங்கள் குடும்பத்தையும் உடன் அழைத்துச் சென்றுள்ளது தெரியவருகிறது. சங்ககாலப் பெருவழிகள் கூடும் சந்திகளில் சுங்கச் சாலைகள் இருந்தன. இவ்வழிகளில் மலைப்பகுதியில் விளைந்த பொருள்களும் கடலில் கிடைக்கும் பொருள்களும் வணிகர்களால் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன[6].

அழகர்மலைத் தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்கள் உப்பு வணிகன், கொழு வணிகன், பணிதவணிகன், பொன்வணிகன், அறுவை வணிகன் ஆகியோரை ஒருசேர ஓரே இடத்தில் காட்டுவது அங்கு உப்பு முதலான பொருள்கள் பரிமாறிக் கொள்ளக்கூடிய வாய்ப்பை நன்கு காட்டுகிறது[7].

மேற்கண்ட செய்திகளின் வாயிலாகக் கடற்கரையில் விளைந்த உப்பு உள் நாட்டிற்குள் எடுத்துச் செல்லப்பட்டபோது படிப்படியாக பல்வேறு பொருட்களைப் பரிமாறிக் கொள்ளவும் உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தை இணைக்கும் காரணியாகவும் இருந்தமையை உய்த்துணரலாம்.

**கடற்கரையோரப் போக்குவரத்து**

கடல் வணிகத்திற்கு இன்றியமையாத கலங்கள் மூன்று வகையாக இருந்தன என்று எரித்திரையக் கடல் செலவு ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முதல் வகை, கடற்கரையோரமாகப் போக்குவரத்தில் ஈடுபட்ட நாட்டுக்கலங்கள். இரண்டாம் வகை கரையோரம் சென்ற ஓரளவு பெரிய 'சங்கராய' என்ற கலங்கள், மூன்றாவது மிகப் பெரியவையான 'சொலாண்டிய' என்னும் பெயர்கொண்ட கப்பல்கள். இவை கங்கையாற்றுப் பகுதிக்கும் கிழக்கு நாடுகளுக்கும் சென்றுவர பயன்பட்டுள்ளன[8].

இலக்கியங்களில் பல்வகையான கடற்கலங்கள் சுட்டப்படுகின்றன. இவற்றில் வங்கம், நாவாய் ஆகியவை நெடுந்தொலைவு கடற்செலவுக்குப் பயன்பட்டன. அம்பி, மீன் பிடித்தலுக்குப் பயன்பட்டது. திமில், தோணி ஆகியவையும் ஓரளவு மீன் பிடிக்கப் பயன்பட்டன. தோணி, கடலில் நிற்கும் பெரிய கலங்களிலிருந்து

பொருள்களை இறக்கி ஏற்றிக்கொண்டு கழிகள் வழியாக கரை சேர்க்கப் பயன்பட்டது. பஃறி கடற்கரையோரமாகச் சென்று அருகில் உள்ள கடற்கரை ஊர்களோடு வணிகம் செய்யப்பயன்பட்டது. உப்பை விற்று வெண்ணெல் கொண்டு வந்த பஃறிகள் குதிரைகள் போல வரிசையாக நின்றதாக பட்டினப்பாலை குறிப்பிடுவது கடலோர வணிகத்தின் வெளிப்பாடாகும்[9].

சாலை வசதிகளும், விரைந்து செல்லும் சுகமான ஊர்திகளும் குறைவாக இருந்த காலத்தில் நீர்வழிப்பயணம் விரைவுடையதாகவும், சுகமானதாகவும், எளிதானதாகவும் இருந்திருக்கும் என்று கருதலாம். கரையோர வணிகமும், பயணமும் மிகுதியும் நடந்தது என்றே கருதவேண்டும். ஆங்கிலேயர் குறிப்புகளும், ஆனந்தரங்கம்பிள்ளையின் தினப்படிச் சேதிக் குறிப்புகளும் சென்னை, புதுச்சேரி, காரைக்கால், நாகபட்டினம் இடையே கரையோரம் நிகழ்ந்த பல போக்குவரத்துச் செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இஸ்கூனர் (Schooner), இலாஞ்சு (Launch) போன்ற சிறுகலன்களும் ஒன்று முதல் மூன்று வரையிலான பாய்மரங்களை உடைய பெரிய கலன்களும் அரசு மற்றும் கும்பினியாரின் குடும்பம், படைவீரர்கள், குதிரைகள், தீச்சட்டி, பீரங்கி போன்ற படைக்கலன்களை கரையோரமாக எடுத்துச் சென்றதைக் காட்டுகின்றன. பழவேற்காடு முதல் மரக்காணம் வரையில் இடையிடையே சிறு ஏரிகளையும், கழிகளையும் இணைத்து கால்வாய் அமைக்கப்பட்டு அவற்றில் மரக்கலன்கள் சென்று வந்தன. இந்தக் கால்வாய் பக்கிங்காம் கால்வாய் எனப்பட்டது. மாமல்லபுரத்திற்குச் செல்ல சாலை ஏற்படுவதற்கு முன்னதாக இந்தக் கால்வாயே பெரிதும் உதவியுள்ளது[10]. கூனிமேட்டில் உள்ள விஜயநகரக் காலக் கல்வெட்டும் (கி.பி.1533) கடற்கரை ஓரமாகக் கடலில் போக்குவரத்து இருந்தமையை 'பண்ணை வழி' என்று சுட்டுகிறது[11]. பண்ணை என்பது தோணியைக் குறிக்கும். தண்ணீரையும் குறிக்கும்[12]. இக்கல்வெட்டில் தெற்குவழி, வேலூர்வழி, வடக்கு மரக்காணம் வழி, வடக்கு கு(ன)ம் பண்ணைவழி ஆகியவை குறிக்கப்பட்டு அவ்வழியே சென்ற பல பொருட்களின் மீது உதிரித்தீர்வை, நாட்டாயம் ஆகிய வரிகள் விதிக்கப்பட்டமை சொல்லப்படுகிறது[13].

மரக்காணம் கோயில் மட வளாகத்திலும், புதுத் தெருவிலும் செட்டிகள், கைக்கோளர், வாணியர், சேனையங்காடிகள் ஆகியோர் இருந்தமையை மரக்காணத்தில் உள்ள விஜயநகரக் காலக் கல்வெட்டு

சுட்டுகிறது[14]. இப்படிப் பல்வேறு வகையான வணிகர்கள் மரக்காணத்தில் இருந்தமைக்கு மரக்காணத்தில் கிடைத்த உப்பும் கடற்கரையோர வணிகமுமே காரணிகளாக இருந்திருக்கவேண்டும். சோழர் காலத்தில் மட்டுமல்லாமல் விஜயநகரக் காலத்திலும் உப்பளங்கள் மரக்காணத்தில் முதல்நிலை வகித்துள்ளன. இவ்விடத்து முதலிகளும், போத்திரெட்டி என்பவனும் இராமபத்திரய்யன் தர்மமாக மரக்காணத்தில் உள்ள ஒரு உப்பளத்தை வேலூர், கூனிமேடு ஆகிய ஊர்க்கோயில் தெய்வங்களுக்குக் கொடை தந்துள்ளனர் என்ற செய்தி இதை உறுதிப்படுத்துகிறது[15]. மற்றொரு விஜயநகரக் காலக் கல்வெட்டு மரக்காணம் இறைவனுக்கு நல்கப்பட்ட வருவாய்களில் 'அளச்சிறுபாடு' என்ற வருவாயும் தரப்பட்டமையைச் சுட்டுகிறது[16]. இச்செய்திகள் மரக்காணம் சார்ந்த வணிகத்தில் உப்பு வகித்த இடத்தைக் காட்டுகின்றன.

**உப்பளங்களும் உப்பு உற்பத்தியும்**

உப்பளங்கள் அளம், கழி, காயல், உம்பளம் என்று பல்வேறாக அழைக்கப்பட்டன. இவை பொதுவாகக் கடற்கரைக்கு உட்பகுதியில் கடல் மட்டத்தை விடத் தாழ்ந்த இடத்தில் அமைவதால் உப்பு நீர் வளத்துடன் அமைகின்றன. அளங்கள் பல பாத்திகளாகப் பிரிக்கப்பட்டு உப்புநீர் அவற்றில் குறைந்த உயரம் நிற்கும் வகையில் பாய்ச்சப்பட்டு சூரிய வெப்பத்தில் ஆவியாக்கப்பட்டு உப்பு விளைவிக்கப்படுகிறது. அளத்திற்கு நீர் பாய்வதற்கென்றே வாய்க்கால்கள் இருந்தன. மரக்காணம் கல்வெட்டு 'இவ்வளத்துக்கு நீர் பாயும் பெருவாய்க்கால்'[17] என்று ஒரு வாய்க்காலைச் சுட்டுகிறது. பெருமுக்கல் கல்வெட்டும் மரக்காணத்தில் 'உத்தம சோழப் பேரளத்துப் பாண்டியராயன் வாய்க்கால் அளத்துக்கு கிழக்கு'[18] என்று வாய்க்கால் ஒட்டி அமைந்த அளத்தைக் குறிப்பிட்டுள்ளது. செய்யூர்க் கல்வெட்டு 'வடக்கு முட்டைக் கால் அளம்' என்று வாய்க்காலின் பெயர் மூலம் ஒரு அளத்தைச் சுட்டுகிறது. அளத்தில் மிகுந்த நீர் வடியும் வடிகால் 'வதி' என்று இக்கல்வெட்டில் சொல்லப்படுகிறது[19]. அளப்பாத்திகளின் தரைப்பகுதி சீரான களிமண்ணாக இருந்தால் நீர் தரையால் உறிஞ்சப்படாது நிலையாய் நின்று ஆவியாகி உப்பும் எளிதாக விளையும். குண்டூர் மாவட்டம் பாபட்லாவிலுள்ள குலோத்துங்க சோழன் கல்வெட்டு 'சவுட்டுத்தரையில் உப்பெடுக்கலாம் நிலம்' என்று தரையின் தன்மையைச் சுட்டியுள்ளது[20]. உப்பு விளைவது 'மலர்கிறது' [21]. 'பழுக்கிறது'[22] என்று இலக்கியங்கள்

சுட்டுகின்றன. இன்று தரம் குறைவான உப்பு 'அழுக்கு உப்பு'[23] என்றழைக்கப்படுகிறது, பாபட்லா கல்வெட்டில் ஈரமான உப்பு அல்லது தரம் குறைவான உப்பு 'சொதகையாலுள்ள உப்பு'[24] என்று சொல்லப்பட்டுள்ளது, உப்பெடுக்கும் பணியில் இன்று மரக்காணத்தில் எல்லா சாதியினரும் கூலி வேலைக்குப் பணிசெய்கின்றனர். மரக்காணம் கல்வெட்டில் இவர்கள் 'அளக்குடிகள்' என்றும் பாபட்லா கல்வெட்டில் 'உப்பு செய்யும் ஆட்கள்' 'ஆட்குடிமக்கள்' என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். விஜயநகரக் காலத்தில் 'உப்பிலியன்' என்று இவர்கள் அழைக்கப்பட்டனர்[25]. அளங்களில் மேற்பார்வை செய்த அதிகாரிகள் 'அளங்கண் காணிநாயகம்'[26] என்றும் உப்புக்கு வரித் தீர்வை செய்யும் அதிகாரிகள் 'அளங்கூறு செய்வார்'[27]. என்றும் அழைக்கப்பட்டனர்.

அரசிற்குச் சொந்தமான அளங்கள் கோ-அளம் என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று மாமல்லபுரம், திருவனந்தபுரம் அருகேயுள்ள கோவளம் என்று பெயருடைய ஊர்கள் அவ்வகை அளமிருந்த ஊர்கள் என்று கருதலாம். சோழர் காலக் கல்வெட்டுக்களில் மேற்சொன்ன மரக்காணம் கல்வெட்டுக்கள் 'இராஜராஜப் பேரளத்தையும்'[28] பாபட்லா கல்வெட்டு 'சோழன் சக்கரப் பேரளம்' என்ற அளத்தையும் திருமுக்கல் கல்வெட்டு 'உத்தம சோழப்பேரளம்' என்ற அளத்தையும் செய்யூர்க்கல்வெட்டு கங்கை கொண்ட சோழப் பேரளத்தையும் திருவொற்றியூர் கல்வெட்டு படப்பக்க நாயகப் பேரளத்தையும் குறிக்கின்றன. இன்னும் சில ஊர்கள் 'பேரளம்' என்ற பெயரிலேயே உள்ளமை இங்கு கருதத்தக்கது. 'பெருவிலை', 'பெருந்தெரு', 'பெருந்தச்சன்', 'பேரரயன்' முதலிய சொற்கள் அரசு சார்பைக் குறிப்பது போலவே 'பேரளம்' என்பது அரசு சார்பைக் குறிக்கிறது எனலாம்.

தனிநபர்களும் அளங்களின் உரிமையாளர்களாக இருந்தமை மேற்சொன்ன மரக்காணம் கல்வெட்டுக்கள் மூலம் அறியக் கிடைக்கிறது. 'சாத்தன் தந்தியநளம்', 'அதளாட்டை அளம்', 'பூதநளம்', 'அக்கி நூற்றெண்மநளம்', 'புத்தன் உத்தமன் அளம்' என்ற பெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்[29].

உப்பளங்களும் அவற்றின் விளைச்சலும் கோயில்களுக்கு உடைமையாக இருந்தன. மேற்சொன்ன பெருமுக்கல் கல்வெட்டு

மரக்காணத்தில் இருந்த திருமறைச் சொக்கன் என்ற அளத்தினை, 'பெருமுக்கில் திருமலையில் உடைய நாயனார் குடிநீங்காத் தேவதானம்' என்று சொல்கிறது. மரக்காணம் கல்வெட்டுக்கள் உப்பு விளைச்சல் உரிமையைச் 'ஸ்வாமி போகம்' என்கின்றன. பாபட்லா கல்வெட்டு விளைச்சலில் இருபதில் ஒரு பங்கு இறைவன் தேவதானத்துக்கு முதலாகக் (உடலாகத்) கொடுத்த செய்தியைச் சொல்கிறது. இன்றும் மரக்காணம் கோயிலுக்கு 17.13 ஏக்கர் உப்பளங்கள் உள்ளன.

கல்வெட்டுக்களில் உப்புக்கோச்செய்கை[30], உப்புக்காசு, உப்புப்பிடி[31], உப்புக் கையுறை[32] என்ற பெயர்களில் அரசிற்கும் கோயிலுக்கும் வருவாய் கிடைத்த செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. உப்புக்கோச்செய்கை பல்லவர் செப்பேடுகளில் புதிதாக உருவாக்கப்படும் பிராமண ஊர்களில் தரப்பட்ட ஒரு சலுகையாகச் சொல்லப்பட்டுள்ளது. பாபட்லா கல்வெட்டு 'சாத்தவர் உப்பு விலைக்கு மாடைவாய் குறிணி உப்பு' கோயிலுக்குத் தந்ததைச் சொல்கிறது[33]. கன்னியாகுமரிக் கல்வெட்டு 'கலத்துவாய் நாழி கையுறை உப்பு' என்கிறது. செய்யூர் கல்வெட்டு 'அளத்தால் ஒரு காசு' என்று குறிப்பிடுகிறது. இப்படி உப்பு விளைச்சலுக்கும், உப்பு அளத்தலுக்கும், உப்பு விற்பனைக்கும் வரிகள் விதிக்கப்பட்ட செய்திகளை நாம் அறிகின்றோம்.

**முடிவுரை**

மரக்காணம்-எயில்பட்டினம் சங்ககாலத் துறைமுகம். நதிமுகப்பில் அமையாததால் உப்பங்கழி முகங்களே துறைமுக வாய்ப்பை இங்கு ஏற்படுத்தியிருக்கக்கூடும். மரக்காணத்திலிருந்து செல்லும் இன்றைய பெருவழியின் மூலம் பண்டைக் காலத்தில் தொன்மையான தலைநகரங்களும், சந்திப்புகளும் மரக்காணத்துடன் இணைக்கப் பட்டிருந்தமை உணரப்படும். உப்பின் விளைச்சல் வணிக நடவடிக்கைகளைத் தூண்டி பல்வேறு பொருள்களும் பரிமாறிக் கொள்ள வாய்ப்பளித்துள்ளது. இப்போக்கு விஜயநகரக் காலத்தில் பல்வேறு வணிகர்களும் இங்கு குடியேறும் அளவிற்கு வளர்ந்தது. அரசிற்கு, உப்பு வருவாய் தந்ததால் அரசதிகாரிகளும் உப்பளப் பகுதிகளில் அமர்த்தப்பட்டனர். உப்பளங்கள் கோயில்களுக்குக் கொடையாகத் தரப்படும் அளவு முதலிடம் பெற்றன. கடற்கரையோர வணிகப் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில்

மரக்காணத்திலிருந்து சென்னை கடந்து பழவேற்காடு வரை கழிகள் இணைக்கப்பட்டு கால்வாய் ஏற்படுத்தப்பட்டு நீர்வழிப் போக்குவரத்து உண்டாயிற்று. பல்வேறு வெளிநாட்டு, உள்நாட்டு வணிக நடவடிக்கைகளுக்கும் உப்பு காரணியாக ஆயிற்று.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 'சோபட்மா' என்பதனில் உள்ள 'சோ' மற்றும் எயிற்பட்டினத்தில் உள்ள எயில் ஆகியவை மதில் சுவரைக் குறிப்பதால் எயிற்பட்டனம் எரித்திரையக் கடற்செலவு ஆசிரியர் குறிக்கும் சோபாட்மா என்று பல ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். நீர்ப்பெயறு மாமல்லபுரம் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். தி.நா.சுப்பிரமணியம் தனது நூலில் Sapatna என்ற தலைப்பில் மேற்சொன்ன கருத்துக்களைக் குறிப்பிட்டு நீண்ட விவாதத்திற்குப் பின் சோபாட்மா நீர்பெயறு சதுரங்கப்பட்டினம் என்றும் எயிற்பட்டினம் இன்றைய மரக்காணம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எயிற்பட்டினம் என்பதை எயினர்பட்டினம் என்றும் காட்டியுள்ளார். Subramaniam, T.N., 1967, *The Pallavas of Kanchi in South East Asia,* Madras, pp.121-133.

2 'எயிற்பட்டினமான விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம்' *க.ஆ.அ.* 26/1919, குலோத்துங்கன் 4வது ஆண்டு, மரக்காணம் கல்வெட்டு, 'ஜெயங்கொண்ட சோழமண்டலத்து தம்பித்துணைச் சோழவளநாட்டு பட்டின நாட்டுப் பிரம்மதேயம் எயிற்பட்டினம்' க.ஆ.அ. 30/1919, விஜயராஜேந்திரன் 35-ஆவது ஆண்டு, மரக்காணம் கல்வெட்டு.

3 எ.சுப்பராயலு, 1983, 'பொருளியலும் வணிகமும்', *தமிழ்நாட்டு வரலாறு, சங்ககாலம்:வாழ்வியல்,* தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு; மேற்கோள், *சிறுபாணாற்றுப்படை* 154-55.

4 *க.ஆ.அ.* 23,24/1919, இராசராசன் 19-ஆவது ஆண்டு (கி.பி.1004), இராஜேந்திரன் 9-ஆவது ஆண்டு (கி.பி.1021).

5 *க.ஆ.அ.* 24/1919, இராஜேந்திரன் 9-ஆவது ஆண்டு (கி.பி.1021). இக்கல்வெட்டுக்களும் இன்னும் பிற கல்வெட்டுக்களும் திரு.உத்திராடம், திரு சுப்பிரமணி ஆகிய மாணவர்கள் உதவியுடன் நேரில் படிக்கப்பட்டன.

6 எ.சுப்பராயலு, *மேலது.*

7 Mahadevan, I., 1996,*Corpus of Tamil-Brahmi Inscriptions*, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology, Govt. of Tamil Nadu, Madras, pp.1-12.

8 எ.சுப்பராயலு, *மேலது*

9 *மேலது*

10 Ramasamy,N.S., 1980, *Mamallapuram: An Annotated Bibliography*, New Era Publications, Madras.

11 *தெ.இ.க.* 17/264

12 *தமிழ்ப் பேரகராதி* குறிப்பிட்டசொல்

13 *தெ.இ.க.* 17/264. வணிகப் பொருட்கள் பின்வருமாறு: 1.நெல், அரிசி முதலிய தானியங்கள், 2. எண்ணெய், நெய், 3, கருப்புகட்டி 4,மிளகு, சீரகம், மஞ்சள், வெந்தையம், பாக்கு, சுக்கு, கடுக்காய், சர்க்கரை முதலிய கடைச் சரக்குகள், 5, மஞ்சிலி, யீழம், யிஞ்சி 6,தெற்கு வழிசென்ற துடப் பிடவை, 7, சில்லரைச் சரக்குகள்

14 *க.ஆ.அ* 34/1919,வீரகம்பண உடையார் காலம்

15 *க.ஆ.அ:* 41/1919, அச்சுததேவராயர் காலம்

16 நேரில் படிக்கப்பட்டது. விசைய வருடம் குறிக்கப்பட்டுள்ளது

17 *க.ஆ.அ.* 24/1919, நேரில் படிக்கப்பட்டது

18 பெருமுக்கல் கல்வெட்டு எண்.5 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, *க.ஆ.அ.* 43/1905.

19 *தெ.இ.க.* 8/31, இவ்வூரில் 90 அளங்கள் இருந்தன. பரதேசிகளும் பிறரும் காசு கொடுத்து உப்பு வாங்கும்போது 'உப்புப்பிடி' என்ற தீர்வை விதிக்கப்பட்டது.

20 *தெ.இ.க.* 8/167, முதலாம் குலோத்துங்கன் காலம் இன்றும் சென்னைப் பகுதியில் வீடுகள் கட்டக் கடைகாலில் கொட்டி நிரப்பப்படும் மண், 'சவுட்டு மண்' என்று அழைக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

21 'உமுந்துஞ்சாவியுமுப்புமலரும்', *பெருங்கதை*, 331

22 *தெ.இ.க.* 8/31, செய்யூர், முதலாம் குலோத்துங்கன் காலம்

---

23 அகநானூறு:159

24 தெ.இ.க. 6/167

25 Mahaligam, T.V., 1975, *Administrative* **and Social** *Life Under Vijayanagar*. University of Madras, Madras, (2nd edition), p.30.

26 க.ஆ.அ. 23,24 /1919

27 *தி.தொ.வரிசை* (TAS) தொகுதி 1, பக். 240-42, கன்னியாகுமரி, இராசாதிராசன், *கல்வெட்டு* (1988) ஆண்டுப் பதிப்பு.

28 க.ஆ.அ. 367/1911

29 கள ஆய்வில் அறிந்தது. 1996-ஆம் ஆண்டிற்கான உம்பளக்குத்தகை ரூ.86,000 வரை ஏலம் விடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் ஒரு வருடத்திற்கு 75 கிலோ எடையுள்ள சுமார் 1500 மூட்டை உப்புத்தரும். உப்பெடுப்பதற்காக இந்திய அரசு உப்புத்துறைக்கு மூட்டை ஒன்றுக்கு 0.25 காசு தீர்வை கட்டவேண்டும்.

30 Sircar, D.C., 1966, *Indian Epigraphical Glossary,* Motilal Banarsidas, Delhi,p.259

31 Shanmugam, P., 1977, "Revenue Terms Index", *The Revenue System of the Cholas*, p.207. & *தெ.இ.க.*7/31.

32 உப்பு கையுறை, பிடி என்பதற்கு *திருவாங்கூர் கல்வெட்டுத் தொகுதியில்* டி.ஏ.கோபிநாதராவ் விளக்கம் தந்துள்ளார். தஞ்சைப் பகுதியில் விளைந்த நெல் அளந்து கட்டும்போது ஒவ்வொரு 60 மரக்கால் எண்ணிக்கைக்கும் ஒரு கையளவு நெல் எடுத்து அடையாளமாகத் தனிக் கூறாக வைக்கப்படும். நெல் முழுதும் அளந்து முடிக்கப்பட்டதன் பின் இக்கூறுகள் எண்ணப்பட்டு மொத்த நெல்லின் அளவு கணக்கிடப்படும். அவ்வகையில் உப்பளக்கும்போது சேர்ந்த உப்பு கோயிலுக்குக் கொடுக்கப் பட்டிருக்கலாம் என்கிறார். *திருவாங்கூர் கல்வெட்டுத் தொகுதி* 1, பக்.240-42, (1988-ஆம் ஆண்டுப் பதிப்பு).

33 *தெ.இ.க.* 6/167, ஒரு மாடைக் காசுக்கு ஒரு குறுணி (மரக்கால்) உப்பு.

# 19. கிழக்குக் கடற்கரையின் இரு இடைக்காலத் துறைமுகங்கள்

**சு.இராசவேலு**
சென்னை

**தெ**ன்னிந்தியாவின் கிழக்குக் கரையான வங்கக் கடற்கரை ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட துறைமுக நகரங்களைத் தன்னகத்தே கொண்டிலங்கியது. சங்க இலக்கியங்கள் முற்காலத்தில் கடல் வணிகம் மிகச் சிறப்பாக நடந்தமையை சுட்டுகின்றன.

*புறநானூறு* (66.1-2),

> *'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*
> *வளிதொழில் ஆண்ட உரவோன் மருக'*

எனக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் தென்னிந்தியக் கடல்களில் நாவாய் என்னும் மரக்கலம் கடல் வணிகத்திற்கு பயன்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. தமிழ் நாட்டிலிருந்து கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்கும் கடல் வழியாகவே வணிகம் நிகழ்ந்துள்ளமையை பல்வேறு சான்றுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. கங்கைச்சமவெளி, கலிங்கம், ஆந்திரக் கடற்கரை நகரங்கள் மற்றும் சில முக்கிய நகரங்களுடன் தமிழர் கடல்வழியாகவே தொடர்பு கொண்டிருந்தனர். கலிங்கத்திலிருந்து பருத்தித் துணிகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. அதே போன்று தமிழகப் பொருட்கள் பல அப்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆந்திரப் பகுதிகளுடனும் தமிழர்கள் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தனர். அமராவதியில் கிடைத்த கல்வெட்டில் தமிழகத்தின் 'தமிள கண்ணன்' மற்றும் அவனது இளவல் 'இளங்கண்ணன்', தங்கை நாகை ஆகியோர் அமராவதி ஸ்தூபி கட்டுவதற்கு உதவிபுரிந்துள்ளனர்[1]. சங்க காலம் முதல் கிழக்குக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்கள் பல தொடர்ந்து ஆங்கிலேய ஆதிக்கம் வரை கடல் வணிகத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தன. அத்தகு சிறப்பு வாய்ந்த இரு இடைக்காலக் கிழக்குக் கடற்கரைத் துறைமுக நகரங்களைப் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**பழவேற்காடு**

சென்னையிலிருந்து 40கி.மீ. வடக்காக பொன்னேரி வட்டத்தில் வங்கக்கடலின் அலைகளால் சூழ்ந்துள்ள பழவேற்காடு மற்றும் டச்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் பண்டக சாலைகளைக் கொண்டு கடந்த நூற்றாண்டில் விளங்கி வந்தது. கடலுடன் ஆரணியாறு, சுவர்ணமுகி மற்றும் பக்கிங்காம் கால்வாய் போன்றவை கலக்கும் இடத்தில் சிறு சிறு தீவுகளுடன் விளங்கும் இப்பகுதி, சோழர் காலத்தில் மிகச் சிறந்த உள்நாட்டு வணிக நகரங்களைக் கொண்டு துறைமுகமாகவும் விளங்கி இருந்தது. இப்பகுதியில் கிடைக்கின்ற சோழர் கல்வெட்டுக்களில் சில வணிகக் குழுக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

குறிப்பாக, பழவேற்காட்டிற்கு அருகில் உள்ள காட்டூர் என்னும் ஊரில் திருவாலீஸ்வரமுடையார் கோயிலில் உள்ள 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தக் கல்வெட்டு ஒன்று இப்பகுதியில் இருந்த பல்வேறு வணிகக் குழுக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது[2]. மைலாப்பூரைச் சார்ந்த வணிகக் குழுவான 'நாணதேசியர்' இவ்வூரை வீரப்பட்டினமாக அறிவிக்கின்றனர். இதனால் இவ்வூரின் பெயரும் அய்யாப்பொழில் காட்டூர் எனப் பெயர் பெற்றது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இவ்வூர் இராஜேந்திர சோழபுரம் எனப்பட்டது[3]. மேலும், இவ்வூருக்கு அருகில் உள்ள திருவேளவாயில் கோயில் இறைவனுக்கு இருவர் வணிகர்கள் நிவந்தங்கள் அளித்துள்ளனர்[4]. இப்பகுதியின் இயற்கை அமைப்பும் கடற்கரையின் அமைப்பும் இங்கு மிகச் சிறந்ததொரு துறைமுகம் இருந்திருக்கவேண்டும் என்பதையும் வணிகக் குழுக்கள் பல இத்துறைமுகத்தின் சுற்றுப்பகுதிகளில் தங்கி வணிகம் மேற்கொண்டனர் என்பதையும் அறிவிக்கின்றன.

இப்பகுதியில் கிடைக்கும் சீன மட்பாண்டத் துண்டுகள் மூலம் இடைக்காலத்தில் சீன நாட்டுடன் இத்துறைமுகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பை அறிய முடிகிறது. இதற்கு கட்டியம் கூறுவது போல் திருவள்ளூர் மாவட்டம் நாகலாபுரத்தில் உள்ள விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு ஒன்று இத்துறைமுகத்தின்

மேன்மையை பறைசாற்றுகின்றது. இக்கல்வெட்டு சக ஆண்டு 1442-ஆம் ஆண்டு (கி.பி.1521) வெளியிடப்பட்டது. இக்கல்வெட்டு இங்கிருந்த துறைமுகத்தை கரைதுறை எனக் குறிப்பிடுகிறது. இத்துறைமுகம் பழவேற்காடாகிய அனந்தராயன்பட்டினம் எனப்பட்டது. கிழக்குக் கடற்கரையில் இருந்த பல்வேறு கரைதுறைகளில் ஏற்றுமதி செய்யும் புடவைகளுக்கு ஆயம் வசூலிக்கும் உரிமையை ஆவினி களப்பாளர் திருவேங்கடமுடையாரின் மகன் அனைத்துலகம் கண்ட அரிதாசர் தெவங்கள் பெருமாள் முதலியார் என்பவர் பெற்று இதன் வருவாயைக் கொண்டு கோயில் மண்டபம் எழுப்ப இசைகின்றார். கிழக்குக் கடற்கரையில் இருந்த பல கரைதுறைகளின் பெயர்கள் கல்வெட்டில் குறிக்கப்படாமல் இத்துறைமுகத்தின் பெயரை மட்டும் இக்கல்வெட்டு குறிப்பதால் விஜயநகர காலத்தில் பழவேற்காடு மிகச் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்திருத்தல் வேண்டும் என்பது விளங்குகிறது.

மேலும் இத்துறைமுகத்தில் இருந்து பல்வேறு சரக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக புடவைகள் தொங்கு கப்பல்களில் ஏற்றப்பட்டன. தொங்கு கப்பல் என்பது சீன வகை கப்பலாகும். தற்காலத்தில் 'சுங்க்' எனப்படும் கப்பல் வகையைச் சார்ந்தது. இக்கப்பல் இங்கிருந்து பல்வகை பொருட்களைக் குறிப்பாக புடவைகளை ஏற்றிச் சென்றுள்ளதிலிருந்து தூரக்கிழக்கு நாடுகளுடன் இத்துறைமுகம் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தமையை அறியமுடிகிறது. மேலும் பிற்காலத்திலும் இத்துறைமுகத்திலிருந்து புடவைகள், ஆங்கிலேயர், போர்ச்சுக்கீசியர் மற்றும் டச்சுக்கார வணிகர்கள் மூலம் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன.

## மோட்டுப்பள்ளி

இடைக்காலத்தில், வங்கக்கடலின் துறைமுகங்களில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்த பிறிதொரு கடற்கரை நகரம் மோட்டுப்பள்ளி என்னும் நகரமாகும். ஆந்திர மாநிலத்தில் குண்டூர் மாவட்டத்தில் பாபட்லா வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரைக் குறித்து மார்க்கோபோலோ குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடும் முத்பிலி என்னும் துறைமுக நகரம் இதுவே ஆகும்[5]. 13-ஆம் நூற்றாண்டு அளவில் இந்நகரம் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கி வந்துள்ளது. இத்துறைமுகத்திலிருந்து இந்திய உயர்வகை மஸ்லின் ஆடைகள் மற்றும்

வைரங்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இத்துறைமுகம் கல்வெட்டுக்களில் தேசியுகந்த பட்டினம் என வழங்கப்பட்டுள்ளது. வணிகர்களுக்கு உகந்த நகரம் என்பது இதன் பொருள். இவ்வூரில் உள்ள வீரபத்ர சுவாமிகோயிலின் மண்டபத்தில் உள்ள தூண் ஒன்றில் கி.பி.1244-45 ஆண்டுத் தெலுங்கு கல்வெட்டு ஒன்றும்[6] மற்றொரு தூணில் கி.பி.1358-ஆம் ஆண்டைச் சார்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்றும் உள்ளன[7].

முதல் கல்வெட்டு காகதிய மன்னன் கணபதி தேவரின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு சக ஆண்டு 1166 குரோதின வருஷத்தில் வெளியிடப்பட்டது. காகதிய அரசின் பொருளாதாரத்தை நிர்ணயம் செய்கின்ற வணிக நகரமாக மோட்டுப்பள்ளி விளங்கியதால் இந்நகரத்தின் மீது காகதிய மன்னர்கள் தனிக் கவனம் செலுத்தினர். எனவே, காகதிய மன்னன் கணபதி தேவன் உலக வணிகர்களுக்கு என மேற்குறித்த கல்வெட்டை வெளியிட்டுள்ளான். இக்கல்வெட்டின் மூலம் இத்துறைமுகத்திற்கு வந்திறங்கும் அயல் நாட்டு வணிகர்கள் குறிப்பாக பல்வேறு நாடுகள், தீவுகள் மற்றும் நகரங்களில் இருந்து வரும் பல்வேறு நாட்டின் வணிகர்கள் சலுகைகளைப் பெற்றுள்ளனர். இக்கல்வெட்டு வணிகர்களின் 'அபய சாசனம்' எனக் குறிக்கப்பட்டது. இதன் மூலம் இத்துறைமுகத்திற்கு கப்பலில் வந்திறங்கும் சரக்குகளுக்கும் வணிகர்களுக்கும் தக்க பாதுகாப்பிற்கு மன்னர்கள் உத்திரவாதம் அளித்து அயலக வணிகத்தை வளர்த்துள்ளனர். இக்கல்வெட்டு வெளியிடப்படுவதற்கு முன் இத்துறைமுகத்திற்கு கப்பல்களில் வந்து இறங்கிய பொருட்களை மன்னர்கள் வலுக்கட்டாயமாக அபகரித்தனர் என்பதையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்நிலை இக்கல்வெட்டு ஆணையின் மூலம் மாற்றப்பட்டது. இத்துறைமுகத்திற்கு யானைகள், குதிரைகள், பொன் போன்றவை வந்திறங்கின. கடல் மற்றும் புயல் பெருங்காற்று ஆகியவற்றால் அபாயம் ஏற்பட்டு பழுதடைந்து இத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கும் வணிகர்களுக்கும் அபயம் அளிக்கின்ற துறைமுகமாக இது விளங்க காகதிய மன்னன் கணபதிதேவன் உறுதி அளித்துள்ளார். இதன் மூலம் இங்கு வரும் பழுதடைந்த கப்பல்கள் சீர் செய்யும் வசதியை இத்துறைமுகம் பெற்று விளங்கியுள்ளமையை அறிய முடிகிறது. சரக்குகளை ஏற்றி வரும் பழுதடைந்த கப்பல்களுக்கு மிகக் குறைவான 'ஆயம்' வசூல் செய்யவும்

மன்னர் உத்தரவு இட்டுள்ளார். மேலும் அக்காலத்தில் கடற்பயணம் மிகக் கடினமானது என்பதற்காக பல சலுகைகளை வணிகர்களுக்கு அளிக்க அரசர் முன்வந்துள்ளமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. வெளிநாடுகளில் இருந்து வரும் இறக்குமதி பொருள்களுக்கும் உள்நாட்டு ஏற்றுமதி பொருள்களுக்கும் சுங்க ஆயமாக முப்பதில் ஒரு பங்கு இத்துறைமுகத்தில் வசூலிக்கப்பட்டது. ஒரு தோலா சந்தனத்திற்கு ஒரு பகோடா கால் பணமும், உள்ளூர் மற்றும் சீன கற்பூரத்திற்கும் முத்துக்களுக்கும் முறையே நான்கில் மூன்று, ஐந்தில் மூன்று என்ற விகிதத்தில் பணமும் வசூலிக்கப்பட்டது. பன்னீர், தந்தம், கற்பூர எண்ணை, செம்பு, தாமிரம், ஈயம், பட்டுநூல்கண்டு, பவளம் மற்றும் வாசனைப் பொருட்களுக்கு ஆயமாக ஒன்றேகால் மற்றும் ஒன்றில் எட்டு பணம் வசூலிக்கப்பட்டது. ஒரு பகோடா அளவுள்ள மிளகிற்கு முக்கால் மற்றும் எட்டில் ஒரு பங்கும், ஒரு கட்டு பட்டுத்துணிக்கு ஐந்தரை பணமும், ஒரு இலட்சம் பாக்குள்ள பொதிக்கு ஒரு பகோடா மூன்றேமுக்கால் பணமும் வரியாக இத்துறைமுகத்தில் வசூல் செய்யப்பட்டது.

கி.பி.1358-ஆம் ஆண்டைச் சார்ந்த தமிழ் கல்வெட்டு மேற்குறித்த சலுகைகளை மிகத்தெளிவாக மீண்டும் புதுப்பித்து அளிக்கிறது. இக்கல்வெட்டு அன்னபோத்து ரெட்டியின் காலத்தில் சக ஆண்டு 1280, விளம்பி வருஷம், ஆவணி மாதம் 15-ஆம் நாள் (ஆகஸ்ட் 13) வெளியிடப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து வரும் வியாபாரிகளுக்கும் (தீபாந்திர வியாபாரிகள்) கரைப்பட்டினங்களில் இருக்கும் நாநாதேசி வியாபாரிகளுக்கும் இக்கல்வெட்டின் மூலம் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. கடலின் பயணத்தால் இன்னலுற்று வரும் வணிகர்கள் இந்நகரத்தில் நிலையாக, தாங்கள் விரும்பும் காலம் வரை தங்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன. அவர்கள் நிலையாக வாழ நிலங்கள் அளிக்கப்பட்டன. மேலும் அவ்வாறு குடியிருப்போர் மீண்டும் போகவேண்டிய ஊர்களுக்கு போகவும் வேண்டிய வழிவகை அரசால் செய்து தரப்பட்டது. வெளிவணிகர்கள் செலுத்தி வந்த 'அபுத்திரிக தண்டம்' எனப்படுகின்ற யாத்திரை வரி இந்நகரத்தில் நீக்கப்பட்டது. பொன், வெள்ளிப் பொருள்களுக்கு ஆயம் வசூலிக்கப்பட்டது. சந்தனத்திற்கு மூன்றில் ஒரு பங்கும் அயலக வணிகர்கள் தாம் கொண்டு வந்த பொருள்களை தாங்கள் விரும்புவருக்கு விற்கவும் அவர்கள்

விருப்பப்படி இங்கிருந்து சரக்குகளை ஏற்றிச்செல்லவும் உரிமை வழங்கப்பட்டது. புடவைகளை கொண்டுசெல்ல வரி விதிக்கப்படவில்லை. மாறாக மற்ற பொருள்களுக்கு சுங்கம் மற்றும் ஆயம் வசூல் செய்யப்பட்டது. இந்நகரம் கடல் பயணத்தால் அல்லல் உற்று வரும் வணிகர்களுக்கு 'அஞ்சினான் புகலிடமாக' அறிவிக்கப்பட்டது. தெற்கு மற்றும் வட திசைகளில் இருந்து வந்த பொருள்களுக்கும் வரி வசூல் செய்யப்பட்டது. ஏற்றுமதி செய்யப்படுகின்ற 25 புடவைக் கட்டுக்கு மூன்றும் வெளிநாடுகளுக்கு செல்கின்ற நூறு புடவைகளுக்கு ஐந்தும் முத்துக்கும் மற்றும் பிற பொருள்களுக்கும் வரி வசூல் செய்யப்பட்டது.

இடைக்காலத்தில் கிழக்குக் கடற்கரையில் இவ்விரண்டு துறைமுகங்களும் மிகச் சிறந்த துறைமுகங்களாக இருந்தன. மேலும் வெளிநாட்டு வணிகத்தை ஊக்குவிக்கும் வகையில் இவ்விரண்டு துறைமுகங்களும் விளங்கியிருந்தன. தென்னகத்தில் இருந்து பட்டுப்புடவைகள், நறுமணப்பொருள்கள், சந்தனம், முத்து மற்றும் பல்வகை உலோகப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதையும் அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 Burgess, J. 1882, "Notes on the Amaravati Stupa", *Archaeological Survey of South India*. Madras, pp.1-55.

2 *க.ஆ.அ.* 256/1912

3 *க.ஆ.அ.* 248/1912

4 *க.ஆ.அ.* 247/1912

5 Yule, H. and Cordier, H., 1993, *The book of Ser Marco Polo*, Vol.2, Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., New Delhi, p.346.

6 *எ.இ.* 12/22

7 *தெ.இ.க.* 27/635

## மோட்டுப்பள்ளியில் அன்னபோத்து ரெட்டியின் கல்வெட்டு

*(SII Vol. XXVII No. 635)* saka 1280 (1358 AD)

1 ஸ்வஸ்திஸ்ரீமது சக
2 ரையாண்டு 12[80]
3 மேற் செல்லாநின்ற வி-
4 ளம்பி சங்வற்சரத்து
5 ஆவணி மாதம் 15
6 தியதி ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமது
7 அன்னபோத்து
8 ரெட்டியாரேன் தீப-
9 ாந்திரத்தில் வியா-
10 பாரிகளுக்கும் கரை-
11 ரப்பட்டணங்களி-
12 ல் நாநாதே[சி] விய-
13 ாபாரிகளுக்கும் இட்-
14 ட மதியாரி சாதன-
15 க் கல்வெட்டு மோ-
16 ட்டுப்பள்ளிக்கு யா-
17 தொருத்தர் குடியிரு-
18 க்குமளவுக்கு இவ-
19 ர்களுக்கு வேண்டு
20 நலப்பாடு செய்து
21 அவர்களுக்கு பூறு-
22 வத்தில் உள்ள காணி
23 தோட்டமும் குடுத்-
24 து தாங்கள் இருக்கு
25 நாள் இருந்து இவட-
26 த்தி நின்று வேண்டின
27 இடத்துக்கு போக கு-
28 றையில்லை பரதே-
29 சிகளுக்கு அபுத்திரி-
30 க தெண்டம் கொள்-
31 ளக் கடவோமல்-
32 ல பொன் வெள்ளிக்
33 கு ஆயம் உள்ளது
34 விட்டோம் சந்[தி]-
35 ணத்துக்கு புறப்பா-
36 டு சுங்கம் பூறுவ-
37 ம் கொள்ளுமதில் மூ
38 ன்ற[த்] தொன்று வி
39 ட்டோம் தாங்கள்
40 கொண்டு வந்த சர-
41 க்கு வேண்டினபடி
42 வேண்டுவாற்கு
43 விற்று வேண்டி-
44 னபடி மறு சர-
45 க்குங் கொண்-
46 டு போக கடவ-
47 கள் பண்டாரத்-
48 துக்கு கொண்
49 டு புடவை இட-
50 க் கடவோமல்-
51 ல மற்றுள்ள ச[ர]-
52 க்குகளுக்கு சு[ங்]-
53 கம் பூறுவம் கெ
54 காள்ளும்படி த-
55 ப்பாமல் கொள்-
56 ளக் கடவோம்
57 இப்படியை [பு]த்-
58 தி பண்ணி எல்ல-
59 ாரு வாக குறை இ-

60 ல்லை அஞ்சிநா-
61 ன் புகலிடம்
62 மதியாரிப்படி ெ[த]
63 ற்கின்றும் வரும்
64 உருவுக்கு இறக்கு-
65 மதி நூற்றுக்கு மூ-
66 ன்றும் ஏற்றுமதி
67 புடவை உரு நூற்றுக்கு
68 பணம்* 2 வடக்கின்-
69 று வரும் உருவுக்கு
70 100-ற்றுக்கு பணம் ஏற்று-
71 மதி புடவை உரு
72 100-ற்றுக்கு பணம் 3 தீபாந்-
73 திரத்தில் உருவுக்-
74 கு இறக்குமதி குத்-
75 தை ஏற்றுமதி பு-
76 டவை உரு நூற்று-
77 க்கு பணம் 3 முத்துக்-
78 கு நூற்றுக்கு [ஏழ]
79 ரை

* பணம் குறியீட்டில் உள்ளது.

# 20. தொண்டைநாட்டுப் பகுதியில் பிற்காலத் துறைமுகங்கள்

ப. சண்முகம்
சென்னை

தமிழகம், நீண்ட கடற்கரையைப் பெற்றுள்ளதால், கடல்வழித் தொடர்புகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்துள்ளது. இத்தொடர்புகள் பண்பாடு மற்றும் வணிக உறவுகளில் மேலோங்கி இருந்துள்ளது. பண்டைக் காலமுதலே ரோமானிய, கிரேக்க, எகிப்து, அரேபிய நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளோடும் வணிகத் தொடர்புகள் நிலவியுள்ளன. இத்தொடர்புகள் யாவும் கடல்சார் பெருவழியினால் ஏற்பட்டன என்பதை உறுதிசெய்வதற்கான பல சான்றுகள் தமிழகத்திலும், பிற நாடுகளிலும் கிடைத்துள்ளன. கடல்வழி வணிகம் நடந்தேற துறைமுகங்கள் பல தோன்றின. இவற்றில் அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை போன்ற துறைமுகங்கள் சங்ககாலத் தமிழகத்தில் சிறப்பாகத் திகழ்ந்த துறைமுகங்களாகும்.

இடைக்காலத்தில் நிலவிய அரசியல், பொருளாதார நிலைப்பாடுகள் வணிக வளம் பெறுவதற்குத்தக்க தூண்டுகோலாக இருந்தன. பல்லவர் ஆட்சிக்காலத்திலும், பின்னர் சோழர் ஆட்சிக்காலத்திலும் பொருள்களின் உற்பத்தி அளவு கணிசமாக உயர்ந்தது. விவசாயப் பொருள்களோடு துணிவகைகள், ஆடம்பரப் பொருள்கள் உற்பத்திக்கு ஊர்களும் நகரங்களும் முக்கிய பங்காற்றின. பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகிய பணிகளை வணிகக்குழுக்கள் மேற்பார்வையிட்டன. இக்காரணங்களால் இடைக்காலத் தமிழகத்தில் வணிகப்பெருக்கம் ஏற்படுவது சாத்தியமாயிற்று.

இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் கடல் வழி வணிகம் சிறப்புற நடைபெற்றுள்ளது. இக்காலத்தில், குறிப்பாக 12-ஆம் நூற்றாண்டு தொடங்கி தமிழ் நாட்டு வணிகக் குழுக்கள் பல சீனாவிற்கு அனுப்பப்பட்டன. சீனப் பீங்கான் பொருள்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, இந்தியா, அராபியா, கிரேக்கப் பகுதிகளில் பயன் படுத்தப்பட்டன. இக்காலத் தமிழகத் துறைமுகங்கள் பல சீனப் பீங்கான் வணிகத்தில் FFடுபட்டன. இத்துறைமுகங்களின் தன்மை மற்றும் தோற்றமும் வீழ்ச்சியும் சிறப்பாக ஆராயப்பட வேண்டுவன.

சீனப்பீங்கான் வணிகத்தல் ஈடுபட்ட தமிழகத் துறைமுகங்கள் பல அண்மைக் காலங்களில் பலராலும் கள ஆய்வு செய்யப்பெற்றன[1].

இந்தியாவுடனான சீனப் பீங்கான் வணிகம் ஏறக்குறைய 11-ஆம் நூற்றாண்டு தொடங்கி நடைபெற்று வந்துள்ளது. இந்தியாவின் பலபகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட சீனப் பீங்கான் துண்டுகள் இதற்குச் சான்றாக அமையும். தமிழகத்தில் இப்பீங்கான் துண்டுகள் கங்கைகொண்ட சோழபுர அகழாய்விலும் பிற இடங்களிலும் கிடைத்துள்ளன. தமிழகத்தில் கிடைத்த பீங்கான்களில் தொன்மையானது எனக் கருதப்படும் 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பீங்கான்கள் கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வில் கிடைத்துள்ளன. பிற்காலத்திய பீங்கான்களும் தமிழகத்தின் பலபகுதிகளில் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கோவளம், நாகபட்டினம், தேவிப்பட்டினம், பெரியபட்டினம், பழையகாயல், களிமண்குண்டு போன்ற பலவிடங்களில் நடத்தப்பெற்ற கள ஆய்வுகளில் இவை கிட்டியுள்ளன. சீன வணிக உறவுகளை நிலை நிறுத்தும்வண்ணம் சீனக் காசுகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒலயகுன்னம், தல்லிக்கோட்டை, விக்ரம், நெடுங்காடு, தேரழுந்தூர் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன[2]. இடைக்காலத்தில் சீனாவுடன் மேற்கொண்ட வணிக உறவுகளை இச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

இந்தியாவின் மேற்குப்பகுதி நாடுகளோடும் வணிக உறவுகளைத் தமிழகம் மேற்கொண்டிருந்தது. அராபிய வணிகர்களோடு ஐரோப்பிய வணிகர்களும் இடைக்கால கடல்வழி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். முக்கியமாக, குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. இவ் வணிகத்தைப் பற்றி சில கல்வெட்டுக்களும் பயண நூல்கள் சிலவும் நமக்கு சான்றுகளைத் தருகின்றன. இச்சான்றுகளைத் தொகுத்து வட தமிழ் நாட்டில் பிற்காலத்தில் நிலவிய துறைமுகங்கள் சிலவற்றைப் பற்றிய ஆய்வு இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட தமிழ்நாட்டில், தொண்டைநாட்டுப் பகுதியில் இக்காலத்தில் இயங்கி வந்த துறைமுகங்களில் 1.பழவேற்காடு, 2.மயிலாப்பூர், 3.கோவளம், 4.மாமல்லபுரம், 5. சதுரங்கப்பட்டினம், 6. மரக்காணம், 7. அரிக்கமேடு ஆகிய துறைமுக நகரங்களின் தன்மை இங்கு ஆராயப்படுகிறது.

தமிழ்நாட்டின் வட கோடியில் பழவேற்காடு அமைந்துள்ளது. கப்பல்கள் நங்கூரமிடத் தேவையான அமைதியான நீர்ப்பரப்பை பெற்றுள்ளது. சங்க இலக்கியங்கள் இவ்வூரைத் துறைமுக நகரம்

எனக்குறிக்கவில்லை. ஆயினும், சங்க காலத்திலேயே இவ்வூர் துறைமுகமாகத் திகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. பிற்காலத்தில் இவ்வூர் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளில் பழவேற்காட்டின் பல பகுதிகளில் சீனப் பீங்கான்கள் கண்டெடுக்கப்பட்டன. இப்பீங்கான்கள், குறிப்பாக கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. எனவே கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் இவ்வூர் துறைமுகமாக விளங்கியிருக்கலாம். சீனக் கப்பல்கள் வந்து சென்றன எனவும் அறியலாம்.

கிருஷ்ணதேவராயரின் நாகலாபுரம் கல்வெட்டு (கி.பி. 1521) இவ்வூரை அனந்தராமன் பட்டினம் என்று அழைக்கிறது. இப்பட்டினம் கரைதுறையாக, துறைமுகமாக நிலவியது என்று இக்கல்வெட்டு குறிக்கிறது[3]. இத்துறைமுகத்தில் தொங்கு கப்பல் மற்றும் பிற மரக்கலங்கள் வந்து சென்றன. தொங்கு (Tong) கப்பல் சீனக் கப்பலைக் குறித்தது என்று கருதி சீனாவுடன் வணிகம் இக்காலத்தில் நடைபெற்றதாக பா.ஜெயக்குமார் கருதுவர்[4]. இத்துறைமுகத்தில் துணிவகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன; சரக்குகளுக்கு வரி விதிக்கப்பட்டது. சந்திரகிரியிலிருந்து (சித்தூர் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்) பல மண்டலங்களிலிருந்தும் வந்த செட்டிகள் வணிகத்தை மேற்கொண்டனர். இவ்விடத்தில் 1621-இல் டச்சுக்காரர்கள் பண்டக சாலையை ஏற்படுத்தி வணிகம் செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் முக்கியமாக துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். துறைமுகம் எவ்வாறு செயல்பட்டது எனத் தெளிவாக அறிய இயலவில்லை என்றாலும், கப்பல்கள் கரையை ஒட்டி நிறுத்திவைக்கப்பட்டு, சிறு தோணிகளில் பொருள்களை இறக்கி கரைக்குக் கொண்டுவந்திருக்கலாம்.

சென்னை மாநகரத்தில் அமைந்துள்ள மயிலாப்பூர், சங்க காலத்திலேயே துறைமுக நகராக விளங்கியிருக்க வேண்டும். கடற்கரையை ஒட்டிய பகுதியில் கட்டிடம் கட்டத்தோண்டிய குழிகளில் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த மண்பாண்ட சில்லுகள் கிடைத்துள்ளன. சங்க காலத்திலேயே மக்கள் குடியிருப்புகள் இருந்துள்ளமை இதனால் புலப்படும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டளவில் துறைமுக நகராக விளங்கியது தெளிவு. கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரை இத்துறைமுகம் பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டும். சோழர் காலத்திலும் இத்துறைமுகம் சிறப்போடு இருந்துள்ளமை பல கல்வெட்டுக்கள் மூலம் புலப்படும். கி.பி.11-12 -ஆம்

நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் இவ்வூரைப் பட்டினம் என்று குறிக்கின்றன. 'இருந்து பரிமாறுவார்' என்று குழுவைச் சில கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. இக்குழு ஏற்றுமதி இறக்குமதி செய்த வணிகக்குழுக்கள் எனக் கருதுவார் பா.ஜெயக்குமார்[5].




படம் 1 தொண்டை நாட்டுப் பகுதியில் பிற்காலத் துறைமுகங்கள்

மேலும் பல வணிகர்கள் இங்கு செயல்பட்டனர் என்று சில கல்வெட்டுக்கள் குறிக்கும்[6]. காட்டூர் (பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்) கல்வெட்டு மூலம் மயிலாப்பூர் துறைமுகத்திற்கு வருகின்ற வணிகர்களிடமிருந்து வரி பெற்றுக்கொள்ள நானாதேசிப் பெருவணிகர் குழு இசைந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது[7]. இத்துறைமுகத்தில் நான்கு திசை ஆயிரத்தார், பதினெட்டுப்பட்டினம், முப்பத்திரண்டு வேளாபுரம், அறுபத்துநான்கு கடிகைத் தாவளம் ஆகிய வணிகக் குழுக்கள் செயல்பட்டன. கருநாடகக் கல்வெட்டுக்களில் மயிலாப்பூர் ஒரு சிறந்த வணிகத் தலமாக சொல்லப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களில் பன்னாட்டு வணிகர்கள் வணிகத்தை மேற்கொண்டதைத்

தெரிவிக்கின்றன. இங்குள்ள அங்காடியில் வேளாண் பொருட்கள் மசாலாப் பொருட்கள் மற்றும் அச்சடித்த துணி வகைகள் விலைபோயின. கி.பி.1321-இல் வந்த பிரையர் ஓடெரிக், மயிலாப்பூரில் பின்பற்றப்பட்ட சில சமய வழக்கங்களைக் குறிப்பிடுவதிலிருந்து அக்காலத்தில் இந்நகரம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

14-ஆம் நூற்றாண்டு தொடங்கி சீன நாட்டோடு வணிகம் நடைபெற்றதற்கான சான்றுகள் கிட்டியுள்ளன. சீனக் கப்பல்கள் இத்துறைமுகத்தை நாடிச் சென்றன என்பர் ஜான் டெ மாறிநொல்லி (14-ஆம் நூற்றாண்டு). ஜான் மாறிநொல்லியின் கூற்றுப்படி சீனக் கப்பல்கள் பல இத் துறைமுகத்தில் தங்கிச் சென்றுள்ளன. 16-ஆம் நூற்றாண்டில் தூயர்த் பர்போசா இத்துறைமுகத்திலிருந்து மலாக்கா, பெரு, சுமத்ரா மற்றும் சீனாவிற்கு விலையுயர்ந்த துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று தெரிவிப்பர்.

இன்றைய மயிலாப்பூருடன் பழந்துறைமுகத்தை ஒப்பிட்டாலும் துறைமுகப் பகுதி என்று தற்போது எப்பகுதியையும் சுட்ட இயலவில்லை. பிற்காலங்களில் இப்பகுதியில் கோட்டைகள் கட்டப்பட்டு வணிகத் தலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி இருப்பிடமாகவும் பயன்பட்டுள்ளது. இப்பகுதியின் கிழக்குப்பகுதியில் கழி முகம் உள்ளது. இப்பகுதி பறவைகள் தங்குமிடமாகவும் உள்ளது. இப்பகுதி கப்பல்கள் வந்து செல்வதற்கு ஏற்புடையது. இப்பகுதியில் கடலில் கப்பல்கள் நிறுத்துவதற்கு வசதியாக இருந்திருக்கலாம். முக்கியமாக இப்பகுதியில் சீனப் பீங்கான்கள் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கப்பல்கள் எவ்விடத்தில் நிறுத்தப்பட்டன என்று ஓரளவு ஊகிக்கலாம். 16-ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்த கப்பல்கள் நடுக்கடலில் கப்பலை நிறுத்திவிட்டு சிறுபடகுகள் மூலம் இப்பகுதியை அடைந்தனர் என்ற குறிப்பு உள்ளது. இதனால் கப்பல்கள் கடற்கரையையொட்டி நிறுத்தப்பட்டன எனலாம்.

கோவளம் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றுமொரு துறைமுகமாகும். பண்டைக்காலத்தில் இவ்வூர் துறைமுகப்பட்டினமாக இருந்ததற்கான சான்றுகள் ஏதுமில்லை. இடைக்காலக் கல்வெட்டுக்கள் இவ்வூரை கோவிளம் பட்டினம் என்று குறிக்கின்றன. இதனால் இவ்வூர் முக்கிய வணிக நகரமாக விளங்கியிருக்கலாம். சென்னைப் பல்கலைக்கழகம் 1989-ஆம் ஆண்டிலும், தமிழ்ப் பல்கலைக்கழகம் 1995-ஆம் ஆண்டிலும் இவ்வூரில் கள ஆய்வுகள் மேற்கொண்டன. கடற்கரையை ஒட்டியுள்ள

பகுதிகளில் 13-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீனப் பீங்கான்கள் (செலடான் மற்றும் வெள்ளை-நீல வண்ணப் பீங்கான்கள்) கண்டெடுக்கப்பட்டன. பிற்காலங்களில் முசுலீம் வணிகர்கள் இப்பகுதியில் வணிகம் மேற்கொண்டனர். தொடர்ந்து ஐரோப்பிய வணிகர்களின் வணிக இடமாக சில சமயம் இவ்வூர் இருந்தது. இத்துறைமுக நகருடன் பல உற்பத்தி மையங்கள் தொடர்புகொண்டிருந்தன. திருவடந்தை, மயிலாப்பூர், திருவொற்றியூர், நாவலூர் ஆகிய ஊர் வணிகர்கள் தொடர்புள்ளதாக கல்வெட்டுச் செய்திகள் குறிக்கின்றன.

இடைக்காலத் துறைமுகங்களில் சிறப்புற்றதாகக் கருதப்படும் துறைமுகம் மாமல்லபுரம் ஆகும். இத்துறைமுகம் பல்லவர் காலம் முதல் முக்கிய துறைமுகமாக விளங்கியுள்ளது. இங்குள்ள குடைவரைக் கோயில்களைப் பிற கட்டுமானங்களைக் கூர்ந்து நோக்கில் பல்லவர் காலத்தில் முக்கிய நகராக இருந்துள்ளமை புலப்படும். மேலும் பண்டப் பரிமாற்றம், வணிகர்கள் நடவடிக்கைகளுக்காகப் பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. *பெரிய திருமொழி* (கி.பி.7-8-ஆம் நூற்றாண்டு) இவ்வூரை கடல் மல்லை எனக் குறிப்பிட்டு இங்கு கலங்கள் (கப்பல்கள்) தங்கின என்றும் குறிப்பிடுகிறது. முதலாம் மகேந்திரவர்மன் குடைவித்ததாகச் சொல்லப்படும் குடைவரைக் கோயில்களே மாமல்லப்புரத்தின் தொன்மையான கோயில்கள் என்று கருத்தின் அடிப்படையில் இத்துறைமுகம் கி.பி, 6-ஆம் நூற்றாண்டளவிலேயே தோன்றி இருக்கலாம் என இதுவரை கருதினர். அண்மையில் கிடைத்த அகழாய்வுச் சான்றுகள் சில, இத்துறைமுகம் பல்லவர் காலத்திற்கு முன்பே செயல்பாட்டில் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. சோழர் ஆட்சிக் காலத்தில் இத்துறைமுகம் மாநகரம் என்ற பெருமை பெற்றது. இந்நகரத்தின் செயல்பாடுகளைப் பற்றிச் சில கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆயினும், சோழர் காலத்திற்குப் பின்னர் இத்துறைமுகம் தன் பொலிவை இழந்து பிற்காலத்தில் மீண்டும் துறைமுக நகராக மாறியிருக்கலாம். இத்துறைமுகத்தின் அமைவிடம் பற்றிச் சரியான தகவல்கள் கிட்டவில்லை. இன்றைய மகாபலிபுரத்தின் தெற்கே பல்லவர் காலத் துறைமுகப் பகுதி அமைந்திருக்கலாம் என்று தயாளன் கருதுவார்.

மாமல்லபுரத்தின் தெற்கே பாலாறு கடலோடு கலக்கும் இடத்தில் வயலூர் அமைந்துள்ளது. இவ்வூரில் அமைந்துள்ள வியாக்ரபுரீஸ்வரர்

கோயில் தூண்கல்வெட்டு ஒன்று இவ்வூரைப் பிலவாயில் என அழைக்கிறது. இரண்டாம் இராஜசிம்மனின் இக்கல்வெட்டு பல்லவர்களின் கால்வழியை விவரமாக அளித்து பல்லவ மன்னர்களின் ஆட்சி எண்ணிலடங்காத் தீவுக்கூட்டங்களை (Dvipalaksham>லக்ஷம் தீவுக்கூட்டங்கள்) உள்ளடக்கியது எனக் குறிப்பிடும். திருப்பிலவாயில் என்ற பெயர் துறைமுக நகரைக் குறிக்கலாம். எனவே இத்துறைமுக நகர் பல்லவர் காலத்தில் இயங்கியிருக்கலாம். பல்லவர்களுக்குப் பின்னர் இத் துறைமுகத்தின் செயல் பாடுகளை அறிய இயலவில்லை.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாறு கடலில் கலக்கும் இடத்தில் சதுரங்கப்பட்டினம் அமைந்துள்ளது. இவ்வூர் சங்க காலத்தில் துறைமுகமாக விளங்கியுள்ளது என்று அறிவதற்கு ஏற்ற சான்றுகள் இதுவரை கிட்டவில்லை. சோழர் ஆட்சியில் இவ்வூர் துறைமுகமாக மாறியிருக்கலாம். சம்புவராயர் ஆட்சியில் இவ்வூர் இராச நாராயணன்பட்டினம் (1353) என்று அழைக்கப்பட்டது[8]. விசயநகர ஆட்சியில் இவ்வூர் சதிரவாசகன்பட்டினம் என அழைக்கப்பட்டது[9]. இவ்வூரில் பதினெண் விசையத்தார், நானாதேசிகள் போன்ற வணிகக் குழுக்கள் பணியாற்றியுள்ளன[10]. மேலும் பரதேசிகள் என்று சிலரைக் குறிப்பிடுவதால் இவ்வூரில் பல ஊர் அல்லது பல நாட்டு வணிகர்கள் வணிகம் செய்தனர்[11].

14,15-ஆம் நூற்றாண்டுகளில் இத் துறைமுகம் வழியாக பல வணிக நடவடிக்கைகள் நடந்துள்ளன என்று தெரிகிறது. இத்துறைமுகத்தின் சிறந்த ஏற்றுமதிப் பொருட்களாக புடவை விளங்கியது[12]. இத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. முக்கியமாக திருக்கழுக்குன்றம் சிறந்த உற்பத்தி மையமாக விளங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் இத்துறைமுகத்தில் விற்கப்பட்டன. நெல், முத்து, எண்ணை மற்றும் பல மண்டலச் சரக்குகள் இத்துறைமுகம் வாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்டன. உள்நாட்டு உற்பத்தி மையமான திருக்கழுக்குன்ற வணிகர்கள் இத்துறைமுகத்தை நாடி வந்தனர். உள்நாட்டு வணிகர்கள் தொடர்புள்ளமைக்கு சில கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இவ்விடத்தில் சீனப் பீங்கான்கள் கிடைத்துள்ளமை பற்றி சுப்பராயலு தெரிவிப்பர். இச்சான்றுகளைக் கொண்டு சீனாவுடன் வணிக உறவுகளை இத்துறைமுகம் கொண்டிருந்தது எனலாம்.

சங்க காலத்திலேயே மரக்காணம் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. உரோமானிய நூலான '*பெரிப்புளூசு*' ஆசிரியர் ஒரு துறைமுகத்தை சோபத்மா என்று குறிப்பர். இவர் குறிப்பிடும் சோபத்மா இடைக்காலத்தில் எயிற்பட்டினம் என வழங்கப்படுவதாயிற்று. சோழர் காலத்தில் இவ்வூரைச் சுற்றி உப்பு விளைவிக்கும் பல அளங்கள் இருந்தன. இவற்றில் ஒரு அளம் இராசராசன் பெயரால் இராசராசப் பேரளம் என்றப் பெயர் பெற்றிருந்தது. முதலாம் இராசராசனின் கல்வெட்டுக்கள் பல ஊர்களிலிருந்து வந்த வணிகர்கள் கடல் வணிகத்தில் ஈடுபட்டதைத் தெரிவிக்கின்றன[13]. முக்கியமாக உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டதைத் தெரிவிக்கிறது. முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுக்களும் மரக்காணம் முக்கிய துறைமுகம் என்று சான்று தருகிறது[14]. விசயநகரப் பேரரசுக் காலத்திலும் இவ்வூர் சிறந்த துறைமுகமாக விளங்கியது. புக்கரின் கல்வெட்டு மூலம் செட்டிகள், கைக்கோளர், சேனையங்காடிகள் போன்ற வணிகர்கள் இத் துறைமுகத்தில் பணியாற்றியதாகத் தெரிகிறது[15]. மற்றொரு கல்வெட்டு இவ்வூரைத் துறை என்று விளக்குகிறது[16]. இவ்வூரில் முக்கியமாக துணி உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாம்.

இடைக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய மற்றுமொரு முக்கிய துறைமுகம் அரிக்கமேடு ஆகும். சங்க கால முதல் இத்துறைமுகம் பயன்பாட்டில் இருந்துள்ளது. பல்லவ சோழ அரசுகள் காலத்திலும் இவ்வூர் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. சோழர் காலக் காசுகள் பலவும் இவ்வூரில் கிடைத்துள்ளன. இங்கு நடைபெற்ற அகழாய்வுகளில் சீனப் பீங்கான்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பீங்கான்கள் செலடான் வகையைச் சார்ந்தவை. மேலும் இப்பீங்கான்கள் (சோங் அரசு) 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. எனவே இத்துறைமுகமும் சீன வணிகத்தில் ஈடுபட்டுள்ளது தெளிவு. அரியாங்குப்பம் ஆறு கடலுடன் சங்கமிக்கும் இடத்தில் அரிக்கமேடு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவ்விடத்தில் வளைந்து செல்வதால் கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது. பிற்காலங்களில் வண்டல் படிவினால் கப்பல்கள் வரும்வழி மோசமாயிருக்கலாம். இதனால் இத் துறைமுகம் பிற்காலங்களில் தன் பொலிவை இழந்திருக்கலாம்.

இத்துறைமுகங்களின் அமைவிடங்களைப் பற்றி தெளிவாகக் கணிக்க இயலவில்லை. துறைமுகம் சார்ந்த இக்காலக் கட்டிடங்கள் இதுகாறும் தென்படவில்லை. இதனால் இத்துறைமுகங்களின் கட்டுமானப்

பணிகளைப் பற்றியோ துறைமுக தன்மைகளைப்பற்றியோ சரியாக அறிய இயலவில்லை. சீனப் பீங்கான்கள் கிடைக்குமிடங்களுக்கு அருகே துறைமுகங்கள் இருக்கலாம் என்ற கருத்து சரியானதே என்றாலும் கப்பல்கள் வந்து நங்கூரமிடுவதற்கான வசதிகளைப் பற்றி ஒன்றும் அறிய இயலவில்லை. பொதுவாக தமிழகக் கடற்கரை அதிகம் பிளவுபடாமல் நேராக அமைந்திருப்பது துறைமுக அமைப்புக்கு உகந்ததல்ல என்ற கருத்துண்டு. கப்பல்கள் அல்லது ஓடங்களை நிறுத்துவதற்கு ஏற்ற இடங்களாக ஆற்று முகத்துவாரம், கழிமுகங்கள் ஆகியவற்றைக் கருதலாம். இவ்வகையில் கோவளமும், அரிக்கமேடும் சிறந்த வசதிகளைப் பெற்றிருந்தன என்பதில் ஐயமில்லை. மயிலாப்பூரில் இவ்விதத் தன்மையைக் காணுதல் அரிதாக உள்ளது. சீனப் பீங்கான்கள் இப்பகுதியில் இதுகாறும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் மயிலாப்பூரின் தெற்கே அமைந்துள்ள அடையாறு கழிமுகப் பகுதி துறைமுகமாகப் பயன்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

இக்காலத் துறைமுகங்கள் வீழ்ச்சியுற்றதன் காரணங்களையும் சரியாக அளவிடல் இயலாது. வணிக நடவடிக்கைகள் குறைவுபட்டது ஒரு காரணம் என்றாலும் துறைமுக அமைவிடத்தில் ஏற்பட்ட மாற்றமும் முக்கிய காரணமாகலாம். இப்பகுதித் துறைமுகங்களை ஒட்டி கடல் பின்வாங்கிய தன்மைகளைக் காண்கிறோம். இதன் விளைவாக கப்பல்களை வெகு தொலைவிலேயே நிறுத்தி சரக்குகளை நெடுந்தொலைவு எடுத்துச்செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். ஆற்றோரத்தில் அமைந்த அரிக்கமேட்டில் வண்டல் மண்படிவால் ஆற்றுப்படுகை மேடிட்டிருக்கலாம். இதன் விளைவால் கப்பல்கள் ஆற்றினுள் செல்வதற்குத் தடை ஏற்பட்டிருக்கலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

---

1 இந்திய மற்றும் சப்பானிய தொல்லியல் அறிஞர்கள் இக் கள ஆய்வில் கலந்துகொண்டனர். Nobour Karshima, 2004, *In Search of Chinese Ceramic-sherds in South India and Sri Lanka,* Taisho University Press, Tokyo; & Noboru Karashima (ed.), 2002, *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic-sherds,* Taisho University Press, Tokyo.

---

[2] Sankaranarayana, N., 1971, "Three Hoards of Chinese Coins in Madras Government Museum", *Journal of the Numismatic Society of India*, 33-2, pp. 61-68; &

Satyamurthy, T., 1998, "Chinese Coins from the Temple at Nedungadu", *Studies in South Indian Coins.*, 8, pp. 69-73.

[3] *தெ.இ.க,* 17/679

[4] பா.ஜெயக்குமார், 2001, *தமிழகத் துறைமுகங்கள்,* அன்பு வெளியீட்டகம், தஞ்சாவூர், ப.133.

[5] மேலது. ப.117

[6] *சென்னை மாநகர் கல்வெட்டுக்கள்,* 144,117,110/1970.

[7] *க.ஆ.அ.* 256/1912

[8] *க.ஆ.அ.* 103/1932-33

[9] *க.ஆ.அ.* 173/1932-33

[10] *க.ஆ.அ.* 103,170,173/1932-33

[11] *க.ஆ.அ.* 108/1932-33, 61/1906

[12] *க.ஆ.அ.* 103/1932-33

[13] *க.ஆ.அ.* 103/1919

[14] *க.ஆ.அ.* 24,29/1919

[15] *க.ஆ.அ.* 34/1919

[16] *க.ஆ.அ.* 39/1919

# 21. புதுவை ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்புக்கள் காட்டும் கடல் வணிகச் செய்திகள்

**கோ.விசயவேணுகோபால்**
புதுச்சேரி

ஆனந்தரங்கப்பிள்ளை புதுவையில் பிரெஞ்சுக் கம்பெனி ஆட்சியின் போது மொழிபெயர்ப்பாளராகவும் (துபாஷி) வணிக முகவராகவும் (Agent) செயல்பட்டவர். இவர் துய்மா, டூப்ளே போன்ற ஆளுநர்களிடம் பணியாற்றியவர். வாழ்நாளில் தாம் கண்ட, கேள்வியுற்றச் செய்திகளை நாட்குறிப்புகளாக எழுதி வைத்துள்ளார். இக்குறிப்புக்கள் 1736-ஆம் ஆண்டு முதல் 1961-ஆம் ஆண்டு வரை கிடைத்துள்ளன[1]. இவை 6.9.1736-ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளன. இவருக்குப் பின் இவருடைய உடன்பிறந்தவரின் மகனாகிய திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு எழுதும் பணியினைத் தொடர்ந்துள்ளார். இவையும் 1770-ஆம் ஆண்டுவரை மட்டும் கிடைத்துள்ளன[2].

ஆனந்தரங்கப்பிள்ளை சிறந்த வணிகர் மட்டுமல்லர். பன்மொழிகளில் பயிற்சியுடையவர். தமிழ்ப் புலவர்களிடத்தில் பெருமதிப்புக்கொண்டவர். இவரால் ஆதரிக்கப்பட்டவர்களுள் தியாகராயப் புலவர், மதுரகவிராயர், சவ்வாதுப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். ஆனந்தரங்கப்பிள்ளை பேரில் திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரையைச் சேந்த சதாசிவதேசிகர் *ஆனந்தரங்கக்கோவை* என்ற சிற்றிலக்கியத்தையும், கஸ்தூரிரங்கய்யா என்ற தெலுங்குப்புலவர் *ஆனந்தராட்சந்தமு* என்ற தெலுங்கு யாப்பு நூலையும், ஆந்திராவைச் சேர்ந்த சீனிவாசகவி என்ற புலவர் *ஆனந்தரங்க விஜயம்* என்ற ஒரு வடமொழிச் சம்பு காவியத்தையும் யாத்துள்ளனர். வணிகத்தில் சிறந்த பிள்ளையவர்கள் ஆனந்தரங்கப்புரவி என்ற பெயரில் வணிகக் கப்பலொன்றும் இயக்கி வந்தார்.

ஆனந்தரங்கப்பிள்ளை இக்குறிப்புக்களை அக்காலத்தே வழக்கிலிருந்த புதுவைப் பேச்சுத் தமிழ் நடையில் எழுதியுள்ளார். இவற்றுள் பல பிரெஞ்சுச் சொற்கள் தமிழ்மொழி ஒலிப்பிற்கேற்ற

வகையில் எழுதப் பெற்றுள்ளன. 18-ஆம் நூற்றாண்டில் புதுவைத்தமிழ் பற்றி ஆராய்வார்க்கு இவை நல்ல தரவுகளாக அமையும். இக்குறிப்புக்களின்வழி 18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் புதுவையின் நிலை, தமிழக, கருநாடக அரசியல் சூழல், முகம்மதியர் ஆட்சி, அவர்கள் போர்கள், கப்பல் போக்குவரத்து, கடல்வணிகம், சந்தைப்பொருட்கள், பிரெஞ்சு அதிகாரிகள் முதலானோரின் நடத்தைகள், சமூகநிலை, படையெடுப்புகளின்போது நடத்தப்பட்ட கொள்ளைகள், புதுவையில் வீசிய புயல்கள், குடும்பச் செய்திகள், சோதிடக் குறிப்புகள், பல்வகைப்பட்ட மக்களின் குணச் சித்திரிப்புகள் எனப் பலதரப்பட்ட சுவையான செய்திகள் நமக்குப் புலனாகின்றன. இவை 18-ஆம் நூற்றாண்டில் புதுவையிலும் தமிழகத்திலும் விளங்கிய சமூகப் பொருளாதார, வணிக, அரசியல் சூழல்களை ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்படும்.

இக்கட்டுரையில் முதற்கண் 6.9.1736 தொடங்கி ஓராண்டுகாலம் வரை இந்நாட்குறிப்புகள் குறிப்பிடும் கப்பல்கள், அவற்றின் போக்குவரத்துக்கள், கடல் வணிகம் தொடர்பான செய்திகள் மட்டும் அட்டவணை வடிவில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும் புதுவையில் துய்மா எனும் ஆளுநரின் ஆட்சிக் காலம் வரை (1941 அக்டோபர் வரை) குறிப்பிடப்படும் கடல்வணிகம், கப்பல் போக்குவரத்துத் தொடர்பான பிறசெய்திகளும் அட்டவணையின் பின்னே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**கப்பல்களும் வகைகளும்**

ஆளுநர் துய்மா ஆட்சிக் காலத்தில் மொத்தம் 49 கப்பல்கள் வந்து சென்றதாகக் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் 29 கப்பல்களுக்கு மட்டும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவை பல்வேறு வகையான வடிவங்களில், பணிக்கேற்ற வகையில் அமைந்தனவாக ஆனந்தரங்கப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இவற்றை முறையே கட்டுமரம், சலங்கு, சுலுப்பு (Sloop), குராபு, கப்பல் எனக் குறிப்பிடுகின்றார். இவை தவிரப் பெரிய பீரங்கிகள் கொண்ட போர்க்கப்பல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**துறைமுகங்கள்**

புதுவை, கூடலூர் (தற்போது கடலூர் என வழங்கப்படுகின்றது), பறங்கிப்பேட்டை (முற்காலத்தே Porto Novo என வழங்கப்பட்டது) குலசேகரன்பட்டினம், மயிலாபுரம் (சென்னை மயிலாப்பூர்), காரைக்கால், வங்காளம் (சந்திரா நாகூர்) ஆகிய துறைமுகங்கள் செயல்பட்டு வந்தனவாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

**கப்பல்கள் பற்றிய செய்திகள்**

ஆனந்தரங்கப்பிள்ளை கப்பல்கள் பற்றிய செய்திகளைத் தரும்போது கப்பலின் பெயர், கப்பலின் தலைவன்பெயர், கப்பலுக்குத் தமிழகத் தலைவன் இருப்பின் அவரின் பெயர், கப்பல் எங்கிருந்து வருகிறது. எங்குச் செல்கிறது, எத்துறைமுகம் வழியாகச் செல்கிறது, எப்போது வந்தது, எப்போது புறப்பட்டது (நாள், நேரம் முதலியன), என்னென்ன பொருட்கள் இறக்குமதியாயின, என்னென்ன பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டன, சரக்குகளின் அளவு, விலை மதிப்பீடு, கப்பலில் பயணம் செய்த பயணிகள் என விளக்கமாகப் பலவற்றைக் குறிப்பிடுகின்றார். அட்டவணை இவ்வடிப்படையிலேயே அமைந்துள்ளது. இடச்சுருக்கம் கருதி இவ்விவரங்கள் ஓராண்டிற்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. முக்கிய பயணிகளை நாட்குறிப்பு சிறப்புச் சரக்கு (Super Cargo) எனக் குறிப்பிடுவது சுவையானது.

**கப்பல்கள் சென்ற நாடுகள்**

கப்பல்கள் சென்ற நாடுகளும் நாட்குறிப்புக்களில் காணப்படுகின்றன. இவ்வகையில் பிரான்சு, மோக்கா, மசுக்கரை (மொரிசியஸ், Mascaraigue), அக்கன் (Achen), மணிலா, ஜெட்டா (அரபு), சீனா போன்ற நாடுகளும் நகரங்களும் குறிப்பிடப்படுகின்றன.

**கப்பல் வருகை**

கப்பல்கள் வரும்போதும் முக்கியப் பயணிகள் பயணிக்கும்போதும் மதிப்புக்குத் தக்கவாறு (7, 12, 15, என) குண்டுகள் வெடிக்கப்பட்டன என்றும் கப்பல்களின் வருகையை இவ்வெடிகளின் மூலம் அறிந்த நிலையில் கடற்கரையிலிருந்த கோட்டையிலிருந்து பதில்

அறிவிப்புக் குண்டுகளும் வெடிக்கப்பட்டன என்றும் நாட்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

**கப்பல்களின் உரிமையாளர்கள்**

கப்பல்களின் உரிமையாளர்களாகப் பிரெஞ்சு அரசும், பிரஞ்சுக் கம்பெனியும் மட்டுமின்றிக் கம்பெனி ஆளுநர்களும், பிற அலுவலர்களும் (ஆனந்தரங்கப்பிள்ளை போல) பன்னாட்டு வணிகர்களும் (பிரெஞ்சு, ஆர்மீனியர், இந்தியர், தமிழர், சீனர்), தரகர்களும் விளங்கியுள்ளனர்.

**வணிகப் பொருட்கள்**

இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளில் வெள்ளைச் சர்க்கரை, கற்கண்டு, துத்திநாகம் (zinc) ஆலத்திகற்பூரம், ரசம் (பாதரசம்), பட்டுத்துணிகள், பீங்கான் சாமான்கள், தேப்பெட்டிகள் (தேயிலைத் தூள் அடங்கியவை) காப்பி, தங்கக் கலாம், வெள்ளிக் கலாம் (சரிகைகள்), சாராயம் (இப்பெயரால் பலவகை மதுபானங்களும் குறிப்பிடப் படுகின்றன), சீமைச் சரக்குகள் நானாவிதம் (Miscellaneous Foreign Goods), அரிசி, மெர்கை மரம் (Mergui Redwood) முதலானவை அடங்கும். துணிகளில் பலவகைகள் குறிப்பிடப்படுகின்றன. நீலநிறத் துணிகள் *காங்கு திலுசு* எனவும், பன்னிறத் துணிகள் *கம்பாயம்* எனவும், பந்தர் என்னுமிடத்தில் உற்பத்தியாகும் துணி (வங்காளம் பகுதிகள்) *எழுத்துப் பாட்டை* எனவும் (மரஅச்சால் சாயந்தோய்த்து அடிக்கப் பட்டவை), சென்னைப்பட்டணத்துத் திலுசு எனவும், மெல்லிசு *வம்பாசு, மெல்லிசு சீலை* (*Flowered fine Chintzs*) எனவும் குறிப்பிடப்படுகின்றன. ஏற்றுமதியானவற்றுள் முக்கியமானவை வெள்ளி, பவளம், ஏலக்காய், துணிகள், மிளகு, காப்பி ஆகியன.

**அளவுகளும் விலையும்**

பொருட்கள் கட்டப்படும்போது அவற்றின் அளவுகளும் தரப்பட்டுள்ளன. எடைபோடும்போது பாரம் எனவும் இதற்கு இணையான பிக்கல் எனும் அளவும் தரப்படுகின்றன. எ.கு. பாரம் (Caudies) 125-க்குப் பிக்கல் 500. வெள்ளியைப் பற்றிக் குறிப்பிடும் போது மார்க்கு எனும் அளவு தரப்படுகிறது. ஒரு மார்க்கு 8 அவுன்சுக்குச் சமமானது. ஒரு சேர்

வெள்ளியின் அன்றைய விலை 7 வராகன் 2 பணத்திலிருந்து 7 வராகன் 7 பணம் வரை இருந்ததாம்.

26.4.1738 அன்று பதிவாகியுள்ள குறிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகள் என்னென்ன விலைக்குப் போயின என்ற விவரம் தரப்பட்டுள்ளது. இதன்படி சாங்கு திலுசு (Blue piece goods) 50 விழுக்காடு லாபத்திலும், *கம்பாயம்* (Coarse cloth, ordinary) 20 விழுக்காடு லாபத்திலும், *எழுத்துப்பாட்டை* (Bounder shelf) 80 விழுக்காடு லாபத்திலும், சந்திரநாகூர்வகை (வங்காளம்) 80 முதல் 90 விழுக்காடு லாபத்திலும், சென்னைப் பட்டணத்துத் திலுசு (Flowered cloth) 20 முதல் 25 விழுக்காடு லாபத்திலும், பாண்டிச்சேரி, திருப்பாப்புலியூர் (கடலூர்) வகைகள் நஷ்டம் அல்லது அசலிலைக்கும் விற்கப்பட்டன. இதன்வழி வங்காளத் துணிகட்கு மிக்க விலை கிடைத்தமையும் தமிழகத்துணிகட்கு வரவேற்பின்மையும் தெளிவாகின்றன.

10.8.1738 அன்று பதிவாகியுள்ள நாட்குறிப்பின்படி ஜெட்டாவுக்குக் (அரபுநாடு) கொண்டு செல்லப்பட்ட துணிகள் பாதிக்குமேல் விற்கவில்லை எனவும் மோக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்ட துணிகள் போதுமான டாலர்கள் புழக்கத்தில் இல்லாமையாலும், அரபுநாட்டவரின் மோசமான ஆட்சிகாரணமாகவும், ஒரு மூட்டை கூட விற்பனையாகவில்லை எனத் தெரியவருகிறது. இச்சூழ்நிலையில் புதுவையில் ஆட்சியிலிருந்த ஆளுநர் துய்மா தாம் கொள்முதல் செய்யவிருந்த துணிகளை வேண்டாமெனக் கட்டளையிட்டார் எனவும், இதனால் புதுவையிலும், அதன் சுற்றுப்பகுதிகளிலும் துணித்தேக்கம் ஏற்பட்டதெனவும் ஆனந்தரங்கப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இதனால் இக்குறிப்புகள் பொருளாதார நிலை குறித்த ஆய்வுகட்குப் பெரிதும் பயன்படுவன என்பது தெளிவு.

**கப்பல்கள் தகவல் தொடர்புக்கும் பயன்பட்டமை**

பன்னாடுகளுடனான தொடர்பு கடல்வழியே கப்பல்கள் மூலம் நடைபெற்றமையின் கப்பல்கள் வணிகத் தொடர்பு மட்டுமின்றித் தகவல் தொடர்புகட்கும் பயன்பட்டன என்பது இந்நாட்குறிப்புகளின்வழி நாம்

அறிந்து கொள்ளும் மற்றொரு செய்தியாகும். ஆளுநர், அலுவலர் நியமனம் பற்றிய செய்திகள், ஐரோப்பாவின் நிலைமைபற்றிய செய்திகள், குறிப்பாகப் பிரெஞ்சு-ஆங்கிலேயப் போர், பிரெஞ்சு-போர்த்துக்கீசியர் போர், பிரெஞ்சு-டச்சுப்போர் ஆகியன பற்றிய செய்திகள், பிரெஞ்சு மன்னரின் ஆணைகள், பரிசளிப்புகள், பட்டமளிப்புகள் பற்றிய செய்திகள் (முதன்முதலாக நாணயம் அச்சடிக்க உரியமையளித்த ஆணை குறிப்பிடத்தக்கது), கப்பல்கள் கடல்வழியே வரும்போது கொள்ளையடிக்கப்பட்ட செய்திகள், உள்நாட்டிலும் மராட்டியப் போர்வீரர்கள் துணிகளைக் கொள்ளையடித்த செய்திகள், கிறித்துவக் கோயில் (நிருவாகம் தொடர்பான) குருமார்கள் நியமனம் பற்றிய செய்திகள், போர்க் கப்பல்கள் கொண்டிருந்த பீரங்கிகள், வெடிமருந்துகள், குண்டுகள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் எனப் பலவகைச் செய்திகளும் கப்பல்கள் வழியே தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்புகள் கடல் வணிகம், கப்பல் போக்குவரத்துப் பற்றிய பல செய்திகளை வரலாற்றாய்வாளர்கட்குத் தருகின்றன. ஓராண்டுச் செய்திகள் மட்டும் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. குறிப்புக்கள் முழுவதையும் தொகுத்து ஆராயின் 18-ஆம் நூற்றாண்டின்போது நிகழ்ந்த கடல் வணிகம், கப்பல் போக்குவரத்துப் பற்றிய பல வரலாற்றுண்மைகள் நன்கு புலப்படும்.

**அடிக்குறிப்புகள்**

---

1 அண்மையில் இக்குறிப்புகள் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிலையத்தாரால் தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. புதுவை அரசு வெளியிட்ட முந்தைய தொகுதிகளின் நகல்களே இவை.

2 இவை இன்னும் அச்சில் வரவில்லை.

**தமிழ்ச் சொற்கட்கிணையான பிரெஞ்சுச் சொற்கள்**

| | |
|---|---|
| **கப்பல் பெயர்கள்** | |
| அரம் சாம் | Heureux Marchaud |
| லெ மோரில மோரா | Maure |
| சபெனிக்ஸ் | Phonix |
| புலிப்போர்ல பிலிப்போ | Phellippeaux |
| தூக்தெபுர்பொம் | Duc de Bourbon |
| ஷொவாலன் | Chanvelin |
| முரப்பா | Maurepes |
| பிலோரி | Fleary |
| **ஆட்பெயர்கள்** | |
| தும்மா | Dumas |
| மகேதெல்லோவில்லபாகு | Mahede la Villebague |
| லூயிஸ் | Louis |
| துபுவாய் ருசெல்லியார் | Dubois, Russelier |
| திருவாய் | Dirois |
| தெசர்தான் | Desjardin |
| லப்பிரிங்கிரி | Lefranquerie |
| செஞ்சாவோர் செஞோர் | Sauveur |
| பிரிஞோழ் | Brignon |
| லசார் | Lazer |
| மறக்கிசாக்கு | Marqeusac |
| ஷெவரி | Xavery |
| ல காடுது | M.de la Garde |
| தொடுதொலேன் | Dordelin |
| லெனுவார் துமலியோர் | Lenoir Dumesliere |
| பெவுரியேர் | Febrrier |
| பொர்ஷெ | Porcher |
| **பொது** | |
| கப்பித்தேன் | Captain |
| முசே | Monsieur(Mr.என்பதுபோல) |
| லீப்பத்தினாந்து | Lieutenant |

## ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பில் குறிக்கப்படும் கப்பல்கள், புறப்படும் மற்றும் சேருமிடங்கள்

| கப்பலின் பெயர் (நாட்குறிப்பு) | உரிமையாளர் (உ) கப்பல் தலைவன் (த) | புறப்பட்ட இடம் | புறப்படுமிடம்(பு), செல்லுமிடம்(செ) |
|---|---|---|---|
| லெ மோர் (15.01.1737) | தும்மா இமாம்சாயபு (உ)<br>- (த) | - | பரங்கிப்பேட்டை(பு)<br>மோக்கா(செ) |
| அரம் சாம் 15.01.1737 | - | - | -- |
| மொரா 30.01.1737 | தும்மா இமாம்சாயபு (உ)<br>- (த) | - | பரங்கிப்போட்டை (பு)<br>மோக்கா(செ) |
| சங்கரபாரிக்கு (20.03.1737) | - (உ)<br>கப்பித்தேன் முசே மகேதெல்லோ வில்லபாகு(த)<br>தமிழ் கப்பித்தான் - லூயிஸ் பிரகாசம் | | புதுவை (பு) மணிலா(செ)<br>(வழி) சென்னை -மயிலாப்பூர் |
| சபெனிக்ஸ் (27.3.1737) | - (உ) முசேதெசர்தான் (த) | சீனம் (15.3.1737) | -- |
| புலிப்போர் (15.6.1737) | - (உ) முசேலசார் (த) | சீனை (பிரான்சு) | வங்காளம்(செ) (சந்திராநாகூர்) |
| தூக்தெபுர்போம் (17.6.1937) | - (உ)<br>மறக்கிசாக்கு (த) | | |
| ஷொவலென் (20.6.1737) | - (உ)<br>கப்பித்தேன் முசேஷெவரி (த) | பிரான்சு | வங்காளம்(செ) |
| பிலிப்போ (28.6.1737) | - (உ)<br>கப்பித்தான் முசே லசார் (த) | | |
| ஷொவலென் (13.7.1737) | - (உ)<br>முசே ஷேவரி (த) | | |
| முரப்பா (19.7.1737) | - (உ)<br>முசே லகாடுது (த) | மோக்கா | |
| பிலோரி (4.10.1737) | - (உ)<br>முசே தொமுதாவேன் (த) | | பிரான்சு(செ) |

## ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பில் குறிக்கப்படும் கப்பல்கள், சரக்குகள், முக்கியப் பயணிகள்

| கப்பலின் பெயர் | சரக்குகள் | முக்கியப் பயணிகள் | குறிப்புகள் |
|---|---|---|---|
| லெ மோர் (15.01.1737) | துணிகள் | - | தமிழ்ப்பெயர்களுக்குஇணையான பிரெஞ்சு சொற்கள் அடிக்குறிப்புக்களின் இறுதியில் தரப்பட்டுள்ள. |
| அரம் சாம் 15.01.1737 | துணிகள் | - | - |
| மொரா 30.01.1737 | துணிகள் | கபிரியேல்தும்மா லப்பிரிங்கிரி | கபிரியேல் தும்மா ஆளுநரின் இளவல். |
| சங்கரபாரிக்கு (20.03.1737) | துணிகள் மெல்லிசுவம்சாத்து சிட்டைகள் (27.3.1737) | 1) முசே துபுவாய்ரு செல்லியார்<br>2) முசே திரிவாய்<br>3) செகன்னிவாச முதலி | கப்பல்களுக்கு வெளிநாட்டவரோடு தமிழரும் தலைவராயிருப்பின் தனித்தனியே குறிப்பிடப்படுகின்றன. செகன்னிவாச முதலி துபாஷ்<br>கனகராய முதலியின் மைத்துனன் |
| சபெனிக்ஸ் (27.3.1737) | சீனத்துச்சரக்கு<br>வெள்ளைச்சர்க்கரை<br>பாரம் 125க்கு பிக்கல்500 வெள்ளைக் கற்கண்டு பாரம் 250க்கு பிக்கல்1000<br>துத்திநாகம் பாரம் 1025 பிக்கல் 4100<br>ஆலத்தி கற்ப்பூரம்<br>ரசம்(பாதரசம்)பிக்கல் 3$^{1/2}$ பட்டு<br>கருட்டு நானாவிதம் பீங்கான்கள்<br>நானாவிதம்<br>தேப்பெட்டிகள்(தேயிலை)<br>(மொத்தம் 1000வராகன்) | முசே செஞ்சாவோர்<br>முசே பிறிஞோழ் | இச்சரக்குகள் அரம்சாம் என்ற கப்பலில் ஏற்றப்படவுள்ளவை |

## ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பில் குறிக்கப்படும் கப்பல்கள், சரக்குகள், முக்கியப் பயணிகள்

| கப்பலின் பெயர் | சரக்குகள் | முக்கியப் பயணிகள் | குறிப்புகள் |
|---|---|---|---|
| புலிப்போர் (15.6.1737) | வெள்ளி-94பெட்டி இது 30000 மார்க்கு பெறுமானமுள்ளது | | 1 மார்க்கு = 8 அவுன்ஸ் |
| தூக்தெபுர்போம் (17.6.1937) | 30000 வெள்ளி மார்க்கு | | வெள்ளி மார்க்கு சேர்1க்கு விலை வராகன் 7 பணம் 5 முதல் வராகன் 7 பணம் 6 வரை விலை போனது |
| ஷெவலென் (20.6.1737) | 2000 வெள்ளி மார்க்கு | | |
| பிலிப்போ (28.6.1737) | 3 லட்சம் ரூபாய் | | |
| ஷெவலென் (13.7.1737) | 5 லட்சம் ரூபாய் | | |
| முரப்பா (19.7.1737) | | புதுவையிலிந்து சென்ற லீப்ததினாந்துமார் கப்பித்தாக்மார் | இக்கப்பல் மோக்காவில் போர் முடித்து வெற்றியோடு மோக்காக் கோட்டையில் ஏற்றியிருந்த அரபுக்கொடியை(கொடி முழுச்சிவப்பு நடுவில் 5 விரல் எழுதியிருந்தது) எடுத்துக் கெண்டு வந்து சேர்ந்தது. |
| பிலோரி (4.10.1737) | | முசே தொலார்மு முசே லெனுவார் தூமலியோர் முசே பெபுரியேர் - முசே பெண் சாதி முசே பொர்ஷே | முசே பெபுரியேர் புதுவையில் செயலராயிருந்தவர் |

# 22. நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்கள்: 18,19-ஆம் நூற்றாண்டு கடல் வணிகமும் முஸ்லிம் வணிகர்களும்

**ஜெ.ராஜாமுகமது**
புதுக்கோட்டை

**நா**கப்பட்டணம், நாகூர் துறைமுகங்கள் தஞ்சாவூர் மாவட்ட கடற்கரையில் அருகருகே அமைந்துள்ளன. கி.பி.10-ஆம் நூற்றாண்டு முதல் நாகப்பட்டணம் துறைமுகத்திலிருந்து சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் வணிகம் நடைபெற்று வந்தது. செழிப்புடன் விளங்கிய இத்துறைமுகத்திற்கு பன்னாட்டு வணிகர்களும் வந்து வணிகத்தில் ஈடுபட்டனர். இதில் நம்நாட்டு வணிகக் குழுக்கள் பல ஈடுபட்டிருந்தன. சீனா, இந்தியாவுக்கிடையேயான புத்த சமயத்தொடர்பு வணிகத்தை விரிவு படுத்தியது[1]. 15-ஆம் நூற்றாண்டு வரை நமது நாட்டு வணிகர்கள் செட்டியார் மற்றும் முஸ்லிம்கள் சீனாவுடன் தொடர்ந்து வணிகம் செய்து வந்தனர். நாகப்பட்டணம் துறைமுகத்தில் முஸ்லிம் வணிகர்கள் பலர் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததை பார்போசா குறிப்பிடுகிறார்[2].

16-ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் நாகப்பட்டணத்திலிருந்து மலாக்கா, மற்றும் இலங்கையுடன் வணிகம் செய்து வந்தனர். இவர்கள் நம்நாட்டு வணிகர்களின் வணிக நடவடிக்கைகளுக்கு பலவிதமான தடைகளை விதித்ததினால் இவர்களது வணிகம் பாதிக்கப்பட்டது. போர்த்துக்கீசியருக்கும், டச்சுக்காரர்களுக்கும் முஸ்லிம்கள் மீது இயல்பாக இருந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் நாகப்பட்டணம், நாகூர் முஸ்லிம் வணிகர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொண்டு, ஐரோப்பியருடன் இணக்கமாக இருந்து, தென்கிழக்கு ஆசிய நாடுகள் இலங்கை மற்றும் தென்னாட்டின் பிற துறைமுகங்களுடனும் தொடர்ந்து வணிகம் செய்து வந்தனர். ஆனால் வணிகத்தின் அளவும், வணிகர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. இருப்பினும் நாகப்பட்டணம்,

நாகூர் துறைமுகங்கள் கி.பி.18-19-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய கடல் வணிகத்தில் பெரும்பங்கு வகித்தன. மிகப்பெரிய அளவுள்ள சரக்கு மற்றும் பயணியர் கப்பல்கள் இத்துறைமுகங்களுக்கு வந்து சென்றன. நாகப்பட்டணம் துறைமுகத்தில் கப்பல்களுக்குத் தேவையான நல்ல தண்ணீர் கிடைத்தது[3].

நாகப்பட்டணம் துறைமுகம் கடுவயாற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. சாதகமான சூழ்நிலையில் 500 டன் எடையுள்ள கப்பல்கள் கடலிலிருந்து ஆற்றினுள் நேரடியாக சென்றுவர முடியும். ஆனால் காலப்போக்கில் ஆற்று முகத்துவாரத்தில் மண் அடைப்பு ஏற்பட்டு 19-ஆம் நூற்றாண்டில் 100 டன் எடையுள்ள கப்பல்கள் மட்டுமே செல்லுமளவிற்கு ஆற்றின்போக்கு அமைந்தது. பெரிய கப்பல்கள் கடலில் பல மைல்களுக்கு அப்பால்தான் நங்கூரமிட முடியும். இக்கப்பல்களுக்கு, சரக்குப் போக்குவரத்து சிறிய படகுகள் மூலம் நடைபெற்று வந்தது. வடகிழக்குப் பருவக்காற்றின் போது இத்துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்த இயலாது. கடற்கரையில் உயரமானதொரு கோயில் இருந்தது. இதுவே துறைமுகக் கரைக்கு அடையாளமாக விளங்கியது[4]. 1799-இல் நாகப்பட்டணம் பகுதி ஆங்கிலேயர் ஆளுகைக்கு வந்தவுடன் அதன் துறைமுகத்தை மேம்படுத்தத் திட்டங்கள் வகுத்தனர். ஆண்டுதோறும் 13,000 டன் மண் ஆற்று முகத்துவாரத்திலிருந்து வெட்டி அகற்றப்பட்டது[5]. ஆற்றில் சிறிய தோணிகளே செல்ல முடிந்தது. துறைமுகத்தினை செப்பனிடுவதில் இப்பகுதி வணிகர்களும் பெரிதும் அக்கறை காட்டினர்[6]. ஆங்கிலேய அரசு இத்துறைமுகத்தின் தேவைகளை நிறைவு செய்ய முயன்றது. கலங்கரை விளக்கம் ஒன்று கட்டப்பட்டது[7]. இயற்கை இடர்பாடுகளினால் ஆற்று முகத்துவாரத்தில் மண் அகற்றும் பணியும், துறைமுகவாயை சீரமைக்கும் பணியும் வெற்றியடையவில்லை. ஆகவே ஆங்கிலேய நிர்வாகம் இந்த முயற்சிகளைக் கைவிடவேண்டியதாயிற்று[8]. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இத்துறைமுகத்தில் கப்பல் போக்குவரத்து குறைந்தது. இக்காலத்தில் தூத்துக்குடி துறைமுகம் முக்கியத்துவம் பெற்றதாலும், 1861-இல் நாகப்பட்டணத்துக்கு இரயில் போக்குவரத்து ஏற்பட்டதாலும் கப்பல் வணிகப் போக்குவரத்து குறைந்தது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகப்பட்டணம் துறைமுகத்தில் கப்பல் போக்குவரத்து முற்றிலுமாகக் குறைந்து போயிற்று.

நாகூர் நெடுங்காலமாக நாகப்பட்டணத்தின் இணைத் துறைமுகமாக விளங்கி வந்துள்ளது; தஞ்சாவூர் மாவட்ட விளை பொருட்களுக்கும் உற்பத்திப் பொருட்களுக்கும் விற்பனைக்கூடமாக விளங்கியுள்ளது[9]. நாகூர் துறைமுகம் வெட்டார் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. இது உள்நாட்டு சரக்கு போக்குவரத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. கடற்கரையில் ஐந்து கோயில்கள் இருந்துள்ளன. இவை துறைமுகத்திற்கு அடையாளமாக விளங்கியுள்ளன. துறைமுகப் பகுதியில் 400 டன்கள்வரை எடையுள்ள கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்க இயலும். எல்லா காலங்களிலும் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பல்கள் பாதுகாப்பாக இருந்தன. ஆற்றின் முகத்துவாரத்தில் மண்ணை அகற்றி ஆழப்படுத்த ஆங்கிலேய நிர்வாகம் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வந்தது[10].

17-ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்திய கடல் வணிகத்தில் நாகூர் முக்கிய துறைமுகமாக உருவானது. ஐரோப்பியர் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியால், நாகப்பட்டணம் துறைமுகத்தில் வணிகத்தில் ஈடுபட்டிருந்த நம்நாட்டு வணிகர்களான முஸ்லிம்கள், செட்டியார்கள் தங்களது வணிக நடவடிக்கைகளை நாகூருக்கு மாற்றிக்கொண்டனர். நாகூரில், நாகூர் ஆண்டவர் என மக்களால் போற்றப்படும் ஷாகுல் ஹமீது அவர்களின் அடக்கவிடம் (தர்கா) அமைந்துள்ளதால் இவ்வூர் முஸ்லிம் மக்களால் புனித இடமாகக் கருதப்படுகிறது. ஆகவே, முஸ்லிம் வணிகர்கள் இங்கு குடியமர விருப்பம் கொண்டிருந்தனர். ஆற்காடு நவாபுகளும், தஞ்சாவூர் மன்னர்களும் இவர்களுக்குப் பல சலுகைகள் அளித்தனர். இந்த சலுகைகளை ஆங்கிலேயரும் பின்னர் தொடர்ந்து அளித்து வந்தனர். ஆகவே, நாகூர் நாகப்பட்டணத்தைவிட பெரிய வணிக மையமாக விளங்கியது. முஸ்லிம் வணிகர்கள் இங்கிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு தங்களது வணிகத்தைத் தொடர்ந்தனர்[11]. இக்காரணம் பற்றியே நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களை முஸ்லிம்களின் துறைமுகம் (Moor Port) என்றும் இங்கிருந்த முஸ்லிம் வணிகர்களை சோழியர் (Choolias) என்றும் ஆங்கிலேயரின் பதிவேடுகள் குறிக்கின்றன[12]. இவர்களது குடியேற்றங்களினால் இப்பகுதியின் கடல் வணிகமும் பொருளாதார வளமும் பெருகியது[13]. 1815-இல்

ஆங்கிலேயரின் கடலூர் வணிக மையம் நாகூருடன் இணைக்கப்பட்டது[14]. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் நாகூர் துறைமுகத்தில் தொலைதூர கடல்வணிகம் குறைந்தது. அருகிலுள்ள சிறிய துறைமுகங்களுடன் மட்டும் படகுப் போக்குவரத்து தொடர்ந்திருந்தது.

18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகப்பட்டணத்திலிருந்து மலாக்கா, சுமத்திரா, கெதா ஆகிய நாட்டு துறைமுகங்களுடன் வணிகம் நடைபெற்றுவந்தது. இதில் முஸ்லிம் சோழிய வணிகர்கள் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர். ஒரு சில செட்டியார் வணிகர்களும் வணிகத்தில் ஈடுபட்டிடருந்தனர். இவர்கள் டச்சுக்காரர்கள் அளித்த அனுமதிச் சீட்டுகளுடன் மேற்கண்ட நாடுகளுக்கு தங்களது கப்பல்களைச் செலுத்தினர். துணி வகைகளே முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்தது. மலாக்கா தீவுகளிலிருந்து சீனா, ஜாவா நாட்டு சர்க்கரை, சந்தனமரம், யானைத் தந்தம், மெழுகு ஆகியனவும், சுமத்ராவிலிருந்து குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டன. கெதா, மலாக்கா துறைமுகப்பட்டினங்களில் நாகப்பட்டணம், நாகூர் வணிகர்கள் பலர் குடியமர்ந்திருந்தனர். இவர்கள் அங்கிருந்த சீனநாட்டு வணிகர்களுடன் இணைந்து நாகப்பட்டணத்துடன் தொடர்ந்து வணிகம் செய்து வந்தனர். நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களில் போர்த்துக்கீசிய, ஆங்கிலேய வணிகர்களும் தங்கி வணிகம் செய்து வந்தனர். இவர்கள் முஸ்லிம்களின் வணிக நடவடிக்கைகளுக்குப் போட்டியாக விளங்கினர்[15].

நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களிலிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் நடைபெற்ற வணிகத்தில் துணி வகைகளே முக்கிய ஏற்றுமதிப்பொருளாக இருந்தது. முஸ்லிம் வணிகர்கள் பலர் துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்[16]. நாகப்பட்டணம், நாகூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் பல வகையான துணி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றிற்கு ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் நல்ல விலை கிடைத்தது. நாகூரில் தயாரிக்கப்பட்ட திரைச்சீலைகள், விரிப்புகள், வண்ண வரைவுகள் கொண்ட அலங்காரத் துணிகள் ஆகியவற்றிற்கு ஐரோப்பாவில் நல்ல வரவேற்பு இருந்தது. துணிவகைகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற கப்பல்களும் இத்துறைமுகங்களில் இருந்தன. நாகூரில் மட்டும் சிறியதும் பெரியதுமாக சுமார் 400-க்கும் மேற்பட்ட கப்பல்கள் இருந்தன. 4000

நெசவாளர்கள், 1023 தறிகள், 1000 சலவை தொழிலாளர்கள், வண்ண ஓவியங்கள் வரைவோர் 300 பேர், சாயத்தொழில் செய்வோர் 300 பேர் இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்[17].

நாகப்பட்டணம், நாகூர் துணி வகைகளுக்கு இங்கிலாந்து சந்தையில் நல்ல வரவேற்பு இருந்தது. 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் இதற்காக பெருமளவில் துணிகள் வாங்கப்பட்டன. இதில் முஸ்லிம் வணிகர்கள், செட்டியார் வணிகர்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, ஆங்கிலேய தனி வணிகர்கள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்[18].

நாகூரில் ஒருவகையான ஊதா துணி உற்பத்திசெய்யப்பட்டது. ஐரோப்பாவிலும் தூரக்கிழக்கு நாடுகளிலும் இவ்வகைத் துணி பெரிதும் விரும்பப்பட்டது. இங்கிலாந்தில் இதற்கு 90% முதல் 120% வரை லாபம் கிடைத்தது. ஆகவே ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியினர் இவ்வகைத் துணியை வாங்க நாகப்பட்டணம், நாகூர்பகுதியில் நிறைய முதலீடு செய்திருந்தனர்[19]. இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெள்ளைத் துணிகள் நாகூருக்கு அனுப்பப்பட்டு ஊதா சாயம் நனைக்கப்பட்டு மீண்டும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது[20].

கல்கத்தாவிற்கும் நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களுக்கும் வணிகப் போக்குவரத்து இருந்து வந்தது. 18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது வங்காளத்திலிருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தெற்காசிய சந்தைகளுக்காக இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கஞ்சாவும் கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது[21]. பர்மா, சயாம் ஆகிய நாடுகளுக்கும் நாகூர் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கும் நாகூர் ஊதா துணிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. உப்பு (இலங்கை), புகையிலை, துணிவகைகள் ஆகியன முக்கிய ஏற்றுமதிப்பொருட்களாகும்[22]. 1797-ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் பதிவு ஒன்று நாகப்பட்டணத்தைவிட நாகூரில் கப்பல்போக்குவரத்து அதிகம் இருந்துவந்ததைத் தெரிவிக்கிறது[23].

19-ஆம் நூற்றாண்டிலும் நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களிலிருந்து பினாங்கு, அச்சை, சிங்கப்பூர், மாலக்கா ஆகிய துறைமுகங்களுக்கு வணிகம் தொடர்ந்து நடைபெற்றது. தென்கிழக்காசிய

நாடுகளுக்குத் துணி வகைகளே முக்கிய ஏற்றுமதிப் பொருளாக விளங்குகியது. நாகப்பட்டணத்திலிருந்து அமெரிக்காவுக்கு துணி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கையுடன் இருந்த வணிகமும் தொடர்ந்து நடைபெற்றது. இலங்கைக்கு நெல், அரிசி துணிவகைகள் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். இலங்கையிலிருந்து பாக்கு, மிளகு, உலர்ந்த மீன், புகையிலை, வாசனைப்பொருட்கள், முத்துக்கள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன[24]. கடந்த நூற்றாண்டைப் போன்றே நாகூர் துறைமுகம் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் முன்னணியில் இருந்ததை பதிவேட்டு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இங்கிருந்து வணிகத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்கள் முஸ்லிம் சோழிய வணிகர்களுக்குச் சொந்தமானவை[25]. இங்கிருந்து இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பினாங்கு துறைமுகங்களுக்குப் பயணிகள் முஸ்லிம்களின் கப்பல்களில் சென்றுவந்தனர்[26].

நாகப்பட்டணம், நாகூர் துறைமுகங்களிலிருந்து தெற்கேயிருந்த பிற துறைமுகங்களுக்கும், மேற்கு கடற்கரைக்கும் பெருமளவில் கப்பல் போக்குவரத்து இருந்துவந்துள்ளது. குறைந்த கொள்ளளவுள்ள தோணிகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டில் ஓரிடத்தில் விளையும் பொருட்களை மற்றொரு இடத்திற்கு கொண்டுச் செல்ல இந்த கரைவழிப் போக்குவரத்து பெரிதும் பயன்பட்டது. இதன்மூலம் இப்பகுதியில் பொருளாதார புழக்கம் சீராக இருக்க வகை ஏற்பட்டது. நாகப்பட்டணமும் நாகூரும் இவ்வகையில் மிகப்பெரும் சந்தைகளாக விளங்கின. இத்துறைமுகங்களுக்கு இடையே பயணியர் போக்குவரத்தும் நடைபெற்று வந்தது[27]. தமிழக வணிகர்களின் கப்பல்கள் இக்காலத்தில் மிகவும் சிறியவைகளாக இருந்தன. இவை ஒற்றை பாய்மரக் கப்பலிருந்து, மூன்று பாய்மரக் கப்பல் வரை உள்ள தோணி வகைகள். ஆனால், ஐரோப்பியரின் கப்பல்கள் மிகப்பெரியதாக இருந்தன. ஆகவே, அவை தொலைதூர வணிகத்தில் நல்ல லாபத்துடன் ஈடுபட முடிந்தது. இவ்வகையில் நமது நாட்டு வணிகர்கள் ஐரோப்பியருடன் போட்டியிட முடியவில்லை. ஆனால் நாகப்பட்டணம், நாகூர் வணிகர்கள் தங்களுக்குத் தேவையான கப்பல்களைத் தாங்களே கட்டிக்கொண்டனர். மேலும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கும், மேற்கு கடற்கரை

